உ

சிவமயம்.

# திருவானைக்காப்புராணம்

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்து

ஸ்ரீ கச்சியப்ப சுவாமிகள்,

அருளிச்செய்தது.

இஃது

திரிசிரபுரம் மஹாவித்துவான்

மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள்,

முன் பதிப்பித்த பிரதிக்கிணங்க

மதுரைஜில்லாக் கானாடுகாத்தான்

சா. ராம. மெ. சி. த. சிதம்பரஞ் செட்டியாரவர்கள்

வேண்டுகோளின் பேரில்

உறையூர்

தி. ம. சொக்கலிங்க முதலியாரால்

தஞ்சை

ஸ்ரீ கிருஷ்ணவிலாஸ அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

பராபவ-௵ கன்னிரவி.

உ

# இப்புத்தகத்தின் ஊதியம்

திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசுவாமிக்கு

**ஷையூர் இராமலிங்கசரணரால்**

நடத்திவரும் கமலபாத்திரநிவேதனத்திற்கு

உபயோகிக்கப்படும்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவானைக்காப்புராணம்.

## கடவுள் வாழ்த்து

### விநாயகர்.

நிலம்போற்றும்பணிக்கிரணநிலாவணிந்தநாயகனார்நிருதர்வாழுஞ்
சலம்போற்றுமதில்பொடித்தஞான்றினியபூசனைகள்சாலவாற்றிப்
புலம்போற்றுமெய்யடியார்விநாயகனென்றியம்புபதப்பொருளைநாட்டி
வலம்போற்றுமணியிரத*மூர்ந்தமழவிளங்களிற்றைவணக்கஞ்செய்வாம். (க)

### நிட்களசிவம்.

மதிவளம்படைத்துநாளும்வளரிருள்சீக்குமாபோற்
கதிவளம்படைக்குந்தூயகருணையெவ்வுயிரின்மாட்டும்
பதிவளம்படைத்துப்பாசம்பாற்றவெப்புவனிற்றோன்றிப்
பொதிவளம்படைக்குமின்பப்பூரணப்பொருளின்வாழ்வாம். (உ)

### நிட்களசத்தி.

ஆணவமகன்றசுத்தவறிவல்லாலுருவமில்லாத்
தாணுவின்கறலின்றிச்சகத்தினைந்தொழிலுமாற்றிக்
கோணவமனைத்துநீக்கிக்குறுகியவுயிர்கட்கெல்லாம்
பூணவவின்பநல்கும்பூரணிக்கன்புசெய்வாம். (௩)

### சம்புநாயகர்.

மணிபூத்தநறும்பொகுட்டுமலர்த்தவிசுநாகணையுமாகத்தும்பர்ப்
பணிபூத்தகயிலாயநெடுஞ்சிலம்புமொருமூவர்பணிந்துவைக
வணிபூத்தவஃருளமூந்திருவானைக்காவுமினிதமர்ந்தெல்லோர்க்கும்
பிணிபூத்தமலந்துரக்குஞ்சம்புநாயகர்மலர்த்தாள்பேணிவாழ்வாம். (௪)

### அகிலாண்டநாயகி.

எண்ணிறந்ததாயர்வயிற்றிருந்துபிறந்திடுந்துயரமெனைத்துநீங்க
மண்ணிறந்துபுனலிறந்துவயங்கியசெந்தீயிறந்துவளியினோடு
விண்ணிறந்துபெருங்கருணைத்தாயாகித்தனதகட்டின்விரவவைத்துக்
கண்ணிறைந்தகவின்காட்டுமகிலாண்டநாயகியைக்கருத்துள்வைப்பாம். (௫)

* ஊர்ந்த - உலாச்செய்த என்று பொருள் கொள்க.

# திருவானைக்காப்புராணம்.

## சபாநாயகர்.

பொன்னணிநூபுரஞ்சிலம்பலடிபெயர்க்குந்தொறுமங்கைப்புணர்செந்தீயு
மின்னொளிமேவணியிற்புனலுமெழுந்தும்பொறிதிவலையிவைவிரவவீசி
மன்னியநீள்பகைமுடிப்பவுடலமுயன்றுங்கிரண்டும்வயங்கியாடத்
துன்னியபேரொளிமன்றினடநவிற்றும்பெருமானைத்தொழுதுவாழ்வாம். ()

## சிவகாமியம்மை.

இளங்குழவிப்பிணிங்கின்றதாய்மருந்துநுகர்வதுபோலிருளின்மாண்ட
களங்குலவுமலமுயிர்கட்கொளியவருணடங்காணுங்கடன்பூக்கொண்டு
வளங்குலவுதனதுபெருங்கற்புமொருகணவரிறைமாண்புந்தோன்ற
விளங்குமிரணியமன்றினின்றருளுமணிவிளக்கைவிளம்பிவாழ்வாம். (௭)

## தட்சணாமூர்த்தி.

மும்மலம்வேறுபட்டொழியமொய்த்துயி
ரம்மலர்த்தாணிழலடங்குமுண்மையைக்
கைம்மலர்க்காட்சியிற்கதுவநல்கிய
செம்மலைப்பலதுளங்கிக்கிபாதரோ. (௮)

## ஆதிவிநாயகர்.

விண்ணாடர்தமக்கிரங்கிவேழமுகத்தவுணனுயிர்வீட்டவீட்டற்
கொண்ணாதவொருசாங்கமுபாங்கமெனமலர்க்கரத்திலொளிரக்கொண்டோய்
கண்ணாற்பன்மொழிகேட்குமணிப்பூணைப்பகமழ்கந்தங்கையான்மோக்கு
மண்ணாவென்றுரைத்தாதிபபெருஞ்செல்வவிநாயகனையடுத்துவாழ்வாம். ()

## சுப்பிரமணியர்.

இருமுதுகுரவர்நாப்பணிளமையோடிருந்துசேயென்
றொருவரும்பெயரும்வேறேயொருவருஞ்சாமியாகாக்
குருபரனிறைஞ்சவுண்மைகொடுத்தொருசாமியென்னும்
பொருவரும்பெரும்பூண்டபுனிதனைப்புகழ்ந்துவாழ்வாம். (௧௦)

## வயிரவர்.

உலகமளித்தல்சுதந்திரமன்றுவணமுயர்த்தோற்கெனவவன்சே
யிலகுமுருவம்பொடித்தவன்பாலெழுந்துபடைப்புஞ்சுதந்திரமன்
றலர்மேலணையாற்கெனவவனையறுத்திசைமாமுகனாக்கிப்
பலரும்வெருவப்பொழிநெய்த்தோர்ப்பயிக்கம்புகுந்தோன்பதம்பணிவாம்.

## திருநந்திதேவர்.

எங்குநிறைந்தயோநியென்றியம்புபொருளுமான்மாவுந்
தங்குமலமும்பகுத்துணர்ந்ததனதுள்ளகம்போற்றெழப்புகுந்த
துங்கமுனிவர்முதலோரைச்சுடர்மைப்பிரம்பால்வேறுவே
றங்கணிறுவிப்பணிபுரியுமண்ணன்மலர்த்தாளெண்ணுவாம். (௧௨)

## தண்டீசநாயநாயனார்.

பொன்னங்கடுக்கைமுடிவேய்ந்தபுத்தற்கமைக்கும்பொருளன்றி
மின்னுங்கலனுடைகள்பிறவும்வேறுதனக்கெனறமையாமே
மன்னுந்தலைவன்பூசனையின்மல்கும்பயனையடியாக
முன்னும்படிபூசனைகொள்ளுந்தூயோனடித்தாமரைதொழுவாம். (௧௩)

## திருஞானசம்பந்தசுவாமிகள்.*

மழலையின்னமுதூற்றெழுமாசைவள்ளத்துக்
குழலின்மென்மொழிபுமையவள்கொடுத்தபால்கமழப்
பழகுசெந்தமிழ்ப்பாடலந்தேன்வடித்தாடு
மழகணுஞ்செவியூட்டியவறிஞனையடுப்பாம். (௧௪)

## திருநாவுக்கரசுசுவாமிகள்.

தொண்டலாடியவிழிகளுங்கோலவெண்ணீற்று
வண்டல டியமேனியுமலகுமானந்த
முண்டதாங்கெதிரொடுத்தெனவோதுசெம்பாட்டுங்
கண்டுகேட்டருளுறுவினுக்கரசினைக்கலப்பாம். (௧௫)

## சுந்தரமூர்த்திசுவாமிகள்.

அடிமையானவர்க்கருளையுந்தன்னையுமுயிரிற்
படியிலாவகையளிப்பதுபாருளோரறிய
வடிவின்மாண்டவளொருத்திநூறெனவிறைவழங்க
நொடியின்மாலைசெய்வன்றொண்டரடிமலர்நுவல்வாம். (௧௬)

## மாணிக்கவாசகசுவாமிகள்.

உளத்திற்றேக்கியசிவானந்தவெள்ளமுட்பொசிந்து
வளத்திற்றேக்கியதெனவெயர்பொடிப்பவான்மடையாற்
கிளத்திற்றேக்கியதெனவிழிகாலவன்பிறைதாட்
டளத்திற்றேக்கியவாதவூரடிகளைச்சார்வாம். (௧௭)

## அறுபத்துமூன்றுநாயன்மார்.

ஒப்பிலேனுடையர்விகந்தவனுவந்தினிதருள
வப்புராதனன்சேரூழுமருண்மொழிக்கவிஞன்
செப்புமேன்மையினென்பதிற்றெழுவர்செம்மலர்த்தாள்
வைப்பினுவினுமனத்தினுஞ்சிரத்தினுமணப்பாம். (௧௮)

## சேக்கிழார்சுவாமிகள்.

தொகையாநாவலூராளிதொடுத்ததிருத்தொண்டப்பெருமை
வகையால்வி ங்கவுயர்நம்பியாண்டார்வகுப்பமற்றதனைத்
தகையாவன்பின்விரித்துலகோர்தம்மையடிமைத்திறப்பாட்டி
னுகையானின்றசேக்கிழானெளிர்பொற்கமலத்தாள்பணிவாம். (௧௯)

### பஞ்சாக்கரதேசிகர்,

மும்மைப்பொருட்குமிலக்கணங்கண்மொழிந்தவிரண்டுகோலத்தா
தம்மிற்றிரியாவகைகாட்டித்தானுந்தன்மைமிகத்தேற்றி
நம்மைப்பணிந்தபுகழ்த்துறைசைநமச்சிவாயதேசிகன்றன்
செம்மைப்பதுமத்தாண்மலரென்சிரத்தைத்தடாகத்தலருமால். (௨௦)

கடவுள்வாழ்த்துமுற்றிற்று.

## அவையடக்கம்.

மூவுலகுமீரடியாலொருங்களந்தநாரணனுமுன்னிக்காணாத்
தேவனைத்திருவானைக்காவானையிறைஞ்சாமற்றீர்தலாமோ
வோவின்மறைதமக்குமரிதேனுமவன்பெரும்புகழையுரைத்திடாமை
மேவுவதுமுளதாமோதிறனிலராயினும்பயனைவிரும்பினோர்க்கே. (௧)

தூயமறைநூன்முடிவிற்றுலங்குமருட்கோயிலிடைத்துதைந்துவாழுந்
தேயமலிதிருவானைக்காவிலொருபெருமானார்சிலம்பிவாயி
னூபசிறுநூற்கோயிலிடத்துமினிதமாதலினாலான்றோர்செய்யும்
பாயபெரும்புகழ்கேட்குமவர்செவியிலெனதுரையும்படருமன்றே. (௨)

பொன்பூத்தநெடுங்குடுமிக்கயிலாயத்தெம்பெருமான்புரைதீர்ந்தி
மின்பூத்தமணிப்பசும்பூணுடையிவர்கட்களித்ததெனவிரும்பிச்சூதன்
சொனபூத்தமுனிவராக்குக்கூறியசீர்த்திருவானைக்காவின்மேன்மை
தென்பூத்தசெழுந்தமிழாற்றெரித்தெமதுதீவினையைத்தீர்த்துமாதோ (௩)

அவையடக்கம்முற்றிற்று.

ம் ௨௫.

## இரண்டாவது திருநாட்டுச்சிறப்பு.

இதுமுதல் ௯ செய்யுள்-பொதுச்சிறப்பு

பூவினுட்கமலமும்பொருப்புண்மேருவுங்
காவினுட்கற்பகக்காவுந்தேவருட்
டேவர்கடேவனுஞ்சிறந்திட்டாலென
நாவலர்புகழுநீர்நாடுமிக்கதே, (௧)

பல்வகையொளியினும்பாரித்தெங்கணு
மெழில்வளம்பெருக்குறுமிரவிமைந்தனு
னல்வளம்படைத்துநாவலரின்மேதகு
சொல்வளம்படைத்ததுசோழமண்டலம், (௨)

உங்தொளித்தமணியத்துருவுமாயும்
பைந்தருமணிக்கிபலவுந்தாங்கியுஞ்
சுந்தரமிகுந்தசோணாடொவ்வாமையா
னந்தரத்திசைந்ததாலமரர்வாழ்பதி. (௩)

நறங்கிளர்பொதும்பர்நீர்நாடுபோன்மெனச்
சிறக்குநாற்பயனையுந்தேக்கவல்லதோ
துறக்கமென்றறிஞர்தம்மனக்குச்சொற்றலிற்
றுறக்கமென்றாயதுசுரர்தம்வைப்பரோ. (௪)

இந்திரனிறைஞ்சவீற்றிருந்தவிண்ணெனாஇச்
சிந்தையின்மகிழ்வொடுந்தியாகராசரே
வந்திருந்தனரெனினல்குசோழநாட்
டந்தமில்பெருமையாரளக்கற்பாலரோ. (௫)

விற்பயில்சிவபுரத்தமர்ந்தவித்தகன்
பற்பன்மந்திரங்கொடுபயில்கின்றானெனிற்
பொற்பமர்சோழநாடதனைப்பூதலத்
தற்புதநாடெனவறையல்வேண்டுமோ. (௬)

வநகம்ரங்குந்தீர்த்தங்க
ளெங்கணுமறையொலியெங்கும்வேள்விக
ளெங்கணுந்தருமமீவெங்குமல்கலா
லெங்கணுமிதற்கிணைநாடொன்றில்லையே. (௭)

சான்றவர்துவன்றுசோணாடுதங்கலா
லான்றதென்றவனியையாதிசேடனும்
மூன்றியொண்மணித்தலையுறத்திநின்றன
னேன்றனற்கல்விமற்றின்னுமீட்டவே. (௮)

களமலிவிடமணிகண்டர்போன்மென
வளவிடற்கறியதேயானுஞ்சோழநாட்
டுளமலிநால்வகைநிலத்துமோங்கிய
வளமெமக்கியன்றவாவகுத்துமென்பவே. (௯)

## வேறு.

இதுமுதல்-௨-செய்யுள்-மழைச்சிறப்பு.

தங்கணாயகன்சூரனைப்பயந்தநாட்டவிர்ந்து
மங்கையோடருள்பெற்றநாட்டினைவளர்ப்பாமென்
றங்கண்வான்படர்ந்தாழிநீர்முகந்தமாமேக
மெங்குமாய்மழைபொழிந்தனவிடம்பெறாதெனவே. (௧௦)

வல்லினைமாட்டினேன்மருவுமோரவுணன்வல்லுடலை
நிலனினீக்குவானெடுவிசும்படர்ந்துகைக்குலிச
மலகினீளொளிபடவிதிர்த்தார்த்தெழுத்தியவே
றிலகுமீட்டியினீண்டினவெழிலிநீர்த்தாரை. (௧௧)

## காவிரிநதி.

புடவிநாயகிபூத்தமைக்கணிந்தசெவ்வணிபோற்
கடவுண்மால்வரைகலங்கியவாசநீராடி
விடலில்வான்களிபயர்தமைக்கணிந்தவெள்ளணிபோற்
படருமாசறத்தெளிந்தநீரொழுக்கொடும்பயின்ற. (௧௨)

இதுமுதல்-௧௪-செய்யுள்-குறிஞ்சிநிலச்சிறப்பு

அருவிபற்பலதிசைதொறும்விழநிமிரடுக்கல்
பொருநர்வன்கயிற்றிறுக்கியபோகுயர்கழைச்சீர்
தருவவன்னவற்றுச்சியிற்கூத்தியர்தகைய
மருவுமஞ்ஞைகளாலுவமழைவரவெதிர்ந்து. (௧௩)

இழுமென்றோதையினிழிதருமருவியின்னியமாக்
குழுமுதேத்தடைத்தேன்முரல்வனகுளிர்யாழா
விழுமிதாகியகிளியினமிழற்றுவகழையின்
வழுவில்கூத்தினுக்கிசைத்தபாட்டெனநனிவழங்கும். (௧௪)

நெருப்பவிர்ந்தெனநிரைநிரைமலர்ந்தபூங்காந்தண்
மருப்பசுந்தமிழ்மாருதந்தவழ்தொருமசைவ
வொருப்படுங்கருத்தாற்கழைக்கூத்தினையுவந்து
விருப்பொடுங்கரதலங்களைவிதிர்ப்பனபோலும். (௧௫)

சாலுங்கூத்தினியனமெனத்தடங்கரமமைத்தாற்
போலுங்காந்தள்கள்போதவிழ்ந்திதழ்கண்மேனிமிர்வ
வேலுங்கூத்தினுக்கிடும்பெரும்பரிசிலேயென்னக்
காலுங்கானறுந்தேன்மலரவிழ்ப்பனகணிகள். (௧௬)

ஆடுமாமயினோக்கியவவிர்மணிநாகம்
வாடுமோகையின்வல்விரைந்தளைதொறுநுழைவ
பாடுகூத்தியர்பரிசிலுங்கலைப்பவென்றஞ்சி
நீடுமோர்சிறைக்கரந்துறுமுலோபரோநிகர்ப்ப. (௧௭)

அரியமாதவமாற்றுநர்சூழலின்மருங்கே
யிரியல்போமதவேழத்தையெழுந்துதாய்மடங்க
னெரியமோதுவவவர்வயினீங்குமாமலத்தை
யுரியமாதவமுருக்கொடுதொடர்ந்தடர்ப்பனபோல் (௧௮)

வலமிலாவியமதத்தவர்வழிபடுந்தத்த
மிலகுதேவரினும்பயனெய்துமாபோல
வலரிநோக்கலுமதன்சிலையாரழலுமிழ்வ
நிலவுநோக்கலுமதன்சிலைநெடும்புனலுமிழ்வ (௧௯)

உடையநாயகனாணையாலுயர்வரைக்கயிலை
யடையுநாவலூரடிகளோடடுத்தமன்னவன்போற்
படைநாகயேந்திரனோர்பாங்குறிற்பிடையொடுமவர்தம்
புடையராம்படிபுரியயக்காந்தமும்பொலிவ. (௨௰)

குங்குமங்குயிர்சந்தனங்கோழிலிப்பிறவுஞ்
செகசண்மலவற்பர்கள்சிதைத்தெரியத்தூட்டப்படும்
வகைறிந்தீஃதடுக்குமேசமக்குமென்றமையுட்
டங்குமங்கியினவிவனதாங்களேயுரிஞ்சி. (உக)

அழிக்கப்பட்டபினுலகெலாமாக்கத்திற்சிறந்தாங்
கொழிக்கப்பட்டபின்வளமெலாமொன்றுபற்பலவாய்ச்
செழிக்கப்பட்டனசிலம்புகள்சிலம்புகடோறுங்
கொழிக்கப்பட்டனபுனங்களுங்கொழும்பயன்றினையால். (உஉ)

ஆரன்முதற்றொடுகீர்ப்பனவென்முனிந்தாங்கு
வேரன்முத்தமும்வேழத்தின்மருப்பவிர்முத்துஞ்
சாரன்முற்றியவேனலிற்றையலார்கவணற்
றீரன்முற்றுறவெறிவனஇவள்வனவுடுப்போல். (உங)

சிமையமால்வரைத்தையலார்திரள்பெருந்தோளி
னமைவுவாய்த்தலினமையெனப்பட்டவேயவர்கைச்
சுமையைநீர்துமென்றிரும்புனந்தூங்கன்றபுள்ளிரிய
விமையினீளொலிபடவெடித்திறைப்பனமுத்தம். (உச)

சுருள்படுங்குழற்கிளவிவண்டோட்டலாபொதும்ப
ரிருள்படப்பெரிதீண்டினுமீண்டுறுந்தோறு
மருள்படுங்களவயலறியாப்பகற்குறியாய்த்
தெருள்படுங்களிசெய்வவென்றுவக்குமங்கலரால். (உரு)

அமராநாயக
குமரநாயகன்வணங்கியோர்கொடிச்சியைமணந்து
விமலநாடொறுமடியவர்க்களிப்பவீற்றிருக்கும்
பமரமாபொழில்வளாவளம்பகருந்தற்கெளிதோ. (உசா)

## வேறு.

இதுமுதல்-கஉ-செய்யுள்-முல்லைநிலச்சிறப்பு.

பிறந்ததம்மனையினீங்கும்பெருநதியென்னுமாது
சிறந்தகுங்குமகத்தூரிசெழும்பொருள்பலவுந்தாங்கி
யிறந்துழிப்பசும்பொன்வீசியிழுதுபாறயிருமற்று
மறந்தழைதாகநீங்கமடுப்பனபுறவமம்மா. (உஎ)

தேவருக்காகாவுண்டிதெவ்வுறும்விரதத்தார்போற்
றூவரகாதியண்டார்துவன்றிணர்விளைப்பத்தேவாக்
காவனவென்பார்போலவானநெய்யாதிநாளு
மாவடுகண்ணிருமாறிவண்பொருள்கைக்கொள்வார். (உஅ)

யாவரும்பழிச்சுமேன்மையிமையவருறுப்பிற்றங்கி
மேவரும்பெற்றமெல்லாம்விழைந்துதம்மேவலாற்றிற்
போவதுந்திரும்புமாறும்புரிகருந்தேவரோவென்
றுவதங்கிலத்துமாந்தாக்கண்டொன்றுரைக்குநாமம். (உகூ)

விண்ணவர்தமக்கேயல்லால்விண்ணவருறுப்பிற்றங்கும்
வண்ணவன்கோட்டுநல்லான்வழிநடந்தொழுகாதென்றே
மண்ணவர்க்கொருசான்றாகவையகமூன்றுங்காக்குங்
கண்ணனுமாயனாகிக்காத்தனனிரைகளம்ம. (௩௰)

மட்டலர்கோதைப்பைம்பூண்வள்ளிநாயகியைமுன்னோர்
கட்டழகெறிக்குமானைக்காதலித்துயிர்த்துநம்பாற்
பெட்டுலகேத்துமேன்மைபெருக்கியநெடியோன்வைப்பென்
றுட்டிகழார்வத்தோடுமுறைந்தனவுழைகளெங்கும். (௩௧)

மயரறவொருவர்தொட்டவண்குளப்புனலும்வேண்டா
வியனிலப்பயிருமேயாவேலியுங்கடத்தல்செய்யா
முயலினம்வாழாநின்றமுறைதிறம்பாமைநன்றென்
றுயலுறுமனத்தார்நோக்கியுவப்பனகரியகானம். (௩௨)

உறும்பொறைநகிலினாற்றுவொசியிடையவர்சொன்மான
நறும்பொறையோதிமாதர்நளிரிதழமுதமாந்துங்
குறும்பொறைநாடரூதப்படுவனகுழல்கள்கானம்
வறும்பொறைஞான்றுமந்தவளரிசைக்கிளகிப்பூப்ப. (௩௩)

## வேறு.

கூர்த்தநுதிப்பணிமுல்லைகோதையர்தமியலொளியிற்
சீர்த்தநகைமுகையொப்புச்சிவணாதமானத்தா
லார்த்தவிதழ்நெகிழ்ந்துடைவவவர்செயற்கையொளிநகைக்கு
நேர்த்திலமென்றுடைந்தொழிவநெடுங்கொடிமாதவிமுகையும். (௩௪)

திருவினர்நாரணர்பண்டுசுகந்தந்தகணவனைத்தா
மருவவருந்தவம்புரிந்தான்மானவலர்வனபூவை
பெருகுதவத்தினுக்கிரங்கிப்பிஞ்ஞகன்பூவுருவாகி
யருகடுத்ததெனமலர்வவசும்புபசுந்தேங்கொன்றை. (௩௫)

கற்புமேம்படுஞ்சிறப்பாற்காதலரைத்தணந்தவர்தாம்
வற்புமேம்படவாற்றிவதிகின்றாரக்கான
மற்புமேம்படுமாலுமணைந்தகன்முக்கட்கடவுள்
பொற்புமேம்படவரவுபுகன்றிருந்தாற்றுவதென்றே. (௩௬)

உருப்பவிர்வேனிலின்வாடுமுயர்கானமகன்றவர்தே
ரொருப்படுகார்வரும்பருவத்தொள்ளிழையாருடன்மலிவ
விருப்பொடுதாங்கழியினர்கண்மெலிவின்மெலிந்துவப்பினுவந்
திருப்பவர்போலிளங்குயில்களினைந்தொழிவபொருதவர்போல். (௩௭)

எவ்வளனுழினிதீட்டுமிலக்குமிசேர்மணிமார்பிற்
கௌவைநெடுங்கடற்பாயற்காருத்தன்மகிழ்ந்துறையுஞ்
செவ்விபெறுநறுங்கானச்சிறப்பனைத்துமொழியாமே
முவ்வுலகத்தினுமில்லைமொழிதக்கதிறத்தினரே. (௩௮)

வேறு. இது முதல்-௫௰௨ செய்யுள் மருதநிலசிறப்பு.

குறிஞ்சியையடுத்துப்பாலைகொண்டெழின்முல்லைதோற்றி
யுறுஞ்சலநெய்தல்பின்னரோம்பவைத்தழிநீருந்திப்
பெறுஞ்சுகமருதஞ்சேரப்பெயர்வதாற்பிணக்குமுற்று
மறுஞ்சகத்தான்றோமெச்சவைந்திணையாற்றுவார்போல். (௩௯)

மாயையின்வேறும்வேறுவந்ததத்துவங்கள்போலத்
தூயபன்மலரும்பொன்னுஞ்சுடரொளிமணியுமுந்தி
மேயநற்பொன்னியாறறின்வேறுவேறொழுகுகால்கள்
பாயதண்பணைகளோம்பப்படர்வனவூர்கடோறும். (௪0)

பொறிவழிப்புலன்கடோறும்புகுமுளங்குரவனுக்கா
னெறியுளியொழுக்கினேகுநீதியினுடைப்புமுற்று
மெறிபறைநபார்ப்பமள்ளரிடந்தொறுமீண்டிச்செய்யுஞ்
செறிகுலையகத்தவாகிச்செல்லுவசெழுங்காவிரம். (௪௧)

கேட்டமெய்யருளைமீட்டுங்கேட்டுறச்சிந்தைசெய்து
தேட்டறத்தெளிந்துநிட்டைசேர்ந்திடுமறிஞரோபோல்
வாட்டமில்குலைகண்மீட்டும்வயக்கிவன்சிலையுமற்றுங்
கூட்டியொண்புனல்சிந்தாமற்கொள்ளுவர்மள்ளரொங்கும். (௪௨)

வழுவுறுமமணரிட்டவையைநீரோடுபோல
வொழுகுதண்புனலிற்சின்மீனெழுக்கினோடொழுகாநின்ற
கழுமலவிறைவனிட்டகாமர்பாசுரமேயெனனக்
குழுமியசிலமீனைகொண்டெதிரேறுநின்ற. (௪௩)

வாதனைமலத்திற்சற்றேறவழீஇயுளம்பொறியாற்புக்கு
வேதனையுடற்றமீண்டுவிரைந்துதன்னிலையைநோக்கிப்
போதுதலென்னக்காலூற்புலம்புகுசிலமீன்வல்லே
பேதுளங்கொண்டுவந்தபெரும்புனலெதிர்ந்துசெல்வ. (௪௪)

தளையவரிறந்தகாலைத்தளையொடுதுறக்கநாடு
நிளையமும்புகுவதேபோனெடும்பணையெழுந்துபாய்மீன்
விளைகமழ்பணையினோடுவிழுச்செறுவாதிமாட்டுங்
களைதிடராதிமாட்டுங்கலப்பனபலாஞ்சிலாமே. (௪௫)

வேறு.

ஆம்பலுந்தாமரையலருஞ்சங்கமுந்
தாம்பலகோடிகடங்கும்பண்ணையி
லாம்பலுந்தாமரையளவுஞ்சங்கமுந்
தாம்பலவாமெனவினைஞாசார்ந்துளார். (௪௬)

பொறுமையள்பூமகளென்னும்பெற்றியைத்
தெறுவதுசெய்துதாந்தெழிக்கின்றானெனக்
கொறுகொறுத்துழல்சமண்கோலவூர்திசேர்த்
தெறுழலத்துழுநர்தமீட்டமெங்கணும். (௪௭)

சூலியுண் மகிழ்பெறத் தொடங்கு பாதகம்
போலியலுயிர் பலபொன்றற் கஞ்சுறார்
கோலிய வுழவர் தாங்குறித்த வொண்பொருள்
சாலியெனாய தன்மையந்நாடியே. (சஅ)

தீக்கையில்லார்க்குபதேசந் தீர்ந்தெனத்
தீக்கறல் விட்டருணவறந்த செய்தொறுந்
தீக்கையுள்ளார்க்குபதேசஞ்சேர்ந்தெனத்
தேக்கறல் பெருகிய தூழ்தச்செறலாம். (சகூ)

## வேறு.

பரத்துத்தரிக்குந்த நிதிமுனம்பகைத்த நெடுமால்படைதுமிய
வரத்துத்தரிக்குந்தனதுடலைவகிர்ந்து முதுசென்பினைப்படையா
கரத்துத்தரிப்பப்புருகூதன் கருணைபுரிந்ததெனப்பண்ணை
யுரத்துத்தரிக்குந்தனியற்கையொழிந்துழுநர்பயன்பெறவே. (ருo)

வருத்தம்பலகால்புரிதிற்பின் வரம்பிலின்பத்தழுந்துநர்க்குங்
கருத்தங்குரியார்திருப்பரிநூகலக்கிவருத்தம்புரிதோறுந்
திருத்தம்பயின்றுபயன்பயக்குஞ்சிறப்பிற்றகன்பூம்பணையென்றே
பொருத்தம்பயின்றுகளமர்மகிழ்பூப்பவதனைசசமஞ்செய்வார். (ருக)

மண்ணிலரசன்காப்பதற்குவகுத்திறைப்பகுக்குநல்லுழவர்
விண்ணிலரசன்மழைபொழியமேகம்விடுத்துத்தாளாண்மை
பண்ணுமுதவிக்கிதுபுரிதலபண்பாமெனத்திண்படைக்குலிசத்
தண்ணலடித்தாமரைவணங்கியகன்செய்விதைவித்துவாளால். (ருஉ)

பற்றுபருவந்தனக்கியையப்பலுயிர்க்குந்தனுவாதி
முற்றவருளுமிறைவன்போன்முளைகுவிரியுமபணைதோறு
முற்றகலங்கணீர்தெளிந்தவுடனேகவிழ்த்தவுழவாகளபின
சற்றுநாறுநீர்பாய்த்துவார்தயங்குமுளைகளழுந்தாமே. (ருங)

பவளச்சடிலத்திளம்பிறையும்பணிப்பூம்புனலுமணிந்தபிரான்
றவளத்திருநீற்றொளியுருவிற்றயங்குமுளைநாகணையானுங
குவளைத்தடங்கண்ணியுமொருங்குகொள்ளமுழுதுமவனுருவுந்
திவளப்பசந்தாலெனப்பசந்துசெறிபுன்பயிராய்வளருமால். (ருச)

## வேறு.

புவனபோகந்தெவ்வேறெவ்வ
சிவனுமென்றுதெளிக்கலுற்றானை
வுவகையோடியாநாறுபறித்துப்போய்
நவையினீங்கநடுநொங்கணும். (ருரு)

சிறுமையாளரிற்றீர்ந்துபெரியவ
குறவுபூண்டவரொப்பவுழத்திய
சிறுமணவிடையென்றிரங்கார்பணை
நிறவுநாறுநெருங்கிவளர்வன. (ருசு)

உறுப்பினற்றப்பமையோட்டியமாதரார்
வெறுப்பிலார்செய்வினையுறுபூர்பயி
றிறுபபநேர்ந்தெனவீர்ம்பணையியங்கனு
நறுப்பங்கேகருகுமாதகனுறுமே. (௫௭)

சேமவீட்டிற்கெழுவதோர்சிந்தையஞ்
சாமமாகிகளுவிநெருக்கியாங்
கேமமாயயிரீண்டுபணைதொறுந்
தாமளாவுகளைகடுவனறவ. (௫௮)

பருவநோக்கிவன்பாசமறுத்திடுங்
குருவலோயெனக்கூர்ந்தகளையெலா
மருவுசெவ்விபுணர்ந்துபணைதொறுங்
கருமைவாட்கட்கடைசியர்கண்ணுவார் (௫௯)

வருந்துமல்லடியென்றுமதித்திலார்
முருந்துமுரணிநாத்தமுனிவினாற்
பொருநதுமுத்தமிதித்துப்புகுந்தவர்
திருந்துபண்ணைச்செறிகளைகட்டபவே. (௬௦)

விரும்பித்தேனுகர்விகளையுந்தொறுங்
கரும்பிற்றேம்மொழிக்காரிகையார்முலை
சுரும்புற்றூர்ப்பலத்தொடவிழ்செவ்விய
வரும்பிற்றேனுமுண்பாமெனுமாசையால். (௬௧)

குவளைவண்டுகொழுங்கண்கயிரவத்
துவரைவண்டொளிர்வாய்கமலத்துவண்
டவிர்முகத்துமடுப்பவவைவயெனக்
கவாமலர்க்களைகட்பவாமாடெலாம். (௬௨)

கயல்கண்ணேறிடும்வரால்கணைக்காலொடும்
வயலினுழைமகள்வார்புறந்தாமளாடு
மியலமுட்டுமிகவினவாமென
வயர்விலாற்றுக்காலாட்டியரஞ்சவே. (௬௩)

களைகட்டோறுங்கடையியாகைத்துணை
வளைமிக்கார்ப்பனவாய்ந்துனனவென்றியென்
றுளையப்பங்கயத்தாள்களையொறுத்தொறுந்
தளையிற்பங்கயஞ்சாருவளையார்ப்பன. (௬௪)

காட்டலாற்கமலப்பகைக்காடெலாம்
வாட்டினுமந்தவாள்விழியோடிகல்
கூட்டமாங்குவளைக்குலமுங்கெட
வாட்டினுமன்னெறியுப்புனைகைகளே. (௬௫)

நடக்கலுற்றமையானம்பகையெலா
மடர்க்கலுற்றனமத்தகுதாட்பகை
கிடக்கலுற்றவனிச்சமுங்கீழ்ந்துமென்
றிடக்கலுற்றவவற்றினையெங்கணும். (௬௬)

வன்மொழிபுகற்றுங்கமங்கிட
வின்மழுங்கனிவாய்க்குமிகும்பகை
கொண்டசெங்குமுதக்குலமுங்கெடக்
கன்றுகண்டவிடுந்தொறுங்காதுவ. (௬௭)

தம்மைப்போர்மலர்த்தாமரையோடிகல்
செம்மைசேர்பசெவ்வாய்வளர்மூரற்கு
வெண்மைத்தாகமுருந்தின்விளங்கிய
மென்மைத்தாயபஞ்சாயுங்குமைத்தன. (௬௮)

வெள்ளிதாங்குழையூழ்மலர்தங்களாற்
றெள்ளறம்வாசெவிகூந்தற்கிகலிய
வள்ளைநீள்சைவலமுஞ்சவட்டுவ
நன்றுண்கோதையர்கைக்கமலங்களே. (௬௯)

பண்ணையாட்டயர்பாவைநல்லார்களைப்
பண்ணையாமெனப்பாற்றுறுநீர்மையாற்
பண்ணையானபரப்பிடம்பாவுமப்
பண்ணையாம்பெயர்பற்றிடுபோலுமால். (௭௰)

கொம்பரோமலர்க்கோதையர்தாமலா
நம்புவீரொணநன்றுதெரித்தெனப்
பம்புபூவிற்பமரமப்பூவற
வம்புண்கோதையர்மாட்டுவளர்பவே. (௭௧)

அளியினீங்கவகல்பவர்போன்மென
வளியிலாதலரட்டவரங்கையிற்
றுளிசெய்தேமலர்சோருகுழலுறங்குபு
குளிருநீர்ப்பணைகொம்மெனநீங்கினோர். (௭௨)

சஞ்சிதத்தொடுசார்மலமாயையுந்
துஞ்சவெஞ்சுடலூழினைத்தோலுடை
நஞ்சனேற்பதுமானவண்டின்குழா
மஞ்சிலோதியர்தாங்கொண்டகல்பவே. (௭௩)

மையலந்துபயிற்சியினம்பொறி
மெய்யுணர்ந்திடவிட்டகன்றுளெனச்
செய்யின்வந்துசிறையோதிமக்குழாங்
கைபகல்வனகஞ்சமிறத்தலான். (௭௪)

கேழ்த்தபூங்குழலார்கெழுமிக்களை
வீழ்த்துமென்மலர்க்கைத்துணைக்காலி ன்ற
ழ்த்தப்பட்டுத்தழைக்கலிற்பூம்பயிர்
காழ்த்தகாமத்துக்காளையர்போலுமே. (௭௫)

மாதராலளிக்கப்படும்வாய்மையான்
மாதரார்முகம்போன்றொளிர்வான்மதி
காதலாலளிக்கப்படுங்காட்சிய
சிதநீரவயற்செற்றியபூம்பயிர். (௭௬)

திங்கள்வெண்கதிர்த்தெள்ளமுதசதின்ற
றங்குகின்றதனுண்மைதெரித்தெனப்
பொங்குவெண்ணிறம்பூண்கருவுட்பொதிந்
தெங்கணும்பயிரீண்டிநிவந்தவே. (௭௭)

வேறு.

வாலொளிமுளையிற்றோற்றிமரகதநிறத்தசாலி
சூலெனுங்கதிருட்கொள்ளப்பசந்ததோர்தோற்றம்போன்ற
காலும்வெண்கதிரும்பாலாங்கருத்திரண்டினிதுமுற்றச்
சாலமெய்பசந்தாலென்னப்பசந்தனதளைகடோறும். (௭௮)

வணக்கமில்லார்களெல்லாமவண்பயனென்னும்பார
மிணக்கமில்லார்களென்போலெனத்தலைநிவர்ந்தசாலி
வணக்கமுள்ளார்களெல்லாம்வண்பயனென்னும்பார
மிணக்கமுள்ளார்களென்போலெனத்தலையிறைஞ்சிற்றம்ம (௭௯)

மூவருமுலகம்யாவுமொழிந்ததன்மயமேயென்ன
யாவருமுணரமூவர்யாவையுமினிதுதோற்றுந்
தாவின்முக்குணத்தின்வண்ணந்தாங்குதமென்னச்சாலி
மேவரவெளுத்துப்பச்சைவிராயதுசிவந்ததன்றே. (௮௰)

கருமமேவிரும்பிநாளுங்கவர்தருமுயிர்கள்பின்னர்க்
கருமநேராகிஞானங்கலந்தின்பம்விளைதலேபோலுங்
கருமமேதானும்வேண்டாக்காட்சியிற்கமழ்நீர்வேண்டாக்
கருமநேர்நோக்கிமள்ளர்கவிழ்த்தனர்மடைகள்சித்து. (௮௧)

களையறுகருணைவெள்ளக்கடலொடுங்கலந்துளார்கள்
புளையறத்தமக்காதாரப்பொருளொடும்பொருந்துவார்போல்
விளைகமழ்நீத்தநின்றுவிளைந்தொளிதெய்வச்சாலி
தளையகம்பொருந்தவீழ்ந்துதழைதவனவிறும்பூதெய்த. (௮௨)

நாள்வளையறையேநோக்குநடுவனார்தூதரேய்ப்பத்
தாள்வளையறைகட்கேற்பத்தகும்பயன்விளைக்குஞ்செய்யிற்
கோள்வளையறையிதேன்றுகுழுமதிக்குயங்கையேந்தி
நீள்வளையறையுந்தோளார்நிரந்தரித்தரியலுற்றார். (௮௩)

பெண்ணுமையிடத்திருண்டப்பெறுமெய்த்தவத்தினோர்க
ளெண்ணுண்மையெழுந்திற்பாவமிரிந்தீக்கப்புகாளா
நண்ணுமைமுழக்கமேய்ப்பனங்கலைக்கழனியார்க்குந்
தண்ணுமைமருவிப்பீலிதகைதரப்பினிறுமன்றே. (அச)

நல்வினைபுரிவோர்தம்மைகடுவன்வன்றாசரானோர்
பல்வினையுபசாரத்திற்படர்தரக்கொண்டெய்ப்பார்போற்
புல்வினையவையுநீங்கப்பொலிந்தநல்லரியைச்சேர்த்துத்
தொல்வினையுழவர்தங்கடலைமிசைச்சுமந்துசெல்வார். (அரு)

களத்துறப்பேர்களிட்டுக்கடாவிட்டுப்பலாலநீக்கி
யுளத்துறுமகிழ்ச்சிபொங்கவுழவர்கள்காற்றிற்றூற்ற
வளத்தொடும்பொலிந்தசெந்நென்மறலிதன்மூனையிற்பட்டங்
கிளைத்துறுமுயிர்கடேய்ம்மையெய்தியதென்னமாதோ. (அசு)

மறப்பெருஞ்சேனைச்செங்கோன்மன்னவன்பகுதிதீர்த்திட்
டறப்பெருஞ்செல்வராகியாலயமாதியான
திறப்பெருங்கடன்களாற்றிச்சென்றிரந்தவர்கள்சால
வறப்பெருங்கொடைமைநல்கியாழ்குவுரோகடோறும். (அஎ)

இன்னணஞ்சாலிச்செல்வமீட்டுதலொருபாலாகக்
கன்னலுங்கதலிக்காடுங்கமுகொடுதெங்குமாக்கித
துன்னியமஞ்சளிஞ்சியாதியதுடவைவைத்துப்
பன்னலவளனுமீட்டும்பண்புமற்றொருபாலாமால். (அஅ)

இளமரக்காவினூடியெறிதிரைப்புனலினூடி
யுளமகிழ்பரத்தைமார்களுடன்விளையாடிசில்லோ
ரளமரநோக்குமில்லினங்கலாருடநீர்த்து
வளமலிபோகந்துய்க்குமாட்சியுமூர்கடோறும். (அகூ)

போகமேநுகராநிற்கும்புலவர்கண்முழுதுந்தாழ
மாகநாடாளும்வேந்தன்வாஞ்சையினுரிமைபூண்ட
வேகநீர்மருத்வைப்பின்விழைதருவளங்களெல்லா
நாகநாட்டரசற்கேனுநவிற்றலாந்தகைமைத்தேயோ. (கூ0)

வேறு. இதுமுதல்-௰௫ செய்யுள் நெய்தனிலச்சிறப்பு.

இறைவனெடுத்தவுருத்தோறுமியைந்தெவ்வுயிரும்வளர்த்தருளு
மிறைவிக்கர்ப்பவனாகானமெறிநீர்ப்பழனமிவைதம்மி
னிறையவளங்களினிதாக்குநீர்மையொளியாமேகலன்க
ளுறைவெண்டரங்கக்கடல்புகுமாலுலவாநீத்தநதிமாதோ. (கூக)

வாய்மையடுத்தமாதவத்தோர்மறிந்துபவத்திற்சென்றிடினுந்
தூய்மையடுத்தமதியற்கைதுறங்காநீர்மைகாட்டுதல்போற்
பாய்மையடுத்தகடற்பரப்பிற்படர்ந்துபுகுந்தபெருநீத்தஞ்
சேய்மையடுத்தந்திரெதிர்ந்துதேங்கியுவரோதேர்றுமால் (கூஉ)

தெள்ளித்தெளிக் துபகைகடந்தசெவன்முத்தருலகியற்றை
நீள்ளித்தனைந்தபேரருளிற்றமியற்றுறக்குமாறிதுவெல
றள்ளிதசரளமணிப்பவளமலைத்துக்கரைமேற்றவழ்கடலைய
றுள்ளித்திரியுஞ்சுறவாங்கேதுயின்றுகாட்டுங்கலைமைத்தால. (௯௩)

பரந்துங்றைறந்தவுயிருடுபன்மாண்கருவிதகக்கொளுத்தி
யரங்கைதயங்கவகுததனைசதவாக்கையுழிதந்திடுமாபோற்
புரந்துவிடுக்கும்பலமதலைபொருள்கொண்டிறுக்கும்பொழுதானுஞ்
சுரந்தபொருளேற்றிடும்பதத்துந்துவன்றுமாலியக்கடல்பொருமால். (௯௪)

ஆழ்ந்துபெருநாலிடைகிடந்தவரியபொருளைப்பலர்கவர
வாழ்ந்தகருத்திற்பேரறிஞர்வகுசதுவிளக்குமாறேபோல்
வீழ்ந்தகருத்தினுளையர்குழாம்விவ்விட்டிலகுமணிபலவுந்
தாழ்ந்தநெடுநீர்க்கடற்குளித்துத்தடவுக்கரையேங்கணுங்கொப்பார. (௯௫)

புறவுக்கோட்டஞ்செயுய்வனப்பிற்பூவைமொழியார் விழிதான்வா
ழிறவுக்கோட்டுககடல்பணிக்குமெழிலாலவாராட்டினர்மறைஞ்சுஞ்
சுறவுக்கோட்டுட்கடலரசன்ஞ்ஞன்றிவரங்களினி [illegible]
நறவுக்கோட்டுமலர்ப்புன்னைஞாழற்பாதும்பொடவிட்டலுய. ( [illegible]

வேறு.

இம்மையினோர்வினைபுரிந்தாலியற்றுவினைமேல் [illegible]
னம்மையிலென்பதுநிற்கவடுத்தநுளையர்களை [illegible]
செம்மைநிறப்பவளமொடுதிகழ்சரளவ்வளைகுலமுந்
சும்மைநெடுங்கடலன்றேதுறுத்துவந்துகரைசேர்த்தறய். (௯௭)

மலையடுத்தசிலைத்தோளான்வலையெறிந்து மீன்படுசசார்
கொலையடுத்ததெனநுளையர்குறித்தொழிக்குமாலைய [illegible]
சிலையடுத்ததோடுவளச்செறிவலைகளபடயிசி
யலையடுத்தமீன்படுத்திட்டகன்கரையேங்கணுங்குரையிட்பார. (௯௮)

வேறுருவந்தோன்றுதுவிரிபுனலோடுறுமுப்பு
வேறுருவாய்வரவுமணர்வினைபலசெய்துலகத்து
வேறுருவந்தோன்றுதவிமலனார்குருவென்ன
வேறுருவாய்வரப்பணிகள்விளைப்பாரபோலாயினர். (௯௯)

தெண்ணீருட்பயின்றிருந்துதெண்ணீருநறுத்திரண்டிம்
தெண்ணீருக்குடைகின்றசெயலினாற்சுவையமைந்து
முண்ணீர்மைப்படுத்தொளிருமுப்பினைப்புல் [illegible] யவிலைக்குப்
பெண்ணீர்மையுமண்டியர்கள்பெரிதளக்குபார [illegible] மயரால. (௧௦௦)

எங்கண்மிடற்றிசைக்கெதிருமின்னிசைக்கோகிலப [illegible] கத
தங்குகுடம்பைகளளித்துத்தாயாகிவளர்த்திவிடு
நுங்களையீதுணவெட்டோமெனநுதீலுங்கருத்தினாபோன்
மங்கையர்மீனுணங்கலுணவருங்கொடிகளோப்புவார.

பெருஞ்செல்வராயிடினும்பெயராததீக்குணங்க
டருஞ்செயலராயிருப்பிற்றமையடுப்பாரெவர்யாரு
மிருஞ்செல்வக்கடலிருந்துமெடுத்துண்ணார்மணற்கேணி
யருஞ்செல்வச்சிற்றூறலாதரிப்பார்குணமாண்பால். (௧௦௨)

வெள்ளநீர்ச்சடைப்பெருமான்மிளிர்மதியமிலைத்ததுவுக்
தெள்ளுநீர்க்கடற்குளிக்குஞ்செயலினாலிதிற்படியிற்
கொள்ளுமேனமையினாங்கோதிலணியாகவென
வுள்ளியாங்கடுத்தனபோன்றுறைந்தனமுண்டகக்கானம. (க0௩)

சாப்பறையினொலிதழங்கத்தணந்தவர்தம்வரவுள்ளி
யேப்பகைக்கண்மடமாதரிரங்குகடற்கழிமாரன்
றாப்படையாக்கொலைபுரியுங்கோடவிழுநறுநீலப்
பூப்பொலிவவினமினத்திற்புணராமையுளதேயோ. (க0௪)

வன்மையுறுசிலைமென்மைமரம்போன்றுமிதந்துலகின்
மென்மையலதுயர்சைவம்வன்மையேயெனவிளக்கப்
புன்மைமதத்தினரழியப்புகழ்நாவுக்கரசினைமு
னன்மைபெறச்சுமந்தகடனலமுழுதுநவில்வாரார். (க0௫)

வேறு. இது முதல். ௰. செய்யுள் பாலைநிலச்சிறப்பு.

வரன்மலிநானிலமருங்குமெல்லையாப்
பரன்மலிமுரம்பினைப்பற்றிவேனிலி
னுரன்மலிபாலைமிக்குதிப்பச்சேர்த்ததோர்
சுரன்மலிவளஞ்சிலசொல்லநின்றவே. (க0௬)

ஒருநிலத்தனநுகர்வுகந்ததன்றென
மருவுவெஞ்சுரத்திடைவதிகின்றார்களீ
ரிருநிலத்தவரையுமெய்தவாறலைத்
தருளிலராய்க்கவர்ந்தாருநீர்மையார். (க0௭)

அலர்முலையதரநேரானகேசங்கமு
மலவமுமெல்லடியினைவுருவகைத்
தலைவனோடவ்வுழிச்சார்நரின்புற
நிலைபெறுபஞ்சியினெறிகடேர்க்குமே. (க0௮)

அணர்ந்தபூண்முலையவரன்பரோடுறப்
புணர்ந்தபாவையினொடும்பொலிகயாமென
வணர்ந்தசாகையின்மலர்க்குரவமெங்கணு
நிணர்ந்தபூங்குளிர்நிழனீடநல்குமே. (க0௯)

மலடெனக்கொழியெனவாட்கைக்கன்னித
னிலகுசெஞ்சிறடியிதயத்தெண்ணியாங்
கலவொதிர்சொரிந்தருந்தவத்தினின்றன
பலவுடன்காய்படாப்பாடலங்களே. (கக0)

வல்லிதன்பாகனார்வருத்தவூழினை
யல்லதென்றகற்றுவாரகிலதில்லென
நல்லவர்தெளிதரநண்பகற்கணுங்
கல்லினைதேருவகபோதகங்களே. (ககக)

இருப்பையினுண்மலரிலங்குமுத்தமா
யுருப்பொலிசெம்மலொண்பவளக்கானமா
யிருப்பனமுன்றிலினீந்துமேய்ந்திடைக்
கருப்பையாடாக்குடில்கஞல்வவெங்கணும். (கக௨)

குமரியினல்லதுவென்றிகூடுரு
தமரினரிவளடியடைமினென்பபோற்
சமரின்மேம்பட்டவர்தரிக்கும்வாகையவ்
விமலைதன்பாங்கெலாம்விரவிப்பூக்குமால். (௧௧௩)

கல்லதரியக்குநர்காழ்த்ததாகநோய்
வல்லைவிட்டொழிக்குநீர்வறந்ததாயினு
மல்லலுற்றழியன்மினங்கைக்கொண்மென
நெல்லியுண்கனிபலநிலத்துதிர்க்குமே. (௧௧௪)

துன்புறினல்லதுசுகந்தகாதெனு
நன்பொருள்விளக்கியநாட்டும்பாலையா
மின்பொருள்விளங்குறமிடத்திற்சில்வள
மன்புளவறிந்தவாறறைந்திட்டாமரோ. (௧௧௫)

வேறு. இது முதல்-எ-செய்யுள் திணைமயக்கம்.

பகுத்தநானிலத்தைத்திணைப்பற்பலவளனு
மிகுத்தகேள்வியோர்க்கல்லதுவிதப்பதுதகாதாற்
றொகுத்தியாஞ்சிலமொழிந்தனந்தொகுத்தநானிலத்து
வகுத்தவான்பொருண்மயக்கமுஞ்சிலவகுப்பாமால். (௧௧௬)

குறிஞ்சிக்கும் முல்லைக்கும்.

வருடைகொல்லையின்மானமாவுடன்விளையாட
வருவிகின்றதிரடுக்கலினகன்றினைப்புனத்தி
னுருவமஞ்ஞைநபுங்கானவாரணமுமுற்றெறழில்க
டருவவின்னணாகுறிஞ்சியுமுல்லைபுஞ்சாரும். (௧௧எ)

மருதத்திற்கும் குறிஞ்சிக்கும்.

வேழமென்கரும்பயில்வனவிலங்கலிற்பயிலும்
வேழமென்புலம்படர்வதென்னெனவெதிரேவி
வேழமல்கியவரைவளர்பசுந்தினைமேயும
வேழமல்கியவியன்பணைவிரவுறுமேதி. (௧௧அ)

குறிஞ்சிக்கும் நெய்தலுக்கும்.

மீனம்பாய்ந்தெழுவிலங்கலின்வியன்சுனைவேலை
மீனம்பாய்ந்துவீழ்ந்துகளுமவ்வியன்சுனைநீலத்
தானமபாய்ந்துளரளிவெரீஇத்தண்கழிநீலக்
கானம்பாய்ந்தயரளியெழக்கதுமெனப்பாயும். (௧௧௯)

முல்லைக்கும் மருதத்திற்கும்.

புறவின்றலர்கடுக்கைபொன்றரப்புனற்பழன
நறவின்றலர்தாமரைக்கரத்தினன்றேந்திப்
பெறவதற்கெதிர்கொடுத்திடப்பேணியதேய்ப்ப
வறவிளர்த்தசங்காகொருமலர்க்கரத்தணிவ. (௧௨௦)

முல்லைக்கும் நெய்தலுக்கும்.

வெறியகானமர்கோகிலமீன்கவர்புட்கள்
பறியவோப்புறும்பரத்தியர்செவிகிளைசபகருஞ்
செறியும்வீமணமுமிழ்ந்துதன்முடையினைச்சிதைக்கு
நறியகானடிதிரைக்கையிற்பரவுநீர்நரலை. (௧௨௧

மருதத்திற்கும் நெய்தலுக்கும்.
கோழிவிட்டெறி குழையினைக்குண்டலப்புழுவெண்
ணுழியின்கணை மீனகவர்காகமங்காப்ப
வாழிவிட்டெறிமுத்தினையண்டமென்றுகந்து
வாழியன்னமற்றடைகிடப்பனவயற்பாங்கா. (௧௨௨)

நூலாசிரியர்.
இன்னவானபல்வளங்களுமியைந்தசோணாட்டுத்
தன்னைநீங்குதலருமையிற்றடாதபேரன்பிற்
பொன்னியாறிருமருங்கினும்பொற்பவார்ந்தொழுக
மன்னுமாநகர்வளஞ்சிறிதறிந்தவாவகுப்பாம். (௧௨௩)

திருநாட்டுச்சிறப்பு முற்றிற்று. இதனுள்.

மேற்கூறிய நிலங்கள் ௫-குறிஞ்சி கூட்டம்-பாலை உடன்போக்கு-முல்லை தனித்திருத்தல்-நெய்தல் இரங்கல்-மருதம் ஊடல்-என்னும்-ஐந்து தொழில்களாம்.
௧-வது குறிஞ்சிக்குத்தெய்வம் முருகக்கடவுள்-சாதி-வேடர்-௨-வது-முல்லைக்குத்தெய்வம் விஷ்ணு சாதி இடையர்-௩-வது-மருதத்திற்குத்தெய்வம்-இந்திரன் சாதி மள்ளர்-௪-வது-நெய்தலுக்குத் தெய்வம் வருணன்-சாதி -செம்படவர் - ௫-வது பாலைக்குத்தெய்வம் காளி- சாதி-மறவர்- இந்நிலங்களுக்குரித்தாய- பொருள்களை ஆங்காங்குள்ள கவிகளிற்-கூறியவற்றிற்கண்டுகொள்க.
இவ்வைந்து திணையின்-பகுப்புகளாவன-குறிஞ்சி-மலை-முல்லை-காடு -நெய்தல் -சமுத்திரம் -மருதம்-வயல்-பாலை இந்நான்குநிலத்துங்கலந்துள்ளன.

ஆக திருவிருத்தம்-௧௪௯

# திருநகரச்சிறப்பு.

இது முதல்-௰௪-செய்யுள் பொதுச்சிறப்பு

பூமேவுபசும்பொழில்சூழ்திருவானைக்காவினைமுப்புவனத்தோரு
மாமேவுபலநகருளொருநகரென்றுதுயாமாநகரொன்றோரத்
தேமேவுபலநகரும்புறமாகவகந்தழுவித்தீர்த்தப்பொன்னிக்
காமேவியொழுகுமெனினந்நகருக்கிணைநகரங்காட்டலாமே. (௧)

இருநதியினிடைக்கிடந்தகாரியெவற்றினுஞ்சிறந்ததென்பவந்த
விருநதியுளொருநதியேசிவபெருமானளித்ததனியல்புநிற்க
வொருநதியேயிருநதியாயொழுகவிடையிருக்குமுயரானைக்காவவ்
வொருநதிமற்றிறையளிப்பமலயமுனிகொணர்ந்ததெனிலுரைப்புண்டாமோ. (௨)

கங்கைநதியொருவேந்தனிரப்பவொருமுனிவாயிற்கரந்துமாண்டோ
ரங்கமலிதரப்புகுந்ததுயரானைக்காவினைச்சூழ்ந்தமரும்பொன்னி
துங்கமுனிகமண்டலத்துட்கரந்துவிசும்பிறைவேண்டத்துதிக்கைநம்பி
யிங்கருளச்சிவபூசைக்குதவியதென்றாற்பெருமையெவற்றதாமே. (௩)

மதுவாரமுறுக்கவிழ்ந்துமலர்விரியும்பசும்பொதும்பர்மருங்குசூழ
விதுவாழுஞ்சடைமௌலிசம்புநாயகர்கருணைவிரவிவாழு
முதுவாழ்வுதருமானைக்காவினெழில்வனப்புமுதிர்தகரவித்தை
கதுவாய்மைமாயவனுருள்ளகத்தாமரைமலரோகடுக்குமன்றே. (௪)

வேறு.

உரிமையிற்சிலம்பிபூசனைபுரிந்தவுண்மைதேர்ந்தெம்பிரானுவப்ப
வரியளிக்குலமும்பூசனைபுரியுமாட்சியிற்பசும்பொழிறோறும்
புரிமுறுக்கவிழ்ந்துமலாவழியொழுகும்புதுநறவாரியின்முழுகி
விரிமணத்தாதுபூசிமெல்லிசைகண்மிழற்றிநின்றாட்டயர்வனவால். (௫)

இலம்பகமிலைத்ததிலகவாணுதலாரெதிரெதிராட்டயர்தோறு
மலம்புகிண்கிணியுஞ்சிலம்புமேகலையுமதிர்குரன்மழைமுகில்காட்டக்
குலம்பயின்மயில்களாடுவபூவைகுயில்கிளிபாடுவவிவையுஞ்
சிலம்பியினுவந்துதத்தபக்கயன்றதிருப்பணிசெய்வபோன்றனவால் (௬)

நாரணர்பிரமர்நாடியுமறியாநங்கைபங்காளனார்முடியுந்
தாரணிபதமுஞானபூமியிற்சேர்ந்தங்கருந்தவத்திறற்சார்ந்திட்
டாரணர்க்குரியதவிசெனும்பழியுமகற்றுதுமெனமுயன்றனபோ
னீரணிபழனந்தடாகமும்பிறவுநிரந்தரித்தனமலர்க்கமலம். (௭)

முள்ளரைப்பசுந்தாட்சேயிதழ்ப்பொகுட்டுமுண்டகநாண்மலர்த்தவிசின்
வெள்ளொளிவிரிக்குமென்சிறையன்னம்விழுத்தகுதுணையொடும்பயில்வ
கள்ளவைம்பொறியுங்கடந்தவரிதையகமலநாண்மலர்மிசையஞ்சப்
புள்ளுருவாகச்சத்தியுஞ்சிவமும்பொற்பவீற்றிருப்பதுதகையும். (௮)

பண்டுவெண்ணீறுதிமிர்ந்தொளிர்படிவப்பராசரமுனிமணிவளர்த்த
மண்டுசெந்தழலினரக்காதங்குலங்கள்வந்துவந்துகுவனவிழையக்
கண்டவர்வியப்பப்பாசடைமருங்கிற்கதிர்வெள்ளோதிமத்தெதிரோ
விண்டசெங்கமலத்தொழுகுதேனசையால்விழுவனவீற்றுவீற்றளிகள். (௯)

வேறு. முந்துபகையானசுரர்முற்றிவதிவீயுந்
தந்தமிடமாகவிகருனவரிறுத்தாங்
குந்துமதுவுண்ணவுழிதந்தளிகள்பாயு
நந்தனவனங்கள்பலநாற்றிசையுமல்கும். (௧௰)

கைபழகமுன்புபடைகஞ்சமுதல்வீயு
மெய்பழகுவேதனகர்மேகவெனவிட்டா
னெய்பழகுகூந்தலர்நிலாமுகமுமற்று
மைபழகிநின்றவெனயாருமறிவெய்த. (௧௧)

மறநவிலும்வாட்கண்மடமாதரிசைவல்லாத்
திறநவிலவேறுகரிதேர்வொழிகசான்றீர்
புறநகரடுத்துவளர்பூவைகிளிதாமே
யுறநவில்வவுண்ணகருருதறவொழிந்தே. (௧௨)

தீர்த்தமுடிவைத்தவொருதீர்த்தனிவனென்றுந்
தீர்த்தமுருவாகவளர்செய்தியைமதித்தே
தீர்த்தலரிதாங்களிசிறந்தொளிர்வதென்னத்
தீர்த்தமெவையும்பெரிதுதேங்கியெழில்கூறும். (௧௩)

நீருருவமாகிவளர்நின்மலன்மகிழ்ந்த
சீருருவமானநகர்சேர்ந்தனமினித்தான்
றீருணவினைமலமெனத்திகழுவப்பா
னேருருவவார்பொழிலிணாத்துமலரூழ்க்கும். (௧௪)

வேறு. இதுமுதல்-அ-செய்யுள், புடைநகரச் சிறப்பு. யானை

தண்ணார்மதிசூடியசங்கரனார்பதங்கள்
விண்ணோர்பெருமான்பணியப்புகமேகவூர்தி
யெண்ணாவிறலோடுபுறத்திறைகொண்டதேய்ப்ப
மண்ணுமணியானைகள்யாத்தனவாரியோர்சார். (௧௫)

குதிரை.

கருணைக்கடலாகியகண்ணுதலார்பதங்கள்
வருணன்றெழுவான்புகவன்னவன்வாழ்க்கையான
பொருதண்கடலும்புறமுற்றியபொற்புமான
வருமைங்கதிவாசியின்மந்திரம்வாய்ந்ததோர்சார். (௧௬)

நிலைத்தேர்

ஒருஞான்றுமுலப்பிலிருங்கதிபுய்க்குநாத
னிருசேவடியேத்தவுள்புக்கவிராறுகோடிப்
பொருசூரியரேறியதேர்புறநின்றதென்னக்
குருமாமணியாததொளிர்தேர்குழுமுற்றதோர்சார் (௧௭)

சிலம்பக்கூடம்.

வடவைக்கனலுங்கடனஞ்சமும்வானினேறு
முடலுஞ்சமனாணைபுமோருருக்கொண்டதென்னச்
சுடருங்கணைவானயிலாதிதொடர்ந்துவீர
ரடல்விஞ்சையரஞ்சவமர்ந்தகல்லூரியோர்சார். (௧௮)

வார்த்தொழிலாளர் தச்சர் கொல்லர்.

பருமக்கலனைப்புரசைப்பகிர்வார்களார்க
ளுருவச்சகடத்துருளச்சுறையாய்தமாதி
கருவித்திரண்முற்றமுனுற்றுகைவல்லநீரார்
மருவித்தொகுசேரியனந்தம்வெவ்வேறுவாய்ந்த. (௧௯)

யானையேற்றம் குதிரை யேற்றம் இரதநடத்தல்.

வண்டாடியமாமதவேழமும்வாவுமாவுஞ்
செண்டாடியசெண்டுவெளித்தலமுஞ்செறிந்து
கண்டார்களிகூரிரதத்தொழில்கற்குநாட்புந்
தண்டாதுவிலாழிபொழிந்துதண்சேறுசெய்யும். (௨௰)

போர்த்தொழில்

ஒழுகுஞ்சுடர்வாளயில்வேல்சிலையொண்கையேந்திக்
குழுமத்திறல்வீரர்கொடுஞ்சமர்கற்குமெல்லை
விழுமக்கவணிற்பிதிருக்கநல்வெள்ளிபொன்னும்
புழுதித்திரளாய்ப்புறம்போர்ப்பனபொற்பவெங்கும். (௨௧)

நூலாசிரியர்.

நடைமாமலையாதிகண்முற்றிநலஞ்சிறந்த
புடைமாநகரின்வளனிற்சிறிதேபுகன்றாந்
தொடைமாண்சிலைவேள்கணையின்சுவைதோற்றியாடு
மிடைமாநகரின்வளனிற்சிறிதேத்துவாமால். (௨௨)

வேறு — இதுமுதல் ௰௩-செய்யுள் இடைநகரச்சிறப்பு.

பளிங்குக்குன்றமும்பாந்தவெக்கரு
மொளிக்கண்மேலடையுமுயர்செய்குன்றமுந்
தெளிக்கும்பொய்கையுந்திகழுய்யானமுங்
களிக்குநீரனகடவுளார்க்குமே. (௨௩)

பலர்வியப்புறம்பளிக்குக்குன்றுகள்
கீலவமாமயில்கதுவுசெவ்வியி
னிலவிருங்கறைநீக்கப்புக்கமர்
விலகிவில்லுமிழ்விதுகிகர்க்குமே. (௨௪)

குமுதவாவிதூங்குளிர்ந்தமுத்தமுங்
கமுகமுத்தமுங்கலந்தநீர்மையா
லமுதவெண்கதிரோடடுத்தமீன்
சமுகம்போன்றனதரணியெங்கணும். (௨௫)

பட்டமாடுவார்பரந்தவெக்கர்வா
யிட்டசெம்மலரெரியினெய்மர
மட்டவண்டுசூழ்ந்தாவிப்பேட்டினைத்
தொட்டுவைகவண்சுகங்கள்பாடுமே. (௨௬)

மைக்கண்மாதரார்வாவிதோய்தொறு
மெக்கர்வாயவரிடுமடிச்சுவட்
டொக்குமென்னடையோதிமம்புகத்
தக்கதனெறனத்தரங்கநீக்குமே. (௨௭)

கொழுநர்கொங்கைபூங்கொத்தின்வேறற
வெழுதுமவ்விடையிளையர்நெஞ்சமான்
முழுகவாலவாய்முதல்வனுமெனக்
கெழுவுமாடமேற்கிளந்துவப்பரால். (௨௮)

திரண்மணிக்கலாற்செய்தகுன்றின்வாய்
விரவியாடுவார்விளங்குதந்நிழல்
கரவிலாதுகண்ணடியிற்றோற்றலும்
பலர்கொலோவெனப்படர்ந்துதேறுவார். (௨௯)

பேதையாருழைப்பிழையிலார்க்குமிக்
கேதமேயுறுமென்றியம்பியாங்
கோதுமாதர்கையுற்றகந்துக
மாதகாதெனவடிபட்டாடுமே. (௩௦)

பாடியம்மனைபாவைமாறிங்
தாடுசெங்கையையயலொன்றன்னவர்
நீடுவார்குழனிலவுவண்டுக
ளோடிவீழ்ந்தெழுந்துடனுலாவுமே. (௩௧)

மேசிலாருயிர்க்கென்றுணைப்பபோற்
பாசநீட்சியிற்பரந்துலாவுறு
மூசனீங்கலாரோடரிக்கணா. (௩௨)

பண்ணையாட்டயர்பாவைமார்குழல்
வண்ணமாலைபும்வாசச்சுண்ணமு
மொண்ணிழற்கலனோடுவீழ்தலால்
விண்ணுளார்க்கும்விம்மிதம்விளைக்குமே. (௩௩)

நூலாசிரியர்

போகபூமியும்பொருவுறுதென
நாகர்போற்றிடைநகருணாத்தன
மேகநாதனையிழைத்தவிஞ்சிசூழ்ந்
தோகைமிக்கவுண்ணகருணாததுமால். (௩௪)

(வேறு-இதுமுதல்-அ௯-கவி உள்நகரச்சிறப்பு இதனுள்-௫ கவி அகழும்மதிலும்.)

வெலற்கரும்பகைவிழிநகையாதியின்விளித்தும்வன்படைநாதன்
மலர்க்கரத்துமீளிமைக்கடையாளமாவயக்கியதிறனேய்ப்ப
வலக்கண்வெம்பகையாதிகள்காணுமுனனுக்கியுமரணென்னச்
சொலத்தகுஞ்சுடர்மதில்புடையுடுத்ததுதொல்லைமாநகரம்ம. (௩௫)

தூங்குவீங்கிருடேரந்தொளிகளுற்றுவெஞ்சுடரவன்கலைத்திங்க
ணீங்குறாதவல்லுடுக்கணமேகமுனித்தலும்வெளியூடே
யாங்கவேகுழித்தவிர்ந்திளைப்பாறவுமமைந்ததாலவிர்செம்பொ
னோங்கலாமலதெனநிவந்தோங்கியவொளிர்மணித்தடநொச்சி. (௩௬)

பொருதுதன்னிலைகடக்கும்வன்மீளியர்புவனமூன்றினுமில்லா
வருமைமல்கியதாயினும்பொருளெலாமளித்தவன்செயப்பட்டுப்
பெருமைமல்கியநகர்க்கெலாங்காட்டெனப்பிறங்கலின்மணியிஞ்சி
கருமைமல்கியவகழியும்பொறிகளுங்கலந்துவீற்றிருந்தன்றே. (௩௭)

சிவபெருமானுக்கும் மதிலுக்குஞ் சிலேடை

முடியில்வான்செழுங்கங்கையுந்திங்களுமுதிரொளிமணிப்பாம்பும்
படியநீர்க்கிடங்கடித்தலஞ்சூழ்தரப்பயின்றநொச்சியின்வீக்கங்
கடிவிராவியகடுக்கையங்கண்ணியான்கடையுகத்தெழுமாழி
நெடியநீரிடைமாலயன்முரண்கெடநிவந்துநின்றதுபோலும். (௩௮)

எறிந்துவண்டெளர்கமலமுங்குமுதமுமிருங்குவளையுமற்றுஞ்
செறிந்தநல்லெழிலந்நலாருறுப்பொடுதெவ்வுவவிலையென்று
வறிந்துவெஞ்சிறையிட்டகோட்டம்பொரூஉமவையெலாமலையூடே
மறிந்துபங்கமுற்றுண்ணெகிழ்ந்திருங்கணீர்வாக்குந்தண்கிடங்கம்ம. (௩௯)

மதிலுறுப்பு.

இறைவன்யாவரும்வணங்கியும்வாழ்த்தியுமெண்ணியநலனெய்தக்
குறைவில்பேரருளாலிழைத்திட்டவிக்கோணைமாமதிட்பாங்க
ருறையுமேனையமதிலெனவெண்மையினுறலெனவொழிக்கின்றுங்
கறையுநீள்பொறியமரர்கள்விமானமுமகற்றுவவெளியூடே (௪0)

கோபுரம்.

செழுந்தண்மாமணிகுயின்றொளிதிசைதிசைசெறிந்துவல்லிருள்வாய்ப்பெய்
தெழுந்தகோபுரமந்நகர்த்தெய்வதமெழுந்துவிண்பரப்பெல்லைக்
கொழுந்தண்மால்வளங்கொண்டுயர்நகரொலாங்கோலவிந்நகரொப்புத்
தழுங்கொலோவெனவிழிகளிற்பார்த்திடுந்தன்மைபோன்றதுமாதோ. (௪௧)

## நகரின் கோபுரத்தின் கொடிகள்.

நால்வகைப்பெருவளங்களுமெளிதருணன்மையால்வளமாண்பாற்
சால்வதிந்நகரிந்நகர்நிகர்நகர்சகங்கண்மூன்றினுமில்லை
யெல்வதென்றெழுதெய்வதமிருங்கரமெடுத்துச்சூளுறநின்றாற்
போல்வதும்பரினெழுந்தகோபுரமிசைப்பொலிந்தவார்கொடியம்ம (௪௨)

## வேறு. இது முதல் - ௰௧ - செய்யுள் பரத்தையர் வீதி

நகரும்வளத்திற்சான்றநெடுநகர்க்குறுப்பாயென்று
மோங்கியமதிலுந்தாழ்ந்தவொலிபுனற்கிடங்குஞ்சொற்றாந்
தாங்கருமகிழ்ச்சிபொங்கத்தருணர்களுளத்தையெல்லாம்
வாங்கியொண்பொருளும்வாங்கும்வரைவிலார்சேரிசொல்வாம். (௪௩)

ஓவியவுருவமெல்லாமொண்டொடித்தடக்கைச்செவ்வாய்க்
காவியங்கண்ணினல்லார்காரிகைக்குடைந்தவாற்றா
னாவியலுரையுமற்றுநடையுமற்றிமைப்புமற்றுப்
பாவியவுயிர்ப்புமின்றிப்பயின்றனசுவரோடொன்றாய். (௪௪)

கண்டவருயிரையெல்லாங்கதுமெனத்தம்பாலாக்கி
கொண்டமர்பரத்தைமார்கள்கொள்கையைத்தெரிக்குமாபோற்
கண்டவருருவமெல்லாங்கவர்ந்தொளிர்தருப்பணங்கள்
கொண்டபன்மாடமேடைகுலவுவசேரியெங்கும். (௪௫)

## வேறு.

உடையினுமணியினுமுருவச்சாந்தினு
நடையினுமொழியினுநயனநோக்கினுந்
தடையறமயக்குநர்தமக்கினம்மென
மிடைவனவருழைவேரித்தண்டரோ (௪௬)

அஞ்சனமெழுதியங்கயற்கண்மாமுலைக்
குஞ்சரமெழில்பெறக்கோலந்தீட்டுவார்
மஞ்சரையாவணம்வரைந்திடாமையே
யெஞ்சலில்பொருளுங்கொண்டேவல்கொள்வரால். (௪௭)

கற்பிலர்பொய்யினர்கவர்த்தநெஞ்சின
ரற்பிலரெனநனியறிந்தமன்னரும்
பொற்பொடுசிறப்பருள்பொலிவினாரெனிற்
சொற்பயில்பரத்தையர்சொரூபமென்சொல்கேன். (௪௮)

சூதுபொய்யரியலிற்றெருட்டக்கமாதியாத்
தீதுசெய்யினும்விலைத்தெரிவைமாருழை
மாதருக்குடைந்தபூமாதுவைகலுங்
கோதறுதிருவெலாங்கொடுத்துநிற்குமே. (௪௯)

கலைத்தொழிற்சுவையினுங்கடுத்திலேமென
விலைத்தெரிவையர்க்குளம்வெள்கிப்பூக்கரந்
தலைத்தருபயத்தின்விட்டன்பனுவக
நிலைத்துருக்கரந்தனணிகழ்சொன்மங்கையே. (௫0)

ஆடலினரவுமமுதுகுத்தெனப்
பாடலினிசைகளும்பகலுமெல்லியும்
கூடலிற்றுறக்கமாய்க்குறைவிலின்பமே
நீடலின்வீடுமாய்ச்சேரிநின்றதே. (௫௧)

சுடர்க்
விடமொழித்தார்வலர்வேண்டியாங்கருள்
கெடவரற்பரத்தையர்கெழுவவல்லரோற்
கடல்கடைந்திளைப்பரோகடவுளாரெலாம். (௫௨)

நூலாசிரியர்.

மேவணவகப்பொருள்விலைசெய்வாழ்க்கைய
தூவணப்பரத்தையர்சூழல்சொற்றனம்
பாவணப்புறப்பொருள்பலவும்விற்றிடு
மாவணவீதியினமைதிசொற்றுமால். (௫௩)

வேறு. இதுமுதல் ௯ செய்யுள் ஆவணவீதி.

மரகதமணிக்கிடுகுவளர்செழும்பவளக்கால்
விரவுறவெடுத்திட்டுவேறுபன்மணிமாலைக்
குரவலர்மலர்த்தொங்கல்கோடணைகொளவார்த்துப்
பரவுநன்மணமூட்டிப்பயின்றனகடையெல்லாம். (௫௪)

முந்திடவெழிற்பந்தர்முகிலுழைதரசெய்து
நந்தொளிமணிவாழைநாகிளங்கமுகியாத்துச
சுந்தரமலர்வாசசுண்ணமுநனிதூவி
யிந்திரநகரேங்கவிருத்தினர்தவிசெங்கும். (௫௫)

நடுநிலைபிழையார்போனலத்தகுகோறங்கைந்
தொடுதலினன்றேயித்தொலைவருபொருளெல்லா
முடையவராகின்றாரூதியநாய்கரெனக்
கடைவளநோக்குநர்கள்கருதுறுந்தகையனவே. (௫௬)

வரைவளமுழுதொருபால்வனத்தனமுழுதொருபா
லுரைதருபழனத்திரள்வளமுழுதொருபாற்
றிரையனமுழுதொருபாற்செறிதலினியமந்தாந்
தரைமகள்பண்டாரம்போன்றனதனித்தனியே. (௫௭)

வரையெனமணிமாடம்வனமெனவுயர்கொடிக
டிரைதவழ்கடலென்னத்திகழ்சனவொலிமூன்றும்
விரவியநியமந்தாம்விளம்புமுந்நிலந்தாமும்
பரவியதண்ணடையிற்பயில்வுறுந்தகையனவே. (௫௮)

இரதமோடெழில்வேழமிவுளியுமயிலாதிக்
கரவில்பல்படைமற்றுங்காதலின்விலைசெய்ம்மார்
நிரைநிரைநிறுவித்தநீடியநியமந்தாம்
வரமலிபாசறையினயங்குவவொருபாங்கர். (௫௯)

விஞ்சுபண்மொழியும்விரவலிற்பொருள்கவரா
தஞ்செவிதுயர்கூரவனைத்தையுநுகர்கிலமென்
றெஞ்சியபொறிநான்குமின்னலிற்றுளைகிற்பத்
தஞ்சமில்பொருளெல்லாந்தலைத்தலைசிறந்தனவே. (௬௦)

உளதுகொலிலதுகொலென்றொருபொருள்வினவுதலு
முளதிலதெனச்செவ்வேயுணர்த்தலுமலதிலையென்
றளவலுமவைமூன்றுமாங்கிலையாவர்களு
மளவில்பல்பொருளெல்லாந்தருகெனவமைந்தனவே. (௬௧)

கொள்ளுநர்தமக்கெல்லாங்குறைவறநனிநல்கி
யொள்ளியபொருள்பலவுமொருதினம்போற்காட்டி
நள்ளுறுமாவணங்களாநாடொறினமங்கா
டெள்ளுலவாச்சிழிப்பிற்றிகழ்வனதகவுறவே. (௬௨)

நூலாசிரியர்.

சேயிடைப்பொருள்பலவுந்தெவ்வுநர்க்கெளிதாக
வாயிடைத்தவ்வுய்க்குமாவணத்தெழிலீதாற்
பாயினபுகழோங்கும்பல்குடிகளுமல்கி
மேயினமணிவீதிவியத்தகுவளஞ்சொல்வாம். (௬௩)

வேறு. சங்கரசாதி.

எடுத்தசாங்கரத்திணங்குபல்வேறுசாதியினு
மடுத்தமாந்தர்களவரவர்க்கான்றதொல்லொழுக்க
மடுத்துமேவிடவதிந்துவாழ்மறுகுகள்சூழ்ந்து
தொடுத்தவோகையிற்றுவன்றினதுலங்குநாற்றெருவம். (௬௪)

இதுமுதல் ௪ செய்யுள் வேளாளர்வீதி.

உழுதியாவருந்தத்தமதொழுக்கினிற்பிழையா
தொழுகுமாறுபகரித்துவேளாளரென்றொருபேர்
தழுவுநீர்மையர்தருமமாதிகளொருநான்குங்
கெழுவுமோகையர்கிளர்ந்துவாழ்வீதிகளொருபால். (௬௫)

தருமனுயினுந்தானுவின்பெருமைதேர்ந்தவர்தம்
பெருமைதேர்கலாப்பிழையினர்பிரிந்துபின்னவனை
யெருமையூர்திதொண்டினும்பிழையாரிவரெனச்சார்ந்
தொருவுறாதனபோன்றனவோங்குகார்மேதி. (௬௬)

விளைந்துவந்தனவித்துமாயுணவுமாய்விரவ
வளைந்துநின்றிடும்பின்னவரமர்ந்திவாழ்மாடம்
வளைந்துநின்றுவல்வினைகண்மூவகையெனமருவத்
தளைந்துநின்றவத்தனிப்பெருமாயையேதகைவ. (௬௭)

மண்ணிலேபலவித்திவண்பொருள்விளைப்பதுபோற்
றிண்ணமாகநல்குரவினர்செங்கையோதனமும்
வண்ணமாகியபொருள்களும்வகைவகைவித்தி
யண்ணலாம்புகழ்விளைத்தலாலயின்றுகண்டுயிலார், (௬௮)

இதுமுதல் ௩ செய்யுள் வணிகர்வீதி.

உள்ளம்யாவையுங்கோணுதலுறுதசெந்நிலமை
யின்னுறு துதங்குறிப்பினுல்விளக்குவார்போலத்
தெள்ளும்வானிறைக்கோலினைச்செங்கையிற்றாங்கிக்
கொள்ளுநீர்மையர்குழுமிவாழ்வீதிகளொருபால். (௬௯)

முதல்கெடாவகையறவணத்தூதியமுகக்குங்
கதமிலாதுயர்வணிகர்தங்கைப்பொருண்முழுது
முதவியார்வலராதியோர்க்கும்பரின்மாட்டுஞ்
சிதர்வி னூதியஞ்செறித்தலாற்றெறுபசிகளையார். (௭0)

வளமைமாநகரொக்குமோவளர்நிதிக்கிழவர்
இளனுரோடெல்லாயிரர்கெழீஇயினர்வதியுந்
தளர்வில்பேரொளியசும்பியதமனியவீதி. (௭௧)

இதுமுதல் ௪ செய்யுள் அரசர்வீதி.

பகைமைமீக்கொளுமன்னரைப்பறந்தலைப்படுத்து
மிகைமைமீக்கொளவிண்ணெலாங்கைக்கொளவிடுத்துத்
தகைமைமீக்கொளுமண்ணெலாந்தமதுமண்ணுக்கி
வகைமைமீக்கொளுமன்னர்வாழ்வீதிகளொருபால். (௭௨)

அங்கண்வாழ்தருமரையர்கண்ணிமைப்பனவாயும்
பொங்குபோரிடையழித்திமையாதிகல்பொலிவு
தங்கண்மேவரிதென்பதுதாமறிந்திமையாத்
துங்கமேயினர்தோல்வியிற்படாவகைச்சுரர்கள். (௭௩)

யாருயிரியங்காமை
வயக்கினுலெனவயின்வயிற்செயலறவதிந்த
வுயக்கமாணவந்திறுத்தவொன்னலருயிர்குடித்துத்
தயக்கமாண்டவத்திரமுதலாஞ்சமர்ப்படைகள். (௭௪)

இரக்குமார்ந்தர்நல்குரவெனும்பகையொடிரப்பிற்
கரக்குங்காரறிவெனும்பகைகருணையம்படையா
லரக்கிமேதகுமறமெனுநிலமுழுதாண்டு
பரக்குமோகையிற்படிந்தலாற்பரிவுயிர்த்தமையார். (௭௫)

இதுமுதல் ௫ செய்யுள் மறையவர்வீதி.

மூவர்தாடொழுமுதன்மையுமூவகைப்புரமுந்
தாவநூல்பலபயிற்றலுந்தழல்கையோம்புதலு
மேவலால்வெறிக்கொன்றையங்கண்ணியான்விழையு
மோவின்மாமறையந்தணர்வீதிகளொருபால். (௭௬)

சென்னிமேவுறுவருணத்திற்றணிக்கலாச்சிறப்பின்
மன்னியாவரும்வணக்கலாமதிமுடிச்சடையோன்
றன்னைநீள்சிகைதாழ்க்கலாத்தழலிடைவழிபட்
டென்னுவான்கதியுறுபவர்வாழ்க்கைசொல்வரைத்தோ.

செருத்தலான்பலபடுத்துஞ்சேர்ந்தார்தமைக்கொல்லி
யிருத்திராடொறும்பூசனையியற்றியுமிழியார்
வருத்தும்வானவர்பசியொரீஇமழைவளஞ்சிறப்பித்
தருத்திரானிலத்தரந்தையுமணுக்குறாவே. (எஅ)

வேதமோதியும்வேள்விகள்பற்பலபுரிந்து
மேதநீவியுமதிதிபூசனையினிதமைத்துங்
காதலன்முகனலருறக்கடிநகரிருக்கு
மாதர்வேதியராலதுகண்வையகக்கிலையே. (எகூ)

வேள்விமுற்றியவேதியர்வேறுவேறாரும்
வாள்விமானமுமிரதமுமதவிளங்களிறுந்
தாள்விசைத்தெழுபுரவியுந்தகைதலின்வீதி
யாள்வினைத்திறத்தரசர்வீதிகளொடுமமர்ந்த. (அ0)

ஆதிசைவர்.

தாங்களேயருளுடையராந்தகுதியைமதியார்
யாங்கணியாவருமருளினராம்வகையெண்ணி
யோங்குபூசனையிரண்டையுமுஞற்றுவிப்பிரர்கள்
வீங்குமோகையின்வதிதரும்வியலிடம்பலவால். (அக)

மடங்கள்.

சரியையாற்றுநர்மடமொருசாரெலாந்தழையுங்
கிரியையாற்றுநர்மடமொருசாரெலாங்கெழுவு
முரியயோகியர்மடமொருசாரெலாமொளிருந்
தெரியுஞானியர்மடமொருசாரெலாஞ்சிவணும். (அஉ)

திருமஞ்சனமெடுப்போர்:

நம்பனாரடிப்பூசனைநலத்தகவியற்ற
வம்புநீள்புனன்மணிக்குடமுச்சியின்வயக்கி
யம்பரேகுநரடுத்திடுமுருவின்வான்கங்கை
பம்பவேற்றுநின்றூற்றுவான்பழகுவாரனையார். (அங)

நாற்கவிப்புலவர்கள் ஆசுகவி மதுரகவி, சித்திரகவி விஸ்தாரகவி.

கான்றதீஞ்சுவைநால்வகைக்கவிதையும்புணர்க்கு
மான்றகேள்வியிற்கவியொடுகமகனேவாதி
யான்றவாக்கியென்றனைவருமளவளாயிருந்து
சான்றநூறெரிபட்டிமண்டபம்பலதயங்கும். (அச)

அன்னசத்திரம்.

மூன்றிரட்டியசுவைகளுமொய்த்தநாலுண்டி
மான்றவைம்பொறியடங்கியமாதவர்முதலோர்க்
கேன்றநல்லுபசாரத்தினினிதுமிக்கூட்டி
யூன்றிநின்றிடுமோதனச்சாலையுமுளவால். (அரு)

இதுமுதல் உங-செய்யுள் பொதுச்சிறப்பு.

அவத்தினின்றவரிருக்கைகளவணிலவாகத்
தவத்தினின்றவரிருக்கையுமவணசார்பத்திப்
பவத்தினின்றவரிருக்கையுமவணபண்பினராய்ச்
சிவத்தினின்றவரிருக்கையுமவணதேசுறவே. (அசா)

ஆங்கணில்லதென்றோரறமனைத்துலகினுமி
லாங்கணில்லதென்றொருபொருளனைத்துலகினுமி
லாங்கணில்லதென்றின்பமொன்றனைத்துலகினுமி
லாங்கணில்லதென்றரியவீடனைத்துலகினுமில். (௮௭)

வேறு.

வாரணத்திரளும்வாம்பரித்திரளுமணிகுயின்றெடுத்தபொற்றேருந்
தாரணிபுயத்துமைந்தரந்தணர்கைத்தானமாக்கொடுத்தனருகுக்கு
நீரணிமகளிர்சிதர்ந்தகுங்குமமுநிழன்மணிக்கலன்களுங்கொழுத்த
சீரணிவண்டலிழுக்கலின்விரையச்செலவுறாசெப்பியவவையே. (௮௮)

உருக்கியபசும்பொற்றகட்டினுன்மணியாலுருகெழப்படுத்தவார்வீதி
பொருக்கெனப்புகுவாரடிக்கிடர்புரியப்புழுதியும்பரலுமின்றேனுந்
தருக்கினர்மடவார்வீசுகுங்குமமுந்தமணியப்பொடியும்பூந்தாதுங்
குருக்கலத்திரளுங்குவால்படக்கிடந்துகுறுநடையாக்குவமாதோ. (௮௯)

வீதிகட்கழகுபுரிவனவுயர்ந்துவிரிந்தபூம்பந்தரப்பந்தர்க்
கேதமிலழகுபுரிவனமணியினிழைத்தவேதிகையவைதமக்குக்
கோதறுமழகுபுரிவனநிறைநீர்க்கும்பமுமாடியும்விளக்குந்
தீதறுமழகுபுரிமலர்த்தொடையுஞ்செழுங்கனித்திரள்களும்பிறவும். (௯0)

நாரணன்முதலோர்வலம்வரும்வீதிநள்ளிருமருங்கினுமணியாற்
சீரணிந்தெடுத்தமாடமேடைகளிற்செறிகதிர்ப்பிழம்புதைவரலாற்
றோரணநிரையுந்துகிலிகைக்காடுஞ்சுரும்புளர்பந்தருமிடைந்து
தாரணிவிளக்குஞ்சுடரிருங்கிரணந்தடுத்தும்வல்லிருள்படாதால். (௯௧)

தமனியத்தகடுபடுத்தொளிர்நிலத்தாற்றமனியப்பொடிகள்போர்த்தெல்லா
தமனியவுருவாயிருத்தலாற்பந்தர்தகைந்திருசுடரையும்விலக்கந்
தமமறமணிகளென்றுமோரியல்பிற்றகையொளிவிரித்தலாற்றெருக்க
டமனியவுலகம்பொரும்புரையாதுதனிச்சிவலோகமும்பொருளால். (௯௨)

வேறு

விண்ணந்தூமநிறத்ததுவேறுபல், வண்ணமேயதென்னேயெனவானவ-
ரெண்ணமாடத்திழைத்தொளிர்மாமணி. நண்ணிருங்கதிர்நாளும்பரக்குமே

நீலமேகநிமிர்ந்துதவழ்தொறுஞ். சூலமேந்திச்சுடர்விடுமாளிகை. ஞால
முய்ந்திடநாகத்தினீருரிக், கோலங்கொண்டகுழகனோடொக்குமே. (௯௪)

வளங்கொள்வெண்சுதையூட்டியமாடமேற், றுளங்குபைங்கதிர்ச்சோம
ன்றவழ்ந்துறல், விளங்குமாதர்முகம்பொரமெய்யுரைஇக். களங்கமாய்
க்குமக்காட்சிநிகர்க்குமே. (௯௫)

உருவவார்சிவிறிக்குலத்தூக்குநீ, ரருவிவார்கொடியாரமைமாளிகை
பொருவின்மால்வரைபொற்பவங்காடுவான், மருவுமாதர்வரையராமாதரே.

ஈண்டுதேவரிருக்கைநிலத்துகா, தாண்டுவானிடையேயமர்வெய்திய.மா
ண்டவான்மதலைத்திரள்சேர்த்தென, நீண்டகேதனநீள்விசும்போங்குமே.

மேனிலத்தின்விராயமர்மாந்தர்கள், கீழ்நிலத்துக்கெழூஉம்புனல்கொள்கி லா. ரானிலத்தொளிரம்புலியின்சிலைக், கானிலைத்தகடிப்புனல்வாக்கலான்

இந்தமாநகரத்தெழிலோடெதிர், தந்துநோக்கத்தமனியமாநக, ரெந்த நாளுமருஞ்சுரர்மாதலா, லந்தவான்பதியார்சுரராயினர். (௯௯)

அருமவிண்ணழகான்றிலதென்பது, கோளுநாளுமிக்கோணைநகரொன நாளுநாளுநலத்தகக்காணிய, தாளுருவதுவேதகச்சாற்றுமே. (க00)

எடுத்தமேனிலத்தின்புறமாந்தர்க, டொடுத்தவான்கலவிச்சுவைநோக் கிபுண, மடுத்தநீளழுக்காற்றின்விண்வாழ்க்கையர், விடுத்துளாருணவோடு விழித்துயில். (க0க)

இயற்கைமெய்யெழிற்றுக்குறின்யாவருஞ், செயற்கையற்றழிசெய்கைய றிந்தும். மயக்குமெய்முழுதும்மறைத்தாரோ, தயக்கமாணணியாலிளந் தையலார். (க0உ)

கருவகயற்கணமாதர்காதலன்பரைப்புலந்துநின்
றொருவகுத்தங்கைவாங்கிவீசலுற்றதாரிறேடுபோய்
நெருங்குகற்பகப்பொழிற்கணீடுகூடுவண்டினை
மருங்குகண்டிதென்கொலென்றுவானுளாரயிர்ப்பரே. (க0௩)

நகுகதிர்ப்பிழம்புகாலுநன்மணிசெய்மேனிலத்
துகுமதுக்கமழ்ந்ததொங்கலோதிமாதர்கூடலின்
முகுளிதங்கண்கொள்ளவேர்முகத்தரும்பநோக்கிய
வகமதித்திருந்தவானினந்நலார்சமழ்ப்பரே. (க0௪)

புலந்துநிற்கும்வேலையும்புணர்ந்துநிற்கும்வேலையுங்
கலந்துநின்றதம்மையுங்கழற்றிவிட்டமானுமுள்
ளலர்ந்துவீதிவெய்யினின்றவான்றமாந்தர்கேட்கென
மலர்ந்தவாண்முகத்தினார்தம்வாசமாலையாதியே. (க0ரு)

பாடகப்பசும்பொனூபுரத்தளிர்ப்பதத்தினார்
மாடகத்தயாழெழுப்பமாடுவீழ்ந்தகின்னர
ரீடகத்தருக்கிரித்துநீவிர்பண்பயிற்றுகென்
றேடகத்தகூந்தலார்க்கிறைஞ்சிநின்றதொத்ததே (க0௬)

வயங்குகிள்ளைபூவையோடுமாதுமாதர்சொல்லென
நயங்கொள்பாடலுட்புணர்த்துநாவலார்க்கவற்றினை
யியங்குறுதுகூட்டிவிட்டிடித்திடித்துரைத்திசைப்
பயன்கொளுத்துமாதர்மேன்மைபார்த்தலின்மையென்கொலோ. (க0எ)

மங்கலச்சிறப்புநாளுமாடமெங்குமல்கலிற்
றுங்கவச்சிறப்பினோடைமைந்ததூயதோட்டிமை
தங்கலான்வனப்பிரண்டுசாருமேனைமாநக
ரங்கண்ஞாலமெச்சுகின்றவந்நகர்க்கிணங்குமே. (க0அ)

ஆலயம்.

பூமடந்தைமார்பிலிட்டபொற்றபேரணிக்கல
மாமணிக்குலங்குயின்றமைந்தமாடமாநகர்
காமர்மல்குமக்கலங்கலந்திலங்குநாயக
மாமணிக்குழாங்கடுக்கைமாலைவள்ளல்கோயிலே. (க0௯)

வேறு. திருமதில்.

தங்களுக்கிறைவனீன்றதாழ்குழற்றேவியன்பு
பொங்கமிக்காற்றுநின்றபுரையறுதவத்திற்கூறு
தங்குவதில்லையாகத்தடவரைக்குலங்கள்சூழ்ந்து
மங்குழைநின்றுங்காத்தாலனையபன்மதிலுமற்றும். (௧௧௰)

திருமதிலின்கோபுரம்ரிஷபம்.

குருமணியிழைத்தநொச்சிகோபுரமாடமெங்கு
முருவவெள்விடைகடங்கியொளிர்தருகாட்சிநாதன்
றிருவடிவணங்கச்சார்வோர்செயிர்வழியிடையேநீங்கத்
தருமவெள்ளேறுபல்வேறுருக்கொடு* தவிர்ந்ததொக்கும் (௧௧௧)

தீர்த்தமெடுப்போர்.

மேதகுதீர்த்தங்கொண்மார்வியத்தகுபடியின்மாந்தர்
காதலினிறங்கியேறிக்களித்துறுங்காட்சிசுத்தத்
தேதமிலவத்தையைந்துமேறியுமிழிந்துநிற்குஞ்
சாதகருள்ளமென்னத்தகையுறுநாளுநாளும். (௧௧௨)

தீர்த்தங்கள்.

நம்பிரானுருவங்கொண்டதம்மினத்தீர்த்தங்காண
நம்பிவந்திறுத்தாலன்னநளிர்புனற்றீர்த்தமெல்லாம்
வம்புலாமலர்கள்பூத்துமலரடிக்குதவித்தேசு
பம்பியான்றவிரிற்சாலத்தெளிந்துபாவமுந்தீர்க்கும்மே. (௧௧௩)

இயாகத்தின் புகை.

கையணிநுதற்கணுடுங்கவினரங்கிறைவர்க்கான
செய்யணிகுறித்துச்சேர்ந்தார்க்கொல்லுமத்தீயைநோக்கா
தையர்செங்கனலியோம்புமவிர்மணிவேள்விச்சாலை
நெய்யவித்தூமநாளுநெடுவிசும்பளக்குமன்றே. (௧௧௪)

அறவிடைக்கொடி.

பெருகியவன்புபொங்கப்பிஞ்ஞகன்றன்னைத்தாங்கு
முருகியவுள்ளம்மேலாயோங்குமென்றுணர்த்தாநின்ற
திருநிலமுழுதும்போற்றவெம்பிரான்றிருமுன்றேலாத்
தருமவெள்விடையினூர்திதனிக்கொடிநிவந்தகாட்சி. (௧௧௫)

நம்பிரானினிதுவைகிநல்லருள்கொழியாநின்ற
வம்பொனாலயத்துமேலாலவிர்மணித்தூவிப்பாங்க
ரும்பர்வானளந்துநிற்குமுருகெழுநாவற்றுரு
செம்பொன்மால்வரையின்பாங்கர்ச்சிவணியநாவலொக்கும். (௧௧௬)

தீபங்கள்.

கவர்மணிவிளக்குஞ்செய்யகனற்செழுவிளக்கும்பல்வே
றவிர்வனவன்புபொங்கவடிமலர்தொழுவோர்க்கெல்லா
மிவர்நுதல்விழிகளாகவீவதற்கிறைவர்வைத்த
வுவமையிறழல்கள்போன்றவொளிர்செழுங்கோயிலெங்கும். (௧௧௭)

---

* தவிர்தல் - தங்குதல்.

வாத்தியம், தோத்திரம், அரசர்கள் உபயங்கொடுத்தல்.

முரசம்விண்முகிலுநாணமுழங்குறுமுழக்கும்பல்லோர்
விரசினர்வணங்கிப்போற்றும்வியத்தகுகுலாப்புந்தேவ
ரரசர்கள்பொருள்கணல்கியடிதொழுமார்ப்புமல்கித்
திரைசெறிகடல்களேழுந்தெழித்தெனத்திகழுமன்றே. (௧௧௮)

தலத்தின் பிரயோசனம்.

இருட்பிழம்பெடுத்துவாய்ப்பெயரிமணிக்குவையும்வேறு
பொருட்டிரட்குவையுமியாண்டும்புணர்கலாப்புதியபொற்பு
மருட்டிறத்தினருங்காணின்மலமொருமூன்றுநீங்கி
யருட்டிறத்தினர்களாக்குமாக்கமுமவணமாதோ. (௧௧௯)

அகிலாண்டநாயகி பெருமை.

அறுவகைமதத்தினோர்க்குமவ்வவப்பொருளாய்நின்றுங்
குறுவரமருளுமுண்மையொருபொருளாயேநின்று
மறுவறவிளக்கிநின்றுள்வணங்குநரெவர்க்கும்வேட்ட
நிறுவிமெய்ஞ்ஞானநீதிநிகழ்த்தகிலாண்டவல்லி. (௧௨௦)

சிவபெருமானைத்தரிசிக்கு முறைமை.

எவ்வழிமுயன்றுபூசையியற்றினுமடிமையானோ
ரவ்வழிவழியேயாகவடிநிழல்குறுகுமுண்மை
செவ்விதினுணர்த்துமுக்கட்செம்மலைப்பலசாலோகந்
தவ்வியமனுங்கயாருமன்பொடுகாணுங்காட்சி. (௧௨௧)

சிவபெருமான் மகிமை.

நெகிழ்ச்சிமிக்குடையநீரானெடுவெலியுருவந்தான்கொண்
டிகழ்ச்சிமிக்குடையமாசினிணங்கினோரிருப்புநெஞ்சு
மகிழ்ச்சிமிக்குடைமையாகவரவரநெகிழ்த்துநாளும்
புகழ்ச்சிமிக்குடையவின்பப்பூரணனரசுசெய்யும். (௧௨௨)

நூலாசிரியர்,

இத்தகுவளமைசான்றவெழில்வளராணைக்காவி
னுத்தமசரிதமெல்லாமுயர்ந்தநைமிசவனத்தின்
மெத்தியவன்பின்வைகும்விரதியர்சூதன்றன்னைப்
பத்தியிற்கடாவின்றபரிசினைப்பகரலுற்றேன். (௧௨௩)

திருநகரச்சிறப்பு முற்றிற்று.

நம-௨௧௧.

# நைமிசப்படலம்.

'இது முதல் ௰௧ செய்யுள் நைமிசாரணியவருணனை.

திருவிளங்கியதேயத்தவர்க்கெலாங், கருவிளங்கிய கார்வளஞ்செய்வதோர், குருவிளங்குகுரையழல்வேள்வியி,னுருவிளங்கியதானுயர்நைமிசம்.

மண்ணயந்ததண்வாரிவழங்குமா, றண்ணலங்கனலாற்றிவளிதடுத், துண்ணயந்தவுறுவரினூற்பசி, விண்ணயந்தவர்வீப்பதக்கானகம். (௨)

உ-தரவங்கியுலகொருமூன்றினுஞ், சிதையவங்கிளைர்த்திடுஞ்செய்கை யார், கதமிலாதவர்காய்தரிற்றேவரு, மதலையற்றிடும்வாய்மையரங்குளார்.

விடுத்தமந்திரமேவியழைக்குமுன், னெடுத்தவன்பினரற்கெதிர்கொண் டெனை, வடுத்துவிண்ணவராங்குறவானெலாந், தொடுத்தவேள்வியின்றாம நிவக்குமால். (ச)

மடங்கல்வாரணமான்புலிமாறற, விடங்கடோறுமிருப்பனவெம்பிரா, னடங்கொள்சேவடிநண்ணியதாங்களு,மடங்கிமாதவமாற்றுவபோன்றன.

அயில்கொள்சூலியருச்சனைமாலியம், வெயிலில்வாடுவவேள்விடும்வெங் கணை, பயிலுமாதவர்பாலுறலஞ்சுபு,செயிரிறுங்கழியுஞ்செயலொத்தன.()

மறியுடம்புதைவந்துசின்மாதவர், கறிபுனல்கினர்காக்குமப்பெற்றிமை மறிகையேந்திவடிவுகொளன்றுகைப், பெறுவதாமெனப்பேணுவதொத்த தே. (எ)

அவியிருங்கொடையந்தரர்க்கீந்திடுஞ், சவிநெடும்புகழ் தம்மையும்போர் த்தொளிர், கவின்விளக்குவ காசறுமாதவ, ரவிர்வெண்பூதி யணிந்தொ ளிர்தோற்றமே. (அ)

படியில்வேறுபற்றின்மை தெரித்தெனக், கடிவிராவு கடுக்கையங் கண் ணியெம், மடிகள்கண்மணியேயணியாக்கினர், நெடியவையபிறப்பருங் கோளினர்: (கூ)

கற்பகத்துக்கவினிழைதம்மைமே, வற்பின்வந்தண வுந்திறங் காட்டுமப் பொற்பினின்றனர்புண்ணியமாதவர், வற்பின்வற்கலைவாங்கியுடுத்தியே.()

பிறவியொப்பினும் பேணிய்செய்கையா, லறவர்மேலென்றனறவன் மாதவர், செறிமயிர்த்தொகை செஞ்சடையாகிவிண், ணெறியினுரையு நி ச்சம்வணக்கியே. (கக)

மொழியுமாமொழியுங்கிளிபோற்சுவை, வழியுமாமறைமாதவர்தஞ்சிரு, ரழிவிலாசிரியன்வழியோதுறுங்,கழிவிலோதைக்கிடையொருகாலெலாம்.

விளங்குவேதபுருடரேமேவியங், குளங்கொள்காதலிறேறுதல்வீழ்தரத் துளங்கமாமறைசொல்விநல்லந்தணர், வளங்கொள்வேள்வி வளர்ப்பதோ ர்சாரெலாம். (கங)

மதிமுடித்தருள்வள்ளறன்பூசனை, விதியிறுற்றிவிளங்கழலோம்புபு, கதி யவன்பினர்காலத்தினுற்செயு, மதிதிபூசையு மாங்கொருபாலெலாம்.(கச)

இரண்டுநாடியியக்கமறுத்திடைத், திரண்டவாயுச் செலுத்தியிருண்மல, முரண்டடுத்தொளிர்மொய்யொளியேதமக், கரண்டகச்செயுமார்வமோர் பாலெலாம். (கரு)

நல்லஞானமிரண்டினுகாட்டம்வைத், தெல்லையற்றொளிரின்பக்கடலி டை, யல்லலற்றறிவற்றிரண்டொன்றறப், புல்லலுற்றபுணர்ப்புமோர்பா லெலாம். (கசு)

கருவிநூலுங்கணக்கும்பயின்றவர் பொருள்களாயும்புகற்சியோர்பாலெ லாமிருதிநூலின்விளக்கமுணர்ந்தவர், மருவுநீதிவழக்கமோர்பாலெலாம்.

நீங்கரும்புஞ்செழுங்கனியுஞ்சுவை, யோங்குதேனுமுடங்குருத்தாவென, வீங்குதீஞ்சுவைமேயபுராணங்கள், பாங்கினோதும்பயிற்சியோர்பாவெலாம். (௧௮)

இன்னதாகியநைமிசத்தெய்தினன், கன்னிபாகன்கழறொழுங்காதலான், பண்ணுகேள்விப்பதினெண்புராணமுந், தன்னவாகத்தழீஇக்கொண்டசூதனே. (௧௯)

வேறு.

எய்தியசூதனெழில்வனநோக்கி, வெய்தெழுசிந்தையின் விம்மிதனேக, வைகலுண்மைகியவந்தணர்தோரா, வுய்தியமென்றெதிருற்றனர்மன்னோ. ( )

மாதனமெய்துவறிஞரினொப்பக், காதலினாற்செய் கடன்முறைசெய்தங், காதனநல்கியதற்கணிருத்தி, யேதமினட்பினியைந்துரைசெய்வார். (௨௧)

வேறு.

இது முதல் ரு செய்யுள்நைமிசாரணியர்சூதமுனிவரையுபசரித்துக்கூறல்.

கற்பகஞ்சுரபிசிந்தாமணிநிதிகரைந்தவைந்தும்
பொற்புறவெளிதிற்றுமேவறிஞர்பாற்புக்காலென்ன
வற்பொடுமீங்குப்போந்தாயாதலினடியேமாட்டுத்
தற்பரனருளின்செல்வஞ்சார்வதற்கையமின்றே. (௨௦)

இருண்மலவலியைத்தாக்குமிராறனோடாறுஞ்சேர்ந்த
பொருவறுபுராணமுற்றும்புரையறத்தெளிந்தோய்க்கியாது
மருவரிதொன்றுகேட்கவலித்தனம்வாஞ்சைமுற்ற
வருளொடுமிறுத்தல்வேண்டுமதுவெதுவென்னிற்கேண்மோ. (௨௩)

உலப்பறுதீர்த்தந்தம்முளுத்தமதீர்த்தஞ்சால
நலத்தருமூர்த்திதம்முணலத்தகுமூர்த்தியின்ன
தலத்தினுளுயர்ந்துநின்றதலநீதொருங்கிருக்குமாயின்
மலத்தொகையிரியக்கேட்கும்வாஞ்சையேமென்றுரைத்தார். (௨௪)

சிவபெருமான் நந்திதேவருக்கும் அம்பிகைக்கும் கூறிய வித்தலமகிமையைச் சூதமுனிவர் சவுனகமுனிவர் முதலியோர்க்கு யெடுத்துக்கூறல்.

தவத்துயர்வலிமைசான்றசவுனகமுனிவனாதிப்
பவத்தொகையிரிக்குமையர்பரிந்தனர்வினாதலோடு
மவத்தொகையுயிர்கட்கெல்லாமனுங்கவச்சூதமேலோன்
சிவத்துளமழுத்திநின்றுதெளிந்தனனுவறலுற்றான். (௨௫)

தேவரும்விழையநோற்குந்திருத்தகுமுனிவர்கேளீ
ரேவருமின்பமெய்தவெம்முழைக்கடாவினின்ற
மூவகையுயர்வுமொன்றாய்முற்றியதலன்மற்றானக்
காவலதில்லைகொண்மின்கைத்தலக்கனியின்மாதோ. (௨௬)

அருந்தவப்பேறுவாய்ந்தவந்தணீராதலாலே
திருந்தியவானைக்காவின்றிருத்தகுமேன்மைநம்பாற்
பொருந்தியகிளந்தாமீதுபுராதனன்றேவிநந்திக்
கிருந்தருள்செய்ததாமென்றியம்பினன்மோனமூற்றான். (௨௭)

அனையதுகேட்டலோமெறிஞர்கண்மகிழ்ச்சிதுள்ள
வினையறுசூதன்பாதமீட்டுநன்றிறைஞ்சித்தேவி
வனைபுகழ்நந்திக்கண்ணல்வகுத்தவாவகுக்கவென்றார்க்
கினையதுமுரைத்துமென்னுவிவறினன்சூதமேலோன். (௨௮)

எற்றமிலாளராகியிருந்தவக்கிழவரொல்லா
முற்றமெய்ச்சூதன்றன்னைவினவியதுமுத்தரந்தான்
மற்றவர்க்குரைத்தவாறும்வழங்கினுந்தேவிநந்திக்
கற்றவர்க்கற்றோன்கூறுமடைவினியுரைத்துமாலோ. (௨௯)

நைமிசப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம-௨௬௮.

# புராணவரலாற்றுப்படலம்.

இதுமுதல் (௧௫) செய்யுள் திருக்கைலாயச்சிறப்பு.

உலகம்யாவையுமொடுங்குமவ்வூழியுமொடுங்கா
திலகுபேரொளியாயதன்னிறைவனேயிழையச்
சுலவுவாரிதியுலகெலாந்தொலைக்குமக்கடைநா
ணிலவிமேக்குறநிவந்துநிற்பதுநெடுங்கயிலை. (௧)

உருத்திரப்பெயர்ச்செம்மலாருருவந்தன்மயமென்
றருத்திவையகந்தெளிதரவிலங்குசாத்துவிதம்
பெருத்தகுன்றமாய்த்தாங்கியபெற்றியேகடுக்குங்
குருத்ததும்பியகொழுஞ்சுடர்கொழிக்குமச்சயிலம். (௨)

மேகமண்டலங்கவான்வரைவிராவநள்ளிடையே
நாகநன்மணியிமைப்பமேனலக்குந்தன்னொளியே
யாகநின்றவக்கிரிகுணமூன்றுநேர்ந்தனைய
தேகனக்குணங்கடந்துநின்றனமிசையிருக்கும. (௩)

கற்றைவெண்கதிர்பரப்பியகலைமுழுத்திங்கட்
பெற்றியொத்ததுபெயர்ந்தெழுமாலைவெள்ளருவி
சுற்றின்வீழ்தரவிளங்கியகயிலைதுன்றியவா
னுற்றமீன்கணமொத்தசாரலினொளிர்முத்தம். (௪)

கொழுந்துகொண்டெழுகொழுங்கதிர்மாணிக்கமுழைநின்
றெழுந்துபல்லருவித்திரளிழுமெனவீழ்வ
செழுந்தழற்பெரும்பூதத்திற்றிகழ்தரத்தோன்று
மழுந்துதண்புனற்பூதமென்றறைவதுதேற்றும். (௫)

கூம்புகையவாய்க்கூம்பல்செய்யாவிழியினவாய்த்
தேம்புனற்செழுந்தடங்களுந் தெரிசியாநின்றுங்
தோங்கல்வெண்கதிர்பரத்தலினோரிருபொழுதும்
வீங்குபங்கயங்குவளைகள்விரிதராகுவியா. (௬)

எம்பிரான்றிருவுருவெடுத்தியங்குமெய்யடியார்
வம்புலாஞ்சடைவளர்மதிக்கிரணமெல்வாயும்
பம்பலாற்பனிக்கதிர்ச்சிலைகளும்பரனடியை
நம்பியாங்குருகியதெனநறும்புனல்வாக்கும். (௭)

யூற்றிருத்தலிற்பேரிசைதழுவிமிக்குயர்ச்சி
யேற்றிரிற்றலினமலனூர்சுதந்திரவிடமா
வீற்றிருத்தலினடியரின்விளங்குமப்பொருப்பு. (௮)

ஒருகொம்பானையுமோராயிரத்திரட்டிவெண்கோட்டுச்
செருவின்வேழமுந்திரளிமிற்றருமவெள்ளேறும்
பொருவிலோகையிற்பொருதியபடுவதல்லாது
மருவலார்களிற்பொருதிடப்படாதகவ்வரையே. (௯)

கொண்டல்வாய்திறந்துகுத்தவெண்முத்தமோகுலவேய்
விண்டுவாய்திறந்துகுத்தவெண்முத்தமோமடங்கற்
கண்டுகாய்ந்துகுகடாக்கரிமுத்தமோவறியா
மண்டர்போற்றுமக்கயிலையஞ்சாரலினதிகம். (௧௦)

கருணைநாயகன்கழலொழுக்கருதிவானவர்கந்
தருவர்சாரணர்சித்தர்விச்சாதரர்முதலோர்
மருவிவாழ்தாக்தழுவிவான்கதிகளெல்லாந்த
னுருவினேருழிக்காட்டவற்றுயதவ்வோங்கல். (௧௧)

பெண்ணினாயகியாகியபிறங்கலின்மடந்தை
பண்ணையாட்டயர்தரப்படர்பசும்பொழிலிடத்தும்
வண்ணவான்முழையிடத்துமென்மலரடிச்சுவடு
விண்ணுளார்முடிகோட்டுவவியத்தகவிளங்கி. (௧௨)

விலகிவில்லுமிழ்மணிகளுமவணுயாமை
மலர்செயைவகைத்தருக்களுமைவகைப்பசுவு
நிலவுபங்கயரிதிகளுநிகழ்வனைநிதியுங்
குலவுவிம்மிதப்பொருள்களும்வயின்வயிற்குழுமும். (௧௩)

கணங்கள்காதலிற்றம்பிரான்கழலிணைபரசித்
துணங்கையாட்டயர்காட்சியுஞ்சுடர்மணியரங்கின்
வணங்குநூலிடையரமகளிர்கண்மணிமுழவோ
டிணங்கவாட்டயராடலுமிடந்தொறுரிலவும். (௧௪)

இந்திரன்பதமுதலியவிமையவர்பதமுங்
கந்தமென்மலரயன்பதங்காகுத்தன்பதமு
மெந்தவிம்மிதவளங்களுமிறைஞ்சினர்க்களிக்கு
மந்தவெள்ளியங்கிரிவளமறைவதற்கெளிதோ. (௧௫)

## வேறு.

இது முதல் ய செய்யுள் சிவபெருமான் அரசாட்சி மண்டபச் சிறப்பு.

இனையவெள்ளியங்கிரிக்கெழில்செய்தாலெனக்
கனைகதிர்மணிச்செயுங்கால்களாயிரம்
புனைதருமண்டபம்பொலிந்ததாங்கரோ
துனைபரியேழுடைச்சுடருமாயவே. (கசு)

தெள்ளடியாரினுந்தீமைசெய்வவென்
றள்ளொளிக்கோளுநாளனைத்தும்யாத்தென
வொள்ளியமண்டபத்துள்ளெலாமிரு
ளள்ளுறுமணித்தொடையாக்கப்பட்டவே. (கஎ)

விலகிவில்லுமிழ்மணிவீற்றுவீற்றுறீஇ
யிலகியவிளக்கமுனிமைப்பில்லார்முடிக்
குலமணிமழுங்குவகுழகன்பேரரு
ணிலவுழியுயிர்மதிநின்றுமாய்ந்தென. (கஅ)

வளமலிமண்டபமருங்குதுன்றுவ
களமணிமிடற்றினற்காணப்போந்தவர்க்
குளமகிழ்ந்தருளியவுறுத்தினலென. (க௯)

அணியிலராயினுமடிமைபூண்டுயர்
பணியினிலுரியர்தன்பாலரொன்பது
துணிவுறச்சிவபிரானிருக்கைச்சுற்றெலாங்
கணிதமில்கணக்கணங்களுலிற்றென்பவே. (உ0)

சிம்புளாயெனையடுமினையசெம்மலென்
செம்பொன்மாமுடிமிசைச்சிவணப்பாலனன்
றும்பரார்க்கரியரியுணர்த்தினலெனப்
பைம்பொன்மாலரியணைபயின்றதாயிடை. (உக)

கவரிகடுள்ளினகால்செய்வட்டமங்
கிவர்தருகுளிர்வளியெழுப்பிநின்றன
வவிரிழைவெள்ளைகளாலித்தோங்கின
வுவவுவெண்மதிக்குடையுயர்த்தப்பட்டவே. (உஉ)

வயம்படுசாரதர்மறையுநாணுற
வியம்பினரியம்பலவினியபாடினார்.
நயம்படுகின்னரநாரதாதியர்

(உ௩)

தழங்கியகிண்கிணித்தளிர்மென்சீறடிப்
பழங்கண்மெல்லிடையினார்பண்பினாடினார்
வழங்கினர்வானவர்மதுச்செய்பூமழை
முழங்கினவடியவர்மொழிந்ததோத்திரம். (உ௪)

நாரணர்நான்முகர்நாகராதியோர்
தாரணிமலரடிசார்ந்துபோற்றுறக்
காரணகாரியங்கடந்தகண்ணுதற்
பூரணருண்மையொடும்பொற்பவைகினர். (உ௫)

## வேறு.

விண்ணோர்புருகூதன்விரிஞ்சன்மலர்க்
கண்ணோன்முனிவோரெவருங்கணலின்
வண்ணாவெனவேத்திவரங்கள்பல
வெண்ணாவகைகொண்டனரேகினரே. (உ௬)

இவ்வாறெவரும்பணியக்கருணை
செவ்வேதிகழ்கின்றதிணத்தொருநாட்
கைவாரணமைந்தரொடுங்கலவி
யொவ்வாவிளையாடலுவந்தனமே. (உ௭)

அயின்முற்றியசூலமணிந்தவர்தாம்
வெயின்முற்றியவேலர்விநாயகரிற்
பயின்முற்றினராடுபதந்தனது
செயிர்முற்றுறுசெவ்வியெனக்கருதா. (உ௮)

வாரற்கவெனச்சிலர்வாய்தலயற்
றீரக்கடியுஞ்சிலர்கோயிலகஞ்
சாரக்கடிதேதழுவுந்தலைமைச்
சூரற்படையான்றொழுதீதுசொல்வான். (உ௯)

## வேறு.

இது முதல் ௪ செய்யுள் நந்திதேவர் சிவபெருமானைவணங்கியுரையாடல்.

பண்ணவர்க்கரியாய்போற்றிபத்தருக்கெளியாய்போற்றி
தண்ணியமதியும்பாம்புந்தரித்தருடலைவாபோற்றி
கண்ணியவடியாருள்ளக்கருத்தினைமுடிப்பாய்போற்றி
புண்ணியமுதலேபோற்றிபூரணப்பொருளேபோற்றி. (௩0)

இரந்தவர்வறியராகாதியாவையுமெளிதினெய்தச்
சுரந்தருள்கொழிக்குமுக்கட்சுந்தரமகவினென்னைப்
புரந்தருள்புனிதவொன்றுபுகற்சியின்விழைதல்வேட்டேன்
வரந்தருபகவயாதேயதுவென்னின்வகுப்பக்கேண்மோ. (௩௧)

மாதொடுமடிகள்சாலமகிழ்ந்துறைத்தலங்கடம்முண்
மேதகுதலத்தினோடுவிளங்கிமேலாகுந்தீர்த்த,
மூதருள்கொழித்துமேலாமூர்த்தியுமொருங்குவாய்ந்த
தீதறுவளப்பொன்றீங்குத்திருவுளம்பற்றல்வேண்டும். (௩௨)

அன்னதுமின்றுகாறுமகிலத்திலொருவர்மாட்டு
மன்னவவருளிச்செய்யாமந்தணமுடையதாகுந்
தன்மையதாதல்வேண்டுந்தலைவவென்றிரந்துமீட்டு
மின்னயமொழிகளார்த்திகைமலரடியிற்றாழ்ந்தான். (௩௩)

இது முதல் ௰ செய்யுள் அம்பிகை சிவபெருமானை நோக்கியுரையாடல்.

ஆயதோர்செவ்விநோக்கியகிலமீன்றெடுத்ததாயும்
பாயமேகலைகளார்ப்பப்பாதநூபுரங்களேங்கத்
தூயமென்மலர்ப்பூங்கோதைச்சுரும்பெழவெழுந்துவல்லே
நாயகனடியிற்றாழ்ந்துநகுமுகத்தினிதுகூறும். (௩௪)

சகத்துறுபொருள்களெல்லாந்தன்வயமாதலன்றிச்
சகத்தொருபொருளின்மாட்டுந்தான்வயமாதலில்லென்
றகத்தினெவ்வெவருந்தேறவழல்விடமெடுத்துமாந்திப்
புகர்க்கறைக்கண்டனானபூரணபுராணபோற்றி. (௩௫)

வியப்பொடுபடைத்துக்காத்துவிளிக்குமூவருக்கெவ்வாறு
செயப்படுபொருளாய்நிற்குஞ்செறிந்தபல்லுலகமவ்வா
றயர்ப்பிலத்தேவர்தாமுஞ்செயப்படுபொருள்களாகப்
பெயர்ப்பொருளாயேயென்றுநின்றருள்பெருமபோற்றி. (௩௬)

காலமுற்றறுதிநோக்கிக்கணிதமிலுயிர்கட்கெல்லாஞ்
சாலமுற்றியதேகத்தைத்தவிர்த்திடுகாலன்மாட்டுங்
காலமுற்றறுதிநோக்கிகாயத்தினொழித்தாட்கொள்கை
சாலமுற்றெரித்துநின்றதற்பரம்பொருளேபோற்றி. (௩௭)

வேறு.

கங்கைகொழிப்பசெஞ்சடிலங்கதிர்க்குமுடியெம்பெருமானே
யங்கணுலகம்பெரிதுய்யவருள்சேர்நந்திவினையபொரு
ளிங்கணறிதலடியேனுமினிதுவிழைந்தேனிதுவன்றித்
திங்களணிந்தோயோரையந்திகழ்ந்ததுளத்திலதுகேண்மோ. (௩௮)

பாந்தவுலகம்படைத்தளித்துப்பாற்றுவானுமொருநீயே
சுரந்தவன்பின்முனிவரர்கள்சுரர்கண்முதலோரெவ்வெவரு
மரந்தையறுக்கும்வேள்விமுதலனைத்தினுனும்வழிபட்டு
வரந்தந்தருளுகெனவிரக்கும்வள்ளன்மையனுமொருநீயே. (௩௯)

ஆற்றுந்தருமந்தமக்கியையவகிலவுயிர்க்கும்வேட்டபயன்
போற்றியவனேயவளதுவேயெனமூன்றாகிப்புணர்விக்குந்
தேற்றபொருளுமொருநீயேதெள்ளித்தெளிந்தோர்சிந்தைமல
மாற்றிவளர்பேரின்பநலம்வழங்குமுதலுமொருநீயே. (௪0)

மண்ணாய்மண்ணினைந்தாய்வழங்கும்புனலாயதினான்காய்க்
கண்ணாரழலாயதின்மூன்றாய்க்காலாய்க்காலிரண்டாய்
விண்ணாய்விண்ணினொன்றாகிவேட்டோர்வேட்டபலனாகி
நண்ணாருயிராயுயிர்க்குயிராய்நலக்குமிறையுமொருநீயே. (௪௧)

அருவாயுருவாயருவுருவாயவைமூன்றனையுமகன்றறிவே
யுருவாயனாதிவினையிரண்டுமொழியாமலமுங்கருமமு
மிருண்மாயையுமற்றிவைவிளைப்பவிண்டுந்தனுவாதிகனன்கு
மருவாதென்றுமோரியல்பின்வயங்குபொருளுமொருநீயே. (௪௨)

என்றுமறைகள்பலகோடியெடுத்துமுறையிட்டடிபரசும்
வென்றிமழுமான்கரத்தணிந்தவிமலாநினைக்குவேறிலையு
மொன்றுபயனுமுளரேபோல்யோகமுழக்குமிதுவென்னே
மன்றவெமக்கிங்கிலையிரண்டும்வழங்கல்வேண்டுமெனவிரந்தாள். (௪௩)

வேறு.

சிவபெருமான் அம்பிகைக்கும் நந்திதேவருக்கும், தலம்தீர்த்தம் மூர்த்தி இம்மூன்றினது விசேடமெடுத்துக் கூறல்.

விழைந்திரந்தமடவாளைமேதகுநந்தியைநோக்கித்
தழைந்தபெருங்கருணையினாற்றம்பிரான்முறுவலித்துக்
குழைந்தவுளத்தினிர்வேட்டகோதில்பொருளருள்செய்வா
னுழைந்தவறிவொடுங்கேண்மினெனவிதந்துநுவல்கிற்கும். (௪௪)

மந்தணமாய்த்தலந்தீர்த்தமறுமையுமிம்மையும்வீடுந்
தந்தருண்மூர்த்தியுமூன்றுந்தகவுயர்ந்தவொருதான
மந்தமில்சீர்ச்சோணாட்டினணிவளர்காவிரிக்கரையிற்
சுந்தரமாயுத்தமத்தினுத்தமமாய்த்துலங்குமால். (௪௫)

ஞானகேத்திரமென்றுநலத்தகுமத்திருநகரிக்
கானதோர்பெயர்வழங்குமறிமின்களினியிப்பா
லேனையோரரும்பொருளுமிடுகிடையாயருந்தவமத்
தானநீயடுத்தியற்றுசாற்றுதும்வந்தாங்கென்றான். (௪௬)

தம்பிரானதுகூறத்தாழ்ந்தெழுந்தங்கிருவர்களு
மெம்பிரானெளிதுய்ந்தேமினியவற்றின்பெருமைகளு
நம்பினேங்களுக்கருளவேண்டுமெனநயந்திரப்ப
வும்பரார்க்கரியபிரானுவந்தனைத்துமுரைசெய்தான். (௪௭)

பொத்தனுக்குமிதுபாற்பமெனப்புகலும்புராணத்தின்
மத்தியினுள்ளதுநமக்குவரன்முறையேயுரைக்கின்றாம்
வைத்தமதியொடுகேண்மினெனச்சூதமாதவத்தோன்
பத்தியிற்றன்குரவனடிபணிந்துளத்திற்பகர்கிற்பான். (௪௮)

புராணவரலாற்றுப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௩௪௬.

## தலவிசேடப்படலம்.

வண்டுவரிபாடமலர்விண்டுமதுவூற்றுந்
தண்டலையுடுத்துவளருந்தலவிசேடந்
தொண்டுபுரிநந்தியொடுதோகையுமைகேட்ப
வண்டர்பெருமானமுதமென்னவருள்செய்யும். (௧)

மன்றல்கமழுங்குழன்மடந்தையுயர்நந்தி
யென்றுமெவரும்பணியயாமினிதுவைகி
யொன்றுசிவஞானநனியுய்த்தருள்சிறப்பா
னின்றததுஞானதலமென்னநிலமீதே. (௨)

சிலம்புசிறுகிண்கிணிசிலம்புபதமாதே
வலம்புரிவளைக்கரனும்வாரிசமலர்க்க
ணிலம்பணியநின்றவனுநீடியதிசைக்க
ணலம்படவிருந்தவருநாளொடுபல்கோளும்.

மருத்துவருருத்திரர்வசுக்கள்கதிர்வீசு
மருக்கருமருந்தவருமன்றியனைவோரு
மொருக்கிமனநோற்றனருறைந்தனர்களாங்கு
விருப்பொடுமெவர்க்கெதிர்விளங்கியருள்கூர்ந்து

காமர்கதியோடுதிரிகாலமுணர்ஞான
நாமமலநீவுசிவஞானமிவையெல்லாம்
யாமருளவேற்றவர்களின்றும்வதிகின்றார்
வாமமணிமேகலைமலர்க்குழன்மடந்தாய்.

ஆங்கவரிருந்துதவமாற்றுபலதீர்த்த
மோங்கினவவற்றின்விதியோடுபடிவோரு
மீங்குரைசெயும்பயனையெய்திடுகவென்று
நீங்கருவரங்களுநல்கழ்த்தினமணங்கே.

கொங்குமலிபன்மலர்கொழித்தொழுகுகின்ற
கங்கையவளக்கடிவரைப்பினனிநோற்றுத்
திங்களிதழித்தெரியல்சிந்தரவும்வேய்ந்த
வங்கிநிகர்செஞ்சடையமர்ந்தனளணங்கே.

தாவிரியமாதவர்கடாழுமவ்வரைப்பிற்
காவிரிதவங்கள்கடிதாற்றியுயர்கங்கை
மாவிரிநதிக்கதிகமாயவண்வழங்கும்.

வயங்குமணிமேருவரைமானதமடுத்தான்
றயங்குபுகழ்ஞானதலமீதுதவமாற்றி
யியங்குசிறையன்னமொளிரேமவனசங்க
ணயங்கதுவிவைகுவரநண்ணியதையன்றே.

வரமலியுமன்னதுவரம்பிறவெழுந்து
சரயுநதியென்றுதவழ்கின்றததுசார்ந்தோர்க்
கிரவினையகற்றியெழிலார்கதியுநல்கு
மரவெனவகன்றமணியலகுன்மடமாதே.

வேறு.

வளர்தீந்தமிழ்முனிவன்வதிமலயத்திழுமெனவீழ்ந்
தளவாவரமெவரும்பெறவருடாம்பிரபன்னி
தளராதுயர்தவமாற்றுபுதாளத்தொகைதன்பா
லுளதாம்வகைவரமெய்தியதொளிர்பூணிளமுலையாய்.

எழுகோமுகமலையின் றினிதிழிகோமதிநதியுங்
குழுமாமணிதிரையிற்றிவள்கோதாவரிநதியும்
பழுதோடியதவழ்சந்திரபாகைப்பெயர்நதியும்
வழுவர்ச்செழில்வளமல்கியவருநீர்நருமதையும். (கஉ)

சிறப்பப்புவிவலயத்தினுந்திகழ்ந்தரமாட்டுக்
துறக்கத்தினுமுளதீர்த்தமுந்துன்னித்தவமாற்றி
யிறப்பப்படிகுநர்பாவமுமீட்டுந்தமதகமும்
பறப்பப்பலவரமுங்கொடுபெயில்கின் றனவாங்கே. (கங)

மணிமல்கியவெழுவேலையுமலர்பூந்தடவுருவாய்த்
திணிமல்கியவப்பூமியிற்றிசைநான்கினும்வதியுந்
துணிவெண்கதிர்முதலோர்பெயர்சூழுஞ்சிலதீர்த்த
மணிமல்கியபலவற்றுளுமதிமேன்மையினமரும். (கச)

அப்புத்தலமதுவாதலினப்பின்மயமான
வெப்பெற்றியதீர்த்தங்களுமினிதாங்குறைகிற்குஞ்
செப்பொத்திலகும்பூண்முலைத்திகழ்வெண்மதிதாழ்வித்
தொப்பற்றிலகியவாணுதலொளிர்பூங்கொடியனையாய். (கரு)

வேறு.

மறந்திகழ்வேல்பொருமதர்த்தவாட்கணாய்
சிறந்தவத்தலத்துமுன்செய்தநன்மையாற்
பிறந்தவர்வதிந்தவர்பெருகினோர்க்குநோ
யிறந்திடுமெறுபிறப்பில்லையில்லையே. (கசு)

பாவமும்பாவங்கள்பண்ணுவோர்களு
மேவியவாசைமிக்குடையவீணருங்
காவளரத்தலங்கலக்கவல்லரோ
வோவியம்வழிபடுமுருவின்மங்கையே. (கஎ)

மறைகளின்முடிக்குமெட்டாதவாய்மைய
னிறைதருமத்தலநெடுங்குகூந்தலாய்
முறையுளித்தவம்புரிமுனிவர்யோகியர்க்
குறைதருமிருக்கையாயொளிர்வதாகுமால். (கஅ)

யுடலினரஞ்
படரருச்சனைமுதற்பண்ணுவோர்க்குமத்
தீட்டவியவளம்பதிதானமாகுமால். (ககூ

பயந்தருஞானமாபதியினல்லதை
யுயர்ந்தனவெனப்படாவுயர்ந்தமேருவும்
வயந்திகழ்கயிலைமந்தரமுங்காசியு
நயந்தகேதாரமுநறியதாரிணாய். (உ0)

மந்திரமாகுமால்வசனம்யாவையுஞ்
சிந்தனையாவையுஞ்சிறந்தசிட்டையா
மந்தினின்றிடுதல்சென்றிடுதலாதிக
ளுந்தியயோகத்தினுறுப்பதாகுமே. (உக)

உண்டலுமூட்டலுமுவந்துவீசலு
மண்டினரேற்றலுமற்றுமாயிடைத்
தண்டலிலாச்சிவதருமமாமரோ
வொண்டளிர்கவற்றியவுருவச்செங்கையாய் (உஉ)

## வேறு.

அறுசுவைநால்வகையுண்டிபிறதலத்திலான்றவரையமையவூட்டி
யுறுபயனெண்மடங்காங்குவதிகின்றான்புற்கையுணவுண்டனேனும் [றோ
பெறுவனெனிற்பிறனொருவற்கூட்டிவரும்பெரும்பயன்றான்பேசப்பாற்
கொறுகொறுத்துக்கூரிலைவேற்குலத்தொடமர்புரிந்துழக்குங்குவளைக்கண்
[ணாய்

புரந்தரனாயளகையர்தம்பெருமானாயுலகமெலாம்புரக்கும்வேந்தா
வரந்திகழவிருப்பதினுமேலானஞானதலம்வதிந்துநாளு
மரந்தைதபுஞ்சிவயோகத்தவர்மனையிற்பயிக்கநுழைந்தமைதனன்றாம் [ய்
பரந்தெழுந்துகுவிந்திணைந்தபயோதரத்தினிடுகுமிடைம்பசும்பொற்பாவா

காமருகற்பகநாட்டினமுதுநுகர்ந்தரம்பையர்தங்கலவியாற்றி
யேமுறநன்றிருப்பதினும்பிறதலத்திற்போகமெலாமிசையவாழ்ந்து
தேமருவியிருப்பதினுஞானதலத்துபவாசஞ்செய்தோர்வைகற்
றாமருவியிருப்பதினுஞ்சுகமதிகமாயிருக்குஞ்சயிலப்பாவாய். (உரு)

மண்டுபெரும்பாதகங்கள்வைகலும்வைகலும்புரிந்துவழுவினோரும்
பண்டுபுரிநல்வினையாற்பகர்ஞானகேத்திரத்துப்படர்ந்துவாழின்
மிண்டுமலமாயைகன்மம்வேரோடும்விடைகொள்ளவீடுசேர்வர்
கண்டுநறுங்கனியமுதுங்கலந்தனையதீங்கிளவிகதித்தவாயாய். (உசு)

பஞ்சுநொடித்தெண்ணெய்விற்றுப்பவளவாய்ச்சிறுவர்தமைப்ப - கர்ந்திட்
மெஞ்சியமற்றிழிதொழில்கள்புரிந்தேனுஞானதலத்திருப்பினன்றே [டே
விஞ்சியநாற்பெரும்பொருளும்பெறுவரெனினேனையர்சீர்விளம்பற் [னு
கஞ்சமலர்க்கண்ணமரரிருவரையும்பயந்தளிக்குங்கருணைமாதே. பாற்றா

வன்றிவலம்புரிதோகைஞமலியென்றாகழுதைதவாயசங்கனென்றா
கொன்றுதசைதின்றுழலும்புலையரென்றாவெவரேனுங்கோலமார்ந்த
வென்றிபுனைஞானதலததிருப்பரெனின்விண்ணவருண்மேலாய்வாழ்வர்
கன்றெறிந்துகனியுகுத்தோன்சகோதரியென்றுலகியம்புங்கடிப்பூங்கோ
[தாய்

இளமையுஞ்செல்வமுமுடலுநிலையாவென்றறிந்தவர்களிளமையாதி
யுளபொழுதேஞானதலத்துறைந்துமகிழ்ந்தறமாதியுகப்பவீட்டிக் [லோ
கொளுவரலதயற்பதியிற்குறுகுதுமென்றொருஞான்றுங்குறிப்பர்கொல்
வளமலிபங்கயமாதர்வளைக்கரந்தைவரப்பதைக்குமலர்ப்பூந்தாளாய் (உகூ)

கணிகையர்காதலினுகப்பொருளீட்டுஞ்சாரணத்தானுகவெவ்வே
றணிவளரும்வினைதமூதற்பொருட்டாகஞானதலத்தமரினன்னோர்
துணிவுடையதவத்தானமுதலானவினைசூழ்தலெற்றுக்கீர்த்தன்
மணிவடங்கள்கிடந்தாரிளுமதர்த்தெழுந்துபுளகரும்பும்வனசக்கொங்காய்.

வழிநடையினேரிரவுவைகினுமன்னவர்துறக்கம்வைகிவாழ்வர்
கழிமகிழ்வின்ஞானதலமெதிர்நோக்கிவணங்கினுங்கைதொழினுமன்னோர்
கழிவுசெயலரும்வினைகளெதிர்நோக்கியடிவணங்கியங்கைகூப்புங் [க்
குழிவிழுந்தவுயிரிடத்துங்குருடொழியவுடன்கலந்துகுலவுநங்காய். (௩௧)

ஓதியுணரந்தணாயிரர்தமக்குப்பிறதலத்தினுவந்துநூலி
னீதிதவறுதருத்தும்பயனுற்றியிரட்டியந்தவ்கரிலூரிற்
காதலொடுமொருசவளநாய்க்கிடுவோர்பெறுவரெனிற்கரிசற்றோர்க்க
காதரவினொருபிடிசோறளிப்பவர்தம்பெருமையெவரளப்பர்மானே. (௩௨)

கந்தமலிபொழில்புடைசூழ்ஞானதலத்தெல்லையினைக்கடவாராயி
னெந்தவிழிகுலத்தவரேயாயினுமற்றவர்வாழுமில்லையெனல்லைச்
சந்தமணிகுலவுமுலைத்தாமரையாள்கடவாதுதங்கிவாழு
மைந்துமலிகிரவுஞ்சவரைதுளைத்தோன்றனையுயிர்த்துவளர்த்தமின்னே. ()

தவந்தானவிரதமகமாச்சிரமவொழுக்கமுதற்றருமமெல்லா
மவந்தீரவுணர்ந்தவர்கண்ஞானதலத்திருந்தாற்றியமைவரல்லா
லுவந்தேனைத்தலத்தினிடையுஞற்றுதுமென்றேமறந்துமுன்னலசெய்யார்
சிவந்தோங்கும்பொலங்குவட்டினிமையவன்றனுயிர்த்தெடுத்தசிறைபூங
கொம்பே. (௩௪)

தவமாதிபுரிகுநர்க்குவேட்டநாற்பெரும்பயனுந்தாழாதீயு
மூவமானமறுஞ்சித்தியெட்டினையும்விரைந்தளிக்குமும்பர்வைப்பி
னவமானபோகங்களளிதருளும்வீடுதவுநலத்ததந்தச்
சிவமாருஞானதலமலதுலகின்வேறில்லைசெய்யவாயாய். (௩௫)

மூர்க்கனாய்ப்பிறர்க்கிடுக்கண்புரிந்துழலுமறிவில்லாமூடனாகப்
பார்க்குணமேம்படுஞானதலத்தென்றும்வதிந்திருக்கும்பண்பனாயி
னோர்த்தபூணாமுலையாயெமக்கினியனவனஃதெவ்வாறெனனி
லார்த்தநீர்க்கடல்விடமுமம்புலியுஞ்சான்றாசவறிந்துகொள்ளே. (௩௬)

தலத்தினுயர்ஞானதலத்திருக்கைமுடியாதயலேசார்ந்தோர்தாமுங்
குலத்தினுயர்மறையவரைப்பெரியவரையடியவரைக்கோலமார
நலத்தினுயருறையுளிழைத்திருத்தினரேற்றம்வதிந்துநண்ணும்பேற்றை
நிலத்தினுயர்ந்தவர்வியப்பப்பெறுவர்நெடுஞ்செவிமடுக்குநீலக்கண்ணாய். ()

சம்புகேசுரமென்றுங்கசாரணியதலமென்றுஞ்சாற்றுவார்க
ளும்பரார்தொழுஞானதலத்தினையிப்பெயர்மூன்றுமுமையேசால
நம்பிமாதவராதிமலமிரண்டுநீக்கிகவிலெழுத்துமூன்றிற்
பம்புமேன்மையவாகிப்பயனவையுங்கொடுப்பனவாம்பன்னுவோர்க்கே.

பக்குவமேமேசிவதருமமலபரிபாகம்பிறந்துபதிந்துசத்தி
தொக்கவினைசமமானவுயிர்க்கலதுசுத்தபஞ்சாக்கரத்தைச்சொல்லார்
மைக்கருங்கணுமையமாதேவகுத்தமெய்யரெவர்மாட்டும்வழங்கப்பட்டுத்
தக்கசிவஞானமளித்துயர்வீடுபுகுவிக்குந்தகையவாகும் (௩௯)

பத்தியினாற்பெயர்மூன்றுமொருமுறைசொன்னாலுமிடர்பாவம்பொய்கண்
மெத்தியநோய்முதலானவாட்டமெலாம்விடைகொள்ளும்விண்ணோர்சூழ
வெத்தகையபோக்கியமெனைத்துமெதிரேநிற்குமென்றாலந்த
வுத்தமமாம்பெயரையெவருரையாதாருலகமெலாமுயிர்த்தபெண்ணே (௪௦

மேதகையபயன்விழைவோர்ஞானதலத்துறைகவதுமேவாதாயி
னேதுகவத்தலப்பெயரையாங்கசதுவுமூற்றதேலுரைப்பக்கேட்க
காதலொடுங்கேட்டவருமூவகையபாதகமுங்கடந்துமேலாம்
போதமுணர்ந்தெமதடியிற்புக்கிருப்பரிஃதுண்மைபொலங்கொம்பனாய்

அஞ்ஞானவிருளோடமெய்ஞ்ஞானபானுவெழுந்தடைந்தோர்க்கெல்லா
நெஞ்சானமலர்க்கமலநெகிழ்த்தவிழ்க்குமத்தலத்தினிகரில்வாய்மை
யெஞ்சாதுவிரித்துரைப்பக்காலமில்லையினித்தீர்த்தத்தியல்புசொற்று
மஞ்சாருமலர்க்குழல்வாணுதற்கருங்கண்வெண்முறுவல்வளைக்கைமானே

தலவிசேடப்படலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௩௮௮.

## விசேடப் படலம்

முல்லைநிகர்முறுவலினாய்முழங்குபுகழ்ஞானதலத்
தெல்லையெல்லாமலங்கரித்தாலெனவிளங்காநின்றனவாற்
கல்லெனவார்திரையினவாய்க்கமழ்நறும்பன்மலரணிந்து
மல்லன்மணிச்செழும்படிகண்மருங்கடுத்ததீர்த்தமெலாம். (௧)

திங்களொளிக்குளிர்ந்தன்பர்சிந்தையெனத்தெளிந்திரப்பிற்
றங்கினவரெனமேன்மைதழிஇக்கரும்பினிரதமெனப்
பொங்குசுவையுடையினவாய்ப்புவனமொருமூன்றினுக்கு
மங்கலமெல்லாந்தருவவயங்கியவத்தீர்த்தங்கள். (௨

ஒண்டொடியாயுத்தரத்துக்குத்தரநேருரைப்பவர்போற்
றண்டரளமணிவரன்றித்தடங்கரையிற்றவழ்ந்துலவும்
வெண்டரங்கமொலிபரப்பவிகங்ககுலமெதிரொலித்துக்
கண்டவர்கள்வியப்பெய்தக்கவின்வளர்ப்பதீர்த்தங்கள். (௩

கயல்விருப்பினோதிமமுங்கம்புளுநேமிக்குருகும்
பயில்வனவெண்டிரையலைப்பப்பட்டுமொழிவிலமன்னோ
மயல்வளருஞ்சிற்றின்பவாஞ்சையினலிட்டலைத்துஞ்
செயல்வளருமில்லறத்திற்றீராத்திண்ணியர்போல. (௪

வரந்தருமெம்மொடுமெதிராமரபுடைமாண தசரதற்
பரம்பியநீவிர்களெம்பார்பயின் றிருத்தலடாதென்ன
வரம்புபுரிந்தலைப்பனைபோலலையலைக்குமோதிமமு
நிரம்பியபேணமுமயங்கிநிற்பனநீர்நிலைதோறும்.

மாதிரத்தெண்கடகளிறுமல்கியதீர்த்தம்படிந்து
போதலைத்த த்துளைக்கரத்துப்புனல்வாங்கித்துளித்தேகுஞ்
சீதளத்தவெக்கர்களுந்தேவருளந்திறைவாங்குங்
காதரமிக்குயிர்க்கிரியக்கடைக்கணிக்குமடக்கொடியே. (௬)

தேவருநறும்புனற்றீர்த்தத்தீரமெலாம்பண்மலரி
ஞேங்கியநந்தனவனமுமுந்திடமெங்கணுந்தவங்கள்
பாங்குபெறவிழைக்குநரும்பரயோகம்பயிற்றுநரும்
வீங்கருளினவர்பணிகள்விளைக்குநருமுளரென்றும். (௭)

[illegible]ன்றிற்றேருய்[illegible]
மெத்தியபண்டைப்பவத்தின்விளைத்தபெரும்பாதகமும்
வைத்தடர்ந்தவிப்பவத்திற்பாதகமும்பறிபோகக்
கொத்தினறுமலர்க்குழலாய்குலந்தொடும்வேட்டனபெறுவர். (௮)

வேறு.

மண்ணை பிரமக்கொலைசசாயைமறலும்பிரமராக்கதமுந்
துண்ணெனன்றுடற்றும்பெரும்பூதத்தொடக்குந்துட்டதெய்வதமுங்
கண்ணின்றுறுத்துமந்திரத்திற்காதுமணங்குரிவையெல்லாம்.
பண்ணின்மொழியாயொருதீர்த்தம்பாற்றும்பாற்றும்படிந்தோர்க்கே. (௯)

குட்டந்தொழுநோய்முயலகநோய்குன்மஞ்சூலைவாதநோய்
கட்டமுறுத்துங்காசநோய்கண்ணோய்தலைநோயசுரம்விக்கு
ளொட்டுங்கிரந்திநோயாதியொழிக்குந்தீர்த்தமொவ்வொன்றே
மட்டுவிரிந்தநறுந்தொடையல்வருடச்சிவக்குந்தடந்தோளாய். (௰)

மறையோர்கொலைமன்னவர்கொலையேவணிகர்கொலைசூத்திரர்கொலையே
விறைநீர்க்கேளிர்தந்தைதாய்நீடுந்துணைசூற்பசுநன்றி
பறையார்வீரரிவர்கொலையும்பாவவினையும்பிறவினையும்
பிறைநேர்நுதலாயொருதீர்த்தம்பெயர்க்கும்பெயர்க்கும்பெயர்க்குமே. (௧௧)

ஈன்றாள்புதல்வியுடன்பிறந்தாளெழிலார்குரவன்மனைமெய்ம்மை
யான்றார்மனையேனையரில்லத்தணங்கையிழிந்தமாதர்தமை
மான்றுதரவிற்புணர்வினையும்வரையாநாளிற்புணர்வினையுஞ்
சான்றோர்வணங்குமடக்கொடியேசாடுஞ்சாடுமொருதீர்த்தம். (௧௨)

[illegible]
சிறுமைதுறக்கும்பழிதொலைக்குஞ்சிந்தைமயக்கஞ்சிதைவிக்கு
முறுகுமடத்தின்வலிமுருக்குமுதிர்ந்தகாமமுதலாறு
மறுதியக்குமாடுநெருக்கலம்புமணிமேகலைக்கிளியே. (௧௩)

ஒழுக்கமறிவுதவந் தானமுறவுசீலமுபசாரம்
வழுக்கில்கருஃணயாசாரம்வாய்மைவணக்கம்வந்தித்த
லழுக்கிலன்புதுறவடக்கமழுக்காறுமைமுதலறங்கண்
முழுக்கவருளுமுழுகுநர்க்குமுழுவெண்டிங்கண்முகத்திஞய. (கச)

சிரம்புகல்விபெருஞ்செல்விசீமொயுள்வலியூக்கம்
பரம்புசூழ்ச்சிகலங்காமைபனுவல்வழியேபொருளீட்டல்
வரம்பிலீகைபுகழாக்கன்மலியநுகர்தலிவையெல்லாங்
குரம்புமலியுமொருதீர்த்தங்குடைந்தோர்க்கெய்துங்கோற்றெடியே. (கரு)

உயிரொன்றிரண்டுவெடிவெடுத்தாங்குவக்கும்பெருங்காதலின்முழுகிக்
கயில்வண்கழற்காலாடவருங்கமழ்பூந்தெரியன்மடவாரும்
பயிலும்படியிற்றுறக்கத்திற்படர்பேரின்பநலநுகர்வர்
செயிர்முற்றிரிக்குமொருதீர்த்தஞ்சென்றுபடியிற்றேமொழியே. (கசு)

அறிவுவளரும்புத்திரருமவர்தம்வழியிற்புத்திரருஞ்
செறிவரெழுமுப்பவத்தோர்க்குந்தீராநரகின்சிறைநீங்கு
நெறியினவர்தமகுலமுலகினீடுவாழும்பிதிர்த்தேவ
ரெறிவர்பரிவையொருதீர்த்தமெய்தியொருவாரடுறினே. (கஎ)

## வேறு.

தேசார்மணிகரைமேலெறிதிரைவார்தருதீர்த்த
மாசாரமொடன்பான்முறையாடுந்தவரல்லா
லேசார்தருமாசூசமுமெரிவெங்கதிர்வெப்பு
மாசானதுமொழியப்படிவாரும்பயனுறுவார். (கஅ)

வழுக்கிக்கரைபுனல்வீழினும்வாரிப்பருகிடினு
மொழுக்கத்தெழுதிரைவீசியவுறைமெய்த்தலையுறினு
மழுக்கற்றிடுதீர்த்தந்துளேயகிலமகுளிர்செயினு
முழுக்கக்கரிசொழியக்கதிமுற்றுங்கனிவாயாய். (கக)

தீர்த்தத்தெழில்விழிநோக்கினர்தீர்த்தத்திசைகேட்டோர்
தீர்த்தத்துறைமீளுதிகடீர்த்தம்வளர்சாரு
தீர்த்தம்விளேநெல்லாதிகளவைதேர்குருகினமுந்
தீர்ததுக்கரிசுயர்வாரிதுதிண்ணஞ்சிறுநுதலாய். (உ0)

இவ்வாறுயர்தீர்த்தத்தருகெய்தித்தவமாதி
செவ்வாய்மையபுரியிற்றிகழ்தானம்பலசெய்யி
னவ்வானருள்பிதிரர்க்குளமமையக்கடனுற்றித்
துவ்வாவமிழ்தனேயாய்ப்பயன்சொல்லின்முடியாதால். (உக)

## வேறு.

இன்னவார்றியம்புமெம்பிரானேயேந்துகொங்கையா
ளன்னரோகைநண்ணினாதவென்றுபோற்றியோதுவாண்
முன்னரெண்ணிலாததீர்த்தமெய்த்தவற்றுண்மேலவாய்
மன்னிநின்றசில்லவென்றுவாய்மலர்த்தியண்ணலே. (உஉ)

அனையதீர்த்தநாமமாயினோர்களாடுநூல்விதி
வினைகணீங்கவாடுகாலமேவுமந்திரம்பய
னினைவுறாதபாலர்தேவரீயநின்றதானமு
ன்னைவினோடொணாததேவநீயுரைத்தல்வேண்டுமே. (௨௩)

நின்னையன்றிவேறுதீர்த்தநீடுமேன்மையுள்ளவா
றன்னையன்னையாவர்கூறுமாற்றல்வல்லராதலான்
மன்னயானிரந்துளேனெனக்கசிந்துவாஞ்சையிற்
பின்னரும்வணங்கிநீள்கைபின்னிவாய்புதைத்தனன். (௨௪)

முப்பரம்பொடித்தமேருமூரிவார்சிலைக்கையான்
மைபபடிந்தகண்ணியுள்ளவாஞ்சைநோக்கிமாதரா
யொப்பிலாததீர்த்தமேன்மையோருமூக்கமிக்குளாய்
செப்புகேமனைத்துமென்றுசெய்யவாய்மலர்த்தினான். (௨௫)

வேறு.

இச்செய்யுள் தீர்த்தங்கள் ஒன்பதிற்கும் நாமங்கள்.

காமருபிரமதீர்த்தமிந்திரபுட்கரணியேசம்புபுட்கரணி
தேமலியிராமதீர்த்தமேசிமத்தீர்த்தமேயக்கினிதீர்த்த
மாமகத்தியநற்றீர்த்தமேசோமதீர்த்தமேயலரியின்றீர்த்தம்
வாமமேகலையாய்மேலவாந்தீர்த்தமருவியபெயரிவைகாண்டி. (௨௬)

இதுமுதல் (௯) செய்யுள் முதலாவது பிரமதீர்தம்.

வரியளிமுரலமதுமடையுடைக்கும்வாரிதழ்த்தாமரைப்பொகுட்டு
விரியணைத்தவிசின்வீற்றிருந்துலகமேதகைப்படைக்குநான்முகத்தோ
னுரிமையின்வாழுமுன்னொருகற்பத்தொருமகளழகுறப்படைத்தா
னரிபரந்தொழுகியகன்றெழுந்தோடியம்பலைத்தமர்த்தவாள்விழியாய். ()

கொண்டனீர்முகந்துமேக்கெழுந்தாங்குக்குலவியகூந்தலுமருகே
மண்டுகார்சாபம்வாங்கியதென்னமாமையிற்சிறந்தவாணுதலுங்
கண்டகாருமிழ்ந்தமின்னெனநுடங்குங்கைப்பிடிகவற்றுநுலிடையு
மண்டநாடதிர்க்குமதன்முழக்கனையவாடகநூபுரத்தொலியும். (௨௮)

சுரந்துசூழ்மேகமழைபொழிந்தனையதுலங்கியபேரெழில்வனப்பும்
பரந்தகாரடுப்பக்கோபமேகாந்தள்பணிமுகைமுல்லையுந்தோன்றி
நிரந்தவாறனையசேயிதழங்கைநிலவொளிமுறுவலுங்காட்டி
வரந்தராநின்றவணங்கெனவெதிரேநின்றனண்மகளொருமாது. (௨௯)

மழைமுகிலடுப்பச்சாதகக்குருகுவாஞ்சையிற்றுளிமடுத்தாங்குத்
தழைதருகாதல்பிடர்பிடித்துந்தத்தாமரைத்தவிசினோன்றழுவி
விழைதருகாமந்துய்த்தனனங்கேமேதகுபடைப்பயர்ந்திழிந்தான்
குழைதருநரைமூப்பிடையறுமாயுள்கொண்டனரன்னவன்படைத்தோர் ()

ஆயதொர்தவறுநோக்கியுள்வெருவியருந்தவத்தாலெலமையடுத்தான்
பாயமேகலையாயாங்கவற்கிரங்கிப்பரந்தபெருலகெலாம்போற்று
மேயசீரெழுத்தோரைந்தையுங்கிளந்துவிடுத்தனம்விடைகொடுநடந்து
தூயனும்பொருட்டுஞானகேத்திரத்தைத்துன்னினான்சதுமுகத்தோன்றல்

## வேறு.

ஞானபூமியினல்வளநோக்கிநயந்தனன்
யேனவார்திரைபின்னியதீர்த்தமெல்லாம்பிரிந்
தானகாதலகத்தெழவொன்றனையண்ணிறு
னீனமோடவிதிப்படியாடியெழுந்தனன். (௩௨)

நீறுமெய்யினிரம்பவணிந்துவிரப்பெலா
நூறுகண்மணிமாலைமனுக்கணுவன்றணிந்
தேறுமஞ்செழுத்தவ்வுழிவைகினனெண்ணினன்
மாறுகொண்டெழுமைம்பொறியின்வலிவாட்டினன். (௩௩)

ஆங்குவைகிய சங்கரநாதவருட்குறி
பாங்கினுதரவால்வழிபாடுபயிற்றினன்
வீங்குமென்முலைப்புத்திரிதன்னைவிழைந்துறுந்
தீங்குதீர்ந்துசிருட்டியுமெய்தினன்மாதராய். (௩௪)

வரம்பிலாவியவத்தகுதீர்த்தமண்ணேடிவிண்
பிரமதீர்த்தமெனப்படகின்றதுபெய்வளாய்
விரவுபுத்திரியாதியர்தம்மைவிழைந்துறும்
பரவுபாவமெல்லாம்படிந்தார்க்குப்பறக்குமே. (௩௫)

## வேறு.

இதுமுதல் (சு) செய்யுள் இரண்டாவது இந்திரதீர்த்தம்.

மருத்தகற்பகவானக, ரருத்தியோடரசாள்பவன்
விருத்திரப்பெயர்மேவிய, வொருத்தனுருயிருண்டனன். (௩௬)

பிரமசாயைபிடித்தலைத், துரனழித்தலினுய்யெனப்
பரவுஞானப்பதிக்கணே, விரவுமன்பொடுமேயினன். (௩௭)

தணிவிலாதநஞ்சந்நிதி, நணியமேற்றிசைநண்ணினு
னணியிருந்ததேராவியி, னணியுவந்ததினுடினன். (௩௮)

அன்னதீர்த்தத்தகன்கரை, மன்னிநம்வழிபாடுக
ணன்னராற்றிநயந்துத, னின்னலோப்பியெழுந்தனன். (௩௯)

இன்பமாரிமையார்பதி, முன்புபோன்முறைசெய்தனன்
பொன்பிறங்கியபூண்முலை, மின்பிறக்குவிளங்கிழாய். (௪௦)

எர்த்தவத்தடமிந்திர, தீர்த்தமாயதுதேமொழி
யார்த்தவைம்பெரும்பாவமும், பார்த்துளார்க்கும்பறக்குமே. (௪௧)

## வேறு.

இதுமுதல் (௩) செய்யுள் மூன்றாவது சம்புதீர்த்தம்.

தாவிலருந்தவத்துயர்ந்தசம்புமுனியென்றொருவன்
பாவுறுநஞ்சந்நிதிக்குப்பாவகன்மாதிரத்தெழிலார்
பூவலர்ந்தவொருதீர்த்தம்புகுந்தாடிக்கடனியற்றி
யேலனையவிழிமடவாயெழுத்தைந்துமியினிதெண்ணி. (௪௨)

சங்கரநாதப்பெயரிற்றழைக்குமெமதருட்குறியிற்
பொங்கியகாதலிற்பூசைபுரிந்துலகெலாம்விரவித்
தங்குமெமதியற்கையினைத்தலைப்பட்டானுதலினு
லங்கதற்குப்பெயர்சம்புதீர்த்தமென்றாயதுமாதே. (௨௩)

தத்துதிரைமணிதெறிப்பத்தடங்கரையிற்குருகிரியு
மத்தகுதீர்த்தம்படிந்தோர்க்கடற்பெரும்பாதகந்துமியப்
புத்தியொடுமுத்தியிவைபுணர்விற்கும்புனைவேய்த்தோட்
கத்திரிகைப்பெருஞ்செவிப்பூங்கத்திகைமென்குழற்கொடியே. (௨௪)

இதுமுதல் (௪) செய்யுள் நான்காவது இராமதீர்த்தம்.

இராவணனையுயிர்மாட்டியெழிற்சீதையொடுமீண்ட
வராவணையிற்கிடந்தவனேயருட்பெருஞ்சந்நிதிமேல்பால்
விராவுமலர்த்தடமொன்றின்விழைந்தாடியதன்கரைமே
னிராமயமாநீலவிண்டுநாதர்தமைநிருமித்தான். (௨௫)

எழில்வளருமத்தீர்த்தமிராமதீர்த்தப்பெயர்பூண்
டொழிவில்கொலைப்பாதகங்களொழிவிக்குமற்றதனிற்
கழிமகிழ்வின்வீடணனுங்கரிசிரியத்தோய்ந்தெமது
செழிமலர்த்தாள்பூசித்துச்சென்றிலங்கையரசாண்டான். (௨௬)

இதுமுதல் (௨) செய்யுள் ஐந்தாவது சீமத்தீர்த்தம்.

அறநூற்றும்விழிப்புனன்மெய்யடியர்தொழுங்கோயி லினுண
முற்றூற்றினினிதாகிமுதிர்சுவைத்தாய்நமக்கருகே
சிற்றூற்றினொருதீர்த்தந்திகழ்ந்துளதுதிசைவிளங்க
வெற்றூற்றுயணிவடங்களிலகியபூணிளமுலையாய். (௨௭)

நீங்கரிதாமத்தீர்த்தநின்றலேயினியுலகிற்
றேங்குபுகழ்திசைவிளங்கசீமத்தீர்த்தப்பெயரி
னேங்குமதனீராடுமுறுதவர்க்குக்கணங்குழையாய்
வீங்குபயனினைத்தென்னவிதிப்பரிதாம்விண்ணவர்க்கும். (௨௮)

## வேறு

இதுமுதல் (௬) செய்யுள் ஆருவது அக்கினிதீர்த்தம்.

தேவர்கடமக்கெல்லாந்திருமுகமெனநின்ற
பாவகன்முன்னொருநாட்பணிப்புனற்கிறைவன்ற
னாவியினனையாண்மெய்யழகணங்குறுத்தப்பட்
டோவியவிறையினனுயுறுநலனுகர்வுற்றான். (௨௯)

பிறன்மனைவிழைவுற்றபெருகியபாவத்தால்
விறன்மலிதருசொன்னவீரியமதுவீழ்ந்திட்
டுறுவலிதேசோடுமொழிதலினதுநோக்கி
வெறுவியவுளத்தோடும்விரைந்தனனங்கெய்தி. (௩௦)

திகழுநஞ்சந்நிதிக்குத்தென்கிழக்கெல்லையிடைப்
புகழ்மலியொருதீர்த்தம்பொற்பொடுமெதிர்நோக்கி
யகமலியுவகையனுயடுத்ததிற்படிவுற்று
முகையவிழ்மலர்கொண்டுமுறையுளிப்பூசித்தான். (௩௧)

அன்னவன் வழிபாட்டுக்ககத்திடையருள்சுரந்து
மின்னிடைநாமூர்த்தவீரியம்வலிதேசு
நன்னலம்வரம்யாவுநல்கிணமவைபெற்று
முன்னினனமரர்க்குமுன்புபோலவியுய்த்தான். (௫௨)

மிக்கொளிதிகழங்கிவிண்ணவன் வரம்பெறலா
லக்கினிதீர்த்தமெனவாகியதத்தீர்த்தந்
தக்கதொர்விதியாற்றிற்சார்ந்ததிறுடுநர்க்குத்
தொக்கதொர்பிறனில்லந்தோய்வினைமுழுதோடும். (௫௩)

ஆக்கையின் வலியில்லார்க்காக்கையின் வலியெய்துந்
தேக்கியதேசில்லார்தேசுமிச்குளராவர்
பாக்கியமில்லார்கள்பாக்கியத்துயர்வார்கள்
வீக்கியவத்தீர்த்தம்விதியுளித்தோய்தரினே. (௫௪)

வேறு.

இதுமுதல் (எ) செய்யுள்எழாவது அகத்தியதீர்த்தம்.

இமையமால்வரையேந்தலெழச்சுனை, யமைவில்காதலினங்கி புனீத்துழி
யுமைநலாயிமையாரொடஙகெய்தலிற்,சமனிலாதுவடாதுமண்டாழ்ந்ததே

ஆயகாலையகத்தியன் றன்னைநாங, கூவியந்தக்குவலயநேர்பெறத்
தூயமாமலயத்தினைத் துன்னுகென், றேவினுமதுகேட்டவனேந்திழாய். ()

நினக்குநேரிலைநின்னொடுநேர்பெற, லெனக்கெவ்வாறியையுமென
வேண்டினன், றனக்குஞானதலத்திடைப்பூசைசெய். தெனக்குநேர்பெறு
கென்றனந்தையலாய். (௫எ)

நன்றுநன்றெனநற்றவன்றாழ்ந்தெழுந், தன்றுசென்றருண்ஞானதலத்
தூநம், மொன்றுசந்நிதிக்குத்தரதிக்கிடை, மன்றன்மல்குமொர்வாவிகண்
டண்மினன். (௫அ)

நறுமலர்ப்புனனன்றுபடிந்தெழுந், துறுதியாலெமதொள்ளியபூசனை
நிறுவியெம்மைநிகர்த்துவரங்கொடு, குறுகினன்மலயங்குறுமாதவன். (௫௯)

அறையுமத்தகுதீர்த்தத்தினாடினோர், பறையவல்வினைபற்பலமேன்மையு
நிறைவர்கல்வியுநீடியவாயுளுங, குறைவிலாதகுணங்களுமெய்துவார். (௬0)

அந்தவாவிக்கெதிரேயணிமை, னிந்திராதியரேத்தநின்சந்நிதிச்
சுந்தரத்தின்விளங்குயச்சூட்சியைப் பிந்துகாணுதிபெய்வினைத்தோளினாய்.

வேறு.

இதுமுதல் (எ) செய்யுள் எட்டாவது சந்திரதீர்த்தம்.

தக்கனார்பெறுந்தையன்மார்களுட், டொக்கநாளெனுந்தோகைமார்களை
மிக்ககாதலின்வேட்டசோமன்மற்,றொக்கநோக்கிலாலுரோணிசார்பினன்

தவறதாகலார்சாபமெய்தினா. னிவ்வுறுதண்கலையிறப்பநோக்கினன்
கவலைபூண்டுளான்கடுகவவ்வயி, னுவகையெய்துவாரேனடிநண்ணினன்.

பரவிவிண்ணவர்பணியுநம்முடை, விரவுசந்திதிமேற்றிசைக்கணே
யரவவல்குலாயற்புதத்ததாய்ப், புரவுசெய்வதோர்பொய்கையண்ணினன்.

தீர்த்தமாடினன் றீர்த்தக்கோட்டிடை, யார்த்தவங்கியினரிதுகோற்றனன்
பார்த்துகாமவன்பரிவுதீர்தர, வீர்த்துளாங்கடுஞ்சாபத்தின்னலே. (௬௫)

அன்றுதொட்டவனமரராதியோர்க், கொன்றுமோகைமிக்குறுத்தித்தானல
துன்றுகின்றனன்சோமதீர்த்தமென், றென்றுமத்தடமிலகிநின்றதே. [ந்

நீடுமத்தடமிறைந்தவன்பினு, லாடினார்கயரோகமாதிகள்
வீடமண்ணிடைமிக்கசெல்வராய்க், கூடிவிண்ணினுங்குலவிவாழ்வரே.

## வேறு.

மாயவனெமதருள்வாய்ப்பமேலினி, நாயகிதன்னொடுநாடகஞ்செய்விப்பனு
லாயவக்காரணதாலச்சூழுமன், சேயிழாய்!ரங்கமெனச்சிறக்குமே. (௬௮)

இது முதல் (௩) செய்யுள் ஒன்பதாவது சூரியதீர்த்தம்.

பாயிருள்பருகுபகலேசகான்றெழுங், காயெரிக்கதிரவன்காமரத்தல மெய்யனனெமதுசந்நிதியின்மேற்றிசைத்.தூயதோர்தீர்த்தத்தைத்துன்னித் தோய்ந்தனன். (௬௯)

மலர்பலகொண்டெமைவழிபட்டேத்தினு, னுலகெலாம்விளக்குது மொளிபெற்றோங்கினன், கலதியில்கருமக்குக்கரியுமாயினு, னிலவெனச் சிவந்தொளிரிதழ்ச்செவ்வாயினுய். (௭௦)

சிரியவப்பெருந்தீர்த்தமண்ணிடைச், சூரியதீர்த்தமாய்த்துலங்கிநின் றதவ், வேரியமலர்த்தடம்விழைந்துதோய்ந்தவர், காரியமனைத்தையுங்கை க்கொள்வாரரோ. (௭௧)

நூலாசிரியர்.

நவமணிதீர்த்தமுநாடியாடினோர், தவறறுபயனிவைசாற்றினுமினிக் குவவினபூண்முலைக்கோற்றொடிக்கையா,யிவருறவேணவுமியம்புவாமரோ.

தீர்த்தவிசேடப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௪௬௦.

---

# நானவிதிப்படலம்.

தளவவாணகைத்தையல்கேள்சாடுநோயாதி
யளவிலாதபல்லரிட்டங்களனுங்கவுமாதர்
வளமையாதிவீடிறுதியவரங்கண்மல்குறவு
முளமரீஇயினராடுகதீர்த்தமொன்பதுமே. (௧)

இது முதல் (௧௩) செய்யுள் ஸ்நானவிதியின் பத்ததி கூறல்.

முந்துமந்தணராதியர்மூவர்க்குங்கதியி
னுந்துமந்திரத்தாடுதலுறுவதுபின்னோர்
கந்தமென்குழற்காரிகையாரிவர்க்குலகந்
தந்தசுந்தரிதந்திரமாத்திரையேயாம். (௨)

நகரவார்குழற்கனங்குழைத்தரளவாணகையாய்
மகரமாமதிப்பூரணைவைகறையெழுந்து
புகரிலாதநாட்கடனெலாம்பொலிவுறமுடித்து
நிகரிலாதநஞ்சந்நிதிநேர்பெறவடுத்து. (௩)

முன்னர்மண்டபமத்தியின்முப்பதுகோட்ட
மன்னுவித்தவற்றொன்பதுமண்ணுமேழ்தளிரு
நன்னரைந்துகவ்வியங்களுநவதிரவியமுஞ்
சொன்னமுப்பதுமோரோவொன்றுதன்னிடைவைத்தல். (௪)

அரசுகூவிளந்துழாய்புளியால்சம்புமூலம்
புரசைமால்கரிக்கூடமும்புரவிமந்திரமுங்
கரிசிலாநிரைத்தொழுவமுங்கல்விநூல்விதியின்
வரிசையாலெடுத்திடப்படுமண்களொன்பதுமே. (௫)

தளிர்துழாய்புளிசம்புகூவிளம்வடமரசு
விளரிலாவறுகென்பனவிளம்புகவ்வியங்க
ளளவில்சீர்தருமங்கலாயறிகபாறயிர்நெய்
வளநிலாவியகோசலமயமிவையாகும் (௬)

சிறுகுகாருடற்றிலநெய்கோதுமந்தீகைகட்டி
மறுவிலாச்சிவலிங்கநெல்வத்திரஞ்செம்பொன்
முறுகுபேரொளியரதனமெனமொழிந்தவைதா
முறுதியாளர்கடானமென்றுதவுமொண்பொருள்கள். (௭)

கோட்டம்வைத்திடுமுப்பதுபொருளையுங்கொலைவே
லோட்டுமைக்கணாய்சந்தனமலர்புகையொளியா
ளூட்டுமஞ்செழுத்துரைத்துநற்பூசனைநவிற்றி
வாட்டமின்றிவெவ்வேறபிமந்திரித்ததன்பின். (௮)

ஒற்றைவெண்மருப்பிருசெவிமூன்றுகணால்வாய்க்
கொற்றவைங்கரமாறுகொண்டெழுகுலமதமும்
பெற்றபிள்ளையையெட்டுமன்பாற்பெரிதிறைஞ்சி
யற்றமின்றியிக்காரியமாக்கெனப்பராவி. (௯)

குழைந்தநெஞ்சொடுங்கொடுப்பவனேற்பவன்கொடுக்குந்
தழைந்தவொன்பதுபொருள்களுந்தக்கநற்பயனு
நுழைந்துநின்றருள்சிவமலாலிலையெனநுதலி. (௧௦)

சேர்விலொன்பதுபொருளையுந்தூய்மையவாக்கி
யார்வமல்குநீராடுறும்விதிநிறைவாகத்
தீர்விலாப்பெருங்கருணையான்முடிப்பவன்சிலம்பை
வார்விலாக்கியவள்ளலேயெனப்பராய்வணங்கி. (௧௧)

மண்டுமுப்பதுபொருளும்வெவ்வேறுதம்மலர்க்கைக்
கொண்டுசென்றராவணையினன்கொழுத்தவெள்ளெலும்பின்
றண்டமதுகையிற்கொண்டருடலைவன்வார்சரணம்
வண்டுதுன்றியமலர்கடேய்வந்தனைபுரிந்து. (௧௨)

பாழிவையகத்துயிர்க்கெலாம்பயமுளமலைப்பக்
கேழிலையமேற்றுழிதருங்கெழுதகையினரே
யூழியங்கியினிறங்கிளருருவுடையவரே
வாழிநல்லருள்வயிரவரேயுமைப்பணிந்தேன். (௧௩)

இதுமுதல் (௬) செய்யுள் பிரமதீர்த்தம் ஆடும் விதி.

அடியனேன்சிவதீர்த்தங்களாடுவான்புகுந்தேன்
படியிலாப்பெருங்கருணையாலருள்பணித்திடுகென்
றொடிவிலாவிடைபெற்றவன்சந்நிதியொழிந்து
முடிவிலாற்றலங்கியின்றிசைமுந்துறக்குறுகி. (௧௪)

பிரமதீர்த்தத்தின்கரைவளர்பிரசமாமரத்தை
விரவுகாதலின்வணங்கிமென்கரதலினாற்றொட்டுப்
பரவுநீநெறிபாறமுன்னருந்தவம்பயின்ற
பிரமனாகியவிருடியைப்பேணியுண்ணினைந்து (௧௫)

நங்கைசங்கரநாததேவரைநமவந்தங்
தங்கவங்கையின்மாலையிற்றழைதரவெண்ணி
யங்கணுள்ளவரஞ்செவியினும்புகவந்தப்
பொங்குநல்லருணமந்திரம்பொருக்கெனக்கிளந்து. (௧௬)

பெருகுமத்தடம்காத்திடும்பெருங்கணநாதன்
பொருவில்சீர்த்தியனாகியபுட்பதந்தனையு
ளுருகுமன்பினல்வணங்கியொண்புனலரையளவு
மருவவுள்ளுறவிறங்கிமண்ணினையெதிர்நோக்கி (௧௭)

பாவநோய்முதலரிட்டமெல்லாநனிபாற
மேவநன்றியைவிளைக்கெனவியந்துபசரித்துத்
தாவிலாதவம்மண்ணினைத்தனுவினிற்றிமிர்ந்து
காவிநேர்விழியாய்ப்புனல்படிந்ததுகழுவி. (௧௮)

கூறுமானுடையைந்தையுங்கோசலமுதலா
வேறுவேறுறவாடிவீங்கிரும்புனலாடி
மாறிலாதவேழ்தளிரினும்வார்புனறோய்த்திட்
டேறுமாமனுமூலத்திற்புரோக்கணமியற்றி. (௧௯)

வார்ந்ததண்கரையிவர்ந்துநீர்வடிவினிற்புலர்த்தித்
தேர்ந்துதேவர்களிருடியர்தென்புலத்தவர்க்கு
நேர்ந்தநீர்க்கடன்விதியுளிநெடுங்கரத்தியற்றிச்
சார்ந்ததென்புலத்தவர்க்குளந்தழைதரும்பொருட்டு. (௨௦)

எண்ணில்பாவமுமிறுக்குமிவ்வெள்ளிருங்கொடையா
லண்ணலாகியசிவன் மகிழ்வடைந்துபேராயுண்
மண்ணிலேயெனக்களித்திடக்கடவனாலென்று
திண்ணமாகியபத்தியாற்றிலக்கொடைவழங்கல் (௨௧)

அதிவளம்பெறவின்னணமாடுறும்விதியே
மதிவளந்தருமேனைவண்டீர்த்தமாடுதற்கும்
விதியெனப்படுமாமுனிகாவலர்விண்ணோர்
கதிசெய்தானமந்திரங்கள்வெவ்வேறவைகரைவாம் (௨௨)

## வேறு.

இதுமுதல் (௨) செய்யுள் இந்திரதீர்த்தம் ஆடும் விதி.

இந்திரதீர்த்தப்பாங்கரெழுந்தொளிர்மரந்தெங்காகு
மிந்திரனிருடிமுக்கணிறைசிவன்றேவன்காவ
றந்திடும்பாலன்கும்போதரன்சதுர்வேதம்வல்ல
வந்தணர்க்காவினெய்யையளிக்கதக்கணையினோடும். (௨௩)

கைம்மலையுரித்தமேருக்கார்முகக்கடகச்செங்கைச்
செம்மல்வீரியமாயந்தச்சிவனுக்குமகிழ்ச்சிசெய்யு
மிம்மணநெய்த்தானத்தாலின்புறக்கடவனாகு
மைம்முகப்பெருமானென்னவறைதன்மந்திரமாகும்மே. (௨௪)

முஉமுதல் (௨) செய்யுள் ௩-வது சம்பு தீர்த்தம் ஆடும் விதி.

சம்புதீர்த்தத்தின்பாங்கர்ச்சம்புயர்மரம்வதிட்டன்
வம்பறுமிருடிதேவன்மயேச்சுரன்றீர்த்தப்பாலர்
நம்புறுசுனந்தர்தானநலத்தகுபொருள்கோதூமம்
பம்புவேதாந்தியேற்கும்பாத்திரமாவன்மாதே. (௨௫)

இனியதாய்த்தேவர்க்கெல்லாமின்புறுமுணவதாகி
நனிவளர்பாவமுற்றுநலியுமிக்கோதூமத்தான்
முனிதருமலங்கண்மூன்றுமுருக்குபூதேசனான
புனிதனுண்மகிழ்கவென்றுபுகறன்மந்திரமதாகும். (௨௬)

இதுமுதல் (௨) செய்யுள் ௪-வது இராமதீர்த்தம் ஆடும்விதி.

இராமதீர்த்தத்தின்பாங்கரிருப்பைநன்மரமிராமன்
பராவுறுமிருடிநீலவரீச்சுரன்பகருந்தேவன்
விராவுறுதீர்த்தப்பாலன்வீரபத்திரன்றீங்கட்டி
யுராவியபிரமவித்தாயுயர்மறையவனுக்கீதல். (௨௭)

சுவையதாய்விமலன்பத்திச்சுவைமிகக்கொடுப்பதாமிந்
நவையறுகரும்பின்கட்டிநல்குறுந்தானத்தாலே
தவறறுத்தின்பநல்குஞ்சங்கரனெக்காலத்து
மூவகையனாகவென்னவுரைத்தன்மந்திரமதாகும். (௨௮)

௫-வது சீமத்தீர்த்தம் ஆடும்விதி.

சீமத்தீர்த்தத்தின்பாங்கர்ச்செழுமரநாவல்காற்கிய
நாமத்தானிருடிதேவனவிலமுதேசன்பாலன்
றோமிற்றீர்சுதந்தன்மேன்மைதொகுஞ்சிவலிங்கத்தன்னைக்
காமுற்றுதரவுநம்பாற்கலந்தவர்க்களித்தருணம். (௨௯)

நின்மலன்சாலவைகுநிலையமாயுலகமெல்லா
தன்மயமாகநிற்குந்தக்கவிச்சிவலிங்கத்தா
லன்மலிகண்டேனைகையசத்தினனுகிமுத்தி
நன்மையையளிக்கவென்னநவிற்றன்மந்திரமாகும்மே. (௫௦)

௬-வது அக்கினிதீர்த்தம்ஆடும்விதி

அக்கினிதீர்த்தபாஙகர்மரம்புளியிருடியங்கி
நற்கிருசனனுரேதசெனனுஞ்சிவனவிற்றுந்தேவன்
றக்கசீர்க்ககுபன்பாலன்சாலியைவறியனென
பொருக்கமில்சுறறஞ்சூழ்ந்தபூசுரற்களித்தருணம். (௫௧)

வையகமாந்தர்க்கெல்லாம்வளர்பசிதாகம்போக்கி
மெய்யுறுமாற்றலாதிவிளைத்துவிண்ணவர்கட்கெல்லாம்
பொய்யறுமுணவாயின்பம்பொருத்துமிந்நெற்றானத்தா
லையமுதேசனேகையடைகவென்பதுமனுத்தான். (௫௨)

௭-வது அகத்தியதீர்த்தம்ஆடும்விதி.

அகத்தியதீர்த்தப்பாங்கரணிநிழல்வருக்கைத்தாரு
வகத்தியனிருடிதெய்வமகிலாண்டவல்லியென்னச்
சகத்தவர்பழிச்சுநீயேசுருததிதக்கபாலன் (௫௩)
மிகக்கலைவல்லானேற்பவெண்கலைவீசருணம்

தேவர்கள்விழைவதாகிச்சீதம்வெப்பிரணடுநீக்கி
மேவுமிக்கலைத்தானத்தால்விண்ணவர்தேவரெல்லா
மோவிலின்புறுகவென்னவுரைத்தன்மந்திரமாம்பூத்த
காவிகள்செவியினோட்டிக்கவின்கவர்கருங்கட்பாவாய். (௫௪)

௮-வது சந்திரர்தீர்த்தம்ஆடும்விதி.

சந்திரதீர்த்தப்பாங்கர்த்தழைத்தெழுமரம்புன்னைகஞ்
சந்திரனிருடிதேவன்றானுமன்னவனேபாலர்
மூந்துபுட்கரனேபுட்கராக்கனேகுமுதன்மூவ
ரந்தமில்வேள்விசெய்வார்க்காடகமளித்தருணம். (௫௫)

அங்கிசம்பந்தமாகியானந்தமுலகுக்கெல்லாந்
தங்குவதாகுமிந்தத்தமணியத்தானத்தாலே
யங்கியைநுதற்கணுக்குமருள்வளர்சிவன்மாராய
மிங்கண்மிக்குறுகவென்றுவியம்பன்மந்திரமாகும்மே, (௫௬)

௯-வது இவ்விரண்டுகவிசூரியதீர்த்தம்ஆடும்விதி.

பரிதியின்றீர்த்தப்பாங்கர்ப்பசுமரம்வில்லந்தூய
பிருகுநல்லிருடிதெய்வம்பெருகொளியென்றாழ்பால
னுருகெழுசுவானவூர்தியுயர்சிவபத்திவல்லான்
மருவுறவரதனத்தைவழங்குதருணமாகும். (௫௭)

வரமலிதேவர்தேசின்வந்தொளிகளுற்றுமிந்த
வரதனத்தானந்தன்னலமர்பிரபாகரப்பேர்
விரவியகதிரோனின்பமேவுகவென்றுசெப்பல்
பரவுமந்திரமாம்பண்ணைப்பழித்ததீங்குதலைச்சொல்லாய். (௫௮)

### இதுமுதல்(௪)கவிபிரகாரம்ஜெபம்இவைகளின்விதிகூறல்

தருமுதற்பேதமெல்லாந்தனித்தனிவகுத்துச்சொற்று
ழொருவளர்பசுங்கொம்பன்னுயொன்பதுதீர்த்தமாட்டு
மருவியவிதியினுமோர்ந்தர்கணமதுகோயிற்
றிருமுனரடுத்துத்தாழ்ந்துசிந்தையையொருக்கிநின்று. (௩௯)

மந்திரமாதிதம்மால்வருபிழைபொறுத்திட்டீங்கு
முந்தியநவதீர்த்தத்துமுழுகியபேறெம்பாங்கர்
மைந்துறநிரப்புகென்னவாஞ்சையினிரந்துநம்மைப்
பிந்துறமுக்காற்சூழ்ந்துபெருநிலத்தைங்காற்றாழ்ந்து, (௪௦)

ஒருசிறையிருந்துமூலமுயர்திரியம்பகத்தை
யிருபதைந்தடுக்கியெட்டுத்தலைப்பெய்யெண்ணளவையெண்ணிப்
பொருவில்பூங்கொடிநின்கோயில்புகுந்துநின்சரணம்போற்றிக்
கருதுபுநாற்காற்சூழ்ந்துகாதலினைங்காற்றாழ்ந்து. (௪௧)

ஆங்குமந்திரங்கள்வேட்டவளவுநன்கியம்பல்வேண்டும்
பூங்குழன்மடந்தாயாங்குப்பொங்கியதீர்த்தமாடும்
வீங்கியவிதிகள்சொற்றுமென்றனன்விமலன்கேட்ட
மாங்குயிற்பழித்ததீஞ்சொன்மானினியிதனைச்சொல்வாள். (௪௨)

### வேறு.

### இதுமுதல் (௪) கவி அம்பிகைசிவபெருமானைவினுதல்.

கங்குனிகர்த்தகறைமிடற்றாய்கற்றைச்சடையாய்கயிலாயா
பங்கமுறுத்துமரிட்டமெலாம்பாற்றியிட்டமனைத்தினையுந்
தங்கவருளுநவதீர்த்தந்தக்கஞானதலத்திருப்பிற்
றுங்கவிரயம்பலகோடியுயிர்கடுளையுந்துரிசென்னே. (௪௩)

புழுக்கணெளியக்கறைசோரப்புண்ணணைந்திழுகவுறுசீயு
மொழுக்கவுடலுநோயாதிபுலப்பிணையாற்கொளப்படவெ
னிழுக்கம்பயின்றவுளத்தினராயிரந்துமையங்கிடையாமை
முழுக்கத்துயரப்பெருங்கடலின்முழுகித்திளைக்குமிதுவென்னே. (௪௪)

மைந்தரிழந்துமனையிழந்தும்வளமையிழந்தும்பொருளிழந்து
முந்துமொளிகண்செவியிழந்துமுனைநாவிழந்துமெழிலிழந்துஞ்
சிந்தைதெருட்டுங்கலையிழந்துந்திண்மையிழந்துமிவ்வாறே
யந்திலுயிர்கள்பலகோடியரிட்டத்தழுந்துமிதுவென்னே. (௪௫)

வெண்ணெயிருப்பநெய்க்குழலும்வீணர்போலஞானதலத்
தெண்ணில்பெருமைதருதீர்த்தமிருப்பவவற்றின்முழுகாதே
நண்ணற்கரியகொடுங்கானநண்ணியுணவாதிகள்விடுத்துப்
பண்ணற்கரியபெருந்தவங்கள்பல்லோர்பயிற்றுமிதுவென்னே. (௪௬)

### இதுமுதல் (௩)கவி சிவபெருமான்விடையளித்தல்.

என்றுபனிமால்வரையுயிர்த்தவிறைவியினவவளர்மேருக்
குன்றநெடுவார்சிலைக்கரத்தார்குளிர்நோக்குதவியருள்செய்வார்
வென்றபொறியினந்திகவுதமன்மெய்வாய்ந்தததீசியிவ
ரன்றுசபித்தார்குழைகிழிக்குமயில்வேல்விழியாயதனாலே. (௪௭)

மறையினொழுக்கந்தவந்தானம்வாய்மைபொறையாதியதருமத்
துறைநெஞ்சிலரியாவருமவருட்சிலரேயொழுக்கமுதலறத்தை
நிறைமுற்பவத்தின்பெருந்தவத்தானிகழ்த்தலுறுகின்றார்திண்ணம்
பிறையொண்ணுதலாயிவரல்லாற்பேணார்ஞானதலதீர்த்தம். (௩௮)

முன்னைத்தவத்தான்ஞானதலமுறையின்வதியுநலத்தினரு
நன்னர்த்திருத்தமாடுநருநம்மையாங்குவணங்குநரும்
பின்னர்ப்பவத்தினுறார்பீழையுறார்பெண்ணரசேயுறைத்தபயன்
மன்னிப்பிரியாதெமதடிக்கீழ்வாழ்வாரிதுசத்தியமாமால். (௩௯)

எழுந்துபரந்துதண்ணெனவெச்செனமிக்கோங்கியிறுமாந்து
செழுந்தண்டரளவடமணிந்ததிதலைமுலையாயினித்தலமு
மழுந்துபடுந்தீர்த்தமுமுவரவமருமூர்த்திமேன்மையினை
விழுந்துவினைகளோட்டெடுப்பவிளங்கவெடுத்துவிளம்புவாம் (௪௰)

ஞானவிதிப்படலம்முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௫௧௦.

---

## மூர்த்திவிசேடப்படலம்.

மாயிரும்புவிமாந்தருக்கமரர்வானவர்க்கயனவற்கரியரிக்குச்
சேயிலைப்படைவேலவனவற்குத்திகழுமைபங்கரனுயர்ந்தனரவர்க்கு
நீயுயர்ந்தெனவீங்கிவர்பூசைநிகழ்த்திலிங்கங்களொன்றினொன்றுயர்ந்த
வாயவெவ்வகையிலிங்கத்துமேலாமணங்குநீபணிந்திடப்படுமிலிங்கம். (௧)

### வேறு.

வல்லைவென்றொளிருமணிமுலைக்கொடியேவையகத்திடரெலாந்துமிய
நல்லறமாதிகருதிநீபூசைநடவியவெமதருட்குறிகள்
பல்லவற்றுள்ளுமெவற்றினுமேலாய்ப்பாசுகவீட்டினையருளுஞ்
சொல்லருஞானம்பெற்றிடநின்னாற்றொழப்படுமிலிங்கமேலாகும். (௨)

இக்கவிசம்புலலிங்கஉற்பத்திகூறல்.

உத்தமகுணத்தோரெண்ணிலர்தவங்களுஞற்றிமெய்ஞ்ஞானமுற்றுயர்ந்த
முத்தியையடைந்தஞானகேத்திரத்தின்முருகுயிர்பூங்குழலாய்நின்
கைத்தலமலராற்றீம்புனறிரட்டிக்கவின்றருமிலிங்கநாவலின்கீ
ழெத்தகுவரமும்வழங்குவதாகவின்னினிமேயவிளங்குறுமால். (௩)

ஞானமிக்களிக்குந்தீர்த்தங்களுடுத்துஞானமிக்களிக்குங்கேத்திரத்தின்
ஞானமிக்களிக்குமிலிங்கமும்பலவேநவிற்றியவவற்றுளுமேதாம்
வானமிக்களிக்குநின்கரமலரான்மறுவறவகுத்திடப்பட்டு
வானமிக்களிக்குமிலிங்கமென்றுரைக்கும்வார்த்தையினயிர்ப்பதுமுளதோ

### வேறு.

உலகமாட்டுவைகியவெமதுள்ளவுவகைதன்னினுமொண்டொடிநின்பாற்
குலவுமோகைமிக்காயினற்போலக்குவலயப்பெரும்பரப்பினுங்காங்கு
நிலவிவாழ்சிவலிங்கத்தின்மாட்டுநின்றுநாம்வழங்குறுமருடனினு
மிலகுஞானகேத்திரத்துநீவணங்குமிலிங்கநின்றுநாம்வழங்கருள்பெரிதாம்.

குறங்கின்மீமிசையிருத்தியுமெமதுகோலமேனியிலொற்றுமைக்கொண்டு
மறங்குலாவியகாட்சணையென்றுமருவினென்னையாம்பிரிவுறாததுபோ
லறங்குலாவியஞானகேத்திரத்திலன்பினீவழிபடுமிலிங்கத்து
யிறங்கியாணவமுயிர்க்கெலாமடியவென்றுநாம்பிரியாதுவீற்றிருப்பாம் (௬)

அமுதமென்றதண்புனலினூற்றிரட்டியமைக்குமச்சிவலிங்கமவ்வியல்பா
னமுதலிங்கமென்றுரைத்திடப்படுமங்கடுத்திறைஞ்சினோர்வந்தியமெய்தி
யமுதராதலினுனுமும்மலத்தினழிந்துதோன்றுயிரருள்பட்டதனவா
யமுதமென்மொழியமையறியறிவாகழிவதின்மையினுனப்பெயராம்.()

அனையவாகியமந்தணமானவரும்பெருநம்பொருட்பெயரினையொருகா
ணினையநாவினுலுரைக்கமுற்றுதீடேபாகமெவ்வகையினுமிலை
யினையவாகியவிட்டங்கடம்முளிறுதிமுற்றுறுதிருட்டதொன்றில்லை
வினையெலாந்தபமுத்தியீரிரண்டுண்மையுறுதலுமின்னின்கொடியே (௮)

அண்டர்கற்பகத்தலர்சொரிந்தேத்துமமுதலிங்கத்தையன்பினுலொருகாற்
கண்டகண்மலர்வறுமையுற்றிரங்கிக்கனகம்வேட்டொருவரைப்புகழாது
மிண்டுதுன்பறுமமுதலிங்கத்தின்மேதகும்பெயர்கேட்டவர்செவிகள்
கொண்டநல்குரவினர்க்குமுன்னறிந்துகொடுப்பதல்லதுகுறை, [illegible]க்கே
[ளா. (௯)

சோதிமல்கியவமுதலிங்கத்தைச்சூழ்ந்துளாரடியிம்மையிலொன்றிற்
சாதல்வைத்துமற்றொருவர்தம்மாட்டுக்கதுவச்செல்லுறுமறுமைவந்தடுப்பி
னேதமுற்றறமண்மிசைமீட்டுமிடப்படாவெதிர்கூம்பியகரங்க [ய்
ணூதநல்கெனவொருவரையிரவாநடுங்குமின்னெனநுடங்குநுண்ணிடையாய்

## வேறு.

தீயவினைகளனைத்தினையுஞ்செய்தாரேனுஞானதல
மேயவமுதலிங்கத்தைவிழைந்துபணியப்பெறுகிற்பி
னுயவினைகளவையெல்லாமழல்வாய்ப்பட்டதுய்யேபோன்
மாயும்வளரெண்ணுண்மதியின்வாங்கியெயங்குஞ்சிறுநுதலே. (௧௧)

வெறுக்கைகல்விதவந்தானம்வெவ்வேறானவறத்தானு
மொறுக்கமுடியாவாணவமுமுயிரைமயக்குமாயைகளு
மிறுக்குங்கருமமோரிரண்டுமெல்லாம்பரிதிமுன்னிருள்போ
லறுக்குமணிசேர்ஞானதலத்தமுதலிங்கதரிசனமே. (௧௨)

அனகர்வதியுஞானதலத்தமுதலிங்கமெனும்பெயரார்
சனனமரணப்பெருநோயைத்தவிர்த்துவளருமொருமருந்தை
மனமெய்மொழிமூன்றினும்பணிவார்மாட்டுச்சிறியநோயான
கனகமுதலாம்பொருட்சார்பாற்கதுவுங்கலக்கமுளதாமோ. (௧௩)

உறுநாள்கோளேயிராசியேயுதிக்குங்காலமாறுகித்
தெறுநீரனவாயிருந்திடினுஞ்சிந்தைக்கினியவமுதலிங்கம்
பெறுநீர்மையினல்வழிபாடுபேணுவார்க்குமற்றவற்று
விறுநூலிடையாய்தீயபயனெய்தியடர்க்குமாறின்றே. (௧௪)

ஊழியிதுவோவெனமேகமுதகமிகுந்துபொழிந்திடினு
மூழியிதுவோவெனவெப்பமுடற்றமழைகண்மாறிடினு
மூழியிதுவோவெனவிகல்வந்துலைக்குங்காலமுற்றிடினு
மூழிதெவன்றொல்செய்புமெனவுலப்பரதன்சீருரைப்போரே. (௧௫)

வரையால்வேலைகடைந்தெடுத்தமருந்துநுகர்ந்தோர்சுரராசத்
தரைபோராகத்தியத்தெத்தச்சார்வார்விதியினீராடி
னுரையாகுசமவறிதுடையோருகப்பவுடையோரிருவோரும்
புரைதீர்புரிதலொப்பாகப்பொருந்துவார்களதுபோல. (௧௬)

குலமிக்குயர்ந்தோராயிடினுங்குலமிக்கிழிந்தோராயிடினு
மலமிக்குயர்ந்தோராயிடினுமலமிக்கிழிந்தோராயிடினு
நலமிக்குயர்ந்தவமுதலிங்கசநணணித்தொழினவிருவோரும்
பலமிக்குயர்ந்தயவாருவீட்டினெறப்பபடருமபரிசினமே. (௧௭)

பித்துமிகுந்தபுளகமதொருவர்பெருகுவிடத்தைப்பருகுங்கா
னெமதாதுசுவையின்யானைமுதம்விரவப்பெறின்மற்றார்தபக்குன்
மத்தமுடனேயிடவேசமயலையொழியவணித்தரளப்
பத்திர்கர்த்தமுறுவலாய்பாழியடுக்குமதுபோல. (௧௮)

நடனமபுரிபுங்கணைகையரைநாடிப்புகுந்தாருமயிடினு
மடமையகற்றுமமுதலிங்கமணையையடியார்மனவிளக்கைப்
படர்விலவிமைக்குமணித்தொடலைபயில்பூணமுலையாய்தொழினவர்க்குத்
தொடர்தொல்வினையும்பிறவத்திற்சூழும்வினையுந்தொலையுமே. (௧௯)

## வேறு.

பண்ணவர்சூழுமமுதலிங்கத்தைப்பணிவோமென்
றண்மையரேனுஞ்சேய்மையரேனுமகமுருடிற்
றிண்ணியபாவத்திடகண்ணக்கைச்சிதைவிப்பான்
றுண்ணெனவஞ்சிச்சித்திரகுத்தன்றுரிசில்லாய் (௨௦)

ஞானநலத்தினமுதலிங்கத்தைநணிகாண
வானமனத்தோடேழடிமண்ணிட்டனராயிற்
போனபவத்தோரேழனுவீட்டும்புரையெல்லா
நானமலர்க்குழலாய்நலிவெய்தும் (௨௧)

அங்குவிளங்குமமுதலிங்கத்தின்முடிமேலோர்
சங்கமர்தீர்த்தமாட்டினரிக்குத்தயிர்பானெய்
கொங்கயர்தேன்பால்கோடிமிடாவேலையமூர்த்திக்
கிங்கினிதாட்டுமொண்பயனுற்றறவுறுமாமே. (௨௨)

சம்புவின்மூலம்வைகுமிலிங்கந்தனிலங்கைப்
பைம்புனலாட்டும்பண்பினரன்னபயனுற்றால்
வம்புறுபாலாதிகண்மிகவாட்டவளர்வாய்மை
யும்பர்குழாத்துமார்சொலவல்லாரொளிர்பூணாய். (௨௩)

மருமலரோன்றுசம்புவின்மூலமகிழ்மூர்த்திக்
குருகியவன்பாலீந்தவரோணமாமலர்வாழ்வர்
திருவியல்சங்கமொன்றுகொடுத்தோர்திகழ்செங்கைப்
பொருவறுசங்கமொன்றுதரித்துப்புவிகாப்பார் (உச)

மான்மதமீந்தமானைமதங்கைமாறுகும்
பான்முதலீந்தபன்மணியான்கோபுரமேவுங்
கான்மலரீந்தபூமரவாதிகவினார்ந்த
வான்மலிவைப்புய்யானநிலாவியகிழ்செய்யும். (உரு)

வேறு.

அருள்வளர்நாவன்மூலத்தமுதலிங்கத்தின்சார்புற்
றொருநதினமேவுமன்பாலோங்கியசரியையாதிப்
பெருகியபணிகணான்கும்பெட்டவர்சாலோகாதி
மருவியமுத்திநான்கும்வல்விரைந்தடைவர்மாதோ. (உசு)

அறமுதனான்கும்வல்லேயருமையொன்றானுமின்றி
புறுவதுவேட்டோரெல்லாமொலிந்தபூஞ்சாலகநாவ
னறுமிழலிலிங்கபூசைநண்ணியபொருள்கைக்கொண்டு
முறுகியவன்புபொங்கமுற்றுவித்திடுசடானே (உஎ)

என்றுயர்மூர்த்திமேன்மையியம்பலுமிறைவன்பாத
மன்றலங்கூந்தற்செவ்வாயமலைமகள்வணங்கிநின்று
நன்றுளமகிழ்ச்சிபொங்கநாதனேயாங்குநாவ
லொன்றுளதென்றியன்றேயதன்வரவுரைகவென்றாள். (உஅ)

அம்பிகைக்கிவெண்ணாவல்விருட்சத்தின்வரலாற்றைசிவபெமான்
எடுத்துக்கூறல்

வரையினுக்கரையனீன்றமலர்க்கொடிநுசுப்பினங்கை
கரையறுகாதல்பொங்கக்கைதொழுதிரத்தலோடும்
புரைதபுகருணையோடும்பூரணன்முறுவல்பூத்து
விரைகமழ்நாவலந்தருவினைவிளம்பலுற்றான் (உகூ)

மூர்த்திவிசேடப்படலம்முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-ருகூ.

## சம்புமுனிதவம்புரிபடலம்

இதுமுதல் (ச)கவிகெசாரணியவனத்தின்விருட்சங்களின்நாமங்கள்.

புன்னைகூவிளநாகம்பூவைபிடாநமைசேவாண
வன்னிதாதகிவேங்கைவகுளநெல்லிமயிலைபாங்கர்க்
கன்னிகாரமந்தாரங்கடுக்கைதமாலங்கச்சோல
முன்னம்வாகைவெட்பாலைமுருக்குவருக்கைபலாசு. (க)

சந்துகாரகில்போதிசண்பகமால்வரையாமா
சிந்துவாரமசோகஞ்செருந்திகிம்சுதிலகங
கந்திநாளிசேரங்கள்கடம்பெகினில்லமடப்பு
குந்தங்கூதளமாச்சாக்குங்குமமேழிலைம்பாலை. (உ)

முருகுநரந்தங்குறிஞ்சிமுந்திரிகைப்பழச்சோலை
மருதுதடாவழையோமைமாதளைஞாழன்மதூகம்
பொருவறுமின்னமரங்கள்பொலிதருஞானதலத்தின்
மருவவிடைக்கணெழுந்துவைகுமொர்நாவலங்கானம். (௩)

வளர்ந்துவணடு லாவமலர்ந்தொளிர்நாவலங்கானத்
தளர்ந்துதேவருங்காணவரும்பெருவீட்டினைவேட்டோன்
றளர்ந்துசாய்ந்தமலத்தான்சம்புமுனியெனுந்தக்கோ
னுளீந்தனுதுவயத்தினொழுக்கியருந்தவமுற்றான். (௪)

வேறு.

நீறுதரித்துக்கண்மணிபூண்டுசிமிர்சென்னி
யேறியவேணிதாழ்புலிவீழவிருந்தெம்மை
வேற்றநாடிமெய்ததவமாற்றுமவன்முன்னே
வீறுயர்வெண்ணாவற்கனியொன்றுவீழ்ந்தன்றே. (௫)

பணடறியாததிப்பியமானபழமின்னே
கணடனனுவாகண்ணொடுநெஞ்சங்கவர்தேசு
மணடியசீர்மைத்தூறுசுவைததுமற்றிதியாங்
கொண்டயிலாதகொள்கையதென்றுகுறிககொண்டான். (௬)

அற்புதமெய்தியப்பழமங்கைத்தலம்வவ்விப்
பொற்பமரிந்தவெற்பினைநண்ணிப்புகழ்பாடிச
சிற்பரவீதுதிருவருள்வைததுநுகர்கென்ன
விற்புருவததாய்நங்கரமீந்தான்வினைவெல்வான் (௭)

வேறு

ஞ்சுவையப்பழமுண்டுவிளங்கிழாய்
பாங்குமிழ்ந்தனம்விததினையன்னதுபார்த ளத்
தோங்குமன்பினுவந்துகைக்கொண்டொளிர்பூரலிற்
றுங்குறுதுமடுத்துவிழுங்கினன்றபதன். (௮)

வினையினீங்கியமெய்த்தவற்கீந்தவிழுப்பொரு
டினையனீள்பனையாய்வளருஞ்செயறேற்றியாங்
கனையமாதவன்பாழிவயிற்றினமர்ந்தது
நினையுமுன்முளையாகியெழுந்துநிவந்ததே (௯)

சம்புமாமுனியாற்றுதவம்வளர்ந்தாலென
வம்பினீடுவெண்ணாவலவன்சிரம்வாய்திறந்
தும்பர்நாடுகிழற்றியுலவைவெண்மாதிரம்
பம்பவார்தளிரீன்றுமலர்ந்துபசந்ததே. (௧௦)

அண்டமீரடியாலளந்தானகநாணுற
வண்டநாடுகணைமுற்றுமடங்கவளர்ந்துமே
லண்டமுட்டியங்கேபெருங்காவல்வயிரவ
வண்டனுங்களிகூரவவன்மெய்தைவந்ததே. (௧௧)

சுரும்புகிள்ளைகள்பூவைகுயில்பசுந்தோகைக
ளிரும்புருவினங்கின்னரமாதியிசைப்பன
விரும்புகற்பகமெய்துதருக்கைவளித்துமென்
றரும்புநாவலெதிர்ந்தறைகூவிடதொக்குமே. (கஉ)

மேக்கெழுந்துகுரங்கியிணர்த்தமென்சாகை...
றாக்கணங்குருவித்திரடுன்னுகுடம்பைக
டேக்குசீர்த்திவிராட்புருடன்றிருமேனியி
னீக்கமின்மயிர்தோறமரண்டமிசர்க்குமே. (கங)

நமது
நிமிர்பெருந்தவன்மெய்யின்மூளைத்தருணீடலாற்
பமரமொய்க்குமப்பாதவநீழல்பயப்பவா
ழமரராதியருந்தவமாற்றுநராயினார் (கச)

வெண்ணாவல்விருட்சத்தின் பிரயோசனம்.

பல்லவங்கைதொடினுஞ்ழலிற்பயிலினு
மெல்லென்மாமலர்நாறினுநேர்விழிநோக்கினு
நல்லபேர்செவிகட்பினுநன்கனிபுண்ணினு
மல்லல்யாவுமறுமுறுநல்லனயாவுமே. (கரு)

வேறு.

வெண்ணாவல்விருட்சத்தின்சொரூபம்.

உரைசெய்மாமறைகண்மூலமாய்ப்பராரையுபநிடதப்பொருளாகிக்
கரையுமாகமகள்பணைகளாய்ச்சரியைகிரியையோகங்கிளைவளார்கள்
விரைகுலாமிணராய்ஞானமோரைந்துமெல்லரும்பலர்கள்காய்கனிகள்
புரையிலாக்கனியினிரதமாயுயிரின்புகர்மலந்துரக்குமந்நாவல். (கசு)

வேறு.

எழுந்தவெண்ணாவலினீட்டநோக்கிய, கொழுந்தவமுனிவரர்குணலை யிட்டனர், செழுந்திருக்கடவுளர்மலர்கள்சிந்தினார், பொழிந்தனமதுமழைபூமரங்களும். (கஎ)

சம்புமாமுனிவனத்தகைமைநோக்கினான்,பம்புபேரோகையம்பரவை மூழ்கியிவ், வம்புநாவலினிழன்மாதவத்தினுக, சிம்பர்மேம்பட்டதென்றெண்ணிநோற்றனன். (கஅ)

அருந்தவமன்னவனுற்றுமெல்லையி, விருந்தவமுனிவரரிமைப்பிலார் களும், பெருங்கணநாதருப்பேணியங்கிழ, லொருங்கிருந்தருந்தவமுஞற்றி வாழ்ந்தனர். (கக)

இனலணைஞ்சிலபகலிறந்தபாணியி, னன்னணந்தவம்புரியறவன்வந்துநம் முன்னுறவணங்கியிம்மூரிமாநிழன், மன்னவநீயினிவதிகவென்றனன். ()

ஆங்கவற்கிரங்கிநாமருப்புக்கொங்கையா, யாங்குமுன்கனிவிழுந்தெடுத் தியாங்குநீ, யோங்கிருந்தவம்புரிந்துறைதியவ்வயிற், பாங்குறவதிகுதும் படர்கவென்றனம். (உக)

கோட்டமிலெமதருள்கொண்டுதிக்கெலாந், நீட்டியபுகழினன்சிறந்த மேதசெலா, நாட்டியஞானகேத்திரத்தைநண்ணிய, வீட்டியவன்புளத்தெழுந்திட்டானரோ. (௨௨)

பாயிரும்புவியிடைப்படர்ந்துசெல்வுழிச், சேயிடைநோக்கினர்தேமலர்ச்சிமீயுயர்மரநடைமேவிற்றென்னெ, வாயினரையமற்புதமுமேயினர் [னே

வேறு.

அடுத்துநோக்கியமாந்தர்களங்கையாதிகளுந்
தொடுத்ததேத்தடைச்சினைகளுந்துன்னும்பிறவி
யெடுத்தவேழ்வகைத்தோற்றத்துமில்லைமற்றிதவு
முடுத்ததோலினன்றிருவிளையாட்டெனவுவந்தார். (௨௪)

அடங்கிநோற்றவச்சம்புமாமுனிவனேயல்லா
லுடங்குசூழ்ந்துசென்முனிவருமுருப்பவிர்வெப்ப
மடங்குறுதவெய்யவன்வெயின்மாற்றினர்நல்லோர்
தொடங்குமாநலஞ்சூழ்ந்தவர்தாமுமெய்தாரோ. (௨௫)

வேறு

(சம்புமுனி சிவபெருமான் கூறிய இடம் வந்து சேர்ந்தமை.)

அண்டர்போற்றிடநாமினிதுறைந்திடுமெரும்பெருந்தலநேர்ந்த
கண்டுபோற்றுபுமென்மெலநடந்துபோய்காவிரிவடபாங்கர்க்
கொண்டஞானகேத்திரத்தினைக்குறுகிமுன்கொழுங்கனிவீழெல்லை
மண்டுகாதலினெதிர்தொழுதடுத்தனன்மாதவர்க்கேறன்னான். (௨௬)

பரிதிவானவனுருப்பெழுந்துடற்றிருபருவத்துமழனின்றுங்
கருவிமாமழையெழுந்துநீர்பொழிதருகார்முதலியநான்கு
முருவவார்திரைப்புனலினுமருந்தவமுஞற்றியொண்டொடிமாதே
யிருவினன்றனதிதயதாமரைமலரெமதடித்தலத்தம்ம. (௨௭)

கந்தமூலமுங்கனிகளுஞ்சருகுநீர்காலுமுண்டவைநீக்கி
யந்திரேறற்றிருக்கின்றனனவன்விழியடுத்தவர்தமைக்காணு
வுந்துதேமலர்த்தென்றன்மேற்றைறவரவூறுடலறியாது
நந்துமோனைதகள்செவியுறுநாற்றநகணுசிமோவாதன்றே. (௨௮)

பிரமதேவனும் சம்பு முனியும் கலந்திருந்தமை.

பெருகுமன்புடனின்னணமருந்தவம்பேணிமாதவன்வைக
மருவிமுன்னரேதவம்புரிதாமனைமலரினன்முனிச்சென்னி
யுருவின்றவெண்ணவலுமருந்தவமுஞற்றுமாதவமாண்புங்
கருதிவிம்மிதமெய்தினனுளவளாய்க்கலந்துடனிருக்கின்றான். (௨௯)

ஆருயிர்த்தொகையிருண்மலங்கழீஇயெமதடிமலர்நிழற்சேக்கச்
சேருமத்தகுநாவலின்வரவிதுசெப்பினுமினியாங்குச்
சாருமத்திறம்புரிதியென்றெம்பிரான்றையலுக்கருள்செய்ய
வோருமுத்தமகுணத்துயர்நந்திதாழ்ந்தொன்றுகேட்குவனானன். (௩௦)

இதுமுதல் (௪)கவி நந்திதேவர்சிவபெருமானை அம்பிகைபிரிவதற்கு காரணங் கேட்க சிவபெருமான் அம்பிகையின் அறியாமையை வெளிப்படுத்தல்.

திங்கள்சூடியசெஞ்சடைக்கடவுளேதிருவுருவினைநீங்கா
நங்கைபார்ப்பதிபிரிவதற்கேதுமுன்னண்ணியதுளதேயோ
விங்குக்கேட்பதுவேட்டனனருளெனவியம்புநந்தியைநோக்கி
யங்கிமூவெயிலுணநகைபுரிந்தவனருளினற்கேட்பித்தான். (௩௧)

## வே று.

சம்புமுனிதவம்புரியத்தகுஞானகேத்திரத்தி
னும்பர்தொழச்சென்றதற்பினுலகமெலாஞ்சிற்றின்ப
வம்புநெறியொழுகுறவிம்மாதுடனுகியநாமே
நம்புமுயிர்வீடணுகநல்யோகத்திருந்தனமால். (௩௨)

இளமைபெருங்கற்பொருவரெதிராதவெழிலொத்த
வளமையுறுமன்பனைத்துமல்கியிடம்பிரியாத
பிளவுமதிநிகர்நுதலிப்பெண்ணரசிதனைநோக்கா
தளவினெடுநாள்யோகத்தமர்ந்திருந்தவெமைநோக்கி. (௩௩)

அள்ளிலைவேற்கணநாதரருகிருந்தோர்பார்த்திருப்ப
வெள்ளனகைபுரிந்திட்டாளிவளதனுல்விளைகின்ற
கள்ளவினைகழுவுவான்கதங்காட்டிநமைப்பிரிந்திட்
டுள்ளமுளைந்திருத்தியெனவொருசாபமுறுத்தினமால். (௩௪)

இதுமுதல்(௧0) கவி சிவபெருமான்கொடுத்தசாபத்திற்குஅஞ்சிஅம்பிகை புலம்புறுதல்.

வெச்சென்றமொழிகேளாவெய்துயிர்த்துநடுநடுங்கிக்
கச்சொன்றுமுலைத்தலைமேற்கனல்சேர்ந்ததிரிநெய்போன்
மைச்சென்றமலர்நீலவாட்டடங்கண்புனலுறைப்பப்
பச்சென்றவுடல்குழையப்பணிந்துமொழிகுவளானுள். (௩௫)

அடியவர்செய்திடுங்குற்றமாயிரமும்பொறுத்தருளும்
படியில்பெருங்கருணையனேபசுவேறும்பரமேட்டி
கடியவிழுநறுங்கொன்றைக்கண்ணியாகருநீல
விடமணிந்தகருமிடற்றுவிகிர்தாநின்சரண்போற்றி. (௩௬)

பேதைமையேபெருங்கிழமையிரண்டானும்பிழைசெய்தே
னுதவினுற்பெருங்கருணையடிகேண்மற்றடியேனை
யேதிலர்போற்புறக்கணித்திட்டிருந்துயரத்திடைமூழ்கப்
போதவிடலழகன்றுபொறுத்தருளாய்பொறுத்தருளாய். (௩௭)

தண்டரளப்புனற்பொய்கைதணந்தமலர்த்தாமரைபோல்
விண்டலத்துக்கதிவழுவிவிழுந்தபெருங்கடவுளர்போற்
கொண்டல்பொழிமழையொழிந்தகுளிர்பண்ணைப்பசும்பயிர்போ
லண்டர்தொழுமடிகளையானகன்றிருத்தலழகேயோ. (௩௮)

உயிர்நீத்தவுடம்பென்னவுணர்வொழிந்தவுயிரென்ன
மயிர்நீத்தமாவென்னமணிநீத்தபணியென்னப்
பயிர்நீத்தகூலென்னப்பகனீத்ததினமென்னச்
செயிர்நீத்தவடிகளையான்றீர்ந்திருத்தலழகேயோ. (௩௯)

புலனுகராப்பொறியேபோறபூணணியாமடவார்போ
லலரணியாநீர்நிலைபோலாயணையாமகவேபோற்
பலன்விளையாநிலமேபோற்பண்ணுகாராப்பாடல்போ
னிலவுமடிகளையடியேனீத்திருத்தலழகேயோ. (௪0)

கொம்பரிலாவிளங்கொடிபோற்கொழுங்கணிலாத்திருமுகம்போல்
வெம்பரசிலாப்படைபோல்விரகினரில்லாவவைபோற்
பம்புமுயிர்க்குயிராகிப்பசுபதியாய்க்கணவனுமா
மெம்பெருமானையுமடியேனிகந்திருத்தலழகேயோ. (௬௧)

ஆற்றரியபெருந்துயராலலைப்புண்டிவ்வாறுரைத்துக்
கோற்றொடிக்கைமடமாதுகுழைந்துருகியவசமுற
மாற்றுதிவின்னவலத்தைமாழ்கலைமாழ்கலையென்னத்
தேற்றியவண்மனங்குளிர்ப்பத்திருவருளாலிதுகிளந்தாம். (௬௨)

சின்னாளிங்கெமைப்பிரிந்துதிகழ்ஞானக்ஷேத்திரத்தின்
மன்னிநின்றருந்தவத்தின்மனம்வைத்துநமைப்பூசை
துன்னார்வத்தொடும்புரிந்துசூழ்திதமியாகியநீ
பின்னுமங்கருள்வழங்கவெமியாவைபேணென்றும், (௬௩)

நவின்றவருண்மொழிகேளாநந்தியெனுமியற்பெயரோய்
கவன்றகவலைபிற்சிறிதுகையகன்றுதோத்திரங்க
ளுவன்றுபிழையாவெழுந்தநோன்மையுறுநாணினொடுந்
துவன்றுமணிவாய்திறந்துமற்றிதுவுஞ்சொலவலித்தாள். (௬௪)

இதுமுதல் ௪)கவி அம்பிகைசிவபெருமானைவணங்கித்தோத்திரஞ்செய்தல்.

வேறு.

தண்ணங்கமலத்தயனுகணையான்சதுமாமகஞ்செய்திமையார்க்கிறையாய்
நண்ணுங்குலிசப்படையானமரர்நவில்விஞ்சையர்கின்னரர்கிம்புருட
ரெண்ணுங்கணநாதர்கணந்துறவோரெவரும்வதிவுற்றிருமைப்பயனு
மண்ணும்பெருமைத்தடிகேளுயரிவ்வணியூர்கயிலாயமலாலிலையே. (௬௫)

அதுமாத்திரமன்றுலகத்துறைவோரனைவோர்களுமன்பலர்நெஞ்சினராய்
துதிபாடியுமாதிரநோக்கியெதிர்தொழுதுந்தொலையாமையுளத்திடையே
யிதுவாலிதன்வண்ணமெனப்பதிவித்திட்டும்பயனெய்துவதும்பெருமான்
முதிர்பேரொளிகான்றிருள்சீத்துநலமொய்க்குங்கயிலாயமலாலிலையே. ( )

ஒப்பாருயர்வாரையிலாய்வதியுற்றுயர்கின்றனயன்றுகொலெத்தலமு
மப்பேரருளுயகனீயொழியாதமரும்பெருமைத்துயருங்கயிலை
யிப்பூதரம்விட்டெனைஞானதலத்தேகெனநருள்செய்ததுமெம்பெருமான்
றப்பார்திருவுள்ளவெறுப்பெனவேசூழ்ந்தச்சமொழிந்திலதென்னுளமே.( )

அடியேன்மதியாமையிழைத்தபிழையகலுங்கழவாயெனமாதவமு
முடியாதநின்பூசனையுந்தகவேமுற்றும்பலநாளுமிம்மாமலைவாய்க்
கடியாதுபுரிந்தமர்வேனிதுவேவைசைக்கொண்டுபோற்றுகஉடக்கவென்
றொடியாதவுளத்தெழுமன்பினளாயுரைத்தாள்பனிமால்வரையுத்தமியே. ( )

வேறு.

இதுமுதல் (௫) செய்யுள்சிவபெருமான் நந்திதேவருக்கும் அம்பிகைக்கும் திருவானைக்காவின் மகத்துவங்கூறல்.

நந்தியின்னணமோதுநாயகிக்கிதுசொற்றுஞ்
சுந்தரிகயிலாயத்தொல்வரையிதிற்பன்னா
ணந்தியதவமெல்லாநாழிகையொன்றதனில்
வந்திடுமுயர்ஞானவைப்பிடையதுவன்றி. (௬௧)

ஞானமுனிக்காங்குரவிற்றியனினைத்திட்டா
ஞானநல்குருமேனைநற்றல்முளவேனு
ஞானவைப்பெனுநாமந்தனக்கலதில்லாத
ஞானவைப்புயர்ந்தன்றூனற்பயனுறுதற்கே. (ருo)

ஆங்குறுங்காலந்தானனுகிலததுகாறு
மீங்குறைகெனமுன்னேயியம்பினமாங்கெய்தும்
பாங்குறுபாணியுமிப்பாணியல்லதையில்லை
தீங்கறுநந்திநெளிகென்றனன்சிவபெருமான். (ருக)

அருளியவருடலைவைத்தருள்வளர்தருநந்தி
பெருகியகளிகூரப்பேசியஞானதலத்
திருவினைத்தியானித்தங்குறைந்தனனினியிப்பாற்
கருணையவினைந்தோங்கற்காரிகைமகிழ்கூர்ந்து. (ருஉ)

உருக்கிளர்புரமூன்றுமொள்ளழற்குணவாக்கும்
வெருக்கிளர்மாமேருவில்லினரிடுசாப
முருக்கவுமெய்ஞ்ஞானமுற்றவுமெம்பெருமான்
றிருக்கிளர்பூசனையிற்றிருவுளமபற்றினளால். (ருங)

சம்புமுனிதவம்புரிபடலம்முற்றிற்று
ஆ திருவிருத்தம் - ருகூஉ.

## அகிலாண்டநாயகியாராதனைப்படலம்.

---

சிவபெருமானை அம்பிகை வணங்கிக்கொண்டு திருவானைக்காவிற்
கெழுந்தருளுதல்.

பொன்பூத்துமணிதுறும்பிப்பொங்குமருவிபலவார்ந்து
தென்பூத்தவிமையவரைச்செல்வமடர்ந்தைதிசைவிளங்குங்
கொன்பூத்தபுகழ்க்கயிலைகுடிகொண்டிருந்தகொண்கனிரு
மின்பூத்தமலரடியின்விரையார்மலர்தூய்ப்பணிந்தெழுந்தாள். (க)

பூத்தசமாதேவபுலவுநாறுஞ்சூலத்த
வாதேயவாதாரமனைத்துமானஏராலம்ப
மாதேசின்வளர்ஞானவைப்பிற்கேகவொருப்பட்டே
னீதேசநலனெய்தசிகரில்விடைதந்தருளென்றாள். (உ)

சிவபெருமான் அமபிகைக்குத் தானும் வருவதாய் அருளளித்தமை.

நஞ்சேந்தியமுதளேந்துநாமவடவாமுகத்தீயி
னெஞ்சாதசெவ்வரிகொண்டிருநீர்பெருக்கிக்கடல்போலுந்
துஞ்சாதவிழிமடவாய்தோலாச்சிறப்பினெடுஞ்சேறி
யஞ்சாதியவண்வருதுமென்றாரகிலகாரணரே. (ங)

வேறு.

இதுமுதல் (அ) செய்யுள் அம்பிகையின் சேனைமுதலிய சிறப்புக்கூறல்.

விடையவன்றிருமுன்றூழ்ந்துவிடைபெற்றமாதுசோயிற்
கடைமணிவாயிலெய்தக்கண்ணுதலேவலாற்று
லுடைமணிச்சுரிகைநந்தியொய்யெனமுன்னரேகிப்
படையொடுமுடன்செல்கென்றான்பாரிடத்தலைவர்க்கம்மா. (ச)

அருடலைக்கொண்டுவல்லேயருங்கணநாதர்சில்லோர்
வெருவருதோற்றஞ்சான்றவிறற்பெருங்கணத்திற்றொக்கார்
பொருவருமாயனாதிப்புலவர்கணெருங்கித்தாழ்ந்தார்
வருசயைவிசயையாதித்தோழியர்மருங்குசூழ்ந்தார். (௫)

வாரணிமுரசமார்த்தவால்வளைகரன்றவீணைக்
சீரணியெழாலின்பாடல்செவியெலாமினிமைசெய்த
வாரணமுழக்கஞ்சான்றவடியவர்துதிகண்மாண்ட
காரணிவிழியின்மாதர்கலாயெதிராடினார்கள். (௬)

மாலைகால்பாத்தபிச்சமதிக்குடைதுவன்றிச்சூழக்
கோலமாராலவட்டங்குளிர்செய்சாந்தாற்றிவாய்ந்த
பாலவாயசைத்துநிர்ப்பாணிறக்கவரிதுள்ளச்
சீலமார்கொடியினீட்டஞ்சேண்வெளிமுழுதுந்தூர்ப்ப (௭)

குறுகுறுநடந்துசெல்லுங்குறளொடுசிந்துமுந்த
வறுவகைப்படையுமஞ்சவாளுடைதாங்குமாதர்
கொறுகொறுத்துடலும்வைவாள்குடங்கையினேந்திமொய்ப்ப
விறுகிடைப்பேடிமாருமொருபுடையீண்டிச்சூழ. (௮)

பூவையுங்கிளியுமற்றும்பொற்புறக்கூட்டினேந்தி
மாவடுவகிர்க்கண்மாதர்சிலரொருமருங்குபோற்றத்
தேவர்கள்சில்லோர்யூகந்திரிமருப்பிரலைமற்றுந்
தாவுறுந்தொடரினோடுந்தடங்கரம்பற்றிச்சார. (௯)

கஞ்சுகமணிந்ததேவர்கைத்தலம்பிரம்புதாங்கி
வெஞ்சொன்மிக்குரைத்துமுனனமிடைசனத்திரளைநீக்க
வஞ்சலிபுரிந்துசூதமாகதரருகுநிற்ப
வெஞ்சலிலாதவேனைப்பணியினர்யாருமீண்ட. (௧௦)

ஆணிப்பொன்னடர்மேல்வேய்ந்திட்டசும்பொளிதிசைகள்போர்ப்ப
மாணிக்கநிரையுமுத்தும்வயிரமுந்தூக்கியிட்ட
வேணுற்றவிமானநண்ணவிறைவனைமனத்துளெண்ணிப்
பூணுற்றகொங்கையன்னைபொருக்கெனவிவர்ந்துசென்றாள். (௧௧)

அம்பிகை மற்றுள்ள தலங்களைத் தரிசித்தல்.

நெறியிடையாங்காங்குள்ளநிறைமணிக்கோயில்சார்ந்து
முறிவளர்மேனிநல்லாண்முதல்வனைவழிபாடாற்றி
யறிஞர்கள்வந்துதாழவவரவர்க்கருளிச்சென்று
செறியொளிஞானபூமிசேணிடைத்தோற்றக்கண்டாள். (௧௨)

அம்பிகை திருவானைக்கா எல்லைக்கு வந்தமை.

மண்ணிடையிழிந்துபாங்கிமார்கொணர்ந்தளித்தபோதங்
கொண்ணிழற்கடகச்செங்கையொய்யெனவாங்கித்தூவிக்
கண்ணிறைந்திமையிற்றூங்குங்கதிர்முத்தஞ்சிந்தத்தாழ்ந்து
பண்ணிறைதுதிகளார்த்திப்பைப்பயநடந்துசென்றாள். (௧௩)

அம்பிகை காவிரி ஸ்நானஞ்செய்தமை.

விரோதமொன்றானுமின்றிமிருகமும்பயிலாநின்ற
வரோகமேயருளுஞானபூமியினவதியுள்ள
குரோசமைந்தளையுஞ்சூழ்போய்க்குறுகுவாள்கோலமார்ந்த
வரோதயப்பொன்னிநீத்தமரபுளித்தோய்ந்துள்புக்காள். (௧௪)

### இதுமுதல் (௯) கவி அம்பிகை திருவானைக்கா வளப்பங்காண்டல்.

உடங்குறுசேனையாங்காங்குறுவகைநிறுவிச்செல்லுந்
தடங்களுளிரண்டுபோலுந்தவழ்தருபொன்னிவீசு
மடங்குருக்கதிர்செய்முத்தும்வயிரமும்பொன்னுமற்று
மிடங்கெடக்கிடந்துபோகபூமியினிமைப்பக்கண்டாள். (௧௫)

கடலுவர்பருகுந்தீமைகையகல்பாக்குச்சார்ந்து
படலைமைமுகிலேற்றன்னபசும்பொழிலுடுத்தசூழ
விடலியதீர்த்தமாடுமிபக்குழாமனையமேக
மடனறத்துதித்தாலென்னமகிழ்ச்சியின்முழங்கக்கண்டாள். (௧௬)

மலைய:வெற்பிடையேதோன்றிமாதவனகத்தியன்பாற்
றொலைவறப்பழக்கஞ்சான்றதாக்குணந்தெரிக்குமாபோ
லலைதவழ்தீர்த்தமாடியலர்மணங்கவர்ந்துமெல்லென்
றுலவுசெய்வருத்தநீங்கத்தென்றல்வந்துலாவக்கண்டாள். (௧௭)

அகிலமுமுயிர்த்ததாயேயடுத்தனளென்னுமோகை
மிகுதலிற்பாடலாடல்விளைத்திடுந்திறமேயெனத்
தொகுகுயில்பூவைகிள்ளைதும்பியுமிசைப்பத்தோகை
யிகவறுவனப்புத்துள்ளவிடந்தொறுமாடக்கண்டாள். (௧௮)

தருவுருவாகஞானதலத்திடைப்பிறந்தாமேனுந்
திருவினைப்பெறலாமென்றுதேவருமிறும்பூதெய்த
மருமலர்தூவித்தாருமதுப்புனலிறைத்துத்தெய்வ
முருகெதிர்விடுத்துத்தாழமொய்யருள்வழங்கிக்கண்டாள். (௧௯)

கங்கையீரைந்துதோன்றுங்கையினுள்கமலபாத
மிங்குநாமணையப்பெற்றாமெனமகிழ்சிறந்தாலென்னப்
பொங்கிவெண்டரங்கக்கையாற்புனல்வளர்தீர்த்தமெல்லாஞ்
சங்குயிர்முத்தந்தூவித்தாள்பணிந்தேகக்கண்டாள். (௨௦)

கருப்புவில்லோடுநம்மைக்கைத்தலந்தாங்குமன்னை
திருப்பொலிபாதநோதல்சிவனுமேயென்னப்பூவிற்
சுருப்பினங்குடைந்துவாசச்சுண்ணநுண்டாதுவீழ்ப்ப
வருப்பிளமுறுவல்கோட்டியலர்விழிகுளிர்ப்பக்கண்டாள். (௨௧)

இருந்தருந்தவங்களேற்குமிருடியர்பாவமுற்றும்
வருந்திமண்விழுந்தோட்டந்தான்மானவானிழன்றநாவற்
கருந்திரட்கனிகள்சிந்தியுடைந்துகால்கொண்டசாறு
விருந்துணச்சுரும்பரீட்டம்விரைந்தெழுந்தோடக்கண்டாள். (௨௨)

தொடுக்குமன்புடையகாந்தனுகியசோமனேற்ற
துடுக்கணமறிந்துதாமுமொண்டவம்புரியுமாபோ
லடுக்கியவுலகுக்கெல்லாமரும்பெரும்பொருள்களன்குங்
கொடுக்கியவளர்வெண்ணாவற்குருஉக்கனிமிளிரக்கண்டாள். (௨௩)

### அம்பிகையை அங்குள்ள தவத்தோர் வணங்கல்.

இத்தகுஞானிபூமியிருந்தபேறினிவேறென்னே
யுத்தமியுமையாள்காட்சியுதவிடப்பெற்றாமென்று
மெத்தியவன்புபொங்கவிரதியரெதிரேசென்று
கைத்தலங்கூப்பித்தாழ்ந்துகண்பனியுறைப்பக்கண்டாள். (௨௪)

அம்பிகை கைலையினின்று நீங்கிய வருத்தநீங்கி ஆனந்தமடைந்தமை.

இன்னபல்வளங்கணோக்கியெய்தியோர்தருவின்மூலந்
துன்னிநின்றடுத்ததோழிச்சுனந்தையைநோக்கிமுக்கண்
மன்னனைப்பிரிந்தாமேனும்பிரிதராமகிழ்வேபெற்றாந்
தன்னிகரில்லாவிந்தத்தலம்புகுமாண்பாலென்றாள். (உரு)

அம்பிகை வருமுன் தவம்புரிந்த பிரமதேவன் அம்பிகையைப் பூசித்துத் தோத்திரஞ்செய்தல்.

அரதநத்தசும்பையென்றவருப்பிளங்கொங்கையன்னை
வரவினையறிந்துமுன்னேவதிந்துமாதவங்களாற்றும்
பிரமன்வல்விரைந்துசென்றுபெருகியவன்போடச்சம்
விரவமுன்பணிந்துபூசைவிதியுளிப்புரிந்துபோற்றும். (உசு)

இதுமுதல் (ஙரு) செய்யுள் அகிலாண்டநாகி அவயவவருணனை.

கூந்தல்.

இருசுடரெதிராதெழிலியோரியல்பினிராதுதண்டலைமுடிகூடா
கருமணலொழுக்குநீவதில்லாதுகதித்தசைவலம்புழுகளையா [மே
வுருவளர்கொன்றைகமழுமெல்லென்றுவெனவிலையொழித்தியன்மண
மருவிமெய்யடியார்மலவிருட்செறிவுமடிக்குநின்பூங்குழல்போற்றி. (உஎ)

கூந்தலிலணிந்த முத்துக்கள் முல்லைமலர்கள். [ன்

கருந்துணர்க்கடுக்கைக்கண்ணியான்முடியிற்கலந்தனனமக்கெனாங்காந்த
முருந்திளமுறுவற்றேவிபானமக்குமுறையெனமுதிரொளியுடுக்க [மூன்
ளருந்தவத்திறைகொண்டிருந்தனபொரூஉநின்னணிகுழற்றாக்குநித்தில
திருந்தியமுல்லைத்தெரியலுஞ்செருகுஞ்சின்னவெண்மலர்களும்போற்றி.()

இலகொளிமணிச்செயிலம்பகந்திருத்தியெறிகதிர்மகரவாய்பொறித்த
திலதமேலிடத்துச்செங்கதிர்தொடர்ந்தசேயொளியரவெனநாற்றிக்
குலவமரடுப்பிற்புறந்தருநீர்மைக்கொடுமரநாணுறவொளிவாய்ந் [போற்றி
துலவுறுமெண்ணுண்மதியும்வெண்ணிறமென்றொழிக்குநின்வாணுதல் ()

புருவம்.

காமனுருருவங்கனற்கணுற்பொடித்தகணவனார்திருவுளம்வணக்கு
நாமவாளிகளோரிரண்டெனமிளிர்ந்தநறுமலர்நயனமீமிசையே [உநின்
சேமவார்சிலையுஞ்செருச்செய்வார்சிலையுஞ்சேர்ந்தொருங்கிருந்தனபொரூ
னேமவார்புருவம்போற்றியிப்புருவத்தெழின்மயிரொழுக்கமும்போற்றி. ()

கண்கள்.

மாநிலம்விளக்குஞ்சுடர்க்கொளிகொடுக்குமகிழ்நனார்விழிச்சுடர்மூன்று
மூனமில்காதலுளத்தெழவணக்கியொளிர்தருவதனமாமதியந்
தானழகெறிப்பமணந்தவுற்பலமோதண்ணமிழ்துணவுடனடுத்த
வீனமில்சகோரத்துணைகளோவென்னவிருந்தநின்கண்மலர்போற்றி. ()

நாசி.

கண்ணளியடுத்துநன்னிறம்வாய்ந்துகதிருமிழ்மணியணியணிந்து
தண்ணெனவியற்கைநறுமணமுயிர்த்துத்தழைந்துவாடாதுசண்பகத்தை
யெண்ணறுமலரைக்குமிழினைக்காமரூபியையிகல்கெடப்பொருது
வண்ணவார்கொடியின்வயங்குநின்னாசிவளரொளித்திருவெழில்போற்றி.

இதழ்.

இந்திரகோபங்காரொடுமொழியவிருங்கிடைநீரொடுங்கழியச்
செந்துவருவர்நீர்க்கடலொடுமறுகச்செம்மலரிலவொடுமுருக்கு
நந்தியஞான்றேநலனறத்தொண்டைநறுங்கனிதூங்கிநின்றழிய
வர்தமிலமிழ்தம்பொதிந்தொளிதுளும்பியணிகிளர்வாயிதழ்போற்றி. (௫௫)

வாய்.

செய்யதாமரைதண்பனிக்குழுற்றழிந்துதிங்கண்முன்றிகழ்நலமொழிந்து
மையளாங்கண்ணியொருத்தியைச்சுமந்துமன்னுமுட்டாளதாய்நின்றும்
பொய்யதாய்க்கழியக்குமுதமுமென்றாழ்ப்புலவன்முன்னெழுநலஞ்சாம்ப
மெய்யவாம்பொருள்கள்விளைத்தருள்கொழிக்கும்விமலைநின்செய்யவாய்
[போற்றி.

தந்தம்.

முருந்திளஞ்சாயற்குடைந்தமஞ்ஞையதாய்முளைத்ததன்னுடன்பிரியாமற்
றிருந்துருக்காட்டாச்செயிரதாயொழியத்தெள்ளொளிசித்திலம்விலைப்பட்
டருந்திறற்காப்புற்றுட்புரைநாணுற்றலையவெண்முல்லைநெக்குடையப்[ற்றி
பொருந்துதண்ணமிழ்தமூற்றிருந்தொளிகால்பொழியுநின்மணிநகைபோ

வார்த்தை.

சிறைபடுபூவைகிள்ளையுமொருவர்தேமொழிபயிற்றிடப்பயில்வ
வறைகுயிலெழுத்திறுமொழியறியாதருஞ்சுவையாழ்சுதந்திரமன்
றுறைசெய்தேன்செழும்பாலமிழ்தமுஞ்செவியின்புறுவெனவிவையெலா
நிறைசுவையினதாய்த்தன்னையேநிகர்த்துநிகழுநின்குளிர்மொ[மொழித்து
ழிபோற்றி. (௫௬)

கபோலம்.

ஒப்பறுமுதல்வணுகியகணவனொளிர்முகத்திருவெழினோக்கத்
திப்பியமாகவிளங்குகண்ணடியோசிவபிரான்றிருவுளக்கமல [ள்
மெப்பொழுதினும்பூத்தலருநீர்நிலையோவெனத்திகழ்திருஞ்செவியணிக
செப்பருங்கதிர்நீராஞ்சனம்புரியத்திருந்துநின்கவுட்டுணைபோற்றி. (௫௭)

செவி.

மயிரெறிகருவிதனதிழிதொழிலைமதித்துமஞ்சிகனுறைதூங்கப்
பயிலுறும்வள்ளைகொடியதாய்ப்புனலிற்படியவாருசனின்செவியி
னியலருளெனவிற்சுமந்தெழுந்தாடவெழில்குலாய்க்காவிமேலணிந்து
செயிரறுமணிப்பூங்குழையொடுதோடுசெறிந்தநின்செஞ்செவிபோற்றி. ()

முகம்.

ஆரணங்கடந்தவருட்பெருங்கடவுளகமெனுந்தாமரைமலரப்
பூரணவொளிமிக்கெழுதலாலிருளைப்புரட்டுசெங்கதிரவனேயோ
காரணங்கடந்தகண்ணுதல்வதனக்கதிரவன்முனமலர்தலினூற்
சீரணிகமலமலர்கொலோவென்னத்திகழ்ந்தநின்றிருமுகம்போற்றி. (௫௯)

கழுத்து

பாளையுட்பொதிந்துதிரண்டபூங்கமுகின்பாசொளிக்கண்டமோநிலையா
கோளறுதரளங்கொழித்தொளிர்சங்குகுழகனார்திருவுளமகிழ
வாளுமென்புள்ளின்குரலொடுமமிழ்தமளவளாய்மங்கலநாணும்
வாளுமிழ்கலனுமுறுவெனவிலக்கிவயங்குநின்கந்தரம்போற்றி. (௬0)

தோள்.

மழலைவண்டிமிருந்தொடைலைசிர்சிதையவாரணைவாய்கடைப்புண்ண
முழவுவள்வாரின்பிணிப்பினலிரங்கமூங்கில்களினத்தொடுமுரிஞ்ரி
யழலிடையவியாதிருப்பினுமந்தோவரும்பயனெய்துழியழியத்
துழவொளிக்கதிர்ப்பூணங்கதமணிந்துதுலங்கியதோளிணைபோற்றி. (சக)

முன்னங்கை.

வலைவரம்பரிந்தகாளையாய்ச்சேர்ப்பர்வண்குடிமகிழ்கொளத்தோன்றி
யலைவரம்புறிந்தமகரமீன்படுத்தவன்பஞரங்கையிற்பற்றி
விலைவரம்பிகந்தமணிவளைகடகம்விற்செறிகங்கணமணியக்
கலைவரம்பிகந்துமகரமீன்யாழுங்கடந்தவின்கூர்ப்பரம்போற்றி. (சஉ)

உள்ளங்கை.

தங்குபன்மலர்க்குமருங்கலமானதாமரைநாண்மலர்குவித்து
மங்கதனரும்பைமலர்த்திபுந்திரியுமலங்கொளிச்சுடர்கண்மையாப்பக்
கங்கையையணிந்தகண்ணுதல்வதனக்கதிர்விழிபுதைத்திசைதோற்றிப்
பங்கயமலரைக்காந்தளைத்தளிரைப்பாற்றுவின்செங்கரம்போற்றி. (சங)

விரல்-நகம்.

கருப்புவிற்குழைக்குங்காமவேளெடுத்தகணையெனுமுறப்பலமுகிழைப்
பொருப்புவிற்குழைத்தபுண்ணியன்விழையப்பொலிந்துநேர்பெறுதெனவி
திருப்பொலிசெங்கையார்விரல்போற்றிசித்தசன்றேர்க்குவாம்பரியா[லக்கித்
தொருப்படுங்கிள்ளைச்செய்யவாய்விலக்கியொளிருகின்விரலுகிர்போற்றி.()

தனம் இஃதுசத்திகூறெனப்பொருள்கொள்க

கடகரிமருப்புமத்தகத்துணைபுங்காமருசெப்பும்பொற்குடமுந்
தடவரைக்குவடுந்தாமரைமுகிழுஞ்சக்கரவாகமும்பந்துஞ்
சுடர்மணிவடமுங்கலவைபுமாழ்துந்தொய்யிலுங்கலந்தமூதேச
ரிடவியமார்பங்கலத்தல்செய்யாவென்றிகந்தநின்னிளமுலைபோற்றி. (சஞ)

இதுவுமது.

உருப்பவிர்பருவத்துறுகுளிர்கொடுத்துமுறுகுளிர்ப்பருவத்துவெம்மை
விருப்புறவளித்தும்புணர்ச்சியிற்புளகம்விரவியுமேனையோர்க்குயமு
மிருப்பனவெனினும்கந்துலகின்றுமிளமைநீங்காதுமாமேருப்
பருப்பதங்குழைத்தார்பகட்டுரங்குழைத்தபயோதரத்தின்னியல்போற்றி. ()

தொய்யிலும்தேமலும்.

முழுத்தபேரன்பிற்காந்தஞர்மணிததோண்முயங்கியவேலையுமுயக்கம்
விழுத்தவேலையினும்வேறுவேறுருவாய்வேங்கையினறுமலர்த்தாதும்
பழுத்தவாடகப்பொற்பராகமும்விலக்கிப்பன்மணிகரைத்திலேகித்த
வெழுத்தினுற்பொலிந்தவிளமுலைமுற்றத்திணங்கியசுணங்கெழில்போற்றி.

வயிறு.

மூவரையடக்கிமாவொருவனையேமுற்றுறச்சுமந்ததோராலின்
மேவுபச்சிலையும்விலக்கியண்ணுந்துவிளங்கியமூலைமுகடுருவித்
தாழ்வடமணியினிளவெயிற்பிழம்புந்தயங்கியவிதம்பமேகலையி [றி.
னேவில்பில்லொளியும்விராய்க்கிடந்திமைப்பவொளிருதரத்தெழில்போற்

வயிற்றின்மயிரொழுங்கு.

மாந்தளிர்மருட்டுங்கரதலத்தெடுத்தவார்கழைக்கருப்புவில்விசிக்கு
மேந்தெழிற்சுருப்புச்சேமநாணென்றேவிறந்தவேளொழவளருந்திக் [து
காந்தழற்குண்டத்தெழும்புகைக்கொழுந்தோகண்ணெழுதஞ்சனம்பிழைத்
வீழ்ந்தொழுகியதோவெனவயிற்றெழுந்தமென்மயிரொழுக்கெழில்போற்
[றி.

மடிப்புஉந்திச்சுழிமேகலை

நிரஞ்சனப்பொருளாயிருந் தருள்கணவர் நெஞ்சுகணணி னுங்கலந் துலாவு
மூரஞ்சொளிவனப்புப்பெருங்கடற்பாற்பின் முரிதிரை ரமெனவய ற்றெருமூங
வாஞ்செறிமடிப்புமதன் சுழியென்னவயங்கியவுந்தியுமாங்கே [ருப
யுரஞ்செறிமணிகள்கிடந் தெனதயம்பநதொ ... தருபருமமும்போற்று. ( )

இடை

கடிமலர்க்கொம்பர் சொடியபார்து றுங்கைப்பிடிமின்னிவைநிலையா
துடிகடைபட்டதராகிட மூமிழுந்து ய நூல்பலவிணைப்படுஞ்சர்
முடிவறுமடங்கல்சிம்புளுச்சுழியுமெனவிலைவமூனிநதுமொயசசரப [ற.
வடிவுகொள்கணவன்மனமெலாம்யணைநகவணங்குநின்னிடுகிடைபோற்

தம்பம்.

காமவேளெரித்தகண்ணுதறபாரனகருததிணைவணக்கிபேக்குயர்தத
வாமமாருரோமவல்லியெனறுனைச்குமனாகசொடியலைசவறநாட்டு
மேமமாருந்திக்குழமனைசதகாடம்வமனவிநானஞ்செய்படலந்தே
ராமனுவடங்களகிடந்தொமயசுயபுமநிகியகடிதடயபோற்று (௫௨)

துடை.

பிணர்படுவெடிவினுட்புலழுபுடையபெருங்சம்ற்றிருங்கரமிகந்து
வணர்நெடுவாளாற்றண்டடக்குறைத்துவரிசையினுரிதுகிடைப்பட்டு
விணர்வணப்பிழக்குங்கதலியைநீக்கிநிறுன்மணமகாவாயசெறந்துத
துணர்படுமாவினிளந்தளிரப்பட்டிற்றுபமகுசனைவொனறுலைபோற்றி ( )

முழந்தாள்

பொர்பமர்பொன்னங்கிபுடைபவடந்திரப்ாதடிபவை
வற்பமர்நெண்டுபங்கமுற்றியுமரபினவனவெலாபொழுத்ககக
தற்பரன்கரத்தாறபிசசம்தாறமபுகந்தந்தனையொன்றுபெய்தாமே
யற்புதமானவியற்சசகப்புகினமர்முழந்தாளிணைபோற்றி. (௫௪)

கணைக்கால பரடு.

சிலம்புகிண்கிணியபாதசாலங்கள்செழுமணிப்பாடகந்தண்டை
யலம்புறவணிந்துபுலவியிற்கணையனங்கைகயோடமர்சிறிதாற்றிச
சலம்படுவராலுமாவநாரிகையுங்கண்டதுவார்ந்தொமாகணைக்காலும்
பலம்படுதராசிற்றட்டிணைதமுச்சிப்பிதததநின்பரடுநோபோற்றி. (௫௫)

குதிங்கால்

பெண்ணுருவெடுத்தூன்னருடகணவன்பெருமபுபமபுணர்ந்தமாயவனி
கண்ணுருவகர்ப்பமீனுருவெடுத்துக்காதிடப்பட்டிதற்கேனு [ன்
நண்ணுருவொருதுசாந்துமெமனணணாகலததசவெடுத்தகூர்மமுமாங
கெண்ணுருவழியவெனறிகொண்டிலகுமெபுற்புறந்தாணைபோற்றி (௫௬)

பாதம் விரல் நகம

தொண்டையங்கனிவாய்த்திருவெழிற்குடைந்ததுளர்நறவித்தருமத்தின்
சண்டமுங்குடர்வெணலைசையெழுற்குடைந்தகதிரொழிதரளமுமெமை
தொண்டுகொண்டருளாவேணமெனறடியைத்தொடாந்துசொண [யுக்
மண்டெழில்கொழிக்குமவ்விரறலையின்வயக்கியநகங்[டணையமெல்விரலு
[களும்போற்றி. (௫௭)

உள்ளங்கால.

வந்தெதிர்பணியும்வானவாபிரதுதமற்றவாசெயயநாவிடததுரு
சிந்தையினிடத்துமறைமுடிவ்டதுநதிசகருபுலமையின்முக்கட்
சுந்தானலங்கள்வோயினிடததுந்துலங்குறதமேசாறறிநாயடியேன்
புந்தியினென்றுநீககுதலறியாப்பூந்தமாசசரடிபோறறி (௫அ

நடை

பயிலியவுலகம்படைப்பவனூர்தியாகியபடர்சிறையனமு
மயினுதிநெடுவேலண்ணலாரூர்தியாகியமயிலுமிற்சுமந்து
செயிர றுமயிரா வணமுநேர்பணிந்து திகழ்நடைதிருந்தவேசறப்பல் [றி
லுயிர்களுமேவுதநெறியுளியொதுங்கவொதுங்குமன்னநடையெழில்போற்
றொகுத்தவடிவம்.

எழுதருமறையுமெடடுதற்கரிதாயெங்கியானெழுதிடப்பட்டோ [யனு
ரெழுதுசித்திரமுங்கைசெய்பாவையும்வீழ்க்கிளந்தவர்கவற்றுமெல்லி [னை
மெழுதுயர்மஞ்ஞைக்குறுத்துசாயலுங்கொண்டெனியனேன்சிரத்துநீமுன்
றெழுதியவெழுத்துந்துடைக்குமுன்வடிவத்திருவகவின்முழுவதும்போற்றி
அகிலாண்டநாயகியென்னுநாமத்திற்கு.

நீடியபரையாயாதியாயிச்சைநீக்கமில்லறிவிருந்தொழிலாய்ப்
பீடியலுலகிற்பேதமும்பேதாபேதமுமபேதமுமென்னக்
கூடியுங்கூடலின்றியுமொன்றாய்க்குலவியவுயிர்க்கெலாஞ்சகமே
நாடியமுத்தியளருகிலாண்டநாயகியெனும்பெயர்போற்றி. (௧௧)

வேறு.

யானேகுயிலேபசுங்கிளியேமயிலேபுறவேநடையனமே
தேனேயமுதேயெனையீங்குத்தெரிசித்தேத்தப்பெறுதலினால்
யானேபெரியதவஞ்செய்தேன்யானசெய்தவமும்வேள்வியுமிங்
கியானேபயந்தந்திடப்பெற்றேனெனக்சோர்குறைபுரிவியுண்டோ. (௧௨)

மறையாகமத்தால்வானவரான்மாலாலறியப்படாதநீ
முறைமேயாவியனாமுறவந்ததென்னேமொழியாயெனத்துதித்துக்
குறைபாவன்பின்வினையென்றகுருபாமலரோன்முகநோக்கி
நறைவார்சடைதாழுகுமலர்க்கூந்தனங்கைய தனைவிளம்புமால். (௧௩)

அம்பிகைபிரமதேவனுக்குத்தான்வந்தவரலாறுரைத்தல்.

அனகன்கயிலையெம்பெருமானடிகள்வணங்கிப்பொருளொன்று
வினவினேற்குஞானதலமேவித்தவமாற்றுதியாங்கே
யினிதுவிரித்துத்தெரித்துமெனவியம்பிவிடுப்பவீங்கடுத்தேன்
கனகமலர்மெல்லணைச்சேக்குங்கடவுளறிதியெனக்கிளந்தாள். (௧௪)

சம்புமுனிஅம்பிகையைவணங்கஅவர்க்கனுக்கிரகஞ்செய்துவிட்டுச்
சிவபூசைக்காரம்பித்தல்.

சாற்றுமளவில்யோகிருந்தசம்புமுனிவனுணர்ந்தெழுந்து
போற்றிப்பணிந்துமகிழ்தூங்கப்பொங்குகருணையெதிர்நோக்கிக்
கீற்றுமதியமுடிவேய்ந்தகள்வருரைத்தவருணினைந்து
தோற்றுமுழவலன்பினொடுந்தூயபூசைதொடங்குவாள். (௧௫)

இதுமுதல் (௩௪) செய்யுள் அம்பிகை சிவபெருமானைப்பூசித்தல்.

பாங்கர்நின்றபரிசனத்தைநோக்கிப்பள்ளித்தாமமுத
லோங்கும்பொருள்கள்சிவபூசையுற்றனகொணர்மின்வரைப்பிற்
றூங்கிக்கொணர்மினனவிசைத்துநதரளங்கொழிக்குங்காவிரியுந்
தேங்குநவதீர்த்தமுஞ்சென்றுசிந்தைபகிழத்தோய்ந்தெழுந்தாள். (௧௬)

திரைக்கும்புனற்றீர்த்தமும்படிந்ததேவிதிருமேனியிலணிந்த
விரைக்குங்குமமுமலர்த்தொடையுமவெறிசூழ்கலவைமுதற்பலவு
முரைக்குமுனமசொண்டுயர்ந்துயர்கட்குறுதிபயப்பதெனினவடன்
குரைக்குமணிநூபுரத்தாளர்க்கடுமுயிர்க்குங்குறையுண்டோ. (௧௭)

பொழியுங்கிரணமணிக்கலனும்பொற்றவிரையும்பூம்பட்டு
மொழியுந்திரத்தவெணத்தொடாளொளிர்வெண்சேவிழைந்துடீஇ
யிழியும்பழிபாதகமுழுதுமிரிக்குநீறுங்கண்மணியு
மொழியுமபனுவல்விதியாற்முன்முழுதுந்திருமேனியலணிந்தாள். (௬௮)

## வேறு.

அருந்தவக்குறுமுனியூாடுதீர்த்தமு, னிருந்திருந்தவத்தினையிறைவியெய்தி
டிருந்தியபரிசனத்தேவர்சென்றவர், பொருந்தியபொருளெலாம்போத[ரு
[ந்தீட்டுவார் (௬௯)

சிவபுரத்தலிமையிற்சிவனுங்கோபுரத், தவமறவதிபுமானைந்துபற்றுப
புவனமுற்றுயிர்த்தவள்பூசைக்காகெனத், தவமகிழ்தலைக்கொளத்தந்திட்
[டார்சிலர். (௭௦)

இந்திரனகர்புகுந்திணர்த்ததாருவோ, ரைந்தொடுளிதிகளுமணிசெய்தேனு
வுஞ், சிந்தையவிரப்புறுமனியுந்தெவ்வுபு, வந்தொருசிறையெலாமலிவித்
[தார்சிலர். (௭௧)

மன்மகிழ்சிறப்புடையயனைவிசசுவ, கன்மனைக்கூவியொண்கரகம்பாசனம்
பன்மணிப்படலிகைபரந்தவட்டகை, யென்னவும்புரிமினென்றேவினார்சி
லர். (௭௨)

மாதிரக்களிற்றினைவவ்வியன்னவை, மீதுவிண்ணெல்லையின்விறந்ததீர்த்
தமும், பூதலவரைப்பிடைப்புணர்பஃறீர்த்தமுங, காதலிற்கொண்டுபோய்க்
[கஞற்றினார்சிலர். (௭௩)

கண்டமொன்பதிற்றினுங்கலந்தல்லவுங, கொண்டபஃறீவினுங்குலவிபு
ளளவு, மண்டர்நாட்டதிசயமாகவுள்ளவு, மண்டினர்வவ்வினர்வந்துய்த்தா
ர்சிலர். (௭௪)

இன்னணமிறைவனார்பூசைக்கேற்றன, மென்னியபொருளெலாம்வவ்விஞா
னமா, நன்னகர்முறறியகவையவலாரெலாந், துன்னினர்பணிவிடைதொட
[ங்கினாரரோ. (௭௫)

## வேறு.

நிறைமலர்ச்சம்புமூலநின்மலன்கோயில்கொள்ளு
ஏவானிற்றசசர்கணமுயன்றுவலமேல
பிறைதவழெயில்கண்மாடம்பில்கொடிமணிப்பூங்கொயி
னறைமலர்க்காவணங்கணலத்தகநிறுவித்தாரால். (௭௬)

மண்டபமேடைவேதிமடைப்பள்ளியாதியாக
வண்டர்வீழ்யவனர்செய்தவீலயத்தெடபிராட்டி
கண்டுளமகிழ்மீக்கொள்ளக்காதலிற்சிலர்நீராடி
விணடமென்மலர்களாய்ந்துவேறுவேறமைத்துவைத்தார். (௭௭)

தூரணியிண்டைமாலைததைமலர்த்தொங்கலாதி
சீரணிந்தியற்றியோர்சார்செறிதரசசிலர்கள்வைத்தா
ரொரணிகலன்பூணுடையிருங்குடைகவரியாடி
நீரணிகடாதிதூய்மைமல்கழ்த்தினர்சில்லோர்வைத்தார். (௭௮)

நாறுமென்பனிநீர்வாக்கிநறுக்குறடுரிஞ்சுதேய்வை
யேறியகடித்தூரியிளகியபுழுகுவாச
மூறியகுங்குமப்பூக்கருப்பூரமுறமட்டித்த
கூறருங்கலவைசாலிற்கொளப்பெய்துவிரைத்தார்சில்லோர், (௭௯)

தயிலமாமலகமஞ்சள்சாலிமாவானைந்தீர்ம்பா
றயிரிழுதிளந்தேன்வேழசசாறமிழ்தைந்தைந்தென்னு
வியலுறுவிரதம்பல்வேறிருங்கனியிளநீர்மற்றுஞ்
செயிரறுசலத்தின்வாங்கிச்செறித்தனரொருசார்சில்லோர். (௮௦)

கடவுளாலுதவுமுண்டிசடல்வருமமிழ்தமேனைப்
படர்சுவைத்தெய்வவுண்டிபாரிடையமைக்கும்பல்வே
றடர்சுவைபுணடிநான்குமரதநக்கலத்திமேந்திச்
சுடர்விழுத்துகிலின்மூடித்தொகுத்தனரொருசார்சில்லோர் (௮௧)

கற்பகத்திழையும்பூவுங்கடவுளார்மணியுங்கொண்டு
பொறபுறவிதாணித்தெங்கும்புகைமணங்கமழவூட்டிப்
பற்பலவிளக்கம்வைத்துப்பனிநறுநீர்தூய்வாச
வுற்பலமலர்சள்சிந்திவிலமெழிலுறுத்தார்சில்லோர். (௮௨)

தொண்டகந்துடிதடாரிதூரியம்பதலைபம்பை
திண்டிமமுரசுமொந்தைசெறிகிணைதகுணிச்சங்கண்
மண்டுதண்ணுமையேவீணைவளைவயிர்பீலிகாளங்
கொண்டபல்லியங்களெல்லாங்கூட்டியரியம்பாவின்றார். (௮௩)

இவ்வகைப்பணிகண்முற்றயாவருமியற்றலோடு
மவ்வகையுணர்ந்துவல்லேயம்பிகையெழுந்துசென்றுள்
பவ்வமென்றயிர்க்குமாவிப்பாங்கியர்மருங்குசூழ்ந்தார்
செவ்வியதேவர்கற்பச்செழுமலர்மாரிதூர்த்தார். (௮௪)

பிரமன்மாதவங்கள்சாலப்பேணுதல்குறித்தோவேகப்
பிரமநாமத்தையன்ஞன்பெற்றமைமதித்தோவந்தப்
பிரமன்மூவுலகமாக்கும்பேறுறவினைந்தோதேறம்
பிரமதீர்த்தத்தின்பாங்கர்ச்சென்றனள்பிணைமானன்னாள். (௮௫)

மருவியதொழும்பின்மேன்மைவயக்கியபிரமன்பாங்கர்க்
கருணையின்பெருமைகாட்டக்கருதிமற்றவனைக்கூவிப்
பொருவிலிபூசைசாலப்புரிவதற்கிலிங்கமொன்று
தருகவென்றுரைத்தாள்கேட்டசதுமுகன்வணங்கிக்கூறும். (௮௬)

அகிலமுமுயிர்த்தவன்னலறிதராப்பொருள்களில்லை
சகலமுமுணர்ந்துளாய்க்குச்சாற்றுவதென்னேயெல்லா
நிகழ்வதைம்பூதத்தந்தப்பூதத்தினிலைக்குவேட்கை
திகழ்வதினியற்றுகென்றான்செவிமடுத்துமையாள்பின்னர். (௮௭)

உயிரினுக்குலவாவின்பச்சுவையினையுதவுமுத்தி
யிபவினையுணரப்பூசையியற்றுவார்சுவையுயால்குஞ்
செயிரறுபுனலைக்கொண்டுசிவலிங்கமாக்கமுன்னி
யயிர்வரித்தார்க்குமந்தத்தீர்த்தத்தினறலைச்சார்ந்தாள் (௮௮)

அம்பிகைதன்கையால்அப்புவைசசிவலிங்கமாக்கினமை.

நீக்கமில்லாமலெங்குநிறைந்தபூரணத்தினின்று
தாக்கறநின்றவந்தாணுவின்சரணம்போற்றிப்
போக்கறுநீர்தந்தன்னைப்பொன்னொளத்திரட்டித்தேசு
தேக்கொளிலிங்கமாக்கித்திசநகரிருந்திருளாய். (௮௯)

விழைதருசணவன்மெய்யின்விராயிதுமுரணுமென்னத்
தழையெழின்மகளாய்நின்றதற்பரைக்கெறுழ்வன்மேருக்
குழைதரச்குழைத்தசெம்மல்கோளொடுமுரணிதென்னப்
பிழைதபநெகிழ்நீர்வன்மைப்பிழம்புறல்வியப்பிற்றேயோ. (௯௦)

மங்கலந்துவன்றியார்ப்பமாதர்பல்லாண்டிசைப்பப்
புங்கவர்குணலைசெய்யப்புலவர்கைகொட்டியாடச
சங்கரிசம்புயோகிதவப்பயன்முற்றுவிப்பா
ளங்கவன்றன்னைக்கூவிநிழற்றெனவருமசெய்வாள். (௯௧)

அம்பிகைஏவுதலால்சம்புமுனிசிவபெருமானுக்குநிழல்கொடுத்தமை

மருதநகுநாவலென்னமருவியசம்புயோகி
கருத்துறுமகிழ்ச்சிதுள்ளக்கவித்துறநிழற்றிநற்பத
திருந்தநீர்கொண்டுநாதன்றிருமுடியாட்டவெண்ணப்
பொருத்தபஃறீர்த்தமெல்லாம்பெருகுமாபாவிதகிட்டாள் (௯௨)

விழுமியமுக்கணமூர்த்திவிடைமலர்ப்பதத்தன்னுட்கு
முழுவலன்பெழுந்தாமென்னவுற்றதீர்த்தங்களெலா
மெழுதருஞ்சிரத்தீர்த்தமெனவிறும்பூதுகொண்டாள்
கெழுதகுமன்னயதீர்த்தமப்பெயர்கெழுமிற்றன்றே. (௯௩)

## வேறு.

எத்தியசீமத்தீர்த்தநீரினையுமெண்டிசைக்களிற்றின்மேலவந்த
தாதநகுதீர்த்தந்தன்னையுஞ்சுகந்தங்கோட்டமார்பெய்தனளமைத்துப்
பாத்தியமாசமனமருக்கியமும்பாங்குறவமைத்தருள்சொழிச்கு
மாத்தனூல்விதியார்சுத்தியோரைந்துமாக்கினளகிலமீனறெடுத்தாள் ()

ஆதனமூர்த்தியைத்தருவுருவமருவமோடுருவமாயவற்றின்
பேதமுமாகிப்பிரிவிலதாகிப்பிரிகபாவுயிரினைதமொடார்ந்த
வேதமெய்தரியதாகியவ்வேதமெனைதைதையுந்துடைத்தருள்கொழிக்குஞ்
சோதியைமூர்த்திமானெனவருளாற்றுகளறக்கண்டருசசித்தாள். (௯௫)

பகர்ந்தபாத்திடமுன்மூன்றுமேநோபததுப்பகர்தயிலாதிகளாட்டித
திகழ்ந்திடுமெவற்றினிடையிடையமர்சல்சேர்திருப்புகையொளிபுணைவு
மகிழ்ந்திடவளித்துச்சுத்தநீராட்டிவடிக்கியபடு. திருமனைத்தும்
புகழ்ந்திடுஞ்சந்தக்குழமபருச்கியமும்பொறபுறமுறையினூட்டினளால். ()

தழையிழைத்துகிலாற்றிருவுருவீரமொடிக்குமுன்புலர்த்தியின்னரைநாண்
டழையழகெழிக்குங்கோவணமுடுட்டிஞ்சாத்திமெய்முழுவதுங்குலவப்
குழைவிலாக்கலவைகோட்டியாண்சுண்ணங்கூர்தரமீரிசையட்டி
விழைதருகலனுந்தொடைசாத்தினும்வேறெடுத்தலங்கரித்தார். (௯௭)

அறுசுவையடிசிலொழிக்குநால்வகையுண்டியனைத்தும்பின்னுரைகிளர்நூட்டி
நறுவிரைப்புதுநீர்பொழிந்துபாகடையுகல்குபுபல்வகைமயாமையும்
பெறுமுறைசுழற்றிச்குடைமுதலுதவிப்பெருகியர்ச்சனைபுரிந்தேத்தி
யுறுமுசிர்த்தலோர்தமைநடத்தியக்கினின்னுரைனோடரிக்கண்ணாள் (௯௮)

நிசகலுங்காலங்தொறுந்தொறுமுள்ளநெகிழ்தரவுருகியவ்வாறங
கெச்சமிப்பூசைபுரிகுவாளொருநாளினிதுபூசனைமுடிந்ததாபின்
முசசகம்பழிச்சிமுதல்வனைத்தணந்தமுறைமையயினைத்தனளாகி
வெச்செனவுயிர்த்துப்புளகமெய்போர்ப்பவிழுந்தகுநிலவிளம்பினளால். ()

## வேறு.

இதுமுதல்(௯) செய்யுள் அம்பிகைசிவபெருமானைத் தோத்திரஞ்செய்தல்.

உலகேழுமொடுங்கவெழுந்தூவிமிருழக்கனலுங்குமாத்தழலாய்ப்
புலவோராலம்வந்தழியக்கடுக்குப்புசாநிசமயின்றபுராதனனே
மலரோன்மகமேவழுசாதமிஞெவ்வருபாயமகற்றியநாயவன
மிலமாகவிருந்தருள்வாயடியேற்கெவந்தருளாமையியந்திடுமே (௧௦௦)

அருளோதுமிலாத்தாருநலமுயிராயதொடர்ந்தன்மையாரியன்
பொருளோதமிலாமனமேயவனேர்புராசசரமேணைச்சியபுரணமேனமே [ஞா
தெருளோதுமிலான்பிறவிவயிற்புருமேசந்தாகவொலிதிமைசிவதத்தரு
மிருளோதுமிலாததலத்தடியேற்கெவந்தருளாமையியந்திடுமே. (௧௦௧)

கலங்கிப்புலம்வார்பெரிதுங்குலையுச்சறுவுந்தகுவோர்குலவாழ்க்கையுறும
வலங்கொள்புரமூன்றுமொருங்கவியமாயப்பலடதொட்டபலர்க்கமனே
துலங்குநகிரணப்பணிமாமதியோன்பருடர்சாபமறுத்துவரஞ்செறிவித்
திலங்குமபுகழ்ஞானதபோதடியேற்கெளிவந்தருளாமையினையந்திடுமே. ()

விணைணுநெடும்புவியுந்துயரவெள்ளிச்கிரியைப்பெயர்வித்திடுவோன்
கன்னாஞர்முசமும்புயமுஞ்சிரமுங்கடிதாசநெரித்தருள்கால்விரலோய
புண்ணுடியவார்குலிசப்படையோன்புகர்வன்சொலையோங்கிவரங்கள்பல
வெண்ணுதருண்ஞானதபத்தடியேற்கெளிவந்தருளாமையியந்திடுமே ()

பராவிப்பணியாதடியுஞ்சிரமும்பார்ப்பாமெனவெண்ணுமறன்கடையால்
வராகத்தொடுபுள்ளுருமாலயனுமருவுங்கபுமேன்மைய வானவனே
விராவித்தவமாற்றியசம்புமுனிவெய்யோன்மலைவேலையடக்குமுனி
யிராமற்கருண்ஞானதலத்தடியேற்கெளிவந்தருளாமையியந்திடுமே. ()

விலங்கற்கரையன்பெறுமெல்லியலாள்விம்மாந்துகரைந்துகரைந்துருகித்
துலங்கித்தளர்வெய்தமருங்குல்விழிசோரப்புனலங்கைசிரங்குவியா
விலங்கப்புளகங்களிவ்வாறுதுதியினைவித்துறுசோகமிணங்கலுமே
யலங்கற்சடையண்ணல்விரைந்தெதிரேயடல்வெள்விடைமேல்வெளிநின்
[றனனே. (௧௦௫)

இதுமுதல் (௪) செய்யுள் சிவபெருமான் பிரசன்னமாகிவேண்டியவரங் களைக்கொள்கென அம்பிகை அவ்வரங்கள்பெறுதல்.

வேறு

பூதகணம்புடைசூழப்புத்தேளிர்பொழிகின்ற
சீதமலர்வெளிதூர்ப்பத்திசைமுழுதுமிசைதேங்க
வேதமுனிவரர்பழிச்சமெய்யன்பர்குதுகலிப்ப
நாதரினிதருள்காட்டிநயனமலர்நெதிர்கண்டாள் (௧0௬)

இருங்கண்ணிற்சிறந்தவுறுப்பில்லையெனன்முகமனே
கருங்கண்கடம்பிரான்காட்சியனேற்களித்தலொடும்
பெருங்களிநெஞ்சகங்கொள்ளப்பேரமைத்தோண்முலைவிம்ம
வொருங்குருவமனைத்துமெழிலோங்கினவாலுமையவட்கே (௧0௭)

அல்வரைந்தமலர்க்கூந்தலகிலாண்டநாயகியின்
வல்விரைந்துபதமலரின்வணங்கியொருபானிற்பச
கல்வரைந்தவெறுழ்த்திண்டோட்காபாலிகண்ணளிததுச
சொல்வரைந்தகருணையினேற்றெருக்கவரங்கொள்கென்றான். (௧0௮)

எவ்வுயிர்க்குமெஞ்ஞான்றுமிருங்கிழவனுயிர்க்கு
மவ்வுயிரின்கிழவனையேயருங்கிழவனெனச்சார்ந்த
கொவ்வைநறுங்கனிவாயாள்கொண்கர்திருவருணோக்கி
மூவ்வுலகுமெளிதுய்யமுன்னிவரங்கொள்ளுமால். (௧0௯)

அகிலாண்டநாயகியாராதனைப்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௭௰௧.

---

## வரங்கொள்படலம்.

இதுமுதல் (௧௪) செய்யுள்தானஞ்செய்யும்பொருள்களும்அத்தானத் தால்வரும்புண்ணியங்களுங்கூறல்.

இமையார்கடொழுதேத்துமெம்பெருமானெனையாளவிலிங்கமாகி
யமிழ்தேசனெனச்சம்புமூலத்திலமர்ந்தனையேயனையதான
வமிழ்தேசனெனுநாமங்கேட்டவர்கள்சாலோகமடைகவன்பா
லமிழ்தேசனெனுங்குறியைக்கண்டவர்கள்சாமீபமடைகமாதோ. (௧)

திப்பியமாகியவமுதலிங்கத்தைத்தியானித்துத்தெரிசித்தோர்க
ளொப்பரியநின்னுருவமுறுகவந்தசசிவலிங்கத்துவந்துபூசை
யெப்பொழுதினெப்பொருள்கொண்டியற்றினோரும்வினையினிரியல்போச
வைப்பனையநினதடிக்கீழ்மாறாதசிவானுபவமருவிவாழ்க. (௨)

பெருமானேயமுதலிங்கத்தொருநாளைப்பூசனைக்குப்பெட்பினேடும்
பொருளாதிகொடுத்தவர்களிம்மையிலேவேட்டபெரும்போகமூழ்கி
யொருவாதசிவலோகத்தாண்டிலக்கமுறைந்துள்ளமுன்னிற்றெல்லா
மருகாமையெதிர்விற்பப்பெரும்போகத்திடையழுந்தியருளிற்சேர்க. (௩)

இன்னல்கெடநின்முடியின்மனுவோதியெளியனேனெடுத்திங்காட்டு
மன்னியசீமத்தீர்த்ததெரிசனத்தாற்பரிசத்தால்வருநீர்வேட்கை
வென்னல்முமத்தீர்த்தமுரைத்தவரும்பெற்றின்பமுத்திசேர்க. (௪)

மாதவங்களத்தகுசீமத்தீர்த்தத்தருகிருந்துவயக்கினோர்க்கு
மேதகையபயனனர்தமாயுறுககோதானம்விரும்பியொன்று
கோதகலுமந்தணர்க்குக்கொடுத்தவர்க்குப்பரிமேதங்குயின்றபேறு
கெரித்ததேவதேவே. (ரு)

திலதானம்புரிந்தவர்க்குச்செறிந்தபலபாவமெலாந்தேய்ந்துமாய்ச
வுலவாதசெழுங்கனகமுதவுநர்கள்பரிதிபதத்துறைந்துவாழ்க
யிலகாதசுவைசாறுநெய்வீசிநருக்கக்கினிட்டேரமத்தின்மேவு
பலனார்கபாணிவளர்பசழிவிழிகிடந்தொளிரும்பனுமத்தாமேளாய். (சு)

வத்திரதானங்கொடுப்போராயுளொடுபெருஞ்செல்வமருவியீற்றிற்
பொத்தியசீர்வருணபதமுறுகதானியதானம்புகன்றுசெய்வோர்
பத்தியெவரும்புரியத்தெய்வதமாய்விளங்குகபைங்கழையின்சட்டி
யுத்தமருக்குதவினோருறுதசநன்னுகர்ச்சியெனவுரைப்பவெல்லாம். (எ)

தவளவிரசிதங்கொடுப்போர்சந்திரன்வாழ்பதமுறுகதரணியீவோர்
திவளுமுடியிந்திரனூப்விண்முழுதும்புரக்கதிசமுப்பீவோர்க [ட்
டுவளவுருபிடும்பயெலாந்துரித்தின்பமுறுசதுவர்க்கசனிவாய்வேய்த்தோ
குவளைவிழிக்கண்ணியரைக்கொடுப்பவர்கள்விண்டுபதமுறுகவாழ்க. (அ)

அன்னதானம்புரிவோரன்னமொரோரொவான்றினுக்குச்சுற் மொய்வொ
றென்னையாளுடைபிரான்சிவலோகத்தினிதமர்கயிலிங்கமீவோர் [ன்
துன்னுபோகம்பலவுநீண்டெய்தித்தோலாதவின்பமெல்லா
நீசுரபதத்தினேற்றவர்களொடுமினிதுமருவிவாழ்க. (கூ)

சிவநிசியிற்சிவலிங்கமுபகரணத்தொடுமளிப்போர்சிறப்பவேற்றிட்
டவமறுபூசனைபுரிவோரப்பெரழுதேசிவன்முத்தராகநெஞ்சக்
கவலையறுகண்மணிகளீவோருமேற்பவருங்கயிலாயத்து [ழ்க.
முவமையறுசிவபுரத்துமொரோரொவான்றுக்கொருபதிற்றாண்டுறைந்துவா

மும்மலந்தூட்படப்படுக்குமிததலத்தின்முற்றவங்கண்முயன்றபேற்றாற்
செம்மைபெறுஞ்சிவஞானமளிப்பவருமேற்பவருஞ்செயிரிற்நீர்ந்து
விம்மியபேரானந்தவெள்ளத்துள்வாதனையும்விலகிமூழ்க
வம்மவிந்தஞானதலமமுதேசமெனும்பெயருமணிவதாக. (கக)

அமுதேசமெனப்படுமித்தலத்தெல்லையைகுரோசத்தினுள்ளா
லமையாதகாதலினாலந்தணரைப்பதிட்டைசெய்வோரலக்கணீங்கி
யிமையார்களழுக்கறுப்பப்பிரமத்தின்வாழ்கவிவர்க்கவணியீந்தோ
ரெமையாளுநாயகசாரூபத்திற்சிவன்முத்தியெய்திவாழ்க. (கஉ)

திருமாலைப்பதிட்டைசெய்வோர்திப்பியமாம்வைகுந்தஞ்சேர்ந்துவாழ்க
பொருவேதுமில்லாதசிவலிங்கப்பதிட்டைசெய்வோர்போக்கநீங்கி
யொருவாதவிம்மைமறுமையிற்போகநுகர்ந்துயர்ந்தவீடுசேர்க
பெருவாழ்வுதருமிந்த்தலத்வசிப்போர்நின்னடியைப்பிரியாராக. (கங)

11

வேறுவேறிவ்வாறுவரம்பலவும்விழைந்திரந்துவியந்துபோற்றி
நாறுபூங்குழலுமையாணாதர்திருமுகநோக்கிநம்பயான்முன்
கூறியதோர்விளைவினுக்குத்தரமீண்டுகொடுத்துமெனக்குறித்தியன்றே
தேறுமாறினியதுவுந்தெரித்தருளாயெனக்கேட்டதேவதேவன். (கச)

## வேறு.

இரந்தபல்வரங்களுமீந்திடாமதுச்சுரந்தபன்மலர்க்குழற்றோகைமற்றினி
யரந்தைவையசந்தனக்கறவிளையதற்,குரந்திகழிறையுமிங்குரைத்துமென்று
[பின். (கரு)

இதுமுதல் (ச) கவி சம்புமுனிசிவபெருமானிடத்தில்வரம்பெற்றமை

நன்னிழற்பரப்புறுநாவற்றருவாய், முன்னாறுஞ்சம்புமாமுனியைநோக்கி
னா,னன்னதுதெரிந்தவனடித்தாழ்ந்தெழுந், துன்னருங்களிப்பினாலுரைத்
[தன்மேயினான். (கசு)

அடியனேனுய்ந்தனனடியனேனுறுங், குடிமுதலெழுமையுங்கோதற்றுய்ந்
தன, முடிபொதிர்த்தெழுந்தவிம்முறிசெய்நாவலங், கடிநிழற்கருணையிற்
[கலந்தநீர்மையால். (கஎ)

எழிலமுதீச்சரமென்னுமித்தலந், தொழுதகுசம்புவீச்சரமென்றோதவு
நிழலிதினென்றுநீனிலையின்வைகவு, மழகியவரமெனவருளல்வேண்டுமால்.

என்றுபல்வரங்களுமிரப்பவெம்பிரா, னன்றெனவவையெலாநல்கிப்பாங்க
ரிற்,றுன்றியமறைபலதுதிக்கும்வேதளமே, லொன்றியவருள்விழியுறுத்தி
[னானரோ. (சக)

கமலமெல்லணையினான்கசிந்துதாழ்ந்தெழுந், தமலனேயுய்ந்தனேனகில
கோடியுந், திமிரவல்வினைகளிற்றீர்ந்தின்றுய்ந்தவென், றிமிழ்சொளும
[ன்பினாலினிதுகூறுவான் (உ0)

பிரமதேவரைச்சிவபெருமான்திருவிழாநடத்தும்படிவரமளித்தல்.

காசினமிலகியகண்டத்தெம்பிரான், மாசிமாமதிவருமதியினாளெனப்
பேசியமிருகசீரிடத்திற்பேணிய, தேசவிர்விடைக்கொடிசிறப்பவேற்றுபு. ()

பொங்கெழிற்றிருவிழாப்பொலியச்செய்துபின், பங்குனிமதியிடைப்பகலொ
ன்னாளெனத், தங்கியவுரோகணிதன்னினீள்கொடி, யிங்குயிரனைத்துமின்
[பெய்தத்தாழ்த்துபு. (உஉ)

அற்றைநாளென்பெயரணிந்ததீர்த்தத்தி, னுற்றவரனைவருமுவந்துதோயவு
மற்றவர்வேட்டபல்வரங்களெய்தவும், பற்றியதெனதுளம்பணிக்கவென்ற
[னன். (உங)

பங்கயனின்னணம்பகரக்கேட்டரு, ளங்கணனன்னணமாகவென்றுபின்
றங்கிநின்றேத்துநர்தங்கண்மேலெலாம், பொங்கருள்விழியெதிர்புகுத்தினா
[னரோ. (உச)

அவரவர்மகிழ்ச்சியினடிகள்போற்றலின், றிவறியவரமெலாமியம்பிப்பெற்ற
னர், சிவபிரானின்னணவரங்கள்சேர்த்தன, வுவமையிலருளுமைக்குதவ
[ப்புக்கனன். (உரு)

வரங்கொள்படலம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம் எஉக.

# ஞானவுபதேசப்படலம்.

இதுமுதல் (௩௰) செய்யுள் சிவபெருமான் நந்திதேவருக்கும் சம்புமாமுனிக்கும் அம்பிகைக்கும் ஞானவுபதேசஞ்செய்தல்.

சந்தவான்மதிமிலைச்சியதாழ்சடையழகர்
நந்திவாண்முகநோக்கினர்நந்திதாழ்ந்தெழுந்து
முந்தினார்திருவுளத்தெழுமுன்னமிக்கறிந்திட்
டந்தின்மேயினாரியாரையும்புடையகற்றினனால். (௧)

சம்புமாதவனந்தியென்றிருவருந்தவங்க
ளும்பரார்க்கரியனமிகவுஞற்றியபேற்றா
லம்பர்மாதுமையாளொடுங்கேட்கியவருள்பெற்
றெம்பிரானிருந்தருள்புரிமண்டபமிழைத்தார். (௨)

சிமையமால்வரையெனச்சிறந்தொளிருமண்டபத்தி
னமையுமாதனத்தங்கணன்வீற்றிருந்தருளி
யுமையைநோக்கிநீயோகுழப்பதின்வினாயினையாற்
சமையமாறுமுய்ந்திடவதுகேளெனச்சாற்றும். (௩)

உலகமியாவையுமோங்கியாகமதருள்வழியி
னிலவுநீர்மையதாதலினிழன்மணிப்பூணா
யிலகவாட்டுவாளாடிமுன்காட்டுமாறென்னப்
பலவுநாம்பயின்றுலகினைப்பயிற்றுதல்வேண்டும். (௪)

ஆகையான்மலபந்தமாகியவுயிர்மாயா
போகமார்தரநிற்றழீஇப்போகியாயிருந்தும்
யோகமாற்றிமெய்ஞ்ஞானமுற்றுயர்சிவயோகத்
தேகமாகிவீடெய்திடயோகியாயிருந்தும். (௫)

விரைத்தமென்மலர்வாளியான்விளிந்தகாரணமு
நிரைத்தவையகத்தியாவருநேரிழையவர்பால்
வரைத்தவின்னலநுகர்ந்தகாரணமுமானனையா
யுரைத்தவொண்பொருளிரண்டிற்குஞ்சான்றெனவுணர்தி. (௬)

என்றுகூறலுமகிழ்ந்துமையிறைஞ்சியீதுரைக்கு
மொன்றுமாமலத்தழுந்தியவுயிரெலாமாயைத்
துன்றுபோகமுற்றுனதருண்ஞானத்தாற்றுகடீர்
நன்றுவீட்டினைநண்ணுமென்றுரைத்திநாயகனே. (௭)

அம்பிகைவினா.

இருளுமாமலம்யாதுயிர்யாதியர்மாயை
கருமம்யாதுமெய்ஞ்ஞானமியாதியாதுகாண்முத்தி
பொருவிலாவிவையனைத்தையும்புகரறவடியேன்
றெருளுமாறருளுதியெனச்செய்யவாய்மலர்ந்தாள். (௮)

சிவபெருமான்விடைபுகழ்தல்.

சிலையுயிர்த்தவளின்னணம்வினாவலுந்தெரிக்குங்
கலைமலர்க்கரத்தணிந்தருள்கண்ணுதற்பெருமா
னிலைமுகத்தபூணிளமுலைமாதராயெல்லா
மலைவறத்தெளிப்பாமதியெனவிறைவழங்கும். (௯)

காளவன்மலமூலந்தங்காலவெல்லைகளின்
மீளுமெண்ணருஞ்சத்திகளுடையதாய்விரவிக்
கோளுறும்பசுவறிவினைக்கூட்டொடுமறைக்கும்
வாளுறும்பலவிழியினைமறைத்திடுமிருள்போல். (௧௦)

எண்ணிறந்தனசிற்றறிவினும்பலவியல்பி
னண்ணிநிற்பனசார்ந்ததன்வண்ணமாய்நவில்வ
வண்ணனுசிற்றறிவினுஞ்சுதந்தரத்தனவல்ல
வுண்ணயந்தநாமுணர்த்திடினுணர்வனவுயிரே. (௧௧)

மாயைசுத்தமேயசுத்தமேயெனவிருவகையா
மாயமாயைகளிரண்டுமெய்யறிவுருவல்லாற்
றோயுறுதநம்மருளினூறமொருழி லூற்றுருயிர்க்கு
மேயசேர்த்தனுவாதிகளுன்குமாய்விரியும். (௧௨)

கருமமென்பதுமாயையேகருவிகளாகத்
தெருள்வழங்குநம்மருளெனப்படுந்திரோதானப்
பொருவில்சத்தியின்சகாயத்தாற்புல்லறிவுயிர்கண்
முருகுவிம்மியகுழலினைய்முனைந்துசெய்தொழிலாம். (௧௩)

புந்திவாக்குருவத்தினும் புரியுமன்னதுதான்
வந்துநல்லதுந்தீயதுமெனவிருவகையா
மந்தநல்லதுந்தீயதுஞ்சஞ்சிதமாநிப்
பிந்தியாருயிர்க்குணவுமாய்ப்பிறப்புக்கும்வித்தாம். (௧௪)

உருவத்தாற்கருமந்தவவீட்டியுமுருவங்
கருமத்தாற்றவவீட்டியுங்காழ்த்தவாணவமே
மருவத்தாழ்ந்தகேவலத்திடைமன்னியவ்வுயிரிற்
றிருவத்தாஞ்சகலத்தியானெனதெனச்செருக்கும். (௧௫)

இதமெனப்படுநல்வினையின்பமேபயக்கு
மிதமெனப்படாத்தீவினையின்னலேபயக்கு
மதர்நெடுங்கணாய்மற்றவையறிந்துசெய்வினையுங்
கதுவுநெஞ்சறியாதுசெய்வினையுமாய்க்கலவும். (௧௬)

புடைபெயர்ந்திடும்வினைபுடைபெயர்தராவினையென்
றடைவினோதியவவ்வினையிவ்விதத்திரண்டாந்
தொடைமலர்க்குழன்மாயையுங்கருமமுந்தொகுத்துத்
தடைசெய்யாணவத்தொடுமலமூன்றெனத்தகுமால். (௧௭)

மாயைகாரியமானமாமாயையுநமது
தூயசீரருளெனுந்திரோதாயியுந்தொகுத்திட்
டாயுநான்மலமைந்தெனவறைவதுமுண்டாற்
றேயுநூலிடைவருத்தியதிதலைமென்முலையாய். (௧௮)

இனையவைம்மலபந்தமுமிரண்டெனும்பழைய
வினையும்வன்மலவேருமாண்மாவினுக்கல்லாற்
றினையுநந்தமக்கில்லைநந்திருவருளொழிய
வனையமாயையுங்கருமமுமாவியுமசையா. (௧௯)

இந்தமாயையுங்கருமமும்பந்தமேயிவற்றைத்
தந்ததாருயிர்க்கென்னெனிற்சாற்றுதுங்கேண்மோ
முந்துமாணவமுரண்கெடமூட்டினமாசு
சிந்தவேறுமாசறுவையிற்செறித்திடுமாபோல் (௨௦)

படைத்தலும்புவனங்களைப்பாதுகாத்தலும்பின்
றுடைத்தலுந்தகநிறுத்தலுமருடெறுத்தலுமென்
றடுத்தவைந்தொழிலயன்முதலைவருமாய்நா
மெடுத்துநின்றனமாயினுமெமக்கிலைவிகாரம். (௨௧)

விரவுமாயையெம்முடைமையற்றாயினும்விடந்தா
னரவையென்செய்யுமங்கியைசூடென்செய்யும்
பரவுமிந்திரஞாலம்பண்ணுநரையென்செய்யுங்
குரவமாலையாயெமக்கதுகொடாதுகாண்மயக்கம். (௨௨)

அல்லதூஉமிருளாணவமயக்குவதத்தனு
னல்லமாயையுங்கருமமுநாடியவுயிரை
வல்லவாறெலாமயக்குவமயக்குமாணவந்தேய்ந்
தில்லையேலவையுயிரையுமயக்குவதில்லையே. (௨௩)

தேங்குபேரொளியாகியசிவமெனுநாமு
நீங்குறுதநஞ்சத்தியாய்நிலைபெறுமருளுந்
தூங்குமாவியுந்தொடர்திரோதாயியும்பிந்த
வொங்குமாணவத்தெறுழ்வலியுரைப்பரிதணங்கே. (௨௪)

கரியவாணவந்தேயுமாகலந்தநஞ்சத்தி
யுரியதாஞ்சிவபுண்ணியமுடன்விராயூட்டும்
பெரியவாட்கணுய்பின்மலபாகமாம்பின்னர்
விரியுஞ்சத்திநிபாதம்பின்வினையொப்புமேவும். (௨௫)

ஆயவேலையின்மலமெனவறைதிரோதாயி
மாயிரும்பொருள்யாவையுமாறவேமாறித்
தூயவின்னருளாகியேநின்றிடுந்தோகா
யேயுமிவ்வருளாலலதிருதுயிர்க்கிருளே. (௨௬)

இச்சைஞானமுங்கிரியையுமானவிவ்வருளே
துச்சிலாகியகலாதியிச்சையுந்தொலைத்திட்டு
வெச்செஞணவம்விழுங்கிடப்பட்டவாருயிரி
னிச்சையாதியும்விளக்கியுள்ளிருத்திமேலாகும். (௨௭)

பிறிவுறுதவெம்மருளினாலெம்மையும்பெயரா
மறிவினீங்கியதன்னையுமலைவறத்தெரிந்த
வறிவுபானுவின்விழியெனவெம்முளையடங்கிச்
செறியுமானந்தமொன்றுமேதிளைக்குந்தேமொழியாய். (௨௮)

மருளினான்முதலென்றலுமன்னுயிரருள்கண
டருளினான்முதலென்றலுமருண்முதலென்றுந்
தெருளிலாததிஎழுந்தலுந்தீர்ந்தெம்மோடறிவா
யிருள்செய்கேவலம்போற்கலந்திருப்பதேமுத்தி. (௨௯)

பேதமாகியபாவனைபேணுவதெல்லா
மேதமாகியபந்தமேயெனதியானெனுமால்
போதவாருயிரபேதபாவனைபுரிவஃதே
மாதராயுயர்முத்தியென்றுரைத்திடுமறையும். (௩௦)

பரிதிமுன்னிருளெனமலம்பறையிடைமாயுங்
கருவிமுன்பகல்விளக்கொடுகெடுக்குமூழொன்றே
மருவுமன்னதுங்கருணையால்வாங்குவம்யாமே
பொருவில்சஞ்சிதமுன்னரேயழிந்ததுபூவாய். (௩௧)

எனறவூழுடலிருந்
தோன்றுமேற்றிருவெழுத்தினைச்சூழ்ந்திடினழியுஞ்
சான்றவீட்டினைச்சார்ந்தவர்தமக்குமாலையமுன்
மூன்றுமார்வமோடிறைஞ்சதன்முறைமையாமணங்கே. (௩௨)

தொடுத்தநின்பெருங்கடாவினுக்கவிர்பொலந்தொடியாய்
விடுத்தனம்விடையறிகெனவிமலனாரருளா
மடுத்தவன்பொடுகேட்டமால்வரைமகளோடுந்
தடுத்தவைம்பொறிநந்தியுஞ்சம்புமாமுனியும். (௩௩)

அருளெலாமுளத்தழுத்தினர்தெளிந்தனர்நிட்டை
மருளெலாந்தபமருவினர்மன்னுமுப்பாழு
மொருவிமேற்பெரும்பாழெனுமுலப்பிலானந்தப்
பொருளொடேகமாய்ப்பொருந்திமுத்தராயிருந்தார். (௩௪)

சீவன்முத்தியேதிகழ்பரமுத்தியேயென்ன
மேவுமுத்தியோரிரண்டினுமேவினராகி
முவரும்பணிமுயன்றிருந்தனரயன்முயன்ற
தேவருந்தொழுந்திருவிழாத்திறமினித்தெரிப்பாம். (௩௫)

ஞானவுபதேசப்படலமுற்றிற்று.

ஆ. திருவிருத்தம் - ௭௯௧.

# திருவிழாப்படலம்.

இதுமுதல் (௩௪) செய்யுள் திருவிழாச்சிறப்புக்கூறல் மாசிமாதம் மிருகசீரிடத்திற்கொடியேற்றி பங்குனிமாதம்ரோகணியிற்கொடியைத்தாழ்த்தல்

பொறிவண்டுழக்கமுறுக்கவிழ்ந்துபுதுத்தேன்றுளிக்குஞ்செழுங்கமல
நறுமென்பொகுட்டுமலர்த்தவிசினுன்குதலைப்பண்ணவனுவற்
செறிமென்னிழலில்வீற்றிருக்குந்தேவர்தேவனருள்வரத்தா
னெறிநின்றினியதிருவிழாவிலதற்புரிவானிதுசெய்தான் (௧)

புரிசையாதிபலவுறுப்பும்பொருப்பென்றெவருமதிசயிப்ப
வரிசையாகவாலயநூன்மரபின்வகுத்துக்கிரணங்கள்
விரிசெய்மாடமாளிகைகள்விறந்தபலவீதியும்போக்கித்
துரிசிலாதமணிநகரந்துறக்கநாணவிருசித்தான். (௨)

பிரமதேவரால்அகிலாண்டநாயகியையும்மற்றுள பரிவார தேவதைகளையும்
ஆக்கப்பட்டது

நெகிழன்புருக்கவகிலாண்டநிழலையுருவாயிருந்தாங்கே
திகழவுளத்திற்றியானித்துச்சிற்பம்விளங்கத்திருவுருவொன்
றகிலவுயிருந்நிசேரவமைத்துநிறுவிப்பூசித்துப்
புகழைங்கரன்வேண்முதலானபுலவருருவுமினிதமைத்தான். (௩)

செம்பொன்மணித்தேர்கடாங்கவிழ்க்குஞ்சினவெங்களிறும்வாம்புரவி
யும்பொற்சிவிகைசவிகைகொடியாலவட்டமயிர்க்கவரி
யிப்பர்வழையும்பலபொருளுநீண்டவாச்சியிவிறாமுடங்க
லும்பர்முதலோர்வரவிடுத்தானுலகமாக்கும்பணிதொடுத்தான். (௪)

முடங்கலேற்றுமலர்த்தவிசின்முறையினிருத்திமுடிதாழ்த்தி
மடங்கலறியாமகிழ்சிறப்பமதர்க்கணமடமாதர்களோடு
மிடங்கொள்வானத்திமையாருமெண்மாதிரருமுரகர்களும்
விடங்கொப்புளிக்குமணிவேற்கைவேந்தர்பலருஞ்சென்றிறுத்தார். (௫)

இதுமுதல் (௨) கவி முளைத்தெளித்தல் கொடிச்சீலையெழுதல்
கொடியேற்றல் இம்மூன்றுங்கூறல்

வம்புவிரியுஞ்செழுங்கமலமலர்மெல்லணையான்மகிழ்சிறப்பக்
கும்பமதியிற்கார்த்திகைநாள்குலவுந்தினத்திலியமியம்ப
வும்பர்முதலோர்புடைசூழவொளிர்மண்விதியாற்றினிற்கவர்ந்து
பம்புமணிப்பாலிகைபலவும்பரப்பிச்சொரிந்துமுளைதெளித்தான். (௬)

வழிநாளடுத்தவுரோகணியின்மதவெள்விடையையலேகித்த
செழிவான்படத்திற்பூசித்துத்திகழுமிருகசீரிடத்திற்
கழிவானவர்களொடுஞ்சோமாக்கந்தரெதிரேயெழுந்தருளப்
பழிதீர்ந்துலகமுழுதுய்யும்படிவார்கொடியிற்பசுவுயர்த்தான், (௭)

அந்நாண்மாலைமுதலாகவந்தநாளுக்காறென்று
நன்னாட்காலையீறாகவிற்றுமீரைங்காலத்தும்
பொன்னூர்மணிக்கிம்புரிக்கோட்டுப்புத்தேண்முறநகவேளிவர்க்குச்
கொன்னாதரவிற்றிருவிழாக்கோலம்பிறங்கச்சுற்றினான். (௮)

ஆறாந்திருநாண்மாலைமுதலாகவொன்பானாட்காலை
யீறாங்காலமோராறுமிருண்மாமலத்தினிசல்கடந்து
வேறாய்ச்சிவத்திலொன்றாகிவிளங்குநீறுங்கண்மணியும்
பேணுத்தரிக்குமடியார்க்குப்பிறங்கத்திருச்சாற்றினிதெடுத்தான். (௯)

ஒன்பானறிருநாண்மாலைமுதலாகவொருடன்னிரண்டாநா
டன்பாற்காலையீருகசசாற்றுமாறுகாலத்து
மன்பாதரவிற்சலியாணவழகர் தமக்குத்திருவிழா
நன்பார்முழுதுங்களிதூங்கிநவையிற்றீரவினிதமைத்தான் (கo)

ஒருபன்னிரண்டாந்திருநாளினுற்றமாலைமுதலாக
பொருவில்குண்டமோரைந்நிற்பொங்குந்தழலாகுதியோம்பி
மருவுமிருநாற்றிசைமுழுதுமனுவாற்றகைத்துப்பலியோச்சிச்
செருவின்மலியத்திரதேவர்தமக்குவிழாமுன்செய்திட்டு. (கக)

பதினேழெனவந்திடுந்திருநாட்பயின்றகாலையீருக
விதியானின்றவீரைந்துகாலத்திடத்தும்வெவ்வேறு
கதிசேரூர்திமேல்கொண்டுசெவின்சந்திரசேசரர்போத
நிதியார்பலருந்தானங்கணிகழ்த்திவணங்கவிழாவெடுத்தான். (சஉ)

## சிவபெருமான் முன் அஷ்டகொடிஏற்றல்.

அந்தப்பதினேழெனுந்திருநாளந்திக்காலத்திமிலேற்றுச்
சந்தப்படமோரெட்டினையுந்தயங்கப்பூசையினிதமைத்துப்
பந்தப்பழையவினைமுருங்கப்பதினெட்டெனுநாட்காலைதனில்
வந்தப்பணிந்தாரெதிர்வீற்பவயங்கெண்கொடியும்பசுவுயர்த்தான். (கங)

ஒன்பானிரட்டித்திருநாளென்றுரைத்தவைகன்முதலாக
வொன்பான்மணிக்குண்டமுஞ்செந்தீயொளிரவந்நாண்மாலையினில்
வன்பார்மகள்செய்தவம்வாய்ப்பமணிவித்திலப்பந்தரினீழ
லென்பாபரணப்பெருமானெதிரில்வீதியுலாப்போந்தார். (கச)

புணருமிடனும்வரைக்கிள்ளைபூங்கைக்கருப்புச்சிலைமலர்க்கோ
லணவுதொழிற்கேற்புறக்கிரியினணங்குசெலுத்தவட்கினிய
கணவர்பூதநாதரெனக்கரையும்பெயர்க்கேற்புறப்பூதத்
தணிவிலூர்திபத்தொன்பானுளிற்றயங்கக்கடாவினர். (கரு)

திருமாறனதுகூறேயாஞ்செயலைதெரித்தாங்கவனனையை
யொருபாலுமையாள்கொளக்கொடைமைக்கொருவரிவரேயெனவொரு
மருளாதுணரக்கொடைவழங்குமலர்க்கற்பகத்தைபண்ணலா
ரிருபான்றினத்திற்றிருவீதியெழில்கொப்புளிப்பத்தூண்டினர். (கசு)

மன்றவடியார்புரிகுற்றமதியாதவர்செய்குணங்கொள்ளு
நன்றிதெரித்தாங்கறனீக்கிநற்பாலுனும்புள்ளுமையூரக்
குன்றுகினைந்தாங்கியல்கொள்கைகொள்ளவெவருங்கயிலாய
மொன்றுதலைப்பெயிருபானுளுவப்புற்றிறைவருந்தினர். (கஎ)

தருமவிடையுமால்விடையுஞ்சகலபொருளுமொருபாதி
மருவவுருவிற்பாதியுறுமாதுதாமும்பகுத்தாங்குப்
பொருவெள்விடைகள்வெவ்வேறுபூங்கணுமையுமொருதாமுந்
தெருவினிருபதிரண்டாநாட்செம்மற்சிவனூர்நடாவினர் (கஅ)

மூன்றுதலைப்பெய்யிருபத்தெனமொழியுந்திருநாளவிர்செம்பொ
ஞன்றமணித்தேரைங்கரனுமயில்வேலிறையுஞ்சண்டனுங்கான்
கான்றவெறிப்பூங்குழற்கொடியுங்கதுமென்றுகைப்பப்புரமடுநாட்
சான்றநிலத்தோர்பொருமணித்தேர்சங்கத்தலைவருருட்டினர். (கக)

விலங்கற்கரசன்றமகளிர்க்கரசாய்விளங்குந்தனக்கியைய
விலங்குக்கரசையகிலாண்டவிமலையுகைப்பவழுதேசர்
மலங்கழுமித்தார்வடிவிடத்தும்வதிதறெரித்தாங்கருண்மயமா
யிலங்குந்திதனையறுநான்கென்னுநாளினியக்கினர். (உ0)

ஐயைந்தெனவந்திடுந்திருநாளாந்தோமரியின்மாதுமையேக
வைந்தரித்தவயிற்றிவுளிமல்குங்கலியிற்றீயோர்க
ணையுந்திறஞ்செய்வரம்பெறுவானடிச்சுமந்தெனவனப்புச்
செய்யும்புரவிமேற்கொண்டுசெக்கர்சசடையாரூக்கினர். (உக)

பயில்வானவர்கள்பலர்காவப்பசும்பொற்குழைக்காதுமைமாது
செயர்தீர்சிவிகைமேற்கொள்ளத்திகழ்ந்தவாதிப்பெருஞ்செல்வப்
பெயராதரிக்குஞ்செயற்கேற்பப்பேனுமிருபத்தாருநா
ளயிராவணத்தைவெண்ணைவலடிவீற்றிருந்தாரினிதுகைத்தார். (உஉ)

மன்றினடிக்கும்பெருமானார்வயங்கவிருபத்தேழாநா
ளொன்றும்விடியற்சிறுகாலையுவப்பக்காட்சிகொடுத்ததற்பி
னன்றுவருமுரோகணிநண்பகவினையனார்தீர்த்தத்திற்
கொன்றைமுடியாரிருந்தீர்த்தங்கொடுத்தாருலகங்குறைதீர. (உங)

அஷ்டகொடியைத்தாழ்த்தல்.

அந்நாண்மாலையெண்கொடியுமாண்டபசுவேறினிதிறங்கப்
பின்னுமிருபத்தெட்டாநாட்பேனுமாலைமுதலாக
மூந்நாண்மாலையீருகமூன்றுபொழுதுஞ்சிவிகையின்மே
லென்னுள்பள்ளியறைப்பெருமானெழிலார்கோயிலுலாப்போந்தான். (உச

மோனமுறுநற்றிருவிழாமுப்பத்தொருநாண்முதலாக
வீனமகலமூன்றுநாளயங்கமுப்பத்தொருநான்கென்
றுனதினமுன்மூன்றுநாளருள்சேர்ந்திலகுசண்டேச
னூனமகன்றமணிமுத்திஞர்திவ்ழலினுலாப்போந்தான். (உரு)

மொழிந்தசண்டன்றிருவிழாமுடிவீாமுப்பத்தாருநா
ளிழிந்தகுணந்தார்மனமேபோன்றிருண்டகங்குலிணர்மலர்கள்
பொழிந்துபுலவர்போற்றிசைப்பப்போற்றுமடியார்மும்மலமு
மழிந்துவிடமற்றொருகொடியினேறிறக்கியயன்றொழுதான். (உசு)

சிவபெருமான்பஞ்சப்பிரகாரம்.திருவுலாப்போதல்

மறைகூத்திரமேபுராணமேவயங்குகீதமேஙிருத்த
நிறைவாத்தியமேயெனவைந்துநேரேயியம்பவளமெல்லா
முறையாநின்றவுட்சூழன்முதலாவரணமோரைந்து
மிறையார்முப்பத்தேழாநாளிமையார்வியப்பவுலாப்போந்தார். (உஎ)

விடையாற்றல்.

துணிநீர்ப்பாங்கர்ச்சூழ்போக்கித்தோடார்மலர்கண்மிகப்பெய்து
மணியானிரைத்தமண்டபத்தின்வதிந்துமுப்பத்தொட்டாநா
ளணிநீராடிக்கலவைமுதலணிந்துசுவையாருணவயின்று
பணியாபரணப்பெருமானார்பற்றும்விடாயைப்பாற்றினார். (௨௮)

அற்றைத்திருநாள்வளர்மாலையவிர்த்திலப்பந்தரினீழற்
கொற்றக்கவிகைசாந்தாற்றிகோலக்கவரிகொடிபிறவும்
பற்றிக்கடவுளார்போற்றப்பவனியினிதுபோந்திறைவர்
முற்றக்கவினுமணிக்கோயின்முன்னியுமையோடமர்ந்திருந்தார். (௨௯)

இவ்வாறுதிப்பெருஞ்செல்வர்க்கியையவாதிப்பிரமனார்
செவ்வாய்மையினாலினிதெடுத்ததிருவார்விழாவையானிடரு
மவ்வானவருமுவந்தாதிப்பிரமோச்சவமென்றன்றுமுதற்
றவ்வாவமிழ்தங்கண்டாரின்வருடந்தோறுந்தொழாநின்றார். (௩௦)

ஆதிப்பிரமன்றிருவானைக்காவினமர்ந்தார்க்கினிதெடுத்த
காதற்சிறப்புத்திருவிழாக்கவினைப்புரிந்தோர்தெரிசித்தோர்
தீதற்றவனிமுழுதாண்டுதேவர்போகம்பெரிதார்ந்து
சாதற்பிறப்பிற்றலைப்படாத்தனிவீட்டின்பத்தழுந்துவார். (௩௧)

மூவாமுதல்வன்றிருவிழாமுடிவிற்பிரமதீர்த்தத்தி
னோவாவன்பிற்படிந்தோருமுலகமுழுதுமொருதிகிரி
தாவாதுருட்டிவிண்ணாண்டுசெனனமரணப்பெருந்துக்க
நீவாவளர்பேரின்பநலநீங்காநிலையிற்றூங்குவார். (௩௨)

திங்கட்கடவுள்கதிர்க்கடவுள்சேருமுவாத்தோறொருவருடந்
தங்குமனையதீர்த்தத்திற்சார்ந்துபடிந்துவெண்ணாவற்
பொங்குநிழலின்வீற்றிருந்தபுனிதர்பாதம்போற்றிசைத்தார்
துங்கவினையும்பெரும்பிணியுந்தொலைத்தானந்தத்துறைபடிவார். (௩௩)

செந்தாதுகுக்குநறுங்கமலச்செம்மலெடுத்ததிருவிழா
நந்தாச்சிறப்பிற்சிறிதுரைத்தாநல்லதவத்தீர்தசரதன்பால்
வந்தான்வினையினரக்கனுயிர்மாற்றினாற்குவரம்பலவுந்
தந்தார்சரிதங்கேண்மினெனச்சாற்றுந்தவத்தினுயர்சூதன். (௩௪)

படலம்

ஆ திருவிருத்தம் - ௭௯.

## நீலவிண்டுவீச்சரப்படலம்.

இதுமுதல் (௧௧) செய்யுள்இராமாயணத்தின்கதைஆதியந்தங்கூறல்.

சுரர்க்குமாற்றலனாகியதோல்வியில்வலியோன்
பரக்குநீர்க்கடனாப்பணைபயின்றிடுமிலங்கை
யரக்கனாருயிர்பருகியவலைகடற்றுயின்று
புரக்குநாயகன்றசரதராமனாய்ப்போந்தான். (௧)

தந்தையேவலில்வனத்திடைச்சரித்திடுநாளில்
வந்திராவணன்சீதையைவௌவினனேக
முந்துமாரனமுந்துயாமுமொருங்குறமுடிப்பா
னந்திவண்ணர்தம்மடிதொழுதருண்மிகக்கொண்டான். (௨)

உடங்குவின்றதன்னிளவலுந்தானுமொய்யெனச்சென்
றடங்கலாருளம்பனிப்புறுகிட்கிந்தையமரு
மடங்குருவிறல்வானரப்படையொடும்வளைந்த
விடங்கொளாழியிற்சேதுசெய்திலங்கையிற்புக்கா. (௩)

வெம்புகின்றவல்லரக்கர்தம்விழுப்படையோடுங்
கும்பகன்னனையிராவணன்றனையுயிர்குடியா
வும்பரேக்கறுமிலங்கையைவிபூடணற்குதவி
வம்புண்கோதையையுடன்கொண்டுவழிக்கொண்டுமீண்டான். (௪)

தண்டமேந்தியகரத்தினர்தயங்கிதழ்மடித்துண்
டண்டம்விண்டெனவார்த்திடும்வாயினர்வெருவக்
கொண்டவாக்கையராய்க்கும்பகன்னனுங்கொற்ற
மண்டிராவணப்பதகனும்வளைத்திடக்கண்டான். (௫)

மாயையாலிறந்திடுமுடன்மரீஇயமருட்ற
மேயினார்கொலோவெனவெரீஇயையமுற்றவர்தஞ்
சாயையேயிவைதம்மையுந்தாக்குதுமென்று
நாயனொருருச்சேதுவினிறீஇநயந்தெழுந்தான் (௬)

கொன்னிராவணச்சாயையேயொழிதரக்கும்ப
கன்னனேர்வருங்கதழுருச்சாயைகையகலாப்
பின்னரேதொடர்ந்தலைசெயப்பிணிப்புறுமனத்தா
னின்னசாயைமற்றெங்ஙனம்மிறுத்துமென்றிறப்பான். (௭)

நங்கைபாகற்குநிழல்செயுகாவன்மாநகரிக்
கைங்குரோசமென்றறைந்திடுமெல்லையையடுத்தான்
பொங்குசாரிருளிரவிகண்டெனப்புலர்ந்தாங்குத்
தங்குமேனைவன்சாயையுந்தணந்திடக்கண்டான். (௮)

வேறு.

வினையெனவுடன்றொடர்வெய்யசாயைபோய், தனையகன்றொழிதலுந்தசரதப்பெயர். புனைமனுமன்னவன்புதல்வனோகையோ, டனையதொன்னகரியினகத்தைநண்ணினன். (௧)

திரைசெயுங்காவிரித்தீர்த்தமாடிப்பின், றரைசெயுந்தவப்பயனென்னத்தங்கிய. விரைசெய்பஃறீர்த்தமும்விழைந்துதோய்ந்தனன், வரைசெய்பொன்வில்லிமுன்வணங்கினனரோ, (௧௦)

அரிக்குரற்கிண்கிணியலம்புஞ்சீறடி, வரிக்கயற்கண்ணிலாண்டவல்லியைத், தரிக்குமெய்யன்பொடுசார்ந்துதாழ்ந்தனன், பரிக்குமுள்ளோகையம்பரவைதோய்ந்தனன். (௧௧)

கனிவொடுங்கோயிலைச்கையகன்றவண், முனிவரரிருந்தவர்முன்வணங்குபு; துனிவுசெய்சாயையந்தொலைவுகூறினு, னினிதெனக்கேட்டவரிராமற்கோதுவார். (கஉ)

தாங்கியபெரும்புகழ்த்தலனுத்தீர்த்தமு, மோங்கியமூர்த்தியுமுச்தமதனை, வீங்கிவணலகையேயிராக்கதம்பிணி, தீங்கெனப்படுவனயாவுஞ்சேர்தரா. (கங)

ஆதலினீங்குரூதப்புறத்தினே, பாதகப்பழிபுருப்பாறிற்றிங்கசர்
நீதவிர்தரினுறும்யாங்குநீங்கவே, யாதுசெய்தக்கதீங்கதுசெயேந்தலே ( )

செய்யித்தைசிவலிங்கப்பதிட்டைசிந்தையைவைத்தையசிவன்மாட்டுநீர்மலர், பெயய்த்தைபேணுரிப்பூசைபபேற்றிருற், கொய்யதகைநீலைத்தொடர்கொலையையென்றனர். (கரு)

துறவர்கள்ன்னணந்தொகுத்துச்கூறலு. மறம்வளர்திருநகரயோத்திகாவல, னுறவிகல்கடந்தவனோங்குபேரருள், பெறவடிப்பூசனைபேணவெண்ணனுன். (சகூ)

இதுமுதல் (ரு) செய்யுள்இராமர் சிவலிங்கப்பிரதிஷ்டைசெய்துவணங்கல்

வேறு.

அங்கதன்றனைக்கூவியருட்சிவலிங்கந்தாரெனை
றிங்குநீகொணர்தியாலெண்ரேவினனிருப்பைசூழற்
றங்கியதீர்த்தமொன்றுசந்நிதிதனக்குமேல்பாற்
பொங்கழகெறிப்பச்கணடுபோந்தவணவசிததாருக (கஎ)

ஆண்மையின்மிக்கதிணடோளங்கதனேகிஞானக
கேண்மைமிக்கருளுஞசாளக்கிராமமால்வரையைசார்ந்து
மாண்மதியறிவிற்றேர்ந்துமரசதவிலிங்கங்கைகயசாண
டேணமலியிராமனபாங்கரெயதினனிராமனிப்பால். (சஅ)

சிற்பநூல்விதியினுற்றுறசிவலிங்கத்தளவைக்கேற்டச்
கற்பகிர்ந்தனையதீர்த்தக்கரையினமேல்பாங்சர்க்கோயில்
பொற்புறவமைத்திட்டாத்தன்புகன்றநூலவிதியற்றுபித
தற்பகங்கலியபூசையாற்றினன்பரசலுற்றுன். (சகூ)

வேறு.

இதுமுதல் (ரு) செய்யுள்இராமர்சிவபெருமானதுபெருமைகூறல

எறுழ்வண்கணங்கட்கிறையவனுயமையாரெவர்க்குமுத்தமனுய்
மறுவில்வலிமிக்காரெவர்ச்குமவலிமிக்குடையவீரனுயப்
பெறுதற்கரியகவிக்கெல்லாம்பிறங்குங்கவியாமைங்கரனைத்
தெறுவல்வினைகடெறவளிததேவதேவன்சரணடைந்தாம். (உ0)

வேதமுடியுங்காணரியவிமலானந்தப்பெருசொவையை
யேதமுயர்கட்கறப்பணக்குமெங்குநிறைநதபராபரனைப்
போதமகன்றேரேகமாய்ப்புசித்துமேலாம்போகததைச்
சாதல்பிறப்பிற்றலைபபட்டதமியேனுரைப்பதெவ்வாறே. (உக)

இதுமுதல் (உ௪)·செய்யுள் இராமர்சிவபெருமானைத்தோத்திரஞ்செய்தல்.

விரியும்வித்தையனைத்தினையும்விளக்குமிறையாய்மறைமுடிக்கு
மரியபொருளாயிருந்தாலுமடியார்க்குரியன்மதிசூடி
பெரியகருணைத்தேவேசன்பிறங்குநீலப்பொன்மயனைத்
தெரிவித்தலினப்பசுபதியைச்சிந்தைமகிழப்பழிச்சுவேன். (உஉ)

எண்ணிலுயிர்க்குந்தனதருளையீயும்பொருட்டுப்பலவுருவாய்
நண்ணியுலகுக்கைந்தொழிலுநடத்தியந்தவுலகத்திற்
பண்ணினிசைபுமலர்மணமும்பழத்தின்சுவையுமெனநிற்கு
மண்ணலவனேயவனடியேன்பிரானைப்பரசுவேன். (உ௩)

ஈசனுடையதாய்மரணமிரிக்குந்திறத்ததாயீசன்
றேசுவிளங்குந்திருமுகங்களைந்தினிடத்துந்திகழ்ந்ததாய்ப்
பேசவைந்துவிதமானபெருமந்திரம்யாததனையே
பாசவினைகள்பறிந்தோடப்பனுவலாற்றிற்கணிக்கின்றேன். (உ௪)

வேறு.

சத்தியமாய்ப்பரப்பிரமந்தானாகிச்சிவாக்கியமாய்ச்சாந்தமாகி
மெத்திரதமாயேகமாயனந்தரூபமாய்விளக்கஞ்சான்ற
வுத்தமமாருக்குமெனவுயர்ந்தவராலுவந்துரைக்கப்பட்டதற்கு
மத்தகுமந்திரந்தனையேயடியேனுஞ்சரணமெனவடைகின்றேன். (உ௫)

மாகாயவாசுகிநாணமாமேருசிலைமாயப்பகழியேந்தி
யேகாதலத்திண்டேர்க்கிரவிமதிசோத்தியக்கியெயின்மூன்றட்டுப்
போகாதபுகழ்சிறுத்தபுண்ணியனைப்புகழ்க்காலகாலன்றன்னை
யாகாசகேசனைமாபுருடனைமாகேசுரனையறியாநின்றேன். (உ௬)

ஒளிக்கொளியாயேகனாய்ச்சசாந்தமாயாகியந்தமொன்றுமில்லா
வளிக்கரியாய்ப்பிரமமாய்ச்சிவமாகியனந்தமயமாயெல்லாந்
தெளிக்குமொருசித்தாகிச்சத்தாகிச்சதுசத்துள்செயிர்தீர்த்தின்பம்
வளர்க்குமிறையவனந்ததேவதேவன்பதத்தைவணங்காநின்றேன் (உ௭)

உக்கிரமாய்க்கோரமாய்ப்பயங்கரமாயிருக்குமொருதனுவைவிட்டுத்
தக்கபெருமங்கலமாய்ச்சாந்தமாயிருக்குமொருதனுவினாலே
மிக்கபெருங்கருணையினாலெனைக்காக்கவேண்டுமெனவிமலாவுன்னைப்
பொக்கமிலன்பானறியபூமுதற்பல்பொருள்கொண்டுபூசிக்கின்றேன். (உ௮)

வேறு

கங்கைநதியுமிளம்பிறையுமங்கதிர்க்குஞ்சடிலத்திடைவிளங்க
மங்கையுமையாளிடப்பாலின்வயங்கவடியேன்பூசைகொள
விங்கணவிரைவினெழுந்தருளல்வேண்டுமடியாரிரும்பேறே
செங்கைமலரினழவேந்துஞ்செல்வாதேவர்சிங்கமே (உ௯)

வேறு.

பாவிக்கப்படுவானும்பண்ணோரத்தோத்திரிக்கப்படுகின்றானுந்
தேவர்க்குமேலாகவிருப்பானுஞ்செறியிதழ்த்தாமரையோனாதி
மூவர்க்குமுதலானநாயகனுமூவரைப்புமுயர்த்தான்றானும்
யாவர்க்குமிறையவனும்யாரந்தமகேச்சுரன்மற்றெனைக்காக்க. (௩0)

### வேறு.

சத்தியோசாதரெனும்பெயருமக்குத்தயங்கலாற்றமியனேனிங்குப்
பத்தியாய்ப்பதிட்டைபுரியருட்குறியிற்பதிந்துவல்விரைந்தெனதுள்ளந்
தித்தியாநிற்பவிட்டகாமியங்கள்செறித்திடக்கடவதுநுமக்கே
யத்தரேயந்தச்சத்தியோசாதராகியநும்மையான்றொழுதேன். (௩௧)

மங்கலமருளுமஞ்சனேதேவதேவனேமலிந்தவெண்பாவ
மிங்குமுற்றகற்றிச்சுகத்தினையருள்கவெம்பிரானெனக்கருள்சுரக்க
வெங்கிருந்தினிலுமங்கணேவிரையவெழுந்தருள்சொரூபராய்விடையாத்
துங்கவெண்கவசராயுருத்திராய்த்துலங்கியநும்மையான்றொழுதேன். ()

உள்ளகக்கமலத்தமர்ந்தநாயகரேயொளிர்சடைமதியுமிழமிழ்த
வெள்ளமிக்கொழுகிநனைதிருமேனிவிமலரேயம்பிகேச்சுரரே
தெள்ளொளியிரவிமண்டலத்திருக்குந்தேவரேதிகழொளிமயரே
தள்ளருமகிழ்ச்சிதலைக்கொளவிதயந்தனிலுமைத்தியானியாநின்றேன். ()

### வேறு.

இந்தவடியேன்றன்னையந்தவுனதருளொழிலாருனதுதாளிற்
பந்தமுடையவனாகப்பண்ணுகமற்றதுதாய்போற்பரிந்துகாக்கச்
சந்திரசேகரதேவசம்போமாதிரமன்னந்தலங்களான்க
ணந்துவனமனைத்தினுக்கும்பதியாகுநின்பாதநளினம்போற்றி. (௩௪)

### வேறு.

கந்தமாறுசுவையினொலுணடிகனிவொடுமூட்டுதுஞ்சோமாக்
கந்தராய்விடைமேற்கொண்டெழுந்தருளிச்கைக்கொள்கசங்கரனீசன்
சிந்தைமாசகற்றுஞ்சிவனணிமாதிசித்திகள்சேவியாநின்ற
முந்தனுகையினுமெண்குணச்செல்வமுதலிலாமுதல்வதந்தருள்க. (௩௫)

கருமத்தாலறுசுவையாற்புத்திரராற்பவுத்திரராற்கவிகைதன்னாற்
றிருவத்தாலணிமாதிசித்திகளான்மனவாக்குத்தேகந்தம்மாற்
பருவத்தாலொன்றானுமடையாதமுத்தியினைப்பரமஞான
வுருவத்தாலடைவிப்பானெனவனவணுகியவுன்னையுரையாநின்றேன். (௩௬)

### வேறு.

குறிகுணங்கரணம்வடிவமாதிகளாற்கொளப்படான்யாவனேயவனை
மறுவறப்பயின்றயோகியரெவனைவாஞ்சையினறிந்தமாத்திரத்திற்
செறிதருபவங்கள்விளைத்திடுமலநோய்சிதையயாவெனதெனச்செருக்கா
வறிஞராய்முத்தராகுகின்றாரோவவனையேவந்தியாநின்றேன். (௩௭)

### வேறு.

தருகவிழியினைச்செவியைத்தருகபிராணனைத்தருகதருகவாயுண்
மருவலரைப்புறங்காண்கமரணத்தைப்போக்குகவெம்மருங்குமென்பால்
வெருவரலென்றபயத்தைக்கொடுக்கசமுசாரத்தின்விலக்கியாள்க
விருடருசத்தாதியினின்றெடுக்கவடிகேணும்மையிறைஞ்சாநின்றேன். ()

வாளவுணர்நஞ்சொழுகும்வாலெயிற்றுப்பணிபாவம்வறுமைநோயென்
றாளையிடத்தொடரிடரினொழித்தாள்கபெருஞ்செல்வமுலவாவின்ப
நாளுமினிதீண்டவருள்சுரக்கதேசினைப்புரச்சகனினைப்போதொத்
தாளுமலர்த்தாளிணையினன்பருள்கவமரருக்குமமரபோற்றி. (௩௯)

இராசதவன் குணத்தோடுமுலகமெலாம்படைப்பவனுயிருந்தாய்போற்றி
பராவலுறுஞ்சாத்துவித்தொடுமுலகம்புரப்பவனும்ப்பயின்றாய்போற்றி
விராவியதாமதகுணத்தினெடுமெழிக்குமுருத்திரனும்மிளிர்ந்தாய்போற்றி
வராகமுதலுருவாயுமுகந்தொறும்புல்லாரைவதைக்கின்றாய்போற்றி. (௪0)

யாரொருவன் றன்*விரையாக்கலியிஞல்வெரீ இயியமனிரியாகிற்கும்
யாரொருவன் றன்விரையாக்கலியிஞலிரவிமதியியங்காநிற்கும்
யாரொருவன் றன்விரையாக்கலியிஞற்கடல்கரையினிகவாநிற்கும்
யாரொருவன் றன்விரையாக்கலியினுயிருணருமவனிலேன்த்தாள்போற்றி. ()

குருதியுமிழ்முத்தலைவேல்குடங்கையணிந்தோய்வினதுகோபம்போற்றி
மருவலர்க்குநிலையாமைவல்லையுதவிடுவின்கைவாளிபோற்றி
யொருவரையுங்கராதகனகவரைச்சிலைவாங்குமொண்டோள்போற்றி
கருதலரைப்பறந்தலையிற்கடக்கவெணக்குரனளித்தகருணைபோற்றி. (௪௨)

எவ்வாயுந்திருமுடிகளெவ்வாயுமொளிநுதலெவ்வாயுங்கண்க
ளெவ்வயுந்திருச்செவிகளெவ்வாயுஞ்செவ்வாயெவ்வாயுந்தோள்க
ளெவ்வாயுந்திருக்கரங்களெவ்வாயுந்திருவயிறெவ்வாயுந்தாள்க
ளெவ்வாயுந்திருமேனியெனநிற்குந்தனிமுதல்வனெம்மைக்காக்க. (௪௩)

எம்பெருமான் றிருவடிப்பூசனைபுரிந்துமேத்தெடுததுமிருண்டபாச
நம்பிநருக்கறுத்தருளுநாமத்தைநாவாரநவின்றுமேலாஞ்
செம்பொருள்சேர்புகழ்க்காதைசெவிமடுத்துந்திருமேனிதிகழக்கண்டு
மம்புவியினிருக்கின்றாமடியேமையீன்றவர்போலருளிக்காக (௪௪)

அஞ்சலெனவமைத்தவொருகரதலமும்வரதமெனவமைத்தகையும்
கஞ்சமலரேந்துமிருகரதலமுமூற்றிருக்குங்கருணைநோக்கும
பஞ்சிகமழ்சீறடியுமழகெறிப்பவணிகலன்கள்பலவுந்தாங்கி
வஞ்சமலவிருள்சீக்குமகிலாண்டநாயகிதன்வடிவம்போற்றி. (௪௫)

## வேறு

இதுமுதல் (எ) செய்யுள்சிவபெருமான்இராமருக்குஅனுக்கிரகஞ்
செய்தமை.

என்றிராமனியம்பியதோத்திரமயாவையு
நன்றுசென்றுதிருச்செவியேறலுநாதனர்
மன்றலோதிமடந்தையொர்பாகம்வயங்குற
வென்றிமால்விடைமேல்வெளிநின்றனர்காணவே. (௪௬)

கண்டகண்கள்கவிழ்க்குநறும்புனல்தால்செயாக்
கொண்டன்மேனிக்குருஉக்கவயம்பெறுநீற்றினை
வண்டல்செய்யக்கரைந்துகரைந்துவணங்கினு
னண்டர்கோனருள்கூர்ந்தவற்கீதுரைசெய்யுமால். (௪எ)

இராமநீயெமையேத்தியதியாவர்களேத்தினும்
பராவியன்பொடுகேட்பினும்பல்பெரும்பாவமும்
விராவுதீயிடைப்பஞ்செனவெந்தவியப்பெருந்
தராதலத்துயர்வாழ்வுந்துறக்கமுஞ்சார்வரே. (௪அ)

---

* விரையாக்கலி - ஆணை.

அடரும்வல்வினைச்சாயையுநீங்கியயோத்திபுக்
கிடர்துரந்தபன்னளரசாண்டிருந்தெய்வமாய்த்
தொடருமாந்தர்க்குவேட்டவரங்கடுறத்திருள்
விடவுயர்ந்தநன்முத்தியையந்தத்தின்மேவுதி. (சக)

சிறந்தமன்னவசெல்லுதியென்றுசிவபிரான்
மறைந்தனன்சிவலிங்கத்திராமனும்வல்விரைந்
தறந்தழைத்திடுபூசனைமுற்றுறவாற்றிப்போ
யுறைந்தனன்றலகாண்டுதன்னூர்வயினென்பவே. (௫0)

நீலவிண்டுரிகழ்த்துமெய்யன்பொடுபூசனை
சாலவாற்றியநீலவிண்டுப்பெயர்த்தானுவை
ஞாலமீதுபணிந்தவர்நாமநவிற்றினோர்
கோலநோக்கினர்தாமுநகொலைப்பழிதீர்வரே (௫க)

கையர்சாயைகரக்குநகரியமாலீசா
மையசொற்றனைமாநகுப்பராசரனாங்கிட ற
பொய்யாக்கரைப்பொன்றியநகாதையுநகேண் ிமென்
றுய்யவையகமோதுதலுற்றனன்சூதனே. (௫உ)

நீலவிண்டுவீச்சரப்படலம்முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - அசஎ.

## பராசரன்வழிபடுபடலம்.

சுந்தரமிகுந்தபொன்னகரிற்றொல்லைநா. ளிந்திரனரசுவீற்றிருக்குமணடபத
தந்தரத்தமரருமறிஞர்யாவருஞ், சிந்தையின்மகிழ்கொளச்சென்றுதொக்க
[னார் (க)

உத்தமவசிட்டனுமுயர்ந்தவிச்சுவா. மித்திரமுனிவனுமேவிவைகினு
ரத்தலையுள்ளவரவனிமாட்டெவர். பொய்த்துரையாதவரென்றபோதரோ.

மந்திரவசிட்டன்மன்னவர்க்குமன்னரிச், சந்திரன்பொய்சொலானென்
றுசாற்றினன்,வெந்திறல்விச்சுவாமித்திரன்முரண். சிந்தையன்பொய்சொ
லச்செய்வலென்றனன். (௩)

வேறு.

வேந்தனொருபொய்மொழியின்விச்சுவாமித்திரனே
காந்துமணிமுடியமார்கரிகண்டாயநோரு
மாந்தியவந்தணன்போலவார்துகிலொன்றுடுத்தியமன்
பூந்திசையின்முகநோக்கிப்போதுவலென்றான்வசிட்டன். (ச)

தஞ்சமறைபயில்வாயாற்சபதமிடவசிட்டமுனி

னெஞ்சநிந்தேபொய்மொழியவிகழ்த்தேனேனீயுரைத்த
வஞ்சினமற்றெனதாகுமெனக்கிளந்துவான்விடுத்தான். (௫)

## வேறு.

பூதலமருங்குபோந்துபுகழரிச்சந்திரன்பா
லேதமெத்துணையுமாற்றியியன்மொழிமெய்யிற்றீரா
னுதலையறிந்துதோற்றனரசனுக்கமரரெல்லா
மேதகுவரங்களீந்தார்வேந்தனும்வணங்கிப்பின்னர். (௬)

கடவுளீரறிவன்முன்னர்க்கதழ்ந்துரைசபதந்தன்னை
யடியனேன்பொருட்டுச்செய்யானுதலேவேண்டுமென்னப்
படர்பெருங்கருணைத்தேவர்பார்த்திபன்பரிவுநோக்கி
மடனறுமுனிவன்சொன்னவஞ்சினம்புரியலென்றார். (௭)

விரைசெறிகற்பத்தண்டார்விண்ணவர்வரங்கள்பெற்ற
வரசனங்ககன்றனுணெஞ்சலைத்திடவசிட்டன்றன்பா
லுரைசெறிவிச்சுவாமித்திரனுறுசீற்றங்கொண்டு
புரைசெறிவேள்வியொன்றுபுரிந்தனன்மனுக்களோதி. (௮)

வெருவருதோற்றஞ்சான்றவெந்திறற்பூதமொன்று
கருவலரயென்னவேள்விக்கனல்கெழுகுண்டநின்று
வருதலுமதனைநோக்கிவசிட்டனைக்கோறியென்றா
னுருவவல்லரக்கனாகியொய்யெனச்சென்றப்பூதம். (௯)

அருந்தவவசிட்டனந்நாளியல்பினுச்சிரமநீங்கி
யிருந்தனனனையான்மைந்தனியற்பெயர்சத்தியென்பான்
பொருந்தனைதுயிலக்கண்டுபொள்ளெனக்கொன்றுமீண்டு
திருந்தியவிச்சுவாமித்திரனுளமகிழ்செய்தன்றே. (௧௦)

அருந்துதிக்கற்பின்மிக்காளவன்மனைமாதுநோக்கி
வருந்திமிக்கழுதலோடுமருங்குளார்தாமுங்கூடி
பெருந்துயருழக்குமேல்வைப்பெருந்தவவசிட்டன்போந்து
கருந்துயருழந்துசோகக்கடலிடையழுந்தினானல். (௧௧)

ஏந்திதழ்க்கமலச்செம்மலிம்மெனவங்குப்போந்து
[illegible]
னுந்துயரகலத்தேற்றியறைகுவான்சத்தியாவி
போந்தனனென்றுசாலபொருமிமிக்கவலஞ்செய்யேல். (௧௨)

நுன்குலம்விழுப்பமெய்தநுன்னுடைமருகிமாட்டு
நன்கருவாய்ந்ததன்றேநற்றவவஃதாணுகும்.
பின்குலவரக்கர்தம்மைப்பெயரொடுங்கெடுக்குமன்னு
டன்குலச்செவிகள்கேட்பமறையெலாஞ்சாற்றுமென்றான். (௧௩)

மறையவன்றேற்றத்தேறிமருங்குளார்தம்மைத்தேற்றி
நிறைகுணவசிட்டன்சத்திநேரிழைமனைவிகேட்ப
முறையுளிவேதமெல்லாமொழிந்தனனவற்றையெல்லா
முறைதருவயிற்றினின்றேயுணர்ந்ததக்கருவிற்பிள்ளை. (௧௪)

ஐயிருமதியுமுற்றவகட்டுறுகருவினீங்கி
வையகமிடருநீங்கவானகமகிழ்ச்சிதுன்ன
வெய்யவல்லரக்கர்தேயமிக்கநெய்த்தோரின்மாரி
பெய்யவற்றுதித்ததென்பபிறங்கெழிற்குழலிமாதோ. (கரு)

தன்னிகர்வசிட்டமேலோன்சாதகமுதலவாற்றிப்
பன்னிருநாளினுமம்பராசரனென்றுசாற்றிப்
பின்னுபநயனமெட்டாமாண்டினிற்பிறங்கச்செய்தான்
மன்னிளமதியம்போலவளர்ந்திடுமைந்தனோர்நாள். (கசு)

தாய்முகநோக்கியன்னாதவ்வெனவிருத்திமெய்யி
னாய்மணிக்கலனோகாணுமைவலமோநின்பாற்கண்டாம்
வாய்மையினுரைத்தியெந்தையாண்டையன்வசிட்டன்யாவன்
றாய்மைநெஞ்சயிர்ப்பினீங்கவென்றலுஞ்சொல்லுமன்னை. (கஎ)

வேறு.

கொழுகொப்பிழந்தகொடியேபோற்கொழுநனிழந்தேன்பருவரலை
முழுதுமகற்றவந்தகயமுனியேமுனிவர்செல்வமே
பழுதொன்றியற்றாநுந்தையுயிர்படர்ந்தோரரக்கன்பருகினான்
வழுவில்வசிட்டன்மூதாதைமதியாயென்றுமறுகினாள். (கஅ)

தன்னாய்மறுகிமூர்ச்சித்துத்தளரநோக்கிமுனிச்சிறுவ
னன்னாவன்னாவெனப்பல்காலங்கைத்தளிராற்புடைத்தெழுப்பி
யின்னாவினைசெயரக்கர்குலமின்னேயிறுத்தேனெனவணங்கிக்
கொன்னாதரவினருள்பெற்றுவசிட்டன்விடையுங்கொண்டெழுந்தான். ()

கள்ளம்படருங்கருத்தினர்க்குக்காண்டற்கரியதனிமுதல்வன்
வெள்ளம்படருஞ்சடைக்கற்றைவிமலன்ஞானதலமெய்தி
வள்ளம்படநின்றலர்கமலமணங்கேழ்தீர்த்தம்பலதோய்ந்தங்
குள்ளம்படரும்பேரன்பினொளிர்பொற்கோயினண்ணினான். (உ0)

ஆனேறுயர்த்தகொடிப்பாங்கரகநெக்குருகவிழுந்தெழுந்து
மீனேறுயர்த்தகொடிக்காளைவேவவிழித்தபூரணனை
மானேறுயர்த்தகரதலத்துமணியைவணங்கிமறைபாடி
யூனேறுடம்பின்பயன்பெறுவானுலகமுயிர்த்தாளையும்பணிந்தான். (உக)

அங்கணகன்றகோயில்வலமாகப்போந்துபுறத்தேகித்
துங்கமறையின்விதியாற்றாற்றுவன்றும்பிதிரர்களிதூங்க
வெங்கணரக்கனாலாவிவிளிந்ததாதைதனைக்குறித்துத்
தங்குகருமமனைத்தினையுந்தழைத்தவன்பினியற்றினான். (உஉ)

நொறில்வெள்விடையின்கொடிமேலானுடங்கவிளங்கும்விமானத்திற்
செறிபல்சிறப்பினொடுமெதிரேசென்றுதாதைசெப்புவா
னறிவிலரக்கனால்விளிந்தவலகில்பாவத்தொடக்கினாற்
பிறிவிலலகையாயின்னல்பெரிதுமுழந்தேனிதுகாறும். (உங)

இன்றுசிறுவர்நீயிந்தஞானதலத்தினினிதியற்று
நன்றிவினையாற்றீவினைகணழுவவினையனாயினேன்
சென்றுசேர்துமெனவெழுந்துசிவலோகத்தையவணடையப்
பின்றையரக்கர்குலந்துமியப்பிறங்குவேள்விதொடங்குவான். (௨௪)

## வேறு.

கடவுள்வெண்ணாவலங்காமர்நீழல்வாழ், படவரவணிந்தருள்பரமர்கோயிலின், வடகிழக்கெல்லையின்வயங்குகுண்டமிட், டடைவுறவியற்றினு னவ்விசாரமே. (௨௫)

செந்தழலாகுதிதேக்குசெவ்வியின், மந்திரஞ்சென்றுவல்லரக்கர்தானவர்
வெந்திறற்பூதவேதாளமியாவையு,மூந்திவந்தொளிரழற்குண்டத்திட்டவே

தினந்தொறுமந்திரந்தீயிற்றீயர்த, மினங்கெடவிறுத்துத்தென்மேற்கி னெய்தினான், மனந்தளர்வுறவவன்வாகைவாகனக், கனங்கெழுபூதமுங் கலங்கப்பற்றின. (௨௭)

பொருதெறுழ்வலிகெடும்பூதநோக்குபுநிருதியும்வலியினானீக்கமாட்டிலன்
றருநயமொழிபலசாற்றவும்விடா, துருவமந்திரமவனொடுமீர்த்தவே (௨௮)

நெஞ்செலாமழிதரநிருதியென்பவன், றஞ்சம்வேறிலையெனச்சம்புநீ ழல்வாழ், செஞ்சடாமகுடர்தஞ்சேவடித்துணைக், கெஞ்சுறவன்பினாலேத் தன்மையினான். (௨௯)

## வேறு.

பாலனுக்காகக்காலன்படவுதைசெய்தாயோல
மாலமுண்டமரராவியளித்தருடலைவவோலம்
வேலனாலவுணர்க்காய்ந்துவிண்குடிநிறுத்தாயோலஞ்
சீலமார்சம்புநீழற்சிவபிரானோலவோலம். (௩௦)

பிரமனைமாயனோர்காற்பெறவரமளித்தாயோலம்
பிரமன்மாயவனையோர்காற்பெறவரமளித்தாயோலம்
பிரமன்மாயவனைப்பல்காற்பெற்றளித்தழிப்பாயோலம்
பிரசமார்சம்புநீழற்பிஞ்ஞகாவோலவோலம். (௩௧)

முப்புரம்பொடித்தமேருமூரிவெஞ்சிலையாயோல
மப்பவிர்வேணிவைத்திட்டகனிலம்புரந்தாயோலஞ்
செப்பிளமுலையாள்பூசைசெய்தநீர்த்திரளேயோலம்
மைப்பணச்சம்புநீழல்வதிந்தருண்முதல்வாவோலம். (௩௨)

ஐம்புலனீர்க்கப்பட்டவார்வநெஞ்சுடையார்போலப்
பம்புமந்திரங்களீர்ப்பப்படுகின்றேனோலவோல
நம்புறுதுணைவேறில்லைநாயகவோலவோலம்
வம்பலர்ச்சம்புநீழல்வானவாவோலவோலம். (௩௩)

ஒருகணந்தாழ்க்கினுமியேனூர்தியோடடறவனுற்றும்
வெருவருவேள்வித்தீயின்வீழ்வதுதிண்ணமோலங்
கருணையினெளிவந்தெம்மைக்காப்பதுகடன்மையோல
மருவளர்சம்புநிழல்வள்ளலேயோலவோலம். (௩௪)

## வேறு.

சாலுமெய்யன்பினானிருதிதாழ்ந்துமிக், கோலிடத்திருவுளமுவந்தநாவ லின், கோலவெண்ணிழலிற்குழகனாணையா, லேல்வுறவானினுமெழுந்த தோருரை. (௩௫)

நிருதிதன்பூதவாகனத்தைநீயிவண், டருமதியெமக்கெனத்தழங்கும்வா ன்மொழி, யிருசெவிநுழைதலுமிரும்பராசிரன், மருவியவுவகையன்வான நோக்கினன். (௩௬)

பூதமுநிருதியும்பொள்ளென்றண்மையிற், போதலுமவர்நமைப்புடை யிருத்தினை, ஞாதருவஞ்சினமதனின்வேள்விமுன், னீதலேசிறப்பெனவி யைந்துளேனென்றான். (௩௭)

ஈந்தனேனென்னுமுனிணர்த்தநாவலி, ஞர்ந்ததண்ணிழலினமர்ந்தநா யகன், சாந்தமென்மூலையுமைத்தயலொடேற்றின்மேற், போந்தனன்விசு ம்பிடைப்புலவர்போற்றவே. (௩௮)

கண்டனனெழுந்தனன்கரங்கள்சென்னிமேற், கொண்டனனாடினன் குவலயந்தனிற், றண்டெனவிழுந்தனனெழுந்துதட்டமிட், டண்டர்நாய கன்சரணன்பினேத்துவான். (௩௯)

## வேறு.

ஆதிப்பெருஞ்செல்வவருட்கடலேயடியார்நினைப்பாருமலர்த்தருவே
பூதிக்கவயத்திருமேனியனேபுரமூன்றுமெரித்தபுராதனனே
காதிப்பழவல்வினையைச்சிறியேன்கருதாரையுநீற்றியகண்ணுதலே
சோதிப்பொருளேதொழுவார்பருகுஞ்சுடர்வானமிழ்தேசரணஞ்சரணம்.

ஆறாடியவேணியின்மீமிசைமிக்கமிழ்தாடியவெண்மதிக்கண்ணியனே
பாறாடியமுத்தலைவேலவனேபழியாடியவெண்டலைமாலையனே
கூறாடியகோமளவல்லியனேகுன்றாடியகொற்றவிலங்கையனே
வீறாடியவெள்விடைவாகனனேவிண்ணோரிறையேசரணஞ்சரணம். (௪௧)

நவதீர்த்தமுமாடபெயன்செறியுநவசாளரசந்நிதியாசரண
மவநீங்கறலாடவிதித்தபொருளாறைந்தெனவேயறிவித்தொருபா
லிவர்மாட்சியின்முப்பதுசாளரநின்றிலகுந்திருக்கோயிலுளாய்சரணந்
தவநீடியசம்புமுனிக்கருளுந்தனிநாயகனேசரணஞ்சரணம். (௪௨)

ஆரந்தொடையான்மனையாள்களநீங்காரம்புனலோடுகுடத்துநுழைந்
தீரந்திகழ்சென்னியினாட்டுபொழுதிலகுந்திருமேனியணிந்தருளி
வாரந்தருநல்லருள்வைத்தவனேமணியேமலர்பம்பியகாவிரியின்
நீரந்திகழ்நள்ளிடையேவதியுஞ்சிவனேபவனேசரணஞ்சரணம். (௪௩)

### வேறு.

உழுவலன்பிற்பராசரவனென் றுரைக்கும்பெயரானிவ்வாறு
பழுதில்புகழ்கள்புகழ்ந் திறைஞ்சப்பாய்வெள்விடைமேலெதிர்நின்ற
முழுதுமுணர்ந்தநாயகனார்முனிவில்வரங்கள்கொள்கென்றார்
வழுவின்முனிவன்மீட்டெதிரேவணங்கிவரங்கள்வேண்டுமால். (௪௪)

மன்றவடியேன்புரிவேள்விமணிச்சாலையிற்றென்மேற்றிசையி
லொன்றுதிருதிக்கெறுழ்ப்பூதமுதவும்படியில்கருணையா
லென்றுநினக்குப்பச்சாதாபேசனென்னும்பேரினிதுறுக
வென்றிவிடையாய்நினதாளின்வீயாப்பத்தியெனக்குறுக. (௪௫)

எனமாதவத்துப்பராசரன்மற்றிரந்தவரங்கள்கொடுத்தருளித்
தனிநாவலின்கீழ்ச்சிவலிங்கந்தன்னிலிறைவனமர்ந்திருந்தா
னனிநானிலத்திலன்றுமுதலென்றுநாவனிழலுடையார்க்
கினிதாம்பெயர்தான்பச்சாதாபேசனெனவுமிலங்கியதே. (௪௬)

கருணைப்பெருமானருள்பெற்றகாளைமுனிவன்மகமுடித்துப்
பொருவில்வரங்களொடுந்தாதைதாதைப்பாங்கர்போய்வாழ்ந்தா
னிருதிபச்சாதாபேசரளித்தநீடுபூதத்தின்
மருவுதனதுதிசைசென்றுபண்டுபோலவாழ்ந்திருந்தான். (௪௭)

மல்குந்தவத்துவசிட்டமுனிமருமான்வழிபாட்டினைப்புகன்றா
நல்குந்திருமான்ஞானதலமெனவாங்கிருந்துநாடோறும்
பல்கும்பயன்றந்திடுமாறும்பண்பிற்கேண்மினெனச்சூதன்
புல்குங்குணத்துமுனிவரர்க்குப்புரிந்துபுகறன்மேயினான். (௪௮)

பராசரன்வழிபடுபடலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௮௯௫.

———0———

## திருமால்வழிபடுபடலம்.

வானவர்க்கிடையூறுற்றுமறமலியரக்கர்சேனை
வானரப்படையாற்றுக்கிவன்பகைகடந்தயோத்தி
தானமர்ந்தரசுபூண்டதசரதராமன்பாங்கர்
வேனவில்கடகத்திண்டோள்விபூடணன்விடைகொள்காலை. (௧)

திருமறுமார்பத்தண்ணறிருவுருவொன்றுஞ்சிறப்பத்
துருவளர்விமானமொன்றுமுவந்தவனளிப்பக்கொண்டு
மருவியவயோத்திநீங்கிமன்னியவிலங்கைசேர
வெருவருந்தானையோடும்வியனிலநெளியச்செல்வான். (௨)

கண்ணுதலமர்ந்ததானங்கணடனபலவும்பாறறுப
பண்ணையும்வரையுங்கானும்பற்பலநீந்தியென்றாழ்
விண்ணவனுச்சியெய்தும்வேலைவெவ்வெரிவாய்க்கும்பி
நண்ணியதனையதாங்கோர்நனந்தலைப்பழுவஞ்சார்ந்தான். (௩)

## ஙேவறு.

உருத்திரப்பெயராண்டகைக்கொன்னலார்தம்மை
வருத்தமிக்கெழும்வெகுளியந்தழலவர்மடிந்தும்
பெருத்துநிர்பமற்றதுதனைப்பெயர்த்தெழுந்தோறு
மிருத்திவைக்குமோர்வைப்புமாயிலகுமச்சுரமே. (௪)

மாயனுதிப்பல்லுயிர்களும்வளரிளைப்பாற
வாயமாயையின்காரியமனைத்தையும்விழியாற்
காயுநாளையிற்சூற்படைக்கடவுணின்றுடுந்
தூயவாரழற்கானமுந்துணைவதக்கானம். (௫)

கங்கைவான்மதிசூடிதன்கரத்திடைமுனிவ
ரங்கிசேர்ந்ததுமாழியில்வடவைசார்ந்ததுஞ்சீர்
பொங்குமாதவன்வைகலும்புணரிமூழ்குவதுந்
தங்குதீச்சுரந்தழற்றுதாபந்தபும்பொருட்டே. (௬)

தூலதேகமேயன்றிவண்சூக்குமவுடலுஞ்
சாலநீற்றுவதனையதுதழல்பரந்தொழுகிக்
கோலமார்தருமராமரங்குழையடையிருப்பை
பாலையாதியுங்கரிந்திடமேயதப்பழுவம். (௭)

உடைந்துசார்வடவைத்தழற்குதவிசெய்வாமென்
றடைந்துசாகரம்போர்த்ததேயனையதுவெண்டேர்
மிடைந்ததீச்சுரம்வெதுப்பலின்மேவியபுணரி
யிடைந்துருவகைப்பதைப்பதேபொருமதனியக்கம். (௮)

விரிந்தபூதலம்விண்டதுவிண்டவாய்தோறுஞ்
சொரிந்ததீத்திரடுவண்டனபாதலத்துரகம்
பொரிந்தயானினம்பொடிந்தனவுலங்கள்புள்ளினங்கள்
கரிந்தநீறினகாயமாமழையுநேரியங்கா. (௯)

டைக்காட்டா
ச்சனகளோடு
கழிபெருந்துயருழந்ததுகடந்துசெல்காலை
விழைதரும்புனற்காவிரிவிளங்குறக்கண்டான். (௧௦)

நரகவெந்துயருழந்துவிண்ணண்ணினுரெனவுங்
குரவமல்கியகொன்றையான்கோபத்தினவிந்து
விரவியன்னவனருடரவிளங்கினுரெனவும்
பரவுதண்புனற்காவிரிநள்ளுறப்படர்ந்தான். (௧௧)

தரங்கவார்நதிதவழ்நறுந்தென்றல்சார்ந்துலவக்
குரங்குசாகையங்குளிர்நிழற்பொதும்பரிற்கடல்போ
லிரங்குதானையோடெய்தினனிருந்தயர்வுயிர்த்தான்
புரங்கொல்சேவகன்றிருவடிநீழல்புக்கார்போல். (௧௨)

கார்த்தபூம்பொழில்கலந்தயங்குயிர்த்தபினரக்க
ணார்த்தெழுந்துசெல்காவிரியணிபுனலாடிச்
சீர்த்தவெண்பொடிகண்மணிதிகழமெய்யணிந்து
கீர்த்திமேம்படுகேசவன்பூசையும்புரிந்தான். (௧௩)

பூசைமுற்றுறப்புரிந்தபின்புயணிறத்தவனைக்
காசுமல்கியவிமானத்துக்கதுவுவித்ததனைத்
தேசுமல்கியவெக்கரிலிருத்தினன்சிறப்ப
வாசைமல்கியவறுசுவையடிசிலுமயின்றான். (௧௪)

இலங்கைமாநகரினிப்புகுவாமெனவெழுந்திட்
டலங்கன்மார்பகந்துயல்வரவிமானத்தையடுத்து
வலங்கொடோளினாற்பெயர்த்தனன்மற்றதுபெயரா
நிலங்கொடேன்றியதறிந்தனனெடுந்துயருழந்தான். (௧௫)

கவலையுற்றவனிருந்துழிக்கனவிடைத்தோன்றிப்
புவனமுண்டவன்விபூடணகேளெனப்புகல்வான்
சவலைநெஞ்சினையுடையையாய்த்தளரலையிந்த
வவனிஞானகேத்திரமெனவறைந்திடப்படுமால். (௧௬)

அகிலலோகமுமளிப்பவளருந்தவம்புரிந்து
நிகரிலாதமெய்ஞ்ஞானநின்மலன்றரப்பெற்றுப்
புகரெலாங்கெடுத்துயிர்க்கெலாம்புகன்றபல்வரமு
மிகவில்சீர்த்தியோயினிதளித்தருள்வதிவ்விடமே. (௧௭)

சம்புமாதவன்பராசரன்றூமறைக்கிழவன்
கும்பமாமுனிதினகரன்குளிர்மதியிராம
னும்பர்கோனழற்கடவுளென்றிவர்க்கெலாமுவந்து
தம்பிரானருடழைதரக்கொடுத்ததித்தலமே. (௧௮)

ர்த்திமேன்மைமிக்குடையது மொழிந்தவித்தலமே

கார்த்தகண்டனார்காதல்செய்பலதலத்துள்ளுங்
கீர்த்திபோர்த்துமேம்பட்டதுங்கெழீஇயவித்தலமே. (௧௯)

மறையின்வார்புனற்பொன்னியின்ஞானகேத்திரத்தின்
மிறையினீங்ககிலாண்டநாயகியின்மேம்பட்ட
முறைசெய்நூனதிதலமுமுச்சத்தியுமில்லை
யிறைசெய்நாவலின்மூர்த்தியின்மூர்த்தியுமில்லை. (௨௦)

ஏனைவைப்பிடையெம்பிரான்றனதொருகூற்றுற்
றனமர்ந்துபல்வரங்களுந்ததைதரவழங்கு
மீனமுற்றறமுழுவதுமித்தலத்திருந்து
ஞானமற்றையபொருள்களுநலத்தகவழங்கும். (௨௧)

வந்
தங்கினானுமென் கூற்றினாற்றாழ்ந்துவாழ்யானு
மிங்கணுடொறுமுழுவதுமிருந்துவெண்ணாவற்
பொங்குநீழல்வாழ்புனிதரைப்போற்றிடவலித்தேன். (௨௨)

கள்ளுமிழ்ந்தலர்கொன்றையங்கண்ணியான் கருணை
கொள்ளைகொள்ளுவான் குறித்தருந்தவத்தினிற்கூர்ந்து
விள்ளரும்பெரும்பத்தியின் விழைந்திருக்கின்றாண்
முள்ளரைச்செழுந்தாமரைமுற்றிலக்குமியும். (௨௩)

ஈங்குவாழ்தலேயன்றிமற்றிலங்கையிற்படரேன்
றீங்கிலாநடமிலக்குமிசெய்யுமாறியக்கி
யோங்குநாவலினொருவனார் திருவருள்பெரிதுந்
தாங்குமார்வமுந்தழுவியநெஞ்சினேன் கண்டாய். (௨௪)

திருவின்மாதராளுடைகஞ்செய்யுமித்தானத்
துருவமாநகரொன்றுசீரங்கமென்றுளதா
மருவுசீரங்கநாதரென்றெமக்குரைவழங்கும்
பொருவில்பூசனைவிழாமுதலெமக்கிவட்பொலியும். (௨௫)

ஆண்டுதோறுமிங்கடுத்துநீயெமதடிமலரு
மீண்டுநாவலினிறைவனார்பாததாமரையும்
பூண்டவன்பினாற்போற்றுதிபோதியென்று
நீண்டமாதவனிகழ்த்தினன் மறைந்தனன் மாதோ. (௨௬)

வேறு.

கனவினைநனவெனக்காதல்செய்தெழுந், தனகனையானைக்காவகத்துப்போற்றிப்போய், வினைதபவீடணப்பெயரின்மேயினான்.றனைநிகரிலங்கையிற்சார்ந்துவாழ்ந்தனன். (௨௭)

ஆயிடைவதிவதேயாதரித்திடு, மாயனுநாவலின் மருங்குவைகிய, நாயகன்பூசனைநயந்துதன்னுயிர், நாயகிதனைநடாநவில்வித்தானரோ. (௨௮)

பதுமைநன்கியற்றிடும்பரவைநோக்குபு, கீதுமெனநாவலிற்கலந்த கண்ணுதல், விதுவணிசடைமுடிவிளங்கமுன்னுறீஇ, யெதுவரங்கொள்கெனவிறைஞ்சிமாதவன். (௨௯)

நின்னடித்தெரிசனநிச்சம்யான்புரிந், தின்னல்வல்வினையெலாமிரித்தல்வேண்டுநீர், மன்னியசடைமுடிவள்ளல்யாவரு, மென்னிடைவரம்பலவெய்தல்வேண்டுமால். (௩0)

விழாமுதற்சிறப்பின்மேம்பாடுவைகலும், வழாவகையெனக்கிவண்வளர்தல்வேண்டுநிற், றொழாதவர்மாட்டுறாத்தொடிக்கைமாமகள், குழாமலிநாடகங்குயின்றவைப்பிது. (௩௧)

சீரங்கநகரெனச்சிறத்தல்வேண்டுமோ, லோரங்கமீரியலானவுத்தமகூர
ங்கிரிகருருக்குழகவென்றனன், பேரங்கமறையினுன்பெறுகவென்றனன்.

சம்புநாயகனருட்டோங்கிமாயவ, னும்பரார்விழைதகவோங்குசீரங்கப், பைம்
பொன்மாமதினகர்பயிற்றிவைகின, னிம்பர்வாழனைவருமின்பமெய்தவே.

நெடியவன்வழிபடுநிலைமைகூறினுஞ்.சுடர்மணியாரமுன்சோழன்சா
த்திய,வடைவினியறிந்தவாறறைதுமாலென,விடலருங்கருணையால்விளம்
புஞ்சூதனே. (௫௪)

திருமால்வழிபடுபடலம்முற்றிற்று.

ஆ. திருவிருத்தம், ௬௨௧.

———:o:———

## ஆரஞ்சாத்துபடலம்.

சிறந்தபொன்னிவளஞ்சுரப்பத்தெய்வங்கமழுந்தீம்புனனு
டறந்தங்கியவேணையநாட்டுக்கணியாய்விளங்குமாறேபோற்
புறந்தந்திடுபல்லூர்க்கெல்லாம்போற்றவணியாய்நனிவிளங்கு
முறந்தைநகரின்வீற்றிருந்திட்டுலகம்புரக்குமொருசோழன். (௧)

அகன்மாநிலத்தைப்பொதுநீக்கியாண்டுதிகிரிதிசையுருட்டி
யிகன்மாணரையர்பகைமுருக்கியிசைநிக்கீட்டலேயன்றித்
தகையாணவத்தின்பகைதனையுஞ்சவட்டிஞானப்பொருளீட்டிப்
புகலீச்சுரனேயெனவவர்தம்புரைதீர்பணியிற்றலைநின்றான். (௨)

நிசுளாபுரியென்றுலகேத்துநிகரிலுறையூர்முதலாகப்
பசுவேறுயர்த்தார்தலந்தோறும்பரிந்துபூசைவிழாவாதி
திசையோரெட்டுங்குதுகலிப்பச்செய்துவருநாட்பனிப்பருவம்
பசைதீர்ந்தொழியவிளவேனிற்பருவமொன்றுபடர்ந்தன்றே. (௩)

அறிஞர்தம்மையடுத்தவருமறிஞரேபோலுயிர்க்கிதமே
செறியவுதவிசெய்கின்றதிறத்தைவிளக்குமாபோலக்
குறியமுனிவன்பொதியவரைக்குலவுதென்றன்மென்குளிரு
நறியமணமுந்தழீஇயெவருநயப்பமெல்லத்தவழ்ந்ததே. (௪)

பேணுங்கழைவில்லிறைதனக்குப்பெருநாளடுத்ததெனமகளிர்
பூணுந்துகிலுமுதலானபுதியவணிவதறிந்தின்பங்
காணும்பனிப்பூம்பொழிற்றருமுங்கவின்கொள்வனபோற்சருகுதிர்த்து
மாணுந்தளிர்மெல்லரும்பாதிவரிசையாகவுயிர்க்குமால், (௫)

தேனூர்பலமாமலருள்ளுஞ்சிறந்தகமலமுதன்முருக்கு
மானுப்பகைமைப்பனிப்பருவமகலச்சிவந்தசிவப்பேபோல்
வானூர்சினைமெல்லிணர்தெய்வமகளிர்முலையோடமராடுங்
கானூர்சோலைமரமுழுதுங்கவினத்தளிர்த்துவயங்கினவே. (௬)

தம்மைவணக்குமெழில்வாய்த்தடையன்மடவாருளம்வணக்கச்
செம்மன்மதவேள்விழாக்கொண்டுசெருச்செய்காலமிதுவாமென்
றம்மவவன்மிக்கமரொழியாதாற்றமலர்வாளிகளனந்தம்
விம்மவுயிர்த்தவானிழுன்றவிரைசூழ்பொதும்பர்தொறுங்கொம்பர் (௭)

செய்யதளிரினிடையிடையேதீந்தேன்மலர்கள்பலநெருங்கல்
பையமுழுதும்பணிகேட்பவார்ந்தகருப்புச்சிலைகோட்டி
யெய்யுமதவேள்கணைகூர்மையியற்றப்பருவமெனுங்கொல்லன்
வெய்யவுலைவைத்தழலிடையேவிளங்கத்துறுத்தபரிசேய்க்கும். (௮)

வேறு.

நிச்சமுமென்றூழன்பனெருக்குமப்பகைமீக்கொண்டு
நச்சணபனிகடாக்கநலிந்ததாமரையின்வெய்யோன்
வெச்செனமுழுதுமாற்றிமேம்படநோக்கிநோக்கிக்
கச்சமின்மகிழ்ச்சிபொங்கக்களுலினகயங்கடோறும். (௯)

ஆடவர்குழாங்கண்மாட்டுமருப்பிளங்கொங்கைச்செவ்வாய்த்
தோடவிழ்மலர்மென்கூந்தற்றோகையர்மாட்டுமார
ணேடவிழ்மலரின்வாளியெய்யும்வார்சிலைநாணோதை
பீடுகொண்டார்ப்பபோலும்பிரமரத்துழனியீட்டம். (௧௦)

மலர்தொறும்வண்டுபோய்ந்துவண்டுகளுகுத்துச்செந்தே
னலறுகர்ந்துழக்குந்தோற்றநாமவேலமாரென்னுங்
கலதிசெய்தெவ்வர்வாழுங்காமரில்லகமிவ்வென்றே
வலனுயரவுணர்கூடிமாணின்மைபுரிவபோலும். (௧௧)

காமருதுறக்கவைப்பிற்கார்வரச்சென்றவன்னந்
தாமரைவளங்கூர்காலஞ்சார்ந்ததென்றடுக்குந்தோற்ற
மேமருமிளையவேனிலின்பங்களுகரத்தாழும்
வீமலிகற்பநாட்டுமெல்லியர்வருதல்போலாம். (௧௨)

இசைமொழியாதிவெவ்வேறிடம்பொராத்தருவின்மாட்டும்
பசையொடுவெதியும்வாணிபண்ணொடுபயில்வதேபோ
னசையொடுமகிழ்ச்சிபொங்கநலத்தகுகலைகளெல்லாம்
வசையறுகிள்ளைபூவைவயக்குவசோலைதோறும். (௧௩)

பாலையேகொள்ளும்வேனிற்பருவத்துமுல்லையாதி
வாலியபருவத்தின்பமருவியுமயிலின்கூட்ட
மாலுவதடாமையெண்ணியடங்குவதறிந்துவல்லே
சாலவுண்மகிழ்விஞர்ப்பதாய்முனிகுயிலினீட்டம். (௧௪)

வந்திணர்க்கொங்கைக்கொம்பினேனழயர் தளிர்ச்செவ்வாய்த்தேன்
மாந்துமென்குயிலின்சொல்லின்மலி வண ருக்கள்பாயப்
பூந்துணருகுக்குந்தேறல்புயலெனவொழுந்துமஞ்ஞை
யோய்ந்தனகனவிஞரினுளத்தெழுமகிழ்ச்சியோடு. (௧௫)

பூந்துகள்விரவித்தோற்றுப்புதுமதுக்கவர்ந்துதேனீ
மாந்துதன்மாந்தியெஞ்சுமதுவெலாந்திரட்டிசாரு
மேந்திணர்க்கொம்புதோறுமிருல்பலதொடுத்துமாந்தீர்
போந்தனர்கொள்ளவைப்பபுண்ணியம்விழைந்தபோல். (௧௬)

வேறு.

இலஞ்சிபொய்கைநீரோடையேயெந்திரவாவி
நலஞ்சிறந்துநீர்சுருங்கிநாண்மலர்பலபூத்துப்
பொலஞ்சிறைச்செழும்பவளவாய்த்தோலடிப்புள்ளின்
குலஞ்செறிந்தெழில்கூர்ந்தொளிகொண்டனயாங்கும். (௧௭)

அயிர்வரித்தறல்வார்த்துமெய்யடியவரகம்போற்
செயிரறத்தவத்தெளிந்துசின்னீர்புடையொழுகப்
பயிலும்வெண்மணற்குன்றமும்பாய்மணற்பரப்பும்
வியன்கரைத்தருநீழல்சேர்ந்தாறெழின்மிகுந்த. (௧௮)

ஆயதண்பனிக்குடைந்திடும்போர்வையினைநீயிற்
பாயதண்புனறிரண்டுவீழ்வனபடர்வேனின்
மேயதென்றணிபோர்வையைவியத்தகச்சுருக்குந்
தூயவுத்தராசங்கமேதுணைவனவரைகள். (௧௯)

ஆனவேனிலின்மாந்தர்போலலர்த்தடம்பொழிலுந்
தானுமாடுதல்கருதியோவறிந்திலஞ்சையத்
தேனறுவரைத்திகழ்ந்தெழுகாவிரிக்குடிஞைப்
பேனவார்திரைப்புதுப்புனல்பெயர்ந்தொழுகியதால். (௨0)

தேசத்துள்ளவரனைவருந்தேம்பொழில்புகுந்தும்
வாசத்தென்றன்மெய்யேற்றும்வண்காவிரியாற்றுட்
பூசற்றண்புனலாடியும்போங்கியவெப்பம்
வீசத்தங்கியபுறநகர்மேவுதல்வலித்தார். (௨௧)

கார்துபன்மணிக்கலன்களுங்காமர்பூந்துகிலுஞ்
சாந்துந்தண்பனிநீர்களுந்தமனியப்பொடியும்
பூந்தண்டேறலுமுண்டியும்பொற்பவெவ்வேறங்
கேந்துசேடியரிடந்தொறுமீண்டினர்சூழ. (௨௨)

களிறுபண்ணியுங்கனைவாம்புரவிபண்ணியுமிக்
கொளிறுபன்மணித்தேர்பலபண்ணியுமுவந்து
வெளிறிலன்பருடன்றழீஇயூர்தரமேவிப்
பிளிறுகார்தவழ்சோலைபுக்கனர்பிணையனையார். ௨௩)

வேறு

காமவேளனும்மரகன்னைக்கொண்டுபெண்கடக்கு
நாமவாளிகடாமுநன்றேந்தத்துணிந்தார்போ
லேமமார்தருசேனையெனுமடவார்பொழிலுலாய்
வாமமேகலைகதிர்ப்பவயின்வயிற்சென்றலர்கொய்தார். (௨௪)

மலர்க்கனத்தாற்பொறையாற்றுவணங்கினமைக்கிரங்கியோ
நலக்குமெழிறமதுருப்போனனிவாய்ந்தபகைகுறித்தோ
வலக்கணுறவளிக்குலங்களலர்பலவும்பசுங்கொம்பர்
விலக்கருநல்வனப்பிழப்பமிகப்பறித்தார்மடமாதர். (௨௫)

அடியானும்விழியானுமணைப்பானுஞ்சுவைப்பானும்
வடிவாருநிழலானும்வசையானுமிசையானு
நடமாடுந்தொழிலானுநகையானுநட்பானுங்
கடியாரமலர்ந்துசிலகாரிகையார்வழிநின்ற. (௨௬)

கைத்தளிருமியற்றளிருங்காற்றளிருமுலைத்தொத்து
மெய்த்தவெழின்முகமலரும்விழிவண்டும்வாய்க்கனியும்
வைத்திருக்குமடமாதர்மருங்குபெயர்ந்தாலன்றி
யொத்தமலர்ப்பசுங்கொம்பரொடுவேறுதெரிப்பரிதாம். (௨௭)

கொம்பரெனச்சிலர்சிலரைக்குறுகியவையவர்தம்மைப்
பம்புமலரெனப்பறிப்பப்பற்றியுளநாணுவார்
வெம்புமதுநுகரிளைஞர்வேணவாவொடுங்கொம்பை
வம்பவிழ்கோதையரென்றுதழீஇவெள்கிமருங்ககல்வார். (௨௮)

சிறப்புறத்தின்மயிர்க்கற்றைசேர்ந்தலையப்பசுங்கொம்பி
னறுமலர்கொய்விழவிளைஞனடக்கின்றமாதர்தமை
யுறுகலவமயிலென்னவுளங்கொண்டுபெடைமஞ்ஞை
முறுகியவன்பொடுதொடர்ந்துமூக்கினைக்கண்டயருமால். (௨௯)

மதுவிதழின்முறுக்கவிழ்த்துவார்ந்தொழுகுஞ்செண்பகத்தின்
புதுமலரேயியன்மணத்திற்பொன்றுமைநிலைநின்ற
கதுமெனச்சென்றனர்கொய்யுங்காரிகையாருயிர்ப்புறலான்
முதுசுவைத்தேமலரனைத்துமொய்த்தவியன்மணந்திரிந்த. (௩௦)

கொய்யுநறுமலர்த்தாதுங்கொழுந்தேனுஞ்சிந்துதலான்
மெய்யளைந்துமணங்கமழுமெல்லியலாரிடைவண்டு
பையவணைந்தவருயிர்ப்பாற்பயந்தோடியாடவர்தோள்
வெய்யமலர்த்தொடைவீழ்வதுதுரைப்பமேவுவபோல். (௩௧)

துவ்வாதவமிழ்தனையதொடித்தோளின்மடமாத
ரிவ்வாறுமலர்பலகொய்தெழிலாரத்தொடுத்தமைத்துச்
செவ்வாசப்பொற்சுண்ணஞ்சிவிறிமுதலியதழீஇ
யவ்வார்தண்புனலாடவன்பரொடுநதியடுத்தார். (௩௨)

வேறு.

காரமர்குழல்வளர்சைவலங்கண்கயலொளிநகைநித்திலஞ்
சீரதரம்பவளந்தனந்திகழ்தருபுற்புதமுந்திநல்
லேரணிசுழிகரங்கான்மலரெனவொளிர்மாதர்குழாங்கொடு
நீரணிநதியொடுநதிபொரநேர்ந்தெனநதியுளிறங்கினர். (௩௩)

கண்ணொடுகயலெதிர்பாய்ந்தனகையொடுமகரமலைத்தன
வெண்ணுறுகைவிரலொடுகளிறேற்றனவுதரமடிப்பொடு
தண்ணியதிரைபலமுட்டினதாளொருமூன்றொடுஞெண்டுக
டிண்ணியவரால்கமடஞ்சமர்செய்தனமகளிர்நீராடினர். (௩௪)

குங்குமம்விரவியதண்புனல்குமரர்கள்சிவிறியின்வாங்கிநின்
றங்கலுழ்மேனியர்கொங்கைநேரண்ணுறவிட்டனரைதென
மங்கையரவையிடையிடைவிழவார்தருபந்தின்முறுக்குபு
பொங்கழன்மேற்செலவுந்தினர்பொருசிலைவீரர்களம்பொர. (௩௫)

வாளொழுகியவொளிமின்னனமாதருமெறுழ்வலிமைந்தருந்
தேனொழுகியமலரெதிரெதிர்செல்லுறவுந்தினராடினர்
கூனொழுகியகழைவண்சிலைக்குமரனுயிரதியுமனேகராய்க்
கானொழுகியமலர்வாளிகள்கடவினர்பொருசமர்நிகரவே. (௩௬)

எதிரெதிரொருவர்களொருவர்மேலெறிதருமலருளர்வண்டுக
ளதிருரலினவவர்மாலையினணவினசிவிறியினீர்பொர
முதிர்துயரொடுபுனன்மலர்மலர்முற்றினவலைகளலைத்தலிற்
கதுவினபயில்பொழிலிடர்புறங்கண்டவர்தந்நிலைகொண்டென. (௩௭)

குதலைமென்மொழியருமைந்தருங்குஞ்சரமமர்செய்களம்பொர
மதலைகளெதிரெதிர்நடவுபுவளையெனவிண்டையெறிந்தனர்
கதமலிபாசமெனத்தொடர்கண்முறைவீசினர்தண்டினற்
புதமுறுதொடலையுரம்புகப்போக்கினரார்த்தனராடினர். (௩௮)

சுண்ணமுநறுமலர்ச்சுண்ணமுந்தூயதண்குங்குமச்சாந்தமுங்
கண்ணையுமிளகியதளிர்களுங்கையரிக்கொண்டுசெல்காவிரி
நண்ணலினெடுகியபுணரியுநாறியபுலவொழிந்துடன்
மண்ணினர்மண்ணவர்மகிழ்நாளமல்கியநறுமணங்கமழுமே. (௩௯)

இன்னணமாடியவனைவருமேறினர்கரைமிசைவார்பொழிற்
றுன்னினரணிகளணிந்தனர்சுவையமுதாரவயின்றனர்
மன்னியகாதலினன்பர்தோண்மருவினர்வேனிலுருப்பினைப்
பின்னிலைகண்டனரிங்ஙனம்பெருகியவேனிலுநின்றதே. (௪0)

வேறு.

அனையகாலையிற்கோழியினிருந்தரசாள்வோ
னெனையுமாண்டருள்புரிதருமிறைவனுருவிற்
றினையும்வேனில்வெப்புறுவகைசெய்துமென்றெண்ணிப்
புனையுமாலயந்தொறுஞ்சிறப்பெடுக்கெனப்புகன்றான். (௪௧)

ஞானகேத்திரத்திருந்தருணம்பஞ்ருருவி
ஞனவேனில்வெப்பகற்றவுமரும்பொருள்பலவு
மீனநீங்கியவுழையரினெடுத்தனன்விடுத்தான்
றானுமேகுவான்றன்மனையாளொடுமெழுந்தான். (௪௨)

உடங்குமாதொடுசெல்பவனொளியுமிழ்தரள
வடங்குலாயவன்முலைகளின்வருடிவில்லிடக்கண்
டடங்கலார்புரநீற்றியவண்ணலார்க்கிதனைத்
தடங்கைவாங்குபுசாற்றுதுமெனத்தனிநினைந்தான். ௪௩)

காவிரிக்கரையடுத்தனன்காதலியோடு
கூவிரத்தடந்தேரினன்கூர்த்தபொற்சுண்ணம்
பூவிரைத்தசாந்தாதிநாய்ப்புனல்விளையாடி
மாவிரைத்தெழும்பூம்புனல்வார்கலாயிவர்ந்தான்.

தரங்கவார்புனலலைத்தலிற்றனிக்களனீங்கிப்
புரங்கொல்சேவகற்கமைத்தபூங்கதிர்பொழியார
மிரங்குகாவிரியாற்றுநீரொழுக்கொடுமிறந்த
தரங்குதீவினையானஃதறிந்தனன்மாதோ. (௪௫)

நின்மலாமணியாரநானினக்கெனநினைந்தேன்
புன்மையால்வருகாவிரிப்பூம்புனல்வீழ்த்தே
னன்மைமேவியசானிலம்விற்குமன்னதற்கே
யின்மைவேறுமோராரமெவ்வுலகினுமினையே. (௪௬)

ஆதலாலடியேனதுகெடுத்தவன்பிழையிற்
றீர்தலேபுரிந்தாண்டருள்புரிவையேலதுநின்
மாதர்மேனியிலணிந்துகொள்கெனமதிமாழாந்
தோதினனுளமுருகினன்செய்கடன்முடித்தான். (௪௭)

மன்னர்மன்னருமமைச்சருமருங்குளார்பலருந்
துன்னநன்னதிநீங்கினன்சுடர்மணிக்குழலா
னென்னையாளுடையானிருந்தருள்வளங்கொழிக்கு
நன்னர்ஞானகேத்திரத்தினைநடந்துசென்றடுத்தான். (௪௮)

அகிலகாரணர்வினைஞர்பாற்பூதியையளித்து
முகில்சுலாவரண்கிழைத்தமாமதிலைமுன்வணங்கி
நிகரின்மாமணிநிழற்றுகோபுரநெடுவாயில்
புகரில்கேள்வியான்கடந்துபோர்விடைப்புறத்தடுத்தான். (௪௯)

எட்டுறுப்பினுமைந்துறுப்பினுமினிதிறைஞ்சிக்
கட்டுபொற்செழுங்கோயிலிற்காமர்பன்மறுகு
மட்டுகுத்தவார்தொடைமுடிமன்னவன்சூழ்போந்
துட்டடைந்தபேரன்பொடுமுள்ளுறப்புகுந்தான். (௫௦)

ஆயவேலையின்முன்னரேதிருமுடியாட்டத்
தூயசீர்த்திருமஞ்சனஞ்சுடர்மணிக்குடத்துட்
பாயகாவிரிப்பைம்புனல்பரிசனமுகந்துத்
தீயவாங்கியாட்டினனிறைபூசனைமுடிப்போன். (௫௧)

அன்பரன்பினுக்கெளிவருமமுதநாயகனூர்
பொன்பிறங்கியபுனலொடெங்குடம்புகுந்தார
மின்பிறங்குதம்முடிமிசைமிளிர்தரக்கருணை
மன்பிறங்கியசோழன்மேல்வழங்குகாரணத்தால். (௩௨)

அன்னவாறுநீர்க்குடத்தினுளடுத்தமாறூர
மன்னுதார்முடிவிழுதலும்பூசைசெய்மறைநூன்
றன்னுமோகையன்சுடரணியெவற்றினுமேலான்
மின்னைவாங்கணிந்திருந்தமைகண்டனன்வேந்தன். (௩௩)

சம்புமூலத்தின்வீற்றிருந்தருளியதலைவ
வெம்பிரானினதருளெனக்கிருந்தவாறென்னே
வம்புநீணதிக்கெடுத்தமாறூரநின்முடிமே
லும்பராருகன்றதிசயமுறவணிந்தனையே. (௩௪)

என்றுநாயகன்றிருமுடியிருந்தமாறூர
நன்றுநோக்கியநாமவேலரையனேத்தெடுத்தா
னன்றுசூழ்ந்தவரனைவருங்கண்டதிசயித்தார்
நின்றதாலவன்பெரும்புகழின்றுநீணிலத்தில். (௩௫)

ஏகநாயகனருளினுக்கிலக்கமாயரையன்
மாகர்சூழகிலாண்டநாயகியையும்வணங்கி
மேகமேலுறங்கெழின்மதின்முற்றுறசசூழ்ந்து
போகபூமியிற்பொலிந்ததன்னகர்புகுந்திருந்தான். (௩௬)

வேறு.

அறையூருவின்வெற்பிறையுயிர்த்தவணங்கையிருத்துந்தலைவனுக்குக்
கறையூரயில்வேல்கரத்தோச்சிக்கருதாருயிர்மேற்கொறுகொறுக்கு
முறையூர்ச்சோழன்மணியாரஞ்சாத்திற்றுரைத்தாமும்பலொடு
முறையூர்சிலம்பியிவையிரண்டுமுயன்றபணியுமொழிகுவாம். (௩௭)

ஆரஞ்சாத்துபடலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-௩௮௧.

## தெசாரணியப்படலம்.

—:o:—

மதுமலர்ப்பொழின்ஞானபூமியின்வடமேல்பாற்
புதுமலர்த்திரளணிந்துபொன்மணிபலகொழித்துப்
பதுமகுண்டலியெனப்படும்பசும்புனற்றீர்த்தங்
கதுவிநின்றதுசுவேதவெற்பெனவொருகல்லு. (௧)

ஆரந்தேக்ககிலசோகுசண்பகமகிழ்கன்னி
காரம்பாடலங்குங்குமங்கணிவழைசிந்து
வாரங்கூவிளந்தாதகிமருதுமந்தாரம்
வேரலாதிகண்மிடைந்தகானுடுத்ததவ்விலங்கல். (௨)

வருடைசாமரைமாமரைவாரணமுழுவை
யெருமைகேழல்பஞ்சானனம்யாளியெண்காமா
வருணமாதியமிருகங்களடர்ந்தவக்கானத்
தொருவில்வாழ்க்கைகொண்டிடுமொருசுவேதவெண்களிறு. (௩)

வழுவிலாதமெய்யன்பினல்லையகமயின்றோன்
பழுதில்பூசனைபுரிதரப்பல்வரங்கொடுத்து
முழுதுமானவணிருந்தவம்மூரிமால்வரையால்
விழுமமேவுநாண்மேலைநல்வினையும்வந்தடுப்ப. (௪)

அளகின்றோவென்குரால்பயின்முழையினவ்வடுக்க
விளகுகானகத்திடைநின்றுமெழுந்துவல்விரைந்து
குளகுதேரியசெல்வதுகொள்ளிடங்கடந்து
வளகுநீடியஞானபூமியைமருவியதே. (௫)

வேறு.

ஞானபூமியைநண்ணவேலோடுமங், கானமெய்யுணர்வகத்துதித்தெழுத்
தானமாமழைத்தறுகண்வாரணம், வானளாவுவார்பொழிலின்மேயதே. ()

இரைநுகர்ந்திடுமெண்ணநீங்குபு, விரையவார்பொழின்மேவலோடுமங்
குரையிறந்தவனுருவநாவலின், புரையுநீழலிற்பொலியக்கண்டதே. (எ)

அசித்துமுப்புரமழித்தநாதனை, நசித்துவல்வினைநழுவநோக்கலும்
பசித்தகன்றுதாய்பாற்படர்ந்தெனை, விசித்தவன்பொடும்விரைந்தடுத்ததே.

மெய்விதிர்ப்புறவிழியினீருகக், கையெடுத்துமுன்கால்வளைத்துமண்
ணையெனப்படுத்தமுதநாயகன், செய்யசேவடிசென்னிவைத்ததே. (௯)

எழுந்துசூழ்ந்துமுன்னெய்திக்கூத்துமிட், டழுந்துநீர்க்கடலயின்றகார்க்
குரல் விழுந்துகீழ்ப்படமிக்குலம்பிமால்,கொழுந்துகொண்டெழவிதுகுறிக்
குமே. (௧0)

வேறு.

பண்டைவல்வினையின்றிருக்கினுலுடலம்பற்பலவெடுத்திதுகாறு
மண்டியதுயரினமுழந்தினின்றழிந்தாமற்றுமுன்செய்தவம்யாதோ [யை
தொண்டுகொண்டருளுமமுதநாயகனைத்துணையிலாவெமதுயிர்த்துணை
யண்டருக்கரியவமரனைநாவலணிநிழலெளிவரக்கண்டாம். (௧௧)

இனியிவற்குரியபூசனையியற்றியிருண்மலமுதலொடுந்துமியப்
புனிதமெய்ஞ்ஞானவின்பமுத்தியினைப் பொருந்துவதேகடனென்னக்
கனியுளமுருகக்கதிர்பொழிதரளங்களைகெடுந்திரையெடுத்தெறியும்
பனிமலர்த்தீர்த்தம்பலவுமாங்கெய்திப்படிந்திருங்கரையினேறியதே (௧௨)

நீட்டிவார்க்கரத்திற்கோட்டுறுமலறுநிலத்தலர்மலரும்பைங்கொடிகள்
காட்டுபன்மலரும்புனல்வளர்மலருங்கவின்றளிர்காய்கனிபலவும்
வேட்டனமிதப்பப்பறித்துவெண்ணுவல்விரிநிழலொருசிறையிருத்திப்
பாட்டளிமுரலத்தழைகொடுதிருமுன்பயிறுராறுடைத்தகற்றியதே. (௧௩)

வேறு.

செம்பொன்னூநவமணியுஞ்செழுமலருங்கொணர்ந்திறுக்கு
மம்பொன்னிப்புனல்புழைக்கையகத்தேப்பிப்போதந்து
முன்பன்னமறியாதமு ஒருர்முடியாட்டி
மன்பன்னமலர்பலவுமணவொடுத்தருச்சித்து. (௧௪)

தீங்கனிகாயெதிர்வைத்துத்திருவமுதுசெய்வித்துப்
பாங்குபெறத்தனக்கியன்றபலபலவுமினிதாற்றி
நீங்கருமெய்யன்பினொடுமன்றநதிமுழக்கெழுப்பி
யாங்குவலம்வந்தொருசாமரந்துதியானித்திறைஞ்சி. (௧௫)

கறைகொண்டநெடுஞ்சூல்காபாலிமகிழ்கூர
விறைகொண்டவித்தலத்திளிருந்துசலமலம்விடுப்பி
னிறைகொண்டபிழைவந்துறிற்குமெனவரிதகன்று
நறைகொண்டதன்கானநண்ணியதவ்வயக்களிறு. (௧௬)

இன்னவாறிபம்பூசையியற்றிவருங்காலத்து
முன்னரேயாயகொருசார்முருகவிழ்பூமரத்துதித்து
நன்னர்நூலிழைத்திழைத்துநண்ணுவதுவெண்ணாவ
றன்னைநேர்கண்டதனிற்சார்ந்ததாலொருசிலம்பி. (௧௭)

முன்செய்ததவப்பயத்தான்முருகவிழ்மென்மலர்நாவன்
மன்செய்தபசுங்கோட்டின்மனைதனைக்குச்செயமுயன்று
பின்செய்தநூலிழைத்துமேலோடுகீழ்தருங்காற்
கொன்செய்தபெருமானார்திருமுன்னர்க்குறுகியதே. (௧௮)

சேணுருமணிமேருச்சிலைவளைத்தசெழுமலையைப்
பூணாரமெனநாகம்பூண்டருளும்பூரணனைக்
கோணுகவணையானுங்குறுகரியகுருமணியை
மாணுதமலந்துரியமருங்கெதிர்கண்டதுமாதோ. (௧௯)

செஞ்சுடரோன்றனைக்கண்டதிகழ்விழியினிருளேபோன்
மஞ்சனுருக்காண்டலுமேமறைத்தமலம்பெரிதிரியத்
துஞ்சியநல்லறிவுதிப்பத்தொழுதெழுந்தன்னேயென்னே
கஞ்சனரிதமக்கரியான்காட்சிகொடுத்தனனென்னா. (௨௦)

கழிகாதலுளத்தெழலுங்கண்ணுதலைப்பிரியாது
வழிபாடுசெயல்வேண்டுமற்றதற்குமனுவேந்தா
யொழியாதுபொருள்பலவுமுறையர்தரப்பெற்றிலனென்
றழியாமற்றினநூலினாலயஞ்செய்தெனத்துணிந்து. (௨௧)

வானளவுதூவிகையின்மணிக்கோயின்மண்டபங்க
ளானபெருங்கோபுரங்களணிகெழுமாமதிற்குலங்க
ளூனமறவுறுப்பினொடுமுனற்றுவவேனையபலவு
மீனமறவாய்நூலினிழைத்துநிரப்பியதன்றே. (௨௨)

வெண்ணாவனாறுங்கனிமேல்விறந்தொளிர்தாரகைநிகர்ப்பத்
தண்ணார்வெண்மதிநிரம்பித்தயங்கியமண்டலமேபோ
னண்ணாநின்றதுகோயினாற்றிசையும்போக்கியநான்
மண்ணாரத்தாங்கியனமதிக்கிரணம்போன்றவே. (உ௩)

கலதிபுரிகொடுஞ்சாபநகையகலத்தவமுன்பு
நிலவுபுரிந்தொளிர்கலைகணிரம்பியதுமறுவலும்புக்
கலகிறவங்குயின்றுகறையகன்றுமுழுவடிவானு
மிலகமலன்முடிக்கணியாயிருந்ததூஉம்பொருங்கோயில். (உ௪)

கடிகமழும்வெண்ணாவல்கஞலியபாசடைதொடுத்து
வடிநெடுநூலிழைத்தெடுத்தமணிக்கோயில்வார்கொடியி
னிடியுயர்த்தோனெனத்தானுமினியவரங்கொளமேக
மடிகண்முடிமிசையமுததாரைகளாட்டுதல்போலும். (உ௫)

–யசு
மாயிருந்தண்டாளமாலிகைக்குடையும்பொருமவனாற்
பாயிருந்தநித்திலப்பூம்பந்தருமொத்திடுமெங்கு
மூயிலங்கியிறையவனார்முடிமிசைமல்கியகோயில். (உ௬)

ஒருகங்கைதனைச்சடையினொளித்திருந்தாரெனவேனை

பொருதந்தக்கங்கையினைப்புயக்கமிசைக்கவிந்ததூஉ
மருவும்புல்லியசிலம்பிவாய்நூலின்மணிக்கோயில். (உ௭)

கங்கையணிந்ததுமன்றிக்காமர்திருவுருமுழுதும்
பொங்குபுனற்றிரளானபுண்ணியர்பரிவழியாட்டிற்

யங்கணைந்துமுடிமிசைபோர்த்தலங்கியதூஉம்பொரூஉங்கோயில். ()

பெருமபூதஙகளோரைந்துமொருதான்மற
றிரைத்தபுனற்சடைக்கற்றையெம்பிரானுருவாகித்
தரைத்தலைவைகியதெவர்க்குஞ்சான்றுரைத்தாலெனப்புனலே
நிரைத்தமணிக்கோயிலுமாய்நிற்பதூஉம்பொருமதுவே. (உ௯)

பைத்தபாம்பணையானும்பங்கயனும்வானவருந்
தத்துநீர்க்கடல்புடைசூழ்தரையவரும்பணிந்திரப்ப
முத்தியாதிகள்கொடுக்குமுதிர்ந்தபெரும்புகழ்சூழ்ந்து
மெத்திமேக்குறநிவந்துவிளங்கியதும்பொருங்கோயில். (௩0)

வேற்றொருமால்வரைசிலையால்வெற்றொருவர்திருக்கோயி
லாற்றுதல்வேண்டாவெனவயவிரொளிவெள்ளியங்கிரியே
போற்றுமெழிற்கோயிலுமாய்ப்போந்துசெழுநீர்த்திரளார்
வீற்றிருப்பவிருந்ததூஉம்விழையுமொருநாற்கோயில் (௩௧)

எந்தவுயிரடித்தொண்டினியல்கின்றதந்தவுயிர்
தந்தவுடல்பொருளுயிருந்தகவேற்றுக்கருணைசெய்யு
மந்திமதிமுடிவேய்ந்தாரன்புமிகுஞ்சிலம்பியின்வாய்
வந்தசிறுநூற்கோயின்மணிக்கோயிலெனக்கொண்டார். (௫௨)

ஊதவுகுசிறுநூலினொருகோயில்வெண்ணாவற்
சீதநிழலமர்ந்தபிரான்றிருக்கோயிலெனக்கொண்டா
ராதலினெவ்வுயிரெதனையளிப்பினுமன்பொன்றுளதேற்
சாதில்பிறப்பினையறுக்குந்தவமாகமுடியுமே. (௫௩)

புல்லியமெல்லுடற்சிலம்பிபுனிதர்மகிழ்திருக்கோயின்
மெல்லிழையினனிவருந்திமிகவியற்றுந்திறமறிந்து
நல்லவுடல்பொருளாதிநன்குடையசிலரன்றே
வொல்லுநெறியாற்பணிசெய்தொழுகாமைக்கெவன்செய்கேன். ()

உறுநூலின்முறையாற்றானுஞற்றுபணியினுஞ்சிறப்பச
சிறுநூலின்மணிக்கோயில்செய்துமுடித்திடுசிலம்பி
நறுநாவலிடைவதிதனவையென்றுமுன்புதான்
பெறுநீர்மைமரமெய்திப்பேணியிருந்ததையன்றே. (௫௫)

வேறு.

சிலம்பிசிறுநூற்கோயில்செய்திறைஞ்சிவலம்வந்துசென்றுபாங்கர்
நலம்பெறுதன்னிருக்கையினைநண்ணியவந்நாள்விடியனணுகுங்காலு
மலங்குமணிக்காவிரியிற்புனலாடியலர்கனிகாயமையக்கொண்டு
புலம்புகளியளியுளரும்புகர்முகத்தகடகளிறுபுகுந்ததன்றே. (௫௬)

கதழ்ந்துபுகுமதவேழங்காமருநூற்கோயிலெதிர்கண்டுகண்டோ
ரிதந்தழுவுசிவபெருமான்சூழலெலாமிதுவளைந்ததென்கொல்கெட்டேன்
பதந்தழுவுமடியார்களிதுசூழ்ந்தபணிமலரும்பறித்துச்சாத்தார்
மதந்தழுவுபுல்லியர்போல்வந்ததனைக்கொல்வலெனமதித்துப்பின்னர் ()

நெடும்புழைக்கைத்தலத்திருந்தமலர்முதற்பல்பொருளொருபானிறுவிவா
சம், படும்பசுந்தண்பொழின்முழுதுந்துருவிவிழிக்கெதிர்சிலம்பிபடாதவா
ற்றூற், கொடும்பனிவெண்மதிக்கொழுந்துமிலைத்தவர்தந்திருமுன்புகுறுகி
நூலா, விடும்பெரியகோயிலினைச்சிதைத்திடமெல்லாம்புனிதமியற்றிச்செ
ன்று, (௫௮)

நீட்டுசிறுநூற்றிரளானிரந்தரித்தகோயிலெலாநிமிட்டப்போதில்
வீட்டிநனியுழக்குதலான்மிளிர்தருமந்நூற்பரிசம்விரவுந்தீமை
யோட்டநறும்புனன்மீட்டுமுறத்தோய்ந்துவெண்ணாவன்மூலமெய்தி
யேட்டையறமுன்புபோற்பூசித்துத்தனதிருக்கைக்கேகிற்றம்மா (௫௯)

வேறு.

நெருநனூற்றிரளினணிகழ்த்துங்கோயிலிற். கருணையங்கடலினைக்க
ண்டுசூழ்ந்தவன், மருமலர்ச்சேவடிவணங்குவாமெனப்,பொருவறுசிலம்பி
யும்புகுந்ததென்பவே. (௬0)

நறுங்கனிதூங்குவெண்ணாவன்மென்னிழல், பெறுங்கடவுள்பிரான்பேணுமாலய மிறுங்கரிசறிந்திஃதியார்செய்தாரென. வறுங்களங்கணடவரென்னமாழ்குமே, (௪௧)

மண்ணிடைவிழுமெழுமறுகுநாவலி, னண்ணியசரகொடுநவையுருவகை, யண்ணலுக்கிழைத்தவாலயமுஞ்சிந்துமே யெணணியதெண்ணமென்னுயதென்னுமே: (௪௨)

வலமலனூர்முடி, நாவலின்சரகலானவமதாகவே பூவலர்தளிர்தழைபொதுளிற்றீதென்ன, பாவமென்றினையுமெய்பதைக்குஞ்சோருமே (௪௩)

கையெனக்கில்லைசெய்கரிசுரீக்குரச. செய்யமேனியினவைசெறிந்து நிற்பதோ, வையவோவடியனூலாவதென்னெனக, கையறுகவலையிற்கலங்கிக்கன்றுமே. (௪௪)

மண்டிலைசரகுகா நிற்பமற்றிது. கணநிரீர்ப தும்பிழைகதுவுமேதுயர், கொண்டலமருதலேகொள்கைதநன்றென 'விணடொடராலயம்விதிததுப்போந்ததே (௪௫)

நாடொறுங்கடகரிநலிந்துசெல்லவுங. கோடலின்மனததொடுஙகோயிலாக்குபு, பீடுறச்செல்லலிற்பெருகுவெஞ்சின, நீடலிற்சிலம்பிமற்றிதுசி (௪௬)

உருவநூற்கோயிலையுலைத்துக்குப்பையை, மலன்மெய்யுறீஇத், திருவடிபிலழத்தவாருயிர்செகுத்தலே பொருளெனக்கரந்ததுபுடையிருந்ததே. (௪௭)

ங், கரவொடிருப்ப புக்குலாய், விரவிழைக்கோயிலைவிளித்துமுன்புபோற், பரவியபூசனைபயிற்றிநின்றதே. (௪௮)

வேறு

ஒளித்தொருமருஙகுவைகுமொள்ளியசிலம்பிநோக்கித்
தெளித்தருளிறைவன்பூசைசெய்திடினிழைததகோயில்
விளித்தலும்வேண்டுமகொல்லோவெனவெழும்வெகுளியூக்கத்
துளித்திழிமதமால்யானை தூஙகுகைததுளைபுக்கன்றே (௪௯)

ஏகநாயகனோடொர்றித்திருந்தியானத்தினின்ற
நாகநீள்கரத்தினூடுநணணியசிலம்பியென்னே
வேகமாய்க்கபாலத்தேறிவெசரெனக்கறித்தலோடு
மூகமாஙகிருந்தசோடலம்பிமண்ணிடைவீழ்ந்தன்றே. (௫௦)

இடியென்பபிளிறுங்கையையெடுத்தெடுத்தெறியுமணணி
னடியுராய்ப்புழுதிபொஙகவலமரும்புரளும்பொஙகும்
படியினின்றெழுந்துசாலப்பன்முறையியுர்க்குஞ்சாய்த்தீ
முடிநனிதுளக்கும்வீழ்ந்துமுடிந்தது தறுகண்வேழம். (௫௧)

வார்ந்தகை நுதியைவாபின்வல்லிமால்யானைசாம்பச்
சார்ந்துமணணிழியவாய் ஈறுன்றடையுறுதலாலே
யூர்ந்துளர்சிலம்பிதானுமுழுதுயருழந்துமய்ந்த
தார்ந்தெதால்பகையுமவீர்ந்தவைபிரண்டா்குமாதோ. (கூ௨)

மணண்டைசசிலம்பியென்னமதமலையென்னநின்றோர்
பண்ணவராஞர்நர்வற்பனிமலர்பிழலிஞரும்
விண்ணவர்செரிபூமாரிரிடையாக்கணங்கள்சூழப்
புண்ணியவிடைமேல்கொணடுபூவையொடெதிரேசின்றூர். (கூ௩)

கண்டனரிறைவனை க்கடவுளானவன்பர்
கொணடனர்மகிழ்ச்சிபுசசிக்கூப்பினர்செங்கைகண்க
ளுணடுளிசிந்தசசூழ்ந்துநாபு ஞ்சிலம்புந்தாளிற்
றணடெனவிழுந்தகாடிட்ட டிட்டேத்தாசின்றூர். (கூ௪)

வேறு

செழுநீர்ததிரளேதிவண்மாமணியே?கழுதார்வணமாடியகண்ணுதலே
தொழுவாரமுத்துரிசார்தமியேம். பழுதார்பணியும்பணியாகிளேயே.()

அற்றூர்க்கலதின்பருளாசிதியே, வற்றூதவருட்பெருவாரிதியே, செற்றூர்புரமீற்றியசேவகனே. பற்றூப்பணியும்பணியாக்கிளேயே. (கூ௬)

மடமாதிடமாகியவொழ்க்கையனே,சுடர்மாமதிவேய்ந்தருள்சுந்தரனே யடர்தீவினேயேமையுமாண்டருளப், படராப்பணியும்பணியாக்கிளேயே.()

வேறு

என்றுதோத்திரமியம்பவுமெம்பிரான்மகிழ்ந்து
நன்றுகூறுவான்வுத்தருமன்புடையமரீர்
வென்றுதீவினேயினேத்தையும்விளங்குமித்தலத்தி
ஞென்றுநாம்விழைபூசனேயுஞற்றுகாரணத்தால். (கூ௮)

இழிந்தயோனியென்றியம்பிடப்படுமதுருவங்
கழிந்தகாலிவண்யாவருநமமுறுந்தேசு
பொழிந்தவாக்கையராயினீர்புல்லுதீவினேயு
மொழிந்ததீபிரிக்குபர்ந்தனீரும்பாரிறைஞ்ச. (கூ௯)

லருதலாக்கையிறந்தவர்யர்ந்தநம்முலகிற்
கருதுமேருகும்பெருநகணநா றுய்க்கலந்து
வருநமாமலைவிடைகொளவயகுநம்மருளாற்
றிருமேவநமானந்தவசமாய்ரிலாக்க. (ச௦)

ஞானகேத்திரமானவித்தலத்திடைஞான
மோனவீட்டினேமுற்றுவான்முயன்றகாரணத்தா
லீனநீக்குமித்திருநகரென்றுநின்பெயரான்
வானநாடரும்வழங்கிடப்பட்டுவாழ்ந்திருக்க. (சக)

சிலம்பியாக்கையிற்றீர்ந்தவன்றிகிரியொன்றுருட்டி
யலம்புதீம்புனற்காவிரிநாடரசாள்வோர்
குலம்புகாவுலகாண்டிநங்குரைகழற்பணியாற்
புலம்புதீர்ந்துயர்வீட்டினைப்புணர்கெனப்புகன்று. (௬௨)

அமுதநாயகரவிர்செழுநீர்த்திரட்குறியிற்
குமுதவாயுமைபாளொடுங்கொம்மெனமறைந்தார்
சுமுகராயருள்வழங்கினூர்மறையுமுன்சுகுணச்
சமுகராயிமையார்விமானங்கொடுசார்ந்தார், (௬௩)

களிற்றிற்றீர்ந்தவன்கடிகெழுநாவலின்மூலப்
பிளிற்றுத்தோலுரியாரடிபெயர்த்தும்வந்தனைசெய்
தொளிற்றுத்தேசுடைவிமானமூர்ந்துயர்சிவபுரத்தின்
வெளிற்றுக்கேள்விதீர்ந்தானந்தவெள்ளத்துட்குளித்தான். (௬௪)

தேனைக்காதலித்துளரளிசெறிகவுட்கடாத்த
வானைக்காரருள்புரிதலினானைக்காவாயிற்
றேனைக்காவுடையிரும்பதியெவற்றிலுமேலா
ரக்காமுருவுயர்வருண்ஞானகேத்திரமே. (௬௫)

நரமானைக்காவா
மானமால்விடையூர்தியாரருளியவரத்தான்
மானவேலுடைச்சோழனுய்ச்சிலம்பிவானவனு
னென்றுரைத்திடுஞ்சூதன். (௬௬)

கெசாரணியப்படலம்முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௧௦௫௨.

## கோச்செங்கணார் வழிபடுபடலம்.

### இதுமுதல் (௬) செய்யுள் சிதம்பரம். தலவருணனை.
### இச்செய்யுளுக்கு பதப்பொருட் பிரிவு (௫)

தருமந்திகழுமுளத்துத்தவமுனிவர்தொழுதேத் த
வருமந்திநிறப்பெருமான்மகிழ்ந்தாடுமரங்காகு ங்
கருமந்திமுசுவுகளுங்கடிபொழில்சூழ்ந்தடைந்தவர்க்கு த்
திருமந்தியாதருளுஞ்சிதம்பரமென்றொருதல மே.

இ-ள், கருமை மந்தி முசு உகளும்-கரிய பெண்முசு ஆண்முசுவிரண்டுங்களித்துத் தாவித்திரியும், கடி பொழில் சூழ்ந்து - வாசனையையுடைய சோலைகளாற் சூழப்பட்டு. அடைந்தவர்க்கு திரு மந்தியாது அருளும்சிதம்பரமென்று ஒருதலம் - தம்மையடைந்தோர்க்கு ஞானச்செல்வத்தைத்தாமதியாதருளுஞ்சிதம்பரமென்று ஒருதல மிவ்வுலகின் கண்ணுளது—(அத்தலம்) தருமம் திகழும் உளத்து தவமுனிவர் தொழுது எத்த - சிவதருமம் விளங்கு மிருதயத்தையுந் தவத்தையுமுடைய முனிவர்கள்வணங்கியேத்த, வரும் அந்தி நிறப்பெருமான் மகிழ்ந்தாடும் அரங்கு ஆகும் - தோன்றிய செவ்வானம்போலுந் திருவுருவத்தையுடைய நடராசர் (ஆன்மகோடிகளின் பொருட்டு) தாம் திருவுள்ளங்கூர்ந்து திருநடனஞ்செய்யும் நாடகசாலையாகும் (எ - று.)

கரிய பெண்முசு ஆண்முசு இரண்டுங்களித்துத் தாவித்திரியும் வாச ஊாயையுடைய சோலைகளாற் சூழப்பட்டுத் தம்மையடைந்தோர்க்கு ஞான ச்செல்வத்தைத் தாமதியாதருளுஞ் சிதம்பரமென்று ஒரு தலமிவ் வுலகின்கணுள்ளது - (அத்தலம்) சிவதருமம் விளங்குமிருதயத்தையுந்தவத் தையுமுடைய முனிவர்கள் வணங்கியேத்த - தோன்றிய செவ்வானம் போலுந் திருவுருவத்தையுடைய நடராசர் (ஆன்மகோடிகளின் பொருட் டு) தாம் திருவுள்ளங்கூர்ந்து திருநடனஞ்செய்யும் நாடகசாலையாகும். (க)

## இச்செய்யுளுக்கு பதப்பொருட் பிரிவு (ச)

என்றுவருநமக்கருளென்றிரங்கலுறுவீரந் தோ
வென்றுவருந்தவிர்மணியினிரணியமன்றிறைஞ்சா மை
யென்றுவருமலக்கடலுமெண்ணியதும்வரும்பணி மி
னென்றுவருங்கடலறத்தேனிழிபொழிற்பூவைகள்கிளக்கு ம்.

இ-ள், கடலும் உவரற தேன் இழி பொழில் பூவைகள் - கடலுமுவர் ப்பு நீங்கத்தேன் பெருக்கைச்சொரியும் (பூங்கொத்துகணிறைந்த வத்த லத்தைச் சூழ்ந்த) சோலையில் வசிக்கும் நாகணவாய்ப்புள், அந்தோ நமக்கு அருள் என்றுவருமென்று இரங்கலுறுவீர் - ஐயோ நமக்குச் சிவபெரு மான்றிருவருள் எப்போதுகைகூடுமென்றுகருதிமனம்வருந்துவீர், என்று வருந்த அவிர் மணியின் இரணியமன்று இறைஞ்சாமை என் - சூரியன் (தனது கண்வழுக்குதலால்) வருந்த விளங்காநின்ற மணிகளழுத்திய பொன்னம்பலத்தை வணங்காமையாது, மலக்கடலும் துவரும் எண்ணிய தும் வரும் பணிமினென்று கிளக்கும் - மும்மலமாகிய கடலும் வற்றும் கருதியதுங் கைகூடுமாதலால் வணஙகுமென்றுகூறும் (எ - று.)

கடலும் முவர்ப்பு நீங்கத் தேன் பெருக்கைச்சொரியும் (பூங்கொத்து கள்) நிலைறந்தவத்தலத்தைச சூழ்ந்த) சோலையில் வசிக்கும்நாகணவாய்ப் புள் - ஐயோ நமக்குச்சிவபெருமான்றிருவருள் எப்போதுகைகூடுமென்று கருதிமனம் வருந்துவீர் - சூரியன் (தனது கண்வழுக்குதலால்) வருந்த விளங்கா நின்ற மணிகளழுத்திய பொன்னம்பலத்தை வணங்காமையாது மும்மலமாகிய கடலும் வற்றும் கருதியதுங் கைகூடுமாதலால் வணங்கு மென்று கூறும். (உ)

## இச்செய்யுளுக்குப் பதப்பொருட் பிரிவு (௬)

தருக்கமலமலமென்னத்தத்தைகள்பேசுவபொழில்க ண்
மருக்கமலமலர்மன்னும்வண்டிசைபாடுவதடங் க
ளிருக்கமலமலரமுறையியம்புவனவிருங்கிடைக ண்
முருக்கமலமலகிடுமெந்திரவழன்முற்றுவமனைக ள்.

இ-ள், பொழில்கள் தருக்கு அமல மலமென்ன தத்தைகள் பேசுவ. சோலைகள் அகங்காரமதிகரித்தலான் மும்மல முண்டாமென்று கிளிகளா

லும் பேசப்படுவன. தடங்கள் மரு கமலமலர் மன்னும் வண்டு இசைபாடுவ தடாகங்கள் வாசனையையுடைய தாமரைமலரிற் பொருந்திய வண்டுக ளாலிசைபாடப்படுவன. இருமைகிடைகள் இருக்கு அமல மலர முறை இயம்புவன-பெரியவேதாத்தியயனம்பண்ணுமிடங்கள் இருக்குவேதமழகு பரவமுறையாக (பயில்வோரால்) ஓதப்படுவன. மனைகள் மலம் முருக்க அலகிடும் மந்திரவழல் முற்றுவ - இலலங்கள் மலத்தைக்கெடுக்கக்கண்க்கு மந்திரத்தீ அந்தணரால் முடிக்கப்படுவன (எ - று.)

சோலைகள் அகங்கார மதிகரித்தலால் மும்மலமுண்டாமென்று கிளி களாலும் பேசப்படுவன-தடாகங்கள் வாசனையையுடைய தாமரைமலரிற் பொருந்திய வண்டுகளால் இசைபாடப்படுவன - பெரிய வேதாத்திய யனம் பண்ணுமிடங்கள் இருக்குவேதமழகுபரவமுறையாக (பயில்வோ ரால்) ஓதப்படுவன - இல்லங்கள் மும்மலத்தைக்கணிக்கு மந்திரத்தீ அந் தணரால் முடிக்கப்படுவன. (௩)

## இச்செய்யுளுக்குப் பதப்பொருட் பிரிவு (௪)

இருப்புலக்கைத்தொடர்க்காத்தவிபமமர்செய்வனவெளிக ள்
விருப்புலக்கைப்புயக்களமர்வினைபுரிவதடம்பணைக ள்
செருப்புலக்கையரைப்படுக்குஞ்செறிபொறிவைகுவமதில்கள்
உருப்புலக்கையணிந்தவர்மெய்யுரைபயில்வதிருமடங்க ள்.

இ-ள். வெளிகள் இருப்பு உலக்கை தொடர் கரத்த இபம் அமர் செய்வன - வெளிநிலங்கள் இருப்புலக்கையையுஞ் சங்கிலியையுமேந்திய துதிக்கையையுடைய யானைகளாற்போர்செய்யப்படுவன. தடம்பணைகள் விருப்பு உலக்கைப்புயம் களமர் வினைபுரிவ - விசாலித்தவயல்கள் விருப் போடுதிரண்டகல்லையொத்த கைப்புயத்தையுடையமள்ளரால் (அந்நிலத் துக்குரிய) தொழில் புரியப்படுவன. மதில்கள் செருப்புலம் கையரை படுக்கும் செறி பொறி வைகுவ - மதில்கள் போர்க்களத்திலெதிர்ந்தவஞ் சகரைக்கொல்லும் நெருங்கிய வெந்திரங்களானிறையப்படுவன - திரு மடங்கள் உரு புல் அக்கை அணிந்தவர் மெய்யுரை பயில்வ - அழகியமட ங்கள் தமது திருவுருவிற்பொருந்துமாறு கண்மணியையணிந்தவரா லுண்மைவாசகங்கள் பயிலப்படுவன (எ - று.)

வெளிநிலங்கள் இருப்புலக்கையையுஞ் சங்கிலியையுமேந்திய துதிக் கையையுடைய யானைகளாற் போர்செய்யப்படுவன - விசாலித்த வயல் கள் விருப்போடு திரண்டகல்லையொத்த கைப்புயத்தையுடைய மள்ள ரால் (அந்நிலத்திற்குரிய) தொழில் புரியப்படுவன - மதில்கள் போர்க் களத்திலெதிர்த்த வஞ்சகரைக்கொல்லும் நெருங்கிய வெந்திரங்களா னிறையப்படுவன - அழகிய மடங்கள் தமது திருவுருவிற் பொருந்துமாறு கண்மணியை யணிந்தவராலுண்மை வாசகங்கள் பயிலப்படுவன. (௪)

## இச்செய்யுளுக்கு பதப்பொருட்பிரிவு (௫)

நதிக்கோட்டந்தருக்காமைநாணமதுப்பொழிந்தளிக்கு ம்
மதிக்கோட்டந்தருக்காமைமங்கையர்வாணுதல்கதிர்க்கு ம்
நிதிக்கோட்டந்தருக்காமையலைநீக்கென்றிடினிருத ன்
கதிக்கோட்டந்தருக்காமையடியாரைக்களிப்பிக்கு ம்.

இ-ள். தரு கா நதிக்கு ஒட்டம் மை நாண மது பொழிந்து அளிக்கும்- மரங்களையுடைய சோலை நதிக்குப் பிரவாகத்தைமேகமும் வெட்கத்தேன் பெருக்கைச்சொரிந்துகொடுக்கும். மதிக்கோட்டம் தருக்காமை மங்கையர் வாள்நுதல் கீதிர்க்கும் - சந்திரன்வளைவு அகங்கரியாமற் பெண்களது ஒள்ளிய நெற்றிவிளங்கும் - நிதிக்கு ஒட்டு அந்தருக்கு ஆம் மையலை நீக்கென்றிடின் - திரவியந்தேடும்பொருட்டு மனத்தைச்செலுத்தி வருந்தும் ஞானக்கண் ணில்லார்க்குண்டாகிய மயக்கத்தை யொழியென்றிரப்பில், தன் இருத்திக்கோள் தந்து அருக்காமை அடியாலரகளிப்பிக்கும் (அத்தலம்) தன்னுடைய விருவகைப்பட்ட முத்திக் கொள்கையை யருளி மேலுங் குன்றாமலடியாரைச் சந்தோஷிப்பிக்கும். (எ - று.)

மரங்களையுடைய சோலை நதிக்குப் பிரவாகத்தை மேகமும் வெட்கத் தேன் பெருக்கைச் சொரிந்து கொடுக்கும் - சந்திரன் வளைவு அகங்கரியாமற் பெண்களது ஒள்ளிய நெற்றி விளங்கும் - திரவியந் தேடும்பொருட்டு மனத்தைச் செலுத்தி வருந்தும் ஞானக்கண்ணில்லார்க் குண்டாகியமயக்கத்தை யொழியென்றிரப்பில் (அத்தலம்) தன்னுடைய விருவகைப் பட்ட முத்திக்கொள்கையையருளி மேலுங்குன்றாமலடியாரைச் சந்தோஷிப்பிக்கும். (ரு)

## இச்செய்யுளுக்குப் பதப்பொருட்பிரிவு (சு)

யா
ரருந்துதிக்குக்கற்பணியாரருந்துதிக்குக்கற்பணியா ர்
பொருந்துவசத்திறந்திகழ்வார்பொருந்துவசத்திறந்திகழ்வா ர்
இருந்தவளமாடவணியிருந்தவளமாடவ ணி

இ-ள். மருந்து தரு வனம் மொழியார் ஒழியார் மரு உந்து தருவனம்-அமுதின் சுவையைத் தராநின்ற வழகிய சொற்களையுடைய மடவாரிடையறாம லுலவும் வாசனையை வீசாநின்ற தருக்களையுடைய சோலைகளையும், அருந்துதிக்கு கற்பு அணியார் - அரிய புகழ்ச்சிக்கமைந்தகல்வியை யணியாகப் பூண்டவாடவரையும், கற்பு அருந்துதிக்கு அணியார் - தமது கற்பால்வடமீனுக்கழகு செய்யுமடவாரையும்,பொரும் துவசம் திறம் திகழ்வார் - போர்செய்தற் கிலச்சினையாகத் துவசத்தோடுகூடிய திறத்தால் விளங்கும் வீரரையும், பொருந்து வசத்து இறந்து இகழ்வார் - பொருந்திய தம் வசத்தினின்றுங்கடந்து, இந்திராதிபோகங்களை யிகழும் பெரியோரையும், இருந்த வளம் ஆட அணி - நீங்காதிருந்தவெல்லாவளங்களும் நடிக்கவலங்கரியாநின்ற, இரும் தவளம் மாடவணி - பெரியவெள்ளிய மாடவொழுங்குகளையும் (அத்தலமுளது.) (எ - று.)

அமுதின் சுவையைத் தராநின்ற வழகிய சொற்களையுடைய மடவாரிடையறாமலுலவும், வாசனையை வீசாநின்ற தருக்களையுடைய சோலைகளையும், அரிய புகழ்ச்சிக் கமைந்த கல்வியை யணியாகப்பூண்ட வாடவரையும், தமது கற்பால் வடமீனுக்கழகு செய்யுமடவாரையும், போர் செய்தற் கிலச்சினையாகத் துவசத்தோடு கூடிய திறத்தால் விளங்கும் வீரரையும், பொருந்திய தம் வசத்தினின்றுங் கடந்து இந்திராதி போகங்களை யிகழும் பெரியோரையும், நீங்காதிருந்த வெல்லாவளங்களும் நடிக்கவலங்கரியாநின்ற பெரிய வெள்ளிய மாடவொழுங்குகளையும் (அத்தலமுளது.) (சு)

இவ்வாறுவளஞ்சிறந்தவிரும்புலியூரெனும்பதியி
ளெவ்வார்கடிறையளப்பவொருமதில்வெண்குடைகவித்துச்
செவ்வாய்மையரசாளுஞ்செங்கோலினொருசோழன்
றுவ்வாதமன்றமிழ்தின்றொழும்புபுரிசுபதேவன், (எ)

மன்னவற்குத்திருமனையாள்வாய்ந்தபெருங்கற்புடையாள்
கன்னியர்களரசென்னுங்கமலவதியெனும்பெயரா
ளின்னவர்பாலுலகுய்யவெம்பெருமானருள்செய்த
வன்னவரத்தாற்சிலம்பியமரனுதிப்பானுறன். (அ)

இருதிங்கள்சுபதேவனெழில்வயிற்றிற்சுவையொடும்போ
யொருதிங்கள்புறங்கொடுக்குமொழிமுகத்தாள்வயிற்றேகி
வருதிங்களொருபஃதும்வளர்ந்துபிறந்தறிந்தொன்னார்ப்
பொருதிங்சணரசாண்டுபுரிந்தபணிபுகல்வாம்ரால். (கூ)

வேறு.

மன்னவர்திறைமுன்னிட்டுமலரடிவணங்கிச்சூழத்
தொன்னிலங்காவல்பூண்டசுபதேவனென்னுஞ்சோழன்
றன்னருட்குரவன்சாரத்தாளிணைக்கமலந்தாழ்ந்து
நன்னயமொழிகளார்த்திநகைமுகத்திதனைவேண்டும். (க0)

அடியனேன்மக்கட்பேறிலகாதரித்தரியநோன்பு
நெடியவனறியாமுக்கணிருமலற்குறித்துச்செய்தேன்
படியிலைப்பயத்தான்மைந்தர்ப்பயப்பதற்கையமின்றே
யடிகளப்புதல்வர்நல்லாரறநெறிபருளுகென்றான். (கக)

வெற்றிவேலரசன்வேண்டவினைத்திருக்கிரித்தமேன்மை
யுற்றவாசிரியன்சாலவுவந்துமன்னவர்களேறே
பற்றுநூல்விதிகளெல்லாம்பயிற்றுதுங்தெரிதிநீயென
றற்றமில்விதிகள்சாலவடைவினாற்கிளக்கப்புக்கான். (கஉ)

வைதிகஞ்சைவமென்னவகுத்துரையிரண்டன்மாட்டு
மெய்திடுங்கிழமையாளரின்னுயிரென்னவோம்பிச்
செய்திடத்தக்கயானதிருவளர்கருமமீரெட்
டெய்திதந்தருளுமீசனுரைத்திடப்பட்டவற்குப். (கங)

சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளிய சிவாகமம் இருபத்தெட்டி னுள் (க0) வது சுப்பிரபேதகமென்னு மாகமத்திற் கூறியவாறே - இருது சங்கமனமுதல் விவாக மீறாகவுள்ள நாமஙகளை இச்செய்யுளிலும் - பின் வரும் (சச)வது செய்யுள் முதல் (கசு0)வது செய்யுள் வரையினு மேற் கூறிய கிரியைகளின் பேதங்களை சிதம்பரத்தில் அரசுரிமை செலுத்தியசுப தேவனென்னுஞ் சோழமகாராசனுக்குத் தனதாசிரியனாற் கூறியவற்றைக் கண்டுகொள்க.

பூணிருதுசஙகமநம் கருப்பாதாநம் புஞ்சவநம்சீமந்தம் சாதகன்மம். பேணுமுத்தாபநம்நாமகரணம்அன்னப்பிராசநமேபிரவாசம்பிண்டவிர்த்தி. காணலுறுஞ்சவுளம் உபநயநம்காண்டோபக்கிரகமணங் காண்டமோசநஞ் சிர், மாணுசமாவர்த்தநமே விவாகமின்ன வகுத்தபதினாறுமெனமதிக்கம ன்னு. (கச)

பின்னரிந்நூல் * பிரேதசமக்காரத்தோடு பிறங்கு § சபிண்டிகரணம்
பேசுமீங்குச், சொன்னவற்றுளுத்தாநம் சாதகன்மத்துறையினுஞ்சோ
றூட்டுதலிற் பிண்டவிர்த்தி, தன்னையுநல்லுபநயநந்தனிற் காண்டோபக்
கிரமணந்தன்னைப்புமடக்கித்தகநூலொன்று, நன்னர் ‡ விண்டுபலியசுபத்
திரண்டுங்கூட்டிநவிலும் விண்டுபலிமேந்தத்தினணனும் (கரு)

மறையவர்முன்மூவர்க் குந்தீக்கையுணடேல் வைதிசந்தாந்திரம் விர
விவகுத்தலாகு. மறைதருதாந்திர மொன்றாற் புரிதருவா மையுமருட்டீக்
கைசெல தாயின்வேத, முறையுளிசெய்திடன்முறையாப்பின்னேன் றீக்
கைமுற்றினனேலாகமத்தான் முடித்தலேயா. நிறைதருதாந்திரத்தியற்று
ராயிற்றீக்கைநெடும் பயனின்றுந்தீக்கைநிகழ்ந்துளார்க்கே (கசு)

தீக்கையிலாச்சூத்திரர்க்கு மனுக்களின்றிசெய்வதுதாந்திர விதி
முன்செப்புநால்வர், நோச்கியமந்திரமும் ரத்தருனுநான்சா னொறில்பரித்
தேர்மன்னவனே நுவலக்கேளா, யாக்கமுறுயபிரணவமுன்னமோந்தம்பார்
ப்பானரசன் சுவாசாந்தம் வழடந்தஞ் செல்வந், தேக்குவணிசன்வவுழடந்
தம்பின்னேன்றேத்தனவாக்கிறந்தமனுயாறுண்மாதோ. (கஎ)

அங்கிகரத்தந்தணனாடியாராக வலேசடற்டாயலிற்றுயின்றுனடியராரா
கத, துஙகமருடீக்கைசெயலோன்னேர்க்குத் தூயபிரணவமின்றிநமோந்த
மாகத், தஙகியிடுந்தேவதோத்திரதன தச்செய்நாருகுந கிரியையியற்றுவது
தகுதியாகுந, கொஙகுகமழ்ந்தினவண்டின்குழுவைமியாம்புஙகுருமலர்த்தா
ர் துயல்வருந்திண்குவவத்தோளாய். (கஅ)

தூயவுபநயனமில்லாவொருமூவர்க்குஞ்சூத்திரர்க்குமடவார்க்குநமோ
ந்தமாக, மேயபிரணவமின்றிமனுக்களெல்லாம்விளம்புதலாந்தத்தமக்குவி
தித்தவாறே, யாயமனுவாற்கிரியைபுரியாராயனும்பயநறுவிலலையவாஙகைட்
பட்ட,பாயபுனல்சாரடானம்பொருள்களெல்லாம்பசுவிறைச்சிநுகர்ச்சியெ
னப்படுநல்வேந்தே. (ககூ)

புரையகற்றுந்தீக்கையுள்ளான்றீச்கையில்லாப்பூவையைக்கைப்பிடிப்
பினவன்போற்றுமன்ற, வுரைகருப்பாதானமுதற்கிரியையெல்லாமுயர்ந்த
வாகமவிதியாலுஞற்றல்வேண்டும்,வரைநிசர்ததடந்தோளாயனையமாதின்
மைந்தருக்கும்வழியதுவேயாகுங்கணடாய். கலைபனுமேலாயாதியர்க்குமனு
க்களின்றிக்கரிசறுக்குந்தந்திரமாத்திரமேயாகும். (உ0)

மறையவர்முன்மூவர்க்கு முரியவாகவருஞ்சவுசமாசாரமலிநீராடல்,
கறையகலுஞ்சந்திதருப்பணமேயோமஙகலரபளைறயோதுதல்சோமயாசயா
தி, நிறைகருப்பாதானாதிதசநமாதிவத்திய எநமித்திகமென்றிவைகளெல்
லா. மறையுமனுமேலாமருக்குவேதமார்க்கத் தீடாதனவாமழலுயிர்க்குமடல்
வேன்மன்னா. (உக)

---

* பிரேதசமக்காரம் - பிரேதத்தைத்தகநமாதியசுத்திபண்ணுதல், § சபி
ண்டிகரணம் - பிதாமகன் - பிரபிதாமகன் பிரப்பிரபிதாமகன் இம் மூன்றுபி
ண்டங்களுடனேகிரியைக்குரியவன்றன் பிதாவினுடைய பிண்டத்தைச்
சேர்க்குங்கிரியை ‡ விண்டுபலி - விட்டுணுபலி.

சாதகன்மாமமிடலன்னமூட்டல் சவுளமுபநயனமெனுஞ்சமக்காரங்
கண், மேதகவெய்திலராயினுயர்மூவர்க்கும்வேதமோதுதலென்றுமேலாங்,
திங்க, ளொனுசமக்காரங்களுற்றோரேனுமுனரத்ததமதொழுக்கநிலையொழிந்
தாராயி, னேதமறச்சுதந்திரமாய்க்கிரியையொன்றுமினயயாதாலவர்க்குலக
மேந்துதோளாய். (௨௨)

வருணநிலையொழுக்கங்கள்வழீஇயவன்னோர் மலர்துமியச்சிவானந்த
வாரிமூழ்குந், திருவினரையடுத்தொழுகிச்சுத்தராயிற்றிகழ்சருமஞ்சுதந்திர
மாய்ச்செய்தன்மேவுங், கரிசில்சமக்காரமைந்துமெய்தாணுயிற்கரைந்தவ
வாந்தரசைவன்றனக்குங்கன்யத், துரிமையிலையாதலினாற்கிரியையெல்லா
மொழியாமையவனுக்குமுளுற்றல்வேண்டும். (௨௩)

துலக்கமுறுந்தீக்கைதனக்குரியராவார்தொகுத்தமறையோராதிமூவர்
தாமுங், கலக்கமில்சற்சூத்திரருமுரியராகக்கரைந்தவனுலோமருமென்றிவ
ரேநூல்கள், விலக்குமசற்சூத்திரற்கும்வளர்நீசர்க்கும்வெய்யகாருகர்க்குஞ்
சாங்காரர்க்குமேனை, யலக்கணுறுமிழிகுலத்துளமர்ந்துளார்க்குமருட்டீக்
கையொருநாளுமடாதுவேந்தே. (௨௪)

தள்ளுமசற்சூத்திரனைமுதலானோருந் தக்கசிவபத்திமிகுந்துயர்ந்தோர்
தம்மை, நள்ளியவர்பணிபலவுநயந்துபாதநறும்புனன்மிச்சிலுநுகருநன்மை
யெய்தி,னெள்ளுவர்கண்மலமைந்துங்குலத்தினன்மையெய்தியதுவூனுசரா
தரத்திற்சிந்தை,விள்ளிலதேல்விளங்கசற்சூத்திரனுமன்றவேந்தர்குலத்தோ
டொப்பன்வேந்தர்வேந்தே. (௨௫)

எத்தலுறுந்தீக்கையுள்ளாரெவரேயாக வியம்புவருணச்சிரமவொழுக்
கந்தன்னை, நீத்தனரேற்றீக்கையிலாதவரோடொப்பர் நீத்தவொழுக்கத்
தொருநால்வருமந்நன்மை, பாத்தியமாதருமலியுஞ் செவிடும்பித்தும்பயில்
குருடுமையுந்தீக்கைக்குரியவாகா, சூத்திரனுமொழுக்கமுறின்மறையோ
னொப்பான் சூத்திரனொப்பான் மறையோனொழுக்கம்விட்டால் (௨௬)

துங்கஞ்சேர்தீக்கையொழுக்கத்தினின்ற சூத்திரன்சற் சூத்திரனும
வற்றிற்சாலாப், பங்கஞ்சார்ந்தவனசற்சூத்திரனுஞ் சாதிப்பகுப்புவேறிலை
யிருவர்தமக்குமூவர்க், கெங்கெங்கேயாகமத்தின் விதிக்கப்பட்டதியாத
துமற்றங்கங்கே யெழுசேர்தீக்கை, தங்குசூத்திரர்க்குரித்தாமயில்வேலோ
ச்சித்தரியலரைப்புறங் காணுந்தறுகட்கோவே. (௨௭)

மூவருக்கும்வேதமந்திரமெங்கெங்கேமொழிந்திடப்பட்டனவவற்றிற்
கெல்லாமாங்காங், கோவிலருள்வளரிதயமனுவைப்பின்னோருரைக்கமனு
வனைத்தினையுமுரைக்கவந்து, மேவுபயனனைத்தினையுங்கொடுக்கவல்லவி
ழுத்தகுமந்திரம்துவாதலின்வேன்மன்னுதாவின், மறையவர்தமக்கேயாசிர்
வாதஞ்சாற்றுமுறையேபுரிதற்றகுதியாகும். (௨௮)

அரசர்முதன்மூவர்க்குமாசிர்வாதம கத்துறுபாவனையேயாமதுவேதெ
ன்னிற், பிரசறுகுகூடன்முதலியகாப்பாசப் பண்ணுவதுபார்த்திபனேபத்
தோடாறு, கிரியைகளுக்குரியரிவரெனவு மந்தக்கிரியைபுரிநூன்முறையுங்
கிளந்தாம்ப்பாற். கிரியைகளுச்கின்றியமையாதசாட்புங்கிளருமங்குராறப
ணமுங்கிளப்பாமுன்னர். (௨௯)

## வேறு.

இட்டகாமியமியாவையுஞ்சித்திக்கும்பொருட்டுக்
கட்டுவார்கரஞ்சூத்திரங்காலநற்கிரியை
தொட்டநாண்முதனாளிரவேதொடங்கியநா
ளொட்டுகாலையேவினைசெயுமுன்னிவற்றொன்றும். (௫௦)

பொருந்துபுண்ணியாவாசநமுந்துறப்புரிந்து
திருத்து * தண்டிலநெல்லினாற்செய்திடைச்சமலம்
வரைந்துவெண்பொரிதிலங்குசையலர்சண்ணோற்பரப்பி
விரிந்தவட்டத்துப்படலிகைமீமிசையிருத்தி. (௫௧)

பொழிந்துதண்டுலந்தாழையின்புதுக்கனிபூகி
கிழிந்தவாடினவில்லியகிளர்நுதிவளைந்த
வொழிந்தமெல்லிலைப்பாகுவைத்தொரோர்பொன்னூலியன்ற
செழுந்தண்பாசம்வெண்சந்தனந்திமிர்ந்துடன்வைத்து (௫௨)

புரிந்தபுண்ணியாவாசநப்பூம்புனல்புரோக்கித்
திருந்ததண்டிலத்திணங்கவாதாரசத்தியையுந்
தெரிந்தவட்டத்தின்காலின்முத்தத்துவத்தினையும்
பரந்தவான்பிரகிருதியைப்படலிகையிடத்தும். (௫௩)

எழுகோடிமாமனுவையுமிகைகரிசியிவைந்
தாழைவான்கனித்தந்திமாமுசனையுபதியைக்
கேழில்பாசடையினுங்கிளர் † இலகுளீசரனை
வாழிநீற்றினும்வார்ந்தசூத்திரத்தனந்தனையும். (௫௪)

பூசைசெய்துசிட்டரைப்புரோக்கணமுற்றப்புரிந்து
தேசிகன்றிகழ்நாமிசையங்குட்டஞ்செறியப்
பாசநன்கெடுத்தாடவர்பயில்வலக்கரத்தும்
பேசுமங்கையரிடக்கரத்தினும்பெறத்தரித்தல். (௫௫)

ஒள்ளிதாகியசனசூத்திரமுதவாதேல்
வெள்ளிதாகியபட்டுநூற்பாசமுமேவு
நள்ளுறுதெனிலதுவுநற்பருத்திநூற்கயிறுங்
கொள்ளலாகுமாற்குருமதிக்கவிகைமன்னவனே. (௫௬)

கவசமந்திரத்தினைக்கியகயிற்றுறமுடியி
னவிர்வெண்பூதிமூலத்தினாலணிவதுமுறையாம்
புவிபுரப்பவபுண்ணியாவாசநங்காப்பென்
றிவைசெயாதுசெய்கருமங்களெங்கணுமிலையே. (௫௭)

அங்குரம்புரிவினைகளுக்கதுபுரியாரேன்
மங்கலம்பயனுறுவிலக்கியவருவினைக்குத்
தங்கவங்குரம்புரிதரிற்சகலமுங்கேடா
மிங்கணிவ்விருதிறத்தையுமியம்பினுமன்றே. (௫௮)

---

* தண்டிலம் - பீடம்.

† இலகுளீசரன் - பிரதிவியாதாரத்தில் தெய்வமாயிருக்குமீசன்.

## வேறு.

தருமீரெண் கிரியையுளும்புஞ்சுவநஞ் சீமந்தஞ்சாதகன்மம்
வருநாமகரணஞ்சோறூட்டல் * உபநிட்கிராமணமுநீச்கி
மிகுமேனைக்கிரியையினும் $ பவுட்டிகத்தும்வேறுமங்கலத்தின் மாட்டுந்
திகழ்தேவதாபநத்துமேனையதாபநத்தினுஞ்சீர்விழாவின் மாட்டும். (௩௯)

‡ சம்புரோக்கணநபநஞ்சிவதீக்கைதருந்தீக்கையபிடேகங்கள்,
வம்பதாயனைபுகுதல்புதுநகரம்புகுதல்வளர்விமாநமாக்கல்
வெம்பவார்செவிதுளைத்தல்வேழவிபூரவேழத்தின்மருப்பையீர்தல்
பம்புவான்படையெடுத்தல்பாற்குடித்தல்பட்டாபிடேகம்பண்ணல் (௪௰)

வேள்விபவுத்திரமினையகிரியையினுமுளைவித்தல்விதியதாகுந்
தாழ்வுபெறுசிராத்தமுதலசுபத்துஞ்சாந்தியினுமவிகாரத்தும்
வாழ்வுபெறுதேவயாத்திரைமாட்டுஞ்சூத்திரகன்மங்கண்மாட்டும் [ன்று
பாழ்வினையாமெய்ப்பொருளும்பகர்ந்தவநுகுராற்பணத்தைப்பண்ணின்

திங்கள்பயிர்வளர்த்தலினுலதற்குரியவிரவுகத்துச்செய்தனன்றுந்
தங்குமிரவொழிந்தசிறுகாலைபுமாஞ்சவுளமுபநயநம்வாத்துக்
கன்மமிவைடசலன்றிக்கைச்சொளார்தேவருக்குங்கங்குலன்றி
யங்குரம்வித்துதலபுரியாருமறையாசமவிதியையுணர்ந்துளோரே. (௪௨)

நித்தியநைமித்திகமேபிரதிட்டைவிழாவிடுநீள்சங்கிராந்தி
சத்துருசங்காரங்கிரகணங்கருப்பாதாநாதிதகநமாதி
மெத்துகழுவாய்பவுத்திரந்தீக்கைமிகுசாந்திசம்பத்தோமங [ளே. (௪௩)
கொத்துமற்றனைத்தினுஞ்செந்தீவளர்த்தன்முறையாகுங்கொற்றவே

] வது - இது முதல்(௧௩) செய்யுள் - இருதுசங்கமனம்-இவை-நாயகியின்ருதுகாலத்தில் நாயகன் கூடும்படி செய்யுங்கிரியை.

## வேறு.

இருதுசங்கமமின்றெனிற்கருப்பமின்றதனு
லிருதுசங்கமத்தியலையுமியம்புதுங்கேளாய்
பொருவின்மன்னவபூத்தவண்மூன்றிரவொழிய
மருவுதண்புனல்விதியுளியாடுதலவழக்காம். (௪௪)

மல்குவைகறையினன்றிமாலையாமத்திற்பூப்பில்
புல்குமத்தினமுன்றுகழூன்றுநாட்புறத்தேவைகிப்
பல்கியநான்கிற்றாநீர்படிந்துகொண்கனையுள்ளெண்ணிப்
பில்கொளிப்பரிதிநோக்கிப்பின்மனைச்சேறல்வேண்டும். (௪௫)

* உபநிட்கிராமணம் - முற்கூறியபதினாறனுளொன்றாகிய பிரவாசம்
$ பவுட்டிகம் - புஷ்டிப்படுத்துகை.
‡ சம்புரோக்கணநபம் - புரோட்சித்து நீராட்டுதல்.

பிரிவில்சண்டாளியென்றுபிரமகாதகியேயென்று
* இரசகியென்றுமூன்றுமியம்பியமுறையேபூப்பு
விரவியமுதனாளாதிமேவியமுந்நாள்காறுங்
கரிசறப்பூத்துள்ளார்க்குக்கட்டுரைத்திடுவதாகும். (௪௬)

ஒளிநகைபுறச்சோறின்றொருபொழுதன்றிபுணடல்
வளமனைகாத்துவைகல்வளர்பகலுறங்கல்பேச
லளவளாய்வேறுபூத்தவணங்கினர்தம்மைத்தீண்டல்
வெளியுறுமாதரார்க்குமேவுறுவேற்றிவேங்கீத. (௪௭)

அறலபடிந்தகத்தைச்சார்ந்தாளாவினைந்தருந்திவைகி
மறுவலும்புனலிற்றோய்ந்துமனைவளர்பாத்திரங்க
ளூறுகரமுறுமையன்றுமுழுவதுமுறைந்தைந்தாநா
ணறுவிரைப்புனலிற்றோய்ந்துநற்பணிக்குரியளாவாள். (௪௮)

முந்தியபூப்பேயாயின்முற்றியநான்காநாளிற்
பிந்தியுநறுநீர்த்தோய்ந்தம்பைதையையலங்கரித்துக்
கந்தமென்புனலிற்றோய்ந்துகாந்தனுந்தூயனாகி
வெந்தநீறுருத்திராக்கம்விழுமியவணியுந்தாங்கி (௪௯)

புண்ணியவாசநத்துப்பூம்புனல்விதியாங்கத்
திண்ணியமனுவாலாசான்றெளித்திடப்பட்டுவாம
நண்ணுறமாதைவைத்துநவின்றுசங்கிதையைக்குபத
தண்ணலைப்பூசையாற்றியழலிடையோமஞ்செய்து. (௫௦)

ஆயிரதெட்டேயாகவறைபுநூற்றெட்டேயாக
மாயிரும்பிரமமைந்தின்வயங்கவாகுதிசெய்தாலின்
மேயவென்முகுழுழுந்தைவினீரத்தபால்சொரிந்துரக்கிப்
பாயவத்திரத்திலிட்டுப்பரமனைத்தியானம்பண்ணி (௫௧)

அழுகையேயிருமறும்மலாவித்தல்வெகுளல்வாசக
செழுமுடிதுளக்கலின்றித்தெரிவைநேரிருப்பச்செய்து
விழுமியவைந்தன்வேண்டின்வியன்வலநாசியுள்ளே
யொழுகுறப்பிழிந்துவாயாலுண்ணுவித்திடுதல்வேண்டும். (௫௨)

மாசறுபுண்ணியாகவாசநமீட்டும்பண்ணித்
தேசவிர்குரவன்பூசைசெய்துவேதியர்முன்னோரைப்
போசனம்பண்ணுவித்துப்புசிப்பதுவிதியாமேனை
பேசறுகிரியையீற்றுமின்னணம்புரிகமன்னோ. (௫௩)

அற்றைநாளிரவிற்பாற்சோறயின்றிருவோருந்தம்மை
முற்றுமாய்நிறைந்தவீசன்முயங்கருட்சத்தியென்னப்
பற்றுறநினைந்துமைந்தர்ப்பயத்தலேயேதுவாகத்
தெற்றெனமதித்துமாரன்றிகழ்கலைநடாத்தல்வேண்டும். (௫௪)

---

* இரசகி - வண்ணாத்தி.

## வேறு

பூத்துநீராடியநாண்முதலாகப்பன்னிருநாள்பூவைமார்க்கு
வாய்த்தசூலுறுங்காலமாதலினலநாளுண்மகமேமூலம்,
பாத்தசீர்விரததினந்தனக்காகாநாள் § பஞ்சபருவமெல்லா
நீத்துநூல்விதித்ததினம்புணரானேற்கருவொன்றுநீக்கினும். (ருகூ)

இருதுவின் சங்கமம்புகன்று மினிமெயறுழ்த்தோண்மன்னவனே யியம பக்கேளாய், திருவளருஞ்சுபக்கிரியையனைத்தினுக்கு * நாந்திமுகஞ்செய்தல்வேண்டும், மருவுவதுவையின்காறுங்கிரியையெலாம் பிதர்புரிகைநந்தனப்பாற், கிரியைபுரிவதுவழக்காஙகிளர்கருப்பாதாநவிதிகிளப்பாமன்றே.

இரண்டாவது இதுமுதல் (ரு) செய்யுள்-கருப்பாதாநம்-இவை கருப்பந்தரிக்குபடி செய்யுங் கிரியை.

கருப்பமியைந்தமைகுறிப்பானறிந்தநாயகன்விதிசெய்காலமந்தத்
திருப்பொலியுமதிவாரந்திங்கள்புதன்குருவெள்ளிசிறந்தநாள்க
ளருத்திமிகும்புணர்பூசம்பூசமுரோகணிசதயமத்தமோணம்
வருத்தமிலுத்திரத்திரையாமான்றலைசித்திரையனுடம்வங்கஞ்சோதி (ருஎ)

ஈங்குரைத்தகிழமையொருநாளேனைக்கிரிபையவற்றினுக்குமாகு
மோங்கியபூரணைபதினொன்சொருபஃதட்டமியாறைந்தொருநான்கின்ன
நீங்குதிதிகளினெட்டாமிடஞ்சுத்தியாஙகருப்பஙிலைசீமந்தம
வீங்குபுஞ்சுவநம்வதுவைவேள்விகுடிப்புகன்மனைக்குமேவநாள்பார். (ருஅ)

இல்லவள்சூல்வயிற்றினளேலிருஙகணவன்றனமேற்றிடுதல்கோயி
லில்லமுதலியவிழைத்தல்விழவுமுதற்கிரியைசெயலீண்ரோர்க்கன்றிப்
புல்லசுபக்கிரியைசெயநீர்த்தயாத்திரைபிறர்பால்புசித்தல்சார்ந்த
நல்லகடலாடறலைமழுக்கலிவைசெய்யற்கநாமவேலோய். (ருகூ)

கரிசொழியமுதற்கருப்பம்வயிற்றிலுறுமாதருச்கேகருப்பாதாநக்
கிரியையொடுபுஞ்சுவநஞ்சீமந்தமிவைபுரியக்கிளத்துநூல்கள்
வரிசையுறப்பின்னவர்தம்வயிற்றிலுறுசூலினுக்குவகுத்துமுன்னர்ப்
புரியலுறுங்கிரியைகளேபயன்கொடுக்கும்வெவ்வேறுபுரிதல்வேண்டா. ()

சத்தியோசாதத்தினிருநான்குதலைப்பெய்தசதவோமஞ்செய்
தொத்தபாறயிர்நறுநெய் $ யவையுமூந்தும்விராயீசத்தோமமாற்றி
யெச்சமானதைமனைவிவயிற்றிடைத்தற்புருடமனுவியம்பிக்கையை
வைச்சுநாயகனவளைநுகர்வித்தலாம்புஞ்சுவநமுங்கேளாய். (சுக)

மூன்றாவது - இதுமுதல் (உ) செய்யுள் - புஞ்சுவநம் - இவை ஆண்மகவுபிறக்குமருந்துபிழியுங்கிரியை. இரணடாமாதம் செய்யப்படுவது.

கிழவனிறந்திடிற்கிழவன்கிழத்தியிவர்தந்தையரிக்கிரிகைசெய்க
கிழமையுறுமவருமிலராயினவருடன்பிறந்தார்கிளர்ந்துசெய்க
கெழுவலுறுமவருமிலராயினவர்கிளையினுளார்யாவரேனுங்
கழுமலறப்புரிகவிதுசீமந்தமாதிகட்குங்கடவதாகும். (சுஉ)

---

§ பஞ்சபருவம்-மாதப்பிறப்பு-வருடப்பிறப்பு அமாவாசை-அட்டமி.
* நாந்திமுகம்-சுபக்கிரியைகளிற்பிதிர்தேவதைகளைக்குறித்துச்செய்தல்.
$ யவை - ஓர் தானியம்.

## வேறு.

இருமதிநான்குமதியினுயிர நூற்றெட்டெனுமிரண்டனுளொன்று
மருவுறவோமம்வாமதேவத்தின் வயக்கியம்மனுவினலாலி
னுருவளர்முகிழ்பாலுழுந்திவைமுன் போலொண்டொடிநாசியிற்பிழிக
பொருவருபுஞ்சவநமிதுவாகும்புகலுறுஞ்சீமந்தங்கேளாய். (௬௩)

நான்காவது - இதுமுதல் (௪) செய்யுள் - சீமந்தம் - இவை மூன்றிடத்து விளர்ப்புள்ள பன்றிமுள்ளினல் தலைமயிரை வகிர்ந்து செய்யுங்கிரியை. இஃது ஆறுமாதஞ்செய்யப்படுவது.

ஈரிருமதியினாறினெண்மதியினெழில்வியாகிருதிமந்திரத்தின்
சிரியவகோரமனுவினூற்றெட்டுச்சிறப்புறவாகுதிபுரிந்து
கூரியதருப்பையுதுப்பர்க்கொம்புசோலத்தின்முள்ளிவைகூட்டி
நேருறுவித்தியாங்கமந்திரந்தானெற்றிமுன்றெடுத்துமேலிழுத்தல். (௬௪)

புதியவதிரங்கள்பூந்தொடைகலன்கள்பொற்புறவணிந்துழுந்தாநி
முதிரொளியழலின்முன்புபோலோமமுடித்துயர்சிவனுவார்றைச
யுதரம்வைத்துரைத்தல்சீமந்தமாகுமுலகமாண்மன்னவயிற்றுப்
பதிதருகருப்பமெறும்கொளவிண்டுபலியையீங்கியற்றுதல்வேண்டும் (௬௫)

## வேறு

இருடிகேசன்கோவிந்தனெழில்வாமனநாராயணனுன்சி
தரனற்றிருவிக்கிரமன்மாதவனேமதுசூதனன்றாமோ
தரனற்பதுமநாபனெனத்தக்கவிண்டுவெனும்பெயரா
லரியைக்காலைநண்பகலினுவாகநஞ்செய்தர்ச்சித்து. (௬௬)

அகோரமனுவால்வியாகிருதியானு நூற்றெட்டாகுதியு
முகாதவன்பின்விண்டுமனுவுரைத்துச்சருவாறாகுதியு
மிசாநெய்யினிலாறாகுதியுமிழைத்தெண்பிரமசாரியரை
விகாரமறச்சோறூட்டுதலேவிண்டுபலியாம்வேல்வேந்தே. (௬௭)

ஐந்தாவது - இதுமுதல் (௮) செய்யுள் - சாதகன்மம் - இவை புத்திரோற்பத்தியாயகாலத்திற் செய்யுங்கிரியை,

தருமமாதிமழவினுக்குத்தழையும்பொருட்டுச்சாதகன்மம்
புரியலுறுவோர்மகவுயிர்க்கப்பொருந்துந்திசையின்மனைபுதுக்கிப்
பரிவின்மெழுகிக்கடுகெள்ளுப்பம்பப்புகைத்துநன்முகூர்த்தத்
தூரியமகளிரொடுமங்கட்கருப்பவதியையுறுத்துகவே. (௬௮)

சருமன்வருமன்றனன்றாசன்சார்த்திவழங்குமியற்பெயர்கள்
பிரமன்முதனால்வருணத்துப்பிறந்தோர்க்கெல்லாமிடப்படுமா
விரவினகத்துமகவுயிர்ப்பினீன்றோனிரவென்றிரானுடனே
பரவுபுனலிற்றுடுமெனப்போய்ப்பாய்ந்துமுழுகிவினைபுரிக. (௬௯)

மக்கட்பவத்தினெக்கியத்தின்மாதம்பிறக்குமமையத்திற்
றெருக்குச்சுடரைமணியரவந்தொடருங்காலத்திரவிடைநீர்ப்
புக்குப்படியவனர்மிருதிசாரம்புகலப்பட்டதுகாண்
மிக்குப்பகையின்வலிமுருக்கிவிரிநீருலகம்புரக்கின்றோய். (௭0)

பிறந்தவுடனன்றெனின்முலைப்பால்டேணிச்சொடுக்குமுன்கொப்பூழ்
விறந்தநாளம்வீட்டிடுமுன்வெந்நீராட்டியுறுப்பனைத்து
நிறைந்தகுழவிமுகந்தாதைநிகரிலிதயத்தாற்கண்டு
சிறந்தமகனையிரணியமாச்சிந்தித்திரும்பொன்வழங்குகவே. (௭௧)

சதமாகுதியத்திரத்தியற்றித்தழைந்தவாமமந்திரத்தி
னிதமார்காவற்பொருட்டிளவன்முகத்தைமீட்டுமெதிர்நோக்கிப்
பதமார்பஞ்சப்பிரமங்கள்பகர்ந்துசசியையபோங்கெழிற்புருட
மதமார்மனுவைவலக்காதின்மடுக்கவிஃதுசாதகன்மம். (௭௨)

வெல்லநறுநெய்தேன்மூன்றும்விரவிக்குழந்தைவாய்ப்பெய்து
மல்லன்முலைகள்கழீஇவலப்பால்வயங்குமுலைப்பால்பிரசாதஞ்
சொல்லியருத்தியத்திரத்தாறவொருடார்ந்தவுந்திநாளத்தை
மெல்லவரிந்துபுறத்தொழிக்கவில்விட்டிலகுமணிப்பூணாய். (௭௩)

அருமைமகவின்சிரப்புறத்திலசோராத்திரத்தான்மணிக்கும்ப
மிருவியீரைந்தினமுமிருபோதும்பூசையினிதியற்றி
பொருவிலாபச்சத்தமனுப்புகன்று* பட்சாகுதிபுரிந்து
மருவுமரியாநந்தத்தானெய்யாகுதியுமலிவித்து. (௭௪)

புருடமனுவானூற்றெட்டாகுதியும்புரிந்திட்டரசிலையோ
டுரைசெய்புருடத்தார்ப்பிலியிட்டுவந்துவெள்ளைக்கடுகாறுங்
கரிசுதபவோமம்புரிககாமர்குழலிக்கிதுகாப்பாம்
பரவையுலகந்தடந்தோளிற்பரித்தோயுத்தாபனங்கேளாய். (௭௫)

ஆருவது - இதுமுதல் (௩) செய்யுள் உத்தாபனம் - இவை அசுத்தபாகியவறை வீட்டினின்றும் சுத்தமாகிய வுயர்ந்தவிடத்திற் குழந்தையைச் சேர்ப்பிக்குங்கிரியை.

மூன்றுதினத்துமைந்தினத்துமொழிந்தவேழாநாளிடத்து
மான்றகுழவிப்படுக்கையினையாற்றவுதறிப்போட்டிடுக
வேண்றவொருபதெனுந்தினத்திலிருநீராட்டிக்குழந்தைதனைச்
சான்றவேறுமனையகத்துச்சார்வித்திடுகதூயோரால். (௭௬)

சாம்பல்புளிநெய்நெருப்பிவற்றாற்றகும்வெண்கலமாதிகள்புனித
மோம்பியறுவையேகாலியொலித்துத்தரக்கொண்டிலமலினந்
தேம்பமயமண்ணான்மெழுகித்தேங்கப்புகைத்துமட்கலம்பா
யாம்பல்பொருளும்புறத்தாக்கியறலின்முழுகியிருவோரும். (௭௭)

பொருந்தவபநம்போற்றியறலாடிப்புண்ணியாகத்துட்
பரந்தபுனலார்ப்புரோஷிக்கப்பட்டபுனலுமானைந்துஞ்
சொரிந்துமடச்சிற்குசையிட்டுதுலங்குஞ்சிவமாப்பாவித்துப்
பரிந்துநுகர்கபன்னிரண்டாநாளினுமம்பகருவதாம். (௭௮)

* பட்சாகுதி - பதினைந்தாகுதி.

## வேறு.

எழாவது - இதுமுதல் (சு) செய்யுள் நாமகரணம் - இவைபெய ரிடுதலிற் செய்யுங் கிரியை.

திகழ்தருதசமிமுதலியமூன்றுதிதியினிற்புண்ணியதிதியி
லகமறநூற்றெட்டாகுதிமூலத்தாக்கியச்சுதஞ்சிரத்திட்டுப்
பகர்தருவெல்லமாதிமுன்போலப்பருகுவித்தருமகவினுக்குப்
புகழ்சிவனுத்தம்வைத்தபின்னுடம்புகலுகபுகல்வகைகேளாய். (எகூ)

வயங்குமாதேவன்மயேச்சுரன்கிருத்திவாசனற்பார்ப்பதிப்பிரியன்
றவங்குசீகண்டன்தேவதேவேசன்சங்கரனுருத்திரனீச
னயங்கொளுமிடபத்துவசனேகாமநாசனன்சிவனெனுநாமத்
தியங்கியசனனநாண்மதிக்கேற்பவிடுவதுமுறைமையன்னவனே. (அ0)

அம்பிகைபவானி*சுராற்சிதைதாட்சாயணியரப்பிரியைபார்ப்பதியே
வம்பறுகிரிசைசிவங்கரி†யையமவதி‡உமையவண்மகாதேவி
நம்புறுகௌரியெனும்பெயர்பெண்ணிணுட்டுவதாஙகுருவீன்றோர்
பம்பியகுடியினுள்ளவர்பெயரும்பன்னலாம்வேறுபனனலுமாம். (அக)

ஆண்மகவினுக்குப்புதியநாமங்களமைத்திடினிரட்டையக்சரத்து [ம்
மாண்மலிபெண்ணுக்கொற்றையக்கரத்துமியம்புகவெவ்வகைப்பெயர்க்கு
பூண்மலிசிவாநந்தமாக்குகதெத்தபுத்திரற்கப்பொழுதேற்போ
ருண்மலிசாதகன்மமாதிகணமுன்னடாய்ப்பெயரிடுகோன்முறையால். (அஉ)

பெயருறுத்தியபின்னிருகரத்தானும்பேணிவெள்ளரிசிபாசறுகை
யியல்பதமுழந்தாள்புயஞ்சிரத்திடுகவினியொருபஃதெனுந்தினத்திற்
பயிலுமுங்கான்கிற்பத்திணுடாறிற்பல்குறுமங்கலப்பொருட்டு [வித்யாம்
யயர்வறுவனப்பின்பொருட்டும்வார்செவிகளனமவுறத்துளைத்திடல் (அங)

மும்மதிவரைப்பிற்பரிதிகாட்டுதலுமுற்றியநான்மதிவரைப்பின்
விம்மியசெருத்தற்பசுவொருகிரணவெணமதிகாட்டலும்பொருந்துஞ்
செம்மையினன்குமதியிடைச்செல்வந்திகழ்தருமாயுளும்வளர
வம்மழவினுக்குநிட்கிராமணந்தானுற்றுதல்வேண்டுமென்னவனே. (அச)

எட்டாவது - இதுமுதல் (சு) செய்யுள் - பிரவாசம் - இவைகுழந் தையை யெடுத்துக்கொண்டு ஆலயத்திற்குச் செல்லுங்கிரியை. இக் கிரியைக்கு நிட்கிராமண மென்னுமோர் நாமம.

## வேறு.

பத்தாமிடஞ்சுத்தியதாகப்பார்த்துச்சத்தியோசாதத்
தொத்தாகுதிநூற்றெட்டியற்றியுறுதன்மகவையலங்கரித்துப்
பெற்றான்சிவனென்றூர்த்துச்சிபிழைதீர்புருடத்தான்மோந்து
மற்றோர்நால்வராலாசீர்வாதமரபிற்புரிவிக்க. (அரு)

தொடர்சீர்மாமன்மகவெடுப்பச்சுவத்திமுழக்கினொடும்வெளிப்பட்
டிடர்தீர்கோயிற்புகுந்துவிடையேற்றைவிடகாயினிமனுவா
லுடனேதெரிசிப்பித்துவிதியுளியேசிவனைமுருகனையும்
விடியாவன்பிற்பணிவித்துமீண்டுமனையினீறிடுக. (அசு)

---

* சுராற்சிதை - தேவர்களா லர்ச்சிக்கப்பட்டவள், ‡ சிவங்கரி - மங் களத்தைக்கொடுப்பவள், † ஜமவதி - இமவான் புத்திரி.

ஒன்பதாவது - இதுமுதல் (௨) செய்யுள் அன்னப்பிராசனம் - இவை சோறூட்டுதலிற் செய்யுங் கிரியை.

வருத்தாம்பிரவாசக்கிரியைமன்னுவன்னப்பிராசநங்கேள்
முகுர்த்தநாட்குமுதநாளேமுனிவின்மறையோர்க்கினிதூட்டி
மிகுத்தபத்தாமிடஞ்சுத்திமேவமகவையலங்கரித்துப்
பகுத்துப்பிரமாங்கம்பதிற்றுப்பத்தாகுதிவெவ்வேறியற்றி. (௮௭)

தீம்பாளிதத்தினாகுதிபுஞ்செய்தெஞ்செய்சியபாயசமெச்சி
லோம்பாதொழித்தவிளங்குழவிக்கூட்டன்முறையாறுந்திங்க
ளாம்பார்த்திபனேயெண்மதியீரைந்தாமதிடன்னிருமதியு
மேம்பாடாகவுருவேனும்விதியாம்பிண்டவர்த்தனங்கேள். (௮௮)

பத்தாவது - இதுமுதல் (௨) செய்யுள் பிண்டவர்த்தனம் - இவை சரீரத்தை விர்த்திசெய்யுங் கிரியை.

பிரமசிரமந்திரத்தோமம்பேணிநூற்றெட்டினமகற்கு
விரவுசகளீகரணத்தைமேவப்புரிந்திட்டாதியந்தம்
பரவலுறுநற்பிரணவங்கள்பயின்றவியோமவியாபியினை
யுரமிக்குறவக்குழந்தைவலக்காதினுபதேசித்திடுக. (௮௯)

மதுநெய்நறும்பால்விராயமதுப்பருக்கமதுவென்மந்திரத்தா
விதுவின்வளருங்குழந்தைதனைமிசைவித்துரியஞாதியரோ
டெதிரில்சுவையினுணர்வார்கவீண்டுமாயுளுடற்கினிமை
முதிரவளருமுத்தராயணத்திற்சவுளமுறைபுரிக. (௯௦)

பதினோராவது - இதுமுதல் ௯ செய்யுள் - சவுளம் - இவைமயிர் வினைக்குச் செய்யுங்கிரிகை.

கருவிற்கொருமூன்றுண்டினுமண்கதுவும்பிறவிக்கொருமூன்றும்
வருடமிகவுத்தமமஞ்சாம்வருடமேழாம்வருடமுமாம்
பொருவில்சவுளமிலையாயிற்புரியுங்கிரியைக்குரியையிலை
யுருவில்கிரியைக்குரிமைசெய்னோராண்டினுள்வேண்டியதொழுதாம். (௯௧)

மாதாவயிற்றிற்சூலிருந்துமதியின்மேற்பட்டிருந்தாலு
மாதாபிதாவென்றிவருயிரைமறலிகவர்ந்தானாயிடினுந்
தீதாஞ்சவுளம்புரிகிற்பிற்செறிசூலுயிர்த்தபின்னானு
மேதாமெனச்செப்பியவாண்டொன்றிறந்தபின்னுரியற்றுகவே. (௯௨)

## வேறு.

உருத்திரமந்திரத்தினாலொருநூற்றெட்டாகுதிநன்குனாற்றித்தீமுன்
னிருத்தியமைந்தனையணியினிதணிந்திட்டரகரவென்றீண்டவார்த்து
வருத்தமிரிதருஞ்சுயத்திமங்கலவாசகத்தாலம்மைந்தன்சென்னி,
திருத்தமுறுமறுகரிசியிட்டதற்பினிடப்பாலிற்சிறுவனற்றாய் (௯௩)

அச்சுதத்தோடான்மயத்தின்பிண்டமோரகலிடைவைத்தங்கையேந்த
வெச்செனுநீர்தண்ணெனுநீர்விராயன்னத்தொடுந்தாதைவிளங்குமைந்த
னுச்சிதெளித்தத்திரத்தானவிதன்வாள்வாங்கியொளிர்தருப்பைவார்ளை
ளைச்சுமயிரொடுமீசானாதிமனுவாலைந்துதிக்கின்மாட்டும். (௯௪)

வினைபுரிந்துகுறைபட்டமயிர்தருப்பைவியனகலினேந்துமாப்பி
தனிவிருத்தியையைந்துபங்கிலொருபங்கில்வளர்தலையிற்கேசம்
வனைகுடுமியெனவிடுத்துமற்றிடமெலாம்வபனம்வயங்கச்செய்வித்
தினியபுனலாட்டியலங்கரித்துவளர்தீயெதிரேயிருத்திப்பின்னர். (கூரு)

ஆயிரத்தெட்டொருநூறொரெட்டாகசிவமந்திரத்தாகுதிகள்பேணி
மேயவுருத்திரமனுவாறபூரணாகுதிசெய்துவிளம்புஞ்சுத்தி
பாயமறைமொழிந்துபசுவாசிரியன்றனக்குதவியகலினுப்பி
யாயதருப்பையைற்பயிரிரபமெவதிரத்தியினமூலமெதான்றிற்பாற்றல். (கூசு)

வேறு.

பனிரெண்டாவது-முதல உசு செய்யுள் - பஞ்சபாய - ஓலை பாசிவதைதத தரிசிப்பதற்குச் சமீபமாகிய நயனதீக்ஷையுண்டாக்குங் கிரியை.

மரபுவிசசவளஞ்செய்தாற்றுமன்னுபநயனங்கேளாய்
கருநிலைகாறுமேழுங்கமைதவெண்ணுடுமுனமெய்ராக
குரியனவற்றின்நேரேயோங்கியபிரமதேசு
விரிதருமாயுள்செலவம்வேட்டவர்புரிகமன்றே (கூஎ)

உறுபவத்திறுக்கெண்ணுமேமாண்பதுபத்துமாகும
நிறுவியவருடந்தாமுநீங்கியீரெட்டின்காறு
முறைமையாமதுவுந்தப்பின்முடிந்திடப்படாதமைந்தர்
மறுவுறுமடியாளீன்றமைந்தருமொருவராவர் (கூஅ)

மண்ணுடைவருதற்கீரைவருடமூம்பத்தோடொன்றுந்
திணணியவரசர்நாய்கர்சிறுவர்காமமைவாந்தப்பி
னண்ணுநாலேந்தின்காறுநவின்றவையைந்தின்காறும்
பணணமாமவையுந்தப்பிறபதாந்துமுன்னவரேயாவார் (கூகூ)

எததுபநயநமுன்னரியம்பியசவளஞ்செய்தல்
சூத்திரன்றனக்குத்தீச்கைசூழ்ந்துசெய்காலத்தென்னு
மாதத நூல்பனத்திம்மார்க்குமறைந்தனவிரண்டுமென்றல்
காததிடுங்காலத்தென்னுமிருவருங்கடுத்தவாற்றால். (க00)

அந்தணர்தமக்குவெள்ளியரசர்க்குவியாழப்புத்தேள்
புந்தியங்கடவுணயகர்க்கறத்தொடுபுணர்பின்னோற்குச
சந்திரன்குரவராவர்தகுஞ்சிவத்துவிசன்மைந்தர்க்
குந்துபநயனமானவுடன்சிவதீக்கைசெய்தல். (க0க)

வெய்த்ருள்விளங்குந்தீக்கைவிடூமூவருக்குமுன்னர்
வைதிகசந்திசெயத்தேயங்குறுசைவசந்தி
செயதிடல்முறையாருசீர்த்தநயிட்டிகன்விரதியென்போர்க்
குய்திசெய்சைவசந்தியொன்றுசெய்திடலுமாகும். (க0உ)

அத்திரசந்திதீக்கையாளர்களபுரியாராயி
னத்திரஞ்சுமந்ததிணடோளரசனேபதிதராவ
ரத்திரசந்திதீக்கையாளராற்றுத்லேவேண்டு
மத்திரசந்திசெய்யுமடைவுமிங்கறையக்கேளாய். (க0ங)

அத்திரமனுவையுன்னியலையெறிபுனலினுடி
மெத்தியபிராணாயாமம்விதியுளியியற்றி நூற்றெட்
டுத்தமசிவாத்திரத்தைபுறக்கணித்திரதயத்தைப்
பத்தியினுரைத்துக்கொண்டுபாணியஞ்சலியாகி. (௧௰௪)

நின்றுழிநின்றேதன்னுணின்றநின்மலனைமுக்கா
லொன்றுறவலமாவந்திட்டு*த்தாபநம்இனிதுசெய்த
லன்றியவினைகால்சீய்க்குமத்திரசந்தியாகும்
வென்றியிற்கிளருந்திண்டோள்விறலுடைவேந்தர்வேந்தே. (௧௰௫)

மொழிதருமறையோராதிமூவர்க்குமுறையேதேசு
பொழியிளவேனில்வெப்புப்புனன்முதிர்வேனில்கூதிர்
பழியறுகாலமாகும்பகர்ந்தமுன்னுளேநாண்மார்,
கழிசிவத்துவிசன்மைந்தர்க்காதிரையுத்தமந்தான். (௧௰௬)

மறுவறுதிருவோணந்தான்வைகானசனுக்குநன்று
மறையுமிந்திரநாண்மன்றவாஞ்சவுமணசனுக்குக்
குறைவில்வாருணநாளாகுமகுண்டகர்கோளகர்க்கு
நிறைதருசனனநாளுநிகழ்சிலவினைக்குக்கூடும். (௧௰௭)

அன்னசெய்வினைகள்யாவையுமென்றிடிலன்னமூட்டன்
மன்னியசவுளமீவகுவருமுபநயநம்வேறே
பன்னிடப்பட்டபட்டபந்தனநான்குமாகு
முன்னுறுபக்கநன்றாம்பின்னதுமுனியார்நல்லோர். (௧௰௮)

வேறு.

உத்தமஞ்சத்தமிதிரையோதசிதசமிசட்டியுறுதுதிகைதிரிதிகைபஞ்சமி யிவையோரேழு,மத்திமமேகாதசிதுவாதசியோரிரண்டும்வளர்பக்கத்தாமதி தேய்பக்கத்துக்கிரணக், கொத்துறுசந்திரபலனுயிருப்பின் முதற்றிதிபுந கொண்டசதுர்த்தசியுமாங்கொழுந்திரையோதசிமுன். வைத்ததிதியொரு மூன்றுமறவேனைத்திதியும் வகுத்தனர்களொருசாரார் மதிக்குடைமன்ன வனே (௧௰௯)

விடைமிதுனநகன்னிகடகந்தனுசுமீனமேவுமங்குராற்பணத்துக்கோ ரேழாநாளு, மடைவுறுமைந்தாநாளுமெனுமிவையுமாகுமறையுமுபநயநத் தோரைந்துறுப்புச்சிறந்த, தொடருமுபவீத ‡ முட்டிநீடம் உத்தரீயஞ் சூழுமேகலைதெண்டமிவையவைகளாகும், படர்சிவத்துவிசனுக்கேபகரு முட்டிநீடம்பன்னுமுத்தரீயமேகலையும்பின்னோர்க்காகா. (௨௰)

அவற்றுளுபவீதமுறையாற்கொணர்பஞ்சினைநூற்றங்குல நான்கிடை த்தொண்ணூற்றாறுசுற்றியதன்றே, டிவற்றிழைவேறிரணடிணக்கிப்புனனீற் றிற்கழுவியெழிற்சத்தியோசாதத்திடக்கரங்கீழாசக், கவற்றுவினைதீர்கிழக் குமேற்குமுகமாகக்கலந்திருவர்திரித்துவலக்கரங்கீழாலதனைத்.துவற்றகன் முப்புரியாக்கியிலையலர்பைந்தருப்பைதம்முளொன்றிற் கிழக்கிருந்தோன் சார்ந்துமுன்னர்வைக்க. (௨௰௧)

---

* உத்தாபனம் - நின்றுதோத்திரஞ்செய்தல்.

‡ உட்டிநீடம் - தலைக்குத் தரித்துக்கொள்ளும் பட்டை.

பிரணவஞ்செங்கணன் மதியாதவன் வளியேபிதிரர்பிரமணரியரனிவ ரொன்றாதியொன்பான்காறும். விரவுமிழைதரக்குரியதேவரிருடிகடாம் விளம்புமுறையேவசிட்டர்நாரதர்சாசிபரே, துரிசில்கவுசிகமுனியேயங்கிரா பாரத்துவாசமுனிபிருகுமுனிமரீசிபகத்தியர்சீர், பரவுமிழையவனைத்தினுக் கும்பிரமந்தசுதானபார்த்திபனேயினிக்கயிற்றைவாமத்தாற்றெளித்து. ()

விலங்குறக்கைகளிற்பிடித்துத்தற்சனியங்குட்டம்விரவமுடித்திடுங்கா லைமூன்றுசுற்றிட்டவற்று. விளங்குகலைமகள் சாவித்திரிகாயத்திரியையிரு த்தி ‡ அகோரத்திரத்தினிறுக்கலுபவீதந், துலங்குபுரிமூன்றிடத்துமயனரி யுமரனுந்தொக்கிருப்பர்பனவர்முதனூல்வருக்குமிடத்தோட், பலங்கதுவவ ணிமனுத்தாந்தற்புருடமகோரம்பகர்வாமமாகுமிவைபார்த்திபமன்னவனே

சூத்திரர்க்குப் புரியொன்றே முப்புரியுமாகுஞ் சொற்றிடுமூவருணத் தும்பிரமசாரிமுதலோர்க். கியாத்திடுமுப்புரிநூலொன்றிரண்டுமூன்றொரு நான்கெனவியம்புஞ்சுப்பிரபேதம்பிறநூல்வேறும், யாத்துரைச்சுமுபவீத மாதிமடவியர்க்குப்பசராதுபின்னொருணையிட்டிகளையகலையு, நீத்தலுறுந்தீ க்கையுளாரெனக்காலு மணிவாணிகழ்த்தருச்சனாதிகளின்மற்றையருமணி வார். (ககச)

விழாவகத்திற்றியகத்திற்புரோக்கணத்திற்செபத்தின்மேவுமுட்டிநீட முழமேழாகுமெட்டும், வழாததனைக்கூற்றிலொன்றிலேழிலொன்றினகல மருவவிழைமெல்லியதாய்வாலியதாயிருப்பிற்றழாலுறுமற்றதனையிடச்செ வியினொருதானைச்சார்ந்துதொங்கச்சுற்றிவலசெவியினொருதானை, நழா துசெருகுதலுத்தரீயமுந்நூலொப்பநல்லகலையிருதானைநணுகும்வகையணி தல். (ககரு)

முஞ்சியெனும்புன்மூன்றுபுரியினுறகயிறுபுரிநெடுஞ்சிலைநாணுஞ்ச ணைக்கயறுமூவர்க். கெஞ்சலுறுமேகலைமுசசுற்றுறமற்றிடைமேவிணக்குவ தாமான்றோலு மயல்பியல்பான்மரித்த, வஞ்சவியன்மயிருறுதோலங்குல மூன்றிரண்டொன்றகலமுறவிருதலையுமுபவீதத்திணைக்கி, விஞ்சலுறுஞ்ச த்தியோசாதமுரைத்தணிதல்விதித்தமுஞ்சிகிடையாதேற்றருப்பையும் வே தியர்க்காம். (ககசு)

தண்டமொருநால்வர்க்கும்பலாசகருங் காலிதருமத்திமூங்கிலிவைதா முறையேநெற்றி, துண்டமெறுழ்த்தோணாபியளவுயரமாகுந்தோலுரியாதழ கினவாய்க்கோணாமைவேண்டுங், கொண்டவுபவீதமுதலானவெலாமுறைத் தாங்கொற்றவனேயினிச்சவுளம்போல்வனமுடித்து, மண்டறவிற்படிந்து சருநுகர்ந்தசிறுவனைத்தான் வன்னியின்றென்புறத்து வடமுகமாக விரு த்தி. (ககஎ)

அங்கியினுத்தரத்திலுபவீதமுதலிருத்தியான்றசுசிமந்திரத்தாலறலினா ற்றெளித்துத், தங்குசிறுவனைப்பஞ்சப்பிரமத்தாற்றெளித்துத்தயங்கரிசியா திகளாலருச்சித்துநீராற், பொங்கழலைவியாகிருதிமந்திரத்தால்வளைத்துப் புகரறுசங்கிதையின்வெவ்வேறைந்தோமம்புரிந்து, பங்கமறவுபவீதமாதிக ளைச்சிறுவன்பகர்தருமந்திரங்களினாற்பரிக்கும்வகைபுரிதல். (ககஅ)

---

‡ அகோராத்திரம் - அகோகமந்திரம் - அத்திரமந்திரம்.

ஒக்கவுபமந்திரமந்திரமிரண்டுங்கலைக்காமுறையைத்திருக்குமனுமேக லைக்கத்திரந்தான், றக்கநெடுந்தண்டினுக்குமுப்புரிநூறனக்குச்சாற்றுமது, வேயுத்தரீயத்துக்காகும். தொக்கனைத்து மணிந்தவன்பின்காலலம்பிமுக் காற்றேயமுழுந்தளவுநுகர்ந்தங்கிவலஞ்செய்து, மிக்குவள்ளர்பிரமகூர்ச்சத் தின்முறைபுரிந்தவிளங்கியவானைந்துநுகர்ந்தாசமநம்புரிக. (கக௯)

பிரமாங்கமந்திரத்தாற் * சம்பாதவோமம்பேணுகுரவன்பிரமவுபதே சஞ்செய்துபுரைதீரமனுநூற்றெட்டெண்ணலெரிவலமாய்ப்போந்திறைஞ் சல்செய்வித்துச்சிவாத்திரத்தாகுதிநூறொருவாதுபுரிந்தீசானுதியொன்பா ன்மனுவாலொன்பதிற்றுசமிதையினேமம்புரிவித்தறலா.லெரிகாயத்திரிய ன்வியாகிருதியின்வட்டிப்பித்தேழோமந்தனித்தனிசெய்வித்தல்பிரமாங்க ம். (க௨0)

தேவதேவனைவணங்கியாசிரியன்பூசைசெய்தவர்க்குத்தனக்கியன்ற செழும்பொருள்களுறுத்தி. மேவுகாஞ்சனமாதியாலியல்பாத்திரத்தைவிய ன்புருடமந்திரத்தால்வாங்கிவலக்கரத்திற். பாவுநீடண்டமிடக்கரத்தேந்தி யன்னைபயந்தவளோடுடன்பிறந்தாடன்னோடுடன்பிறந்த, பூவைமாரிவரு ளொருவரையடுத்து பிச்சைபுகரின் மொழிமொழிந்தேற்றன்மூவருக்குமு ரித்தே. (க௨க)

பவதிமொழிமுன்மொழிதல்பிராமணனுக்குரித்தாம்பார்த்திபனுக்கி டைமொழிதல்வணிகனுக்குப்பின்னாந், தவறறுமுத்தினரிவ்வாறிரந்திரண் டுபோதுந்தழலோம்பிச்சமிதையினுநெய்யினுமாகுதிசெய், தவமறநாலாநா ளிற்பலாசவோமஞ்செய்தகற்றியுபவீதமுதல்வேறணிதன்முறையா. சிவறு சத்தியோசாதத் தானூற்றெட்டோம மியற்றிமொழியாமைமுதலாம்விரத மொழிக்க. (க௨௨)

விளங்கழலைமுன்போலப்புனலினுல்வளைத்துவியோமவியாபியினூறு ங்காண்டரிடியோங்களங்கமறவொருநூறுங்காதலொடுபுரிதல்காண்டோ பக்கிரமணந்தான்பிரமசரியத்துறள். வளங்குலவுநயிட்டிகத்தைவேட்டவன் றன்குருவைவணங்கியிரந்து சிலைக்கச்சதவோமம்புரிந்திட். டௌங்குளிரப் பூரணாகுதியுமுறையியற்றியொளியழனித்தலும்வளர்த்தலுரித்தவர்க்குமன் றே. (க௨௩)

## வேறு

நைதகுநயிட்டிகவிரதமேற்குமுன்,ஞேதுபவீதயாதிகளையொண்ணதி, போ தவிழ்தடாகமாதிகளிற்போக்குபு, கோதறவேறவையணிதல்கொள்கையே

அருள்வளர்சிவனையுமங்கிதன்னையுங், குருவையும்பூசைமுன்குறித் துச்செய்தலான். மருவுமப்பூசனைமூன்றும்வைகலு, மொருவுவதிலையுபநய நத்தார்க்கெலாம். (க௨௫)

பப்பிலுபநயநமுன்பண்ணவர்க்கிய, வியன்மனுத்தழலினையிலங்குவேலினுய் மயரறுஞ்சயாதியோமத்தையாக்கியங், கயர்வறவொடுக்குதலறமதாகுமே.

## வேறு.

சத்தியோசாதமிருக்குகல்வாமந்தயங்கியவெசுர்மயமகோர
மெத்தியசாமமறைவியன்புருடம்விழுத்தகுமதர்வணமயமாஞ்
சுத்தவிசானஞ்சகலதேவர்களின்சொரூபமாமங்கமந்திரங்கள்
வைத்தவேதாங்கமாறுமாந்தெளிகமன்னவவகுத்தவிம்மனுவை. (க௨எ)

---

* சம்பாதவோமம் - மிகுதியாக நெய்யைப் பெய்யுமோமம்.

உரைத்தவேவேதமுழுவதுமோதலுரைப்பித்தலோதுவித்திடுதல்
புரைத்தபுசிவபூசனைசெயல்வேட்டல்பூசைசெய்வித்தல்வேட்பித்த
னிரைத்ததன்பொருளைத்தக்கவர்க்களித்தனெறியுளியீதலன்னவர்பாற்
றரைத்தலைவாங்கலேற்றலாமிவைதாந்தகுசிவத்துவிசன்பான்மிகவும். ()

மேதகுசிவத்துவிசனிவையுரைத்தவிதிப்படியன்றிவேறாக
வோதியபனுவல்விதியுளிக்கிரியையுஞற்றுறின்மறுவலுந்தீக்கை
யாதியிற்புனிதனுவனுத்தமமாவறைதருகாலங்கள்சழியிற்
றீதறவுத்தாலகவிரதத்தைச்செய்துபாநயனம்பின்புரிக. (௧௨௧)

இதன்மேல் ௧௨௩-வது செய்யுள் முதல் ௧௩௦-வது செய்யுள் வரையினும், பதின்மூன்றாவது காண்டோபக்கிரமணமாகிய வேத பாகங்களைய த்தியயனம்பண்ண ஆரம்பிக்குங்கிரியையும்-(பதினான்காவது) காண்டமோசனமாகிய அத்தியயனத்தைவிடச்செய்யுங்கிரியையுங்கண்டுகொள்க.

உத்தராயணத்திற்சித்திரையொழிந்தங்குறுமகமாதியமதியின்
மெத்துமூடத்தில்வெள்ளிபொன்னுறாதவேலையினுறுத்தான்றோணி
னத்தமாவாசையிருத்தைதீர்திதியினனுகுமேழாமிடமன்றச்
சுத்தியாயிருப்பவதுவைசெய்வதன்முன்றொடங்குகசமாவருத்தநமே. ()

பதினைந்தாவது-இதுமுதல் (௫) செய்யுள் சமாவர்த்தநம்-இவை
பிரமசரிய விரதத்தையொழித்தற்குச் செய்யுங்கிரியை.

காப்பணிந்ததற்பின்களைந்தசுக்கிரியவிரதத்தைக்கரிசறத்தொடங்கி
வாய்ப்புறுமூலத்தாகுதிநூறுவயக்குபுமூர்த்தியவிரத
யாப்பினையகற்றியில்லினுச்சிரமயாப்பினையுற்றுவார்சிகையும்
கூர்ப்பரமயிருந்தவிரவேவபாவகுயிற்றிடப்பட்டுநீராடல். (௧௩௧)

விஞ்சுமீசானமாதியினூறுவியத்தகுமாகுதிபுரிந்து
முஞ்சியாதிகள்விட்டிரணடுமுப்புரிநூன்மொய்ம்புறவுறீஇமதுப்பருக்கந்
தஞ்சமார்வாமமந்திரத்தருந்தித்தழல்வலஞ்செய்தெதிர்வணங்கிச்
செஞ்செவேநீண்டதண்டமுங்குடையுந்திகழ்தபுத்தகமுங்கையேந்தி. ()

மொழிதரும் ‡உபாநபதத்தொடுவடக்குமுகமுறச்சென்றுபெண்கொடுப்
கழிமகிழ்வொடுநின்றினியனவிளப்பக்காமரில்லினையடுத்திருந்து [போன்
பழியறுமாசீர்வாதமுற்றியபின்பலரொடுமுண்பதுவிதியா
மிழிவறுமிதனோடரசருக்குரியவியல்பும்வேறுளததுகேளாய். (௧௩௩)

இதனுள் இதுமுதல் (௨) செய்யுள் அரசர்க்குரிய சமாவர்த்தநம்.

கலிங்கமோரிரண்டுதரிக்குமுன்னரசன்கதிருமிழ்படைகாந்தரித்துத்
துலங்குசூரியனைத்துதற்கையைவணங்கல்சூத்திரனிருகலையகற்றி
யிலங்கமூன்றணிதலியம்புமன்னவனேயியல்சமாவருத்தநத்தயில்கைத்
தலம்படுபொழுதின்மன்றலிற்றத்தந்தைவிகவுந்தனைபுரிக. (௧௩௪)

சாற்றுவந்தனைதான்கரும்புகிஞ்சுகம்பைந்தருப்பையென்றிவையொருங்
வீற்றுறவொன்றேயாகமன்னவனேவிழைவொடுகொண்டுபோய் • [காக
ளேற்றியதனதுநடுமனையகத்தேயிருந்திநற்பூசனைபுரிதல் • [வளங்க
கோற்றொடியவர்க்குவதுவைநிச்சயமேகூறியசமாவருத்தநமாம். (௧௩௫)

‡ உபாநபதம் - பாதரட்சையணிந்தகால்.

பதினாறாவது - இதுமுதல் (உ௫) செய்யுள் - விவாக விதி.

வரிந்தசாதகத்தான் மன்றலுக்குரியமாதராடவர்களாயுளினைத்
தெரிந்துபின்மடவாரிடப்புறத்தியல்புஞ்செப்புமாடவர்வலப்புறத்தின்
விரித்தநல்லியல்புமிருக்குமாநோக்கிவிரிச்சியுஞ்சகுநமும்பார்த்துப் [ரும்.
பொருந்துறின்வதுவைபுரிவதுவழக்சாம்பொருந்துறுதெனில்வழக்கன்

ஒருவயிற்றுதித்தோரிருவருக்கிதுமற்றுடன்குறப்புரிதலோராண்டின்
மருவுறப்புரிதல்வழக்கிலைசவுளமன்னுபநயநத்துமதுவே
யொருகுலமொருசேர்த்திரமெனிலாசாதுற்றதாய்தந்தையர்தமக்கு
வருமுறையைந்தினல்லதுபன்னுமற்றையமுறையினுங்கூடா (௧௫௭)

குலங்களோரிரண்டுந்தூரமில்லனவாய்க்குழுமியதலைமுறையீரைந்
தலங்கலில்லாததூய்மையவாயினத்தகுகுலத்திடைப்பிறந்த
கலங்கதிரொறிக்குமாதராண்மைந்தன்கதுவியவாயுளிற்றாழ்ந்து
புலங்கொளும்பனுவல்கிளந்தபேரழகுபுணர்ந்திடின்வரைவினுக்குரியள்.()

காலிருவயதுகன்னிளுள்கவுரிநவையறுமொன்பதாம்பிராய
மேலுறவுடையாளுரோகணிபத்தென்றியம்பியவாயுளாள்சன்னி
மேலுறுமீராறண்டினையுடையாள்விடளியென்றுரைத்திடப்படுவார்
மாலறும்வருட்கவுரியைத்தானம்வழங்கினோன்சுவர்க்கம்வாழ்ந்திருப்பன்

உரோகணிதானம்பண்ணினோன் றிருமாலுறைந்துவாழுலகில் வாழ்ந்திருப்பன், பராவுகன்னிகையைவழங்கினோன்பிரமன்பதத்தில்வாழ்ந்திருப்பன்பன்னிரண்டு, பிராயமுற்றவளைவழங்கினோனிரவுரவமெனும்பெருநரகுழப்பன்,னிராறின்மேம்பட்டமாதராக்கொடுப்போர்கிதுபயனென்றியானறியேன். (௧௬௦)

பூத்தவள்வதுவைமுற்றுறுதிருப்பிற்பூப்பவுங்கொடாதுவைத்தவளைக்
காத்திருப்பவனீரியக்சமும்பிதிரர்கசக்கொண்டுநுகர்தலினந்தோ
மூத்துறுகுலமுமழியுமாதலினன்மொய்த்தபூப்பினுக்குரித்தாக
யாததவாயுளின்மூன்றுபுளுங்கதியுமீட்டுவேசீர்மன்றல்செய்தளிக்க.(௧௬௧)

பொருள்விழைந்தணங்கைக்கொடுத்தவன்றனக்கும்புகன்றமுற்குற்றமேயடுக்கும், பொருள்விழைந்தளித்தபூவையுந்தூய்மைபுணர்கிலள்புழுக்கையேயொப்பா, டருமுறையின்றிவலியினுற்கவர்ந்ததையலுங்கருவிலையாதிகருமமில்லவளும்விதியுளிவதுவைசாணினுமத்தகைமையரோ. (௧௬௨)

பிரமமேபிரசாபத்தியந்தெய்வம்பேணுமாரிடம்வளரசுரம்
பரவுகாந்தருவமிராக்கதம்பசாசமெனப்பகர்மன்றலோரெட்டாங்
கரவுதீர்பிரமசரியநோற்றவர்க்குக்காமருசெல்வமிக்குடைய
வரவமேகலையயங்கிமுன்றூனமாகநன்றளிப்பதுபிரமம். (௧௬௩)

அரிவையைக்கோடற்குரியவன்கொடுத்தவாடகத்திரட்டியம்மகளைப்
பரிவொடுசார்த்திக்கொடுப்பதுபிரசாபத்தியம்வேள்விசெய்தவர்க்காங்
குரிமையின்மகளைத்தக்கணையாகவுதவுதறெய்வமீராவைப்
புரியிழையணிந்துநீஇயல்டைமகளைப்புரையிலார்க்களிப்பதாரிடமே. ()

மகட்பயந்தவனையிரந்திரந்தீந்துவாங்கலுமொக்கலார்க்கிரும்பொன்
மிகக்கொடுத்தவாற்பயந்தவனளிப்பமேவலும்பிறவுமாமசுரந்
தகப்பெருங்காதலாலெதிர்நோக்கித்தங்களுட்கூடல்காந்தருவம்
பகப்பயந்தவனையலைத்தணங்கலறப்பாழியிற்கொளலிராக்கதமே. (௧௬௫)

களித்தவர் துயின்றோர்மூத்தவரிவளைக்கரவினூற்கவர்வதுபசாசந்
தெளித்தனமன்றலெட்டுமெந்தணர்க்கேசிறந்தனமுந்தியநான்கு
மளித்தனங்கேற்குமசுரநால்வருக்குமாகுஞ்சூத்திரன்முதலோர்க்கு
விளைத்தகுந்தருவமிராக்கதமுரியமருவுறுமொருவர்க்கும்பசாசம். (கசஎ)

இச்செய்யுளில் ஒவ்வொரு வருணத்தார்க்கும் மணவரையின் பேதங்களை முறையே கண்டுகொள்க.

இன்னவாறுரைக்குஞ்சப்பிரபேதமிவற்றினைச்சிறிதுவேற்றுமையாற்
சொன்னநால்வேறுமுளதுதரிக்கதொடங்கியவைதுவேதிகளைப்
பன்னுதமிருபத்தொருமுழவேதியனவருக்கரசர்க்குப்பதினைந் [ம். ()
தின்னவில்வணிகர்க்கொன்பதுபின்னோர்க்கெழுமுழஞ்சிறப்பருக்கைசந்தா

மருவியவந்தராளர்க்குநான்காமகலமனைத்துமைந்தளிக்கும்
பெருகிடமிலையேற்பிராமணன்முதலாநால்வர்க்கும்பிறங்குவேதிகைதாம்
வருமுழமேழாறைந்துநான்காகுமற்றிவைதமக்குநேராதே
விருமுழத்திரட்டிவேதிகையெல்லார்தமக்குமாமிகறபுமேவந்தே. (கசஅ)

இவ்விரண்டு செய்யுளில் மங்கலக் கூறையும், திருமங்கிலிய விபரமுங்கண்டுகொள்க.

மந்திரவாசமேழிருமுழமாமற்றதற்கெட்டிலொன்றகலஞ்
சுந்தரவெண்பட்டுரித்திழைகறுப்புத்துன்னுறுஞ்சித்திரபடமுஞ்
செந்துவர்ப்பருத்திக்கலிங்கமும்விலக்கார்திகழுமங்கிலியமாக்கும்பொன்
மூந்திருகுஞ்சமுதற்பதினாறுமுடிவுமுப்பதுமுடிவினுயாம். (கசகூ)

இலகொருமருப்பனெனமலர்க்கமலமெனவெழிற்சிவலிங்கமெனச்செய்
தலவொளியரும்பைர்திழைத்துறுதுணைபாலாக்கிமற்றதனிடையிரண்டு
குலவியகனகக்கயிறுகோத்ததுதான்சேர்திண்மங்கிலியமாங்கண்டாய்
மலர்தலைபுலகம்வியத்தகுமன்றல்வரவினைப்புகலுதுங்கேளாய். (கரு௦)

குருமணிக்கலனுமாலையுந்துகிலுங்கொண்டெழில்கொளவலங்கரித்திட்
டிருவர்களுடையகோத்திரநாமமியம்பிநீரோடுதன்மகளைப்
பெருவளம்பிறங்கவீன்றவனளிக்கப்பெற்றவனில்லையேன்மகளைத்
தருமவனுடனேபிறந்தவன்முதலோர்தம்முளேயொருவனீந்திடுக. (கருக)

அங்கிமேற்றிசையினுதனமியற்றியாங்கொளிர்சிவாகமமனுவாற்
பொங்கெழிற்கலைமென்மலரிலைகொடுத்துப்பொற்புறவிடப்புறமாகத்
தங்குவித்ததன்பினபவிரதயத்தாற்றையலாவிரதயங்தொட்டு
மங்கலத்திருநாண்மங்கலமுழங்கமணமகன்மனைகளத்தணிக. (கருஉ)

சத்தியுஞ்சிவமுமெனநினைந்தாசான்றரும்பிரணவந்தொடர்மூலம்
பத்துறழ்பத்தாகுதிபுரிந்தினிமைபயின்மதுப்பருக்கநன்களித்துப்
பொத்தியமணித்திண்கலத்துறுமணலும்பூதகாயத்திரிமனுவால்
வைத்தெதிர்காட்டியங்குமாசமநம்வாங்குவித்ததன்பின்னையசன்றன். ()

அறைவியாகிருதிமனுவினூற்றெட்டாகுதிபுரிந்தங்கியற்றென்பா
னிறைபிராணுதியோமமுநிகழ்த்திநிகழ்கருத்தேனுமந்திரத்தாற்
கறையறுபசுவுங்கன்றுமோரடுப்பக்கண்டழறனக்குமென்முகத்தின்
மறையுளியரனைப்பூசனையியற்றிமாதுதன்வலப்பதம்பிடித்து. (கருச)

எரியழல்வடபால்வாமதேவத்தினொழுடியயக்கியம்மியின்மே
லுரைசிவகாயத்திரியினுலெடுத்திட்டொண்டொடிஞலக்கரம்பற்றிப்
போரியுமாமகேசத்தஞ்சலியோமம்புரிதரச்செய்துவல்வினையை
வரைதரும்வியோமவியாபிமந்திரத்தான் மனையழலாகுதிவளர்த்து. (கருரு)

மறுவறுமோமம்வியாகிருதியினும்வயங்கியசித்தியஞ்சிறப்பென்
றறைவனபிரமாங்கங்களினுலுமாற்றியெவ்வங்கமந்திரத்துங்
குறைவறவோமங்குயின் றுமுன்போலக்கோற்றொடிகரப்பிடித்தேகி
நிறைசுவைப்பாலிற்கரல்கழீஇயணிகணிரப்பியமனையகம்புகுந்து. (கருசு)

சத்தியோசாதத்தான்மனைபுனிதந்தழைதரச்செய்துமங்கிலிய
முத்தநேர்நகையார்நால்வர்களிட்டமூரியம்பாயணையிடையே
சத்தியையாகநினைந்தொருகலலைத்தங்குவித்தொருவர்மேலொருவ
ரத்தடாடாமலுணாயிறந்தலரியம்புலிசினைந்துறங்குகவே. (கருஎ)

வைகறையெழுந்துநாட்கடன்முடித்துவைகலுயாரழலோம்பிப்
பொய்கழியோமநான்கெனுந்தினத்தும்புகல்பிரமாங்கமந்திரத்தாற்
செய்தருந்துதியைக்காட்டுபுசயாதிதிகழ்வியாகிருதியாதிகளின்
மெய்துறகழுவாயோமமுமியற்றிவியன்மனைமுன்புபோற்புகுந்து. (கருஅ)

இயம்பியவாமத்திருதுசங்கமனமியற்றியைந்தினத்துறகாலை
நயம்படவபநண்ணியூர்க்கிழக்குநடந்துதும்பரமரநோக்கி
வயம்படுமுழங்காலளவுநீரிறங்கிவத்திரத்தாற்கயல்பிடித்துப்
பயம்படுமத்திமூலநற்பூசைபண்ணுகபார்த்திபறேறே. (கருகூ)

பத்தினிவிசுவதேவரிதாயவெனுமனுப்பகர்ந்தொருபதினைந்
தொத்தவாகுதிசெய்தொளிர்மனையகத்தேயுறுதசதிக்கினும்பூசை
பத்தியிற்புரிந்திட்டெச்சமோரைந்தும்பயிற்றியிட்† டப்பியாகதரோ
டுத்தமவதிதிபூசையும்புரிதலுறுமுறையாகுமென் றுரைத்தான். (௱சுo)

அரசன் ஆசிரியற்கு விடைகொடுத்தல்.

இன்னவாறிருங்கிரியையீரொட்டுமினிதியம்பு
நன்னராரியன்பாதநளினமலர்பணிந்தேத்தித்
துன்னிநீள்பொருள்பலவுந்தொகுத்தவனையவனிருக்கை
மன்னிவாழ்தரவிடுத்துமனுநீதிவளர்சோழன். (கசுக)

அரசன் - கமலவதியென்னு மனையாளிடம் இன்பநுகர்தல்.

மனைக்குரியாண்முகநோக்கிவயங்கியபூப்புறுநாளி,
னினைக்குரியவொழுக்கமிவைநிகழ்த்துதிநீயெனவியம்பி
யினிக்கவிதித்திடுநாளிலிணைவிழைச்சாற்றலுமறுநி
னுனிக்கணுறுபனியேபோனுண்கருவாய்ந்ததுவயிற்றில். (கசுஉ)

இது முதல் அ - செய்யுள் கருப்பக்குறி.

கருவாய்த்துவயிற்றகத்துக்கதித்துவளர்செயன்மனையா
ளுருவாய்ந்தகுறிகளினுணர்ந்துடனேகாப்பணிந்து
பெருகார்வத்தொடுமங்குராற்பணமும்பெரிதாற்றித்
தருமானுமிறைகருப்பாதாரவினைதகச்செய்தான். (கசுங)

---

† அப்பியாகதர் - வந்தவர்கள்.

இருமதியிற்புஞ்சவனம்பயற்றியிருமூன்றென்ன
வருமதியிற்சீமந்தம்வகுத்திட்டான்மனுவேந்த
னொருமதித்தண்கலையென்னவுறுகருப்பம்வளர்தோறுங்
குருமதியினொளிர்முகத்துக்கோற்றொடிவேறுருவானாள். (௧௪௪)

சுவையாது நுகர்ந்திடினுந்தொகவேற்றிட்டுறப்பனைத்து
மவர்சாரம்புகுவிக்குமெழில்வயிறுகருவேற்றுத்
தவநாளுந்தன்னுருவம்வேறாகித்தக்கவனை
யவனாளும்வேறாகியலங்கும்வகைபுரிந்ததே. (௧௪௫)

கொண்டல்படிந்திடுஞ்செம்பொற்குவடெனவுமலர்பருத்து
வண்டுபடிந்திடுங்கனகவனசமுகிழ்த்துணையெனவுங்
கண்டவர்கள்வியப்பெய்தக்கடையவொருதலையாக்கு
மண்டியபொற்செப்பெனவும்வளர்முலைகள்கறுத்தனவே. (௧௪௬)

மாரவேண்முதற்கணையாய்வயங்குமுலைகறுத்தலொடும்
வீரமார்கடைக்கணையாய்விளங்கும்விழிமலர்நோக்கிக
கோரமாயெதிர்ந்தவரைக்குமைக்குமருந்திறஞ்சிறிது
தீரவேபுள்வாங்கிச்சிறந்தநிறம்பசந்தனவே. (௧௪௭)

கண்ணிலமெனுமனையாள்காமர்நிறப்பசத்தலொடு
நண்ணீர்மைநுதலென்னுநகைமதியுநிறம்பசந்த
கண்ணீர்மைக்கணவனருந்தாவமிழ்துள்ளமிகுந்து
வெண்ணீர்மைபோர்த்ததெனவிளர்த்ததுசெவ்வாயதரம். (௧௪௮)

தன்னுருவந்தோற்றமற்றறுகண்மையொடுந்தாங்கும்
பொன்னுருவமுலைகறுத்துப்பொலிவழிதலெதிர்நோக்கி
மன்னுவகைதலைக்கொள்ளவயங்குருவீங்கியதெய்ப்ப
மின்னுருவிடைவிழிக்குப்புலனாகவிளங்கியதே. (௧௪௯)

அருங்கலப்புத்திரனன்றியரிவையர்க்குப்பொன்னாதி
யிருங்கலமற்றருங்கலமாயிராதெனுமென்பாள்போற்
பெருங்கலன்கள்பொறையாற்றாப்பெற்றியினாற்பேரணியு
மொருங்கலர்மாலையுமுலப்பினணியாதகளர்வினளே. (௧௫௦)

கருப்பமுடையோர் விரும்புமுணவுகள்.

கருவிடத்துநீறிடுதெல்கட்டினென்றுதிருநீறும்
பொருதடந்தோண்மகன்பழகப்புகையுண்டகருமண்ணுந்
தெருளுயிரக்கருவினிடைச்சிவனுநிலையிதுபோலென்
றுருவகறுந்தீம்புளியுமுவந்தருந்தும்வயாநிறைந்த. (௧௫௧)

புத்திரோற்பத்திக்குக் காலங்குறித்தல்.

ஐயிருநன்மதியடுப்பவகடுளைந்துகமலவதி
மெய்யினையக்கருமதலைமிளிர்ந்துசிரங்கீழ்நோக்க
வெய்யெனச்சென்றரசனிடையுழையருணர்த்தலுங்கணிகள்
வையமிதுபொழுதகலிற்பார்த்திபனாமென்றனர். (௧௫௨)

நன்முகூர்த்தம்வருமளவுநளிமைத்தன்பிறவாமை
யென்முயன்றுமெனவாசனிலையின்றசெயல்கேளா
வன்மதியிற்கமலவதிமறற்றென்னைத்தலைகீழா
வென்மணிநூபுரத்தாவின்யாத்தினித்தூக்குகவென்றான். (௧௭௩)

புதல்வன் பிறந்தமை.

ஈங்கிதுவுந்திருவருளாலியன்றதெனவலித்தரச
னுங்கதுவேபுரிமினெனவயலிருந்தாரதுபுரிந்து
நீங்குறுகாலங்கடந்தசெவ்வியினிலிறக்கின்று
ரோங்குவலம்புரிமுத்தினொருமைந்தனுதித்திட்டான். (௧௭௪)

கமலவதி குழந்தைக்கு கோச்செங்கண்ணனென்றமை.

தத்தபவமுறுங்காலுந்தாழ்த்தலினுற்றனிமைந்தன்
செக்கர்சிறவிழியினனாய்த்திகழ்ந்தொளிருஞ்செயனோக்கி
மைக்கணுறுகமலவதிவளர்சோச்செங்கண்ணனே
தொக்கவறந்தலையெடுப்பத்தோன்றியவிம்மணியென்றாள். (௧௭௫)

இதுமுதல் (௪) செய்யுள் அரசன ஆலயங்களுக்கும் வேறு
குடிகளுக்குஞ் சிறப்புச் செய்தமை.

வேறு.

உறைந்தசோழநாடேயன்றியுலகெலாம்வியப்ப
விறந்ததேவரும்பிதிரரும்விழுத்தகவினைப்ப
மறந்தவாததெம்மன்னருமனங்களிகூர்ப்பச்
சிறந்தகான்முளைபிறத்தலுந்திகழ்நபதேவன். (௧௭௬)

அறங்களாக்குகவாலயந்தொறுஞ்சிறப்பெடுக்க
பிறங்குமாநகர்த்தெய்வமாதிகளும்யேணிடுக
மறங்குலாவுதெம்மன்னர்சானிகளம்வாய்விடுக்க
வுறங்குவாருளரோலவர்க்குறுமகிழுறுக்க. (௧௭௭)

இறைகொடாதுசில்லாண்டுதெம்மன்னரோசிறக்க
கறைகொடாதுசில்லாண்டுவாழ்குடிகளேகளிக்க
குறைகொடாதமாநகரெலாங்கோடனைகிளக்க
மறைகொடாதுபண்டாரம்வாய்திறக்கவென்றேவி. (௧௭௮)

தூயநீர்படிந்தடுத்தனன்றோன்றலைநோக்கி
மேயசாதகன்மத்தினைவிதியுளியியற்றி
யாயகாஞ்சனமாதிசடானமாவளித்துப்
பாயவோமமும்பத்துநாளளவுமாற்றினனால். (௧௭௯)

வந்தவர்கட்கு மகிழ்ச்சிசெய்தமை.

செய்யகோலுடைமன்னவர்கையுறைசெறித்திட்
டையவோலையின்வினையினார்க்கதிமகிழ்சிறப்ப
வெய்யவேலினன்விழுக்கலன்பூந்துகில்பிறவும்
பெய்யுமாரிபோல்வழங்கினன்பெரும்புகழ்சிறத்தான். (௧௮௦)

கர்னவேதனம், நாமகரணஞ்செய்தமை.

வளருத்தாபாகம்வயக்கிவார்கா நிலைதுவைத்துத்
தெளிபுமாமதிமனைவிகோச்செங்கணனேனென்
றளவிலோகையினறைந்தவர்க்காமமேமகற்கு
வெளிறில்சேள்வியான்விதியுளியிட்டழைத்தனனால். (௪௮௧)

புதல்வர் வளர்கின்றமை.

கொங்குயிர்த்ததார்க்கொற்றவன்குறித்தநாளேனை
மங்கலத்தபல்விளைகளுமரபுளியியற்ற
வங்கண்மெல்லியலணங்கினராற்றுவாற்றத்
தங்குமைந்தருந்தனிமதியெனவளர்கின்றார். (௪௮௨)

இதுமுதல் ௧௦ செய்யுட்களால் ஆண்பாற் பிள்ளைப்பிரபந்தத்தின் அங்கங்கள் அறிந்துகொள்க. ௧-வது செங்கீரை ஐந்தாமர்தம் இவை ஒருகாலைமடக்கி ஒருகாலைநீட்டி யிருகைகளையு நிலத்திலூன்றித்தலை நிமிர்ந்து முகமசைய ஆடுதல்.

இவ்வுலகோர்பொருட்குமிடமென்றுகாட்டுதல்போ
லெவ்வமறுநிலத்திருகையிருத்திநெடுவான்போகந்
துய்வுதல்யான்விழைந்திலேனெனத்தலையைத்துளக்குதல்போற்
செவ்விபெறுமுகநிமிர்த்துச்செங்கீரையாடினார். (௪௮௩)

௨-வது தாலம் ஏழாமாதம்.

மாயையெனும்பெருந்தொட்டில்வல்விளையின்கயிறியக்கிப்
பாயபெரும்புவனமெனும்பரப்பனைத்துஞ்சென்றுட
லாயவொருதாலொழியவடுத்தவரைமணித்தொட்டி
லேயும்வ கயிலையைவித்திட்டேழையர்தாலாட்டினார் (௪௮௪)

௩ - வது சப்பாணி ஒன்பதாமாதம்.

எஞ்ஞானமில்லாமலிதுகாறுங்கிலகாணு
வஞ்ஞானப்பெருங்கடலிலலைப்புண்டதுயர்தீர்க்கு
மெய்ஞ்ஞானவரவறிந்தமிகுமகிழ்வின்விளைவேபோற்
றஞ்ஞானம்பெறவந்தார்சப்பாணிகொட்டினார். (௪௮௫)

௪-வது முத்தப் பத்தாமர்தம்.

இரவிமருமானென்னுமியல்பெவர்க்குந்தெரிப்பவர்போ
லரவமணிமேகலையினணங்கனையார்முகமென்னும்
புரியிதழ்த்தாமரைமலர்கள்பொற்பவலர்தரச்சென்று
முரிவிலருள்பெறவந்தார்முத்தமளித்தருளினார். (௪௮௬)

௫-வது வருகை பனிரொண்டாமாதம்.

கானனையன்கற்பகப்பூங்கண்ணியருமிருடியரும்
பானனையுமணிச்சிறுவாய்ப்பாலன் வருகெனவிளியாத்
தானனையபெருந்தவத்தாற்சார்ந்தபெரியவர்தம்மை
மானனையவிழியடவார்வருகவருகெனவிளித்தார், (௪௮௭)

௬-வது அம்புலி பதினோருமாதம்.

சந்திரனீசூரியனிற்றனிமைந்தன்பயிர்வளர்க்கு
மந்தரனீயெவ்வுயிருமளிக்குமிவன்றாரணியான்
சுந்தரமாரிவனுடனேமொதாக்காடவருகவெனப்
பைந்தொடியார்மதிவிளிப்பப்பார்த்துமனங்களிகூர்ந்தார். (௧௮௮)

௭-வது சிற்றில இரண்டாம வருஷம.

உற்றதோர்வினையன்றியுறாததுசெய்தாலதனைப்
பற்றலாரெனவழித்துப்பாரளித்தறெளிப்பவர்போன்
முற்றிலான்மணற்கொழித்துமொய்த்தசிறுமியரிழைத்த
சிற்றிலானவையவர்கள்சினந்தலறச்சிதைத்திட்டார். (௧௮௯)

௮-வது சிறுபறை மூன்றாம்வருஷம்.

பிறவியெனுநெடும்பகையும்பெருகுகலியின்பகையு
மறமலிமன்னவர்பகையும்வையகத்தோர்தீவினையு
மறவொழிகவறாவனைத்துமமர்கவெனச்சாற்றுதல்போற்
சிறுவிரல்களொளிதுளும்பசிறுபறைசணைமுழக்கினார் (௧௯௦)

௯-வது சிறுதேருருட்டல் நான்காம் வருஷம்.

பறந்தலையினெதிர்ந்தவர்கள் பன்மணித்தேர்புறங்கொடுப்ப
மறந்தழையுமணிநெடுந்தேர்வல்லையுகைத்திடற்குரியார்
பிறந்தகதிர்க்குலத்தினுக்குப்பெரிதுமிஃதியைவதெனச்
சிறந்தசிறுவர்களொடும்போய்ச்சிறுதேரங்குருட்டினார். (௧௯௧)

வித்தியாரம்பஞ் செய்வித்தல்

இத்தகையவிளையாட்டினியல்பொழியவைந்தாண்டிற்
பைத்தநெடுங்கடலுலகம்பரிக்குமொருசுபதேவன்
மெத்தியபேருவகையனாய்விழுத்தகுமங்கலஞ்சிறப்பப்
பொத்துமெழிற்கலைமகளைப்புணர்வித்தான்மகனார்க்கு. (௧௯௨)

அரசர்க்குரிய ஆயுதப்பரிட்சையும், யானையேற்றம், குதிரையேற்றம்,
இரத நடத்தல் - பழகினமை.

சின்னாளிற்பயில்கலைகள்செயிர்தீரமிசப்பயின்று •
பின்னார்வத்தொடும்படையின்பெருங்கடலைக்கரைகடந்து
துன்னார்கள்குடர்குழம்பத்துரகதமுங்கடகளிறும்
பொன்னார்திண்மணித்தேரும்பொருதிறத்தினுகைத்திட்டார். (௧௯௩)

இது முதல் (௪௩) செய்யுள் கதை.

ஓங்குமுபநயனவினையொருபதிற்றாண்டினிற்பெற்று
வீங்குமறைமுழுதோதிவிழுத்தகைமையொழுக்கெய்திப்
பாங்குபெறும்பதினாறாண்டினில்வதுவைபயின்றுலகந்
தாங்குமுறைமையும்பெற்றார்தறுகண்வினைப்பவமற்றார். (௧௯௪)

மண்ணுலகஞ்செங்கோலின்மலிவெய்தவேள்விகளால்
விண்ணுலகமலிவெய்தவேத்தவையின்வீற்றிருந்து
கண்ணலர்கள்பணிகேட்பநவையனைத்துநலிந்தொழியப்
புண்ணியமெங்கணும்வளரப்புகழரசுபுரிகாலை. (ககூ௬)

விளையாடும்பருவத்தும்வெண்ணாவல்வீற்றிருந்த
வளையாடுமணிநாகத்தகலத்தார்திருவடியே
யுளநாடிவருமவர்தாமோங்கியமுற்பவவினைத்தே
யளவாதுதிருப்பணிகளாக்குதற்குமனம்வைத்தார். (ககூஅ)

படிநெளியுநாற்படையும்பரப்பியெழுந்தடையலர்த
முடிகளொடுமுடிபுரளமொய்யமரினுயிர்பருகிக்
கடிகெழுபல்வளங்கவர்ந்துகழலடைந்தோர்திறைவாங்கி
மடிவில்பொருளொடுசோவல்வனத்தினைமுற்றினர்மாதோ. (ககூஎ)

வேறு.

முந்தியபவந்தொறுமுற்றிநின்றதோரந்தமிலன்புமிக்காரநாவலின், கந்தமென்னீழலிற்கலந்துளார்பதஞ்சிந்தைசென்றிறுகுறச்சென்றுதாழ்ந்தனர்

திருவுருநோக்கினர்செங்கணீருக, வுருகினர்குழைந்தனருலப்பிலானந்தம், பருகினர்மறைபலபாடியாடினர், பெருகியவன்பொடும்பெயர்ந்துகுழ்ந்தனர். (ககூகூ)

அரிதவணகன்றகிலாண்டவல்லிதன், பரிபுரச்சீறடிபணிந்துபோற்றினர், வரியளிமுரலுமவ்வனத்திலோர்சிறை, யுரிமைசெய்பரிசனத்தோடும்வைகினார். (உ00)

சூழ்ச்சியின்மிகுந்தவர்தொகுப்பநோக்குபு, வாழ்ச்சிவெண்ணாவலின்மருவினார்க்கிவண், டாழ்ச்சியில்பொருளொலாந்தயங்குமாலயம், வீழ்ச்சியில்வினைஞரால்விதிக்கவென்றனர். (உ0க)

அருடலைக்கொண்டுசென்றமைச்சராதியோ, ருருவளருலோகமிக்குருக்குவாரையுங், குருமணித்திரள்களைக்குயிற்றுவாரையுந், தருகவென்றேவினர்வியவர்தங்களை. (உ0உ)

வியவரும்வினைஞரைவிளிப்பவேகினர், நயவருமிரவியுநாலைசென்றதாங், கயர்வுறுமாலையுமடுத்ததவ்விராக், கயவுரிப்போர்வையார்கனவிற்சொல்லுவார். (உ0ந)

அடியவர்வேடமோடடுத்தநாயகர், முடிகெழுவேந்தனைமுகத்துநோக்குபு, படிமுழுதாள்பவபணிபொன்றுதியான், மிடியறச்செய்வதுவேட்டுநின்றனை.

வேட்டவவ்வுளத்தினைவிடுதிவிண்ணவர், நாட்டுளதச்சன்முனண்ணிநம்முழை, வாட்டமினிருமிதவரங்கொண்முன்னரே, கோட்டமிலாலயங்குயிற்றவெண்ணினான். (உ0௪)

மேவியகெண்டகைவிலங்கற்சாரலிற், பாவியகெண்டகைநதியின்பாங்கரிற், றாவிகைவிமானந்தன்றொடிக்கையாலிழைத், தோவிலன்பாலிவணுறுத்தலுக்கினான். (உ0ரு)

ஆங்கவற்கதனையவ்வாற்றினிட்டுநீ, நீங்குகென்றுமதுநிகழ்த்தியன்னவன் பாங்குறுமித்தலம்படர்ந்துமாதவந். தாங்கினன்னிருமித்ததலைமைபூண்டனன் (உ௦எ)

ஆதலினுங்குநீயடுத்திட்டவ்வயிற், கோதறுமுருத்திரர்கோடியோர்குழீஇ மேதகுபூசனைவிளைத்துப்போற்றிய,நாதருமுளரவர்தம்மைநண்ணுதி(உ௦அ)

முன்னவரருளினன்மொழிந்தவாறுநீ, பின்னதுதனையிவட்பெயர்த்துவையென, நன்னயமொழியினனவின்றுநீங்கினர்.சொன்னவைநனவெனத்துணிந்துசோழனார். (உ௦கூ)

விடிந்தபினமைச்சரைவிளித்துமற்றிவண்,முடிந்ததுமுதல்வனாருளி தென்றவர், தொடர்ந்தவர்நால்வகைச்சேனைசூழ்தரப்.படர்ந்தனர்வடமுகப்பார்த்துவேந்தனார். (உக௦)

கலைச்செழுங்கரத்தவர்கரைந்தகெண்டகைச,சிலைத்தலைநதியினைசசேர்ந்துபாங்கரி, னிலைத்தநின்மலனடிநிகரில்வந்தனை, நலத்தகப்புரிந்துசின்னுளங்குற்றனர். (உகக)

மூந்திடத்தெய்திமுக்கண்ணர்கூறுவா, ரிந்திடத்துளதஃதெடுத்துமீட்டுமிங், குந்திடத்துறுகெனவுறுத்திசென்மதி, யந்திடத்துறுமெனவருளிப்போயினர். (உகஉ)

அயிலுறுசூற்படையமலர்கூறலும்வெயிலுறுபூணுடைவேந்தனார்மணி, பயிலுறுநதியிடைப்படிந்துநேருறக், கயிலையைநேர்விமானத்தைக்கண்டனர். (உகங)

புனையறுசிற்பநூல்புகன்றவாற்றினல், வனையெனவிலகியவிமானம்வல்லையே, கரைமிசையேற்றினர்கண்டுமீட்டுமெவ். விரைநதியிட்டனர்மேவுகாஙகென. (உகச)

விமலனையாயிடைமீட்டும்போற்றினர்.தமதிருஞ்சேனையுந்தாமுமீண்டுசென், றிமையவரோத்திபநகரையெய்தின, ரமுதலிங்கேசனையன்பிற்போற்றினர். (உகரு)

## வேறு.

திரைதவழ்பொன்னிசார்ந்துசெஙகணார்நிற்பவாக்குக்
கரையர்முன்னிடாதுதிக்கினமரொருதடத்தின்மூழ்கி
விரையவையாற்றுப்பொய்கைமீமிசையெழுந்தாலென்ன
விரைபுனற்பொன்னிநாப்பணெழுந்ததுவிமானமம்மா. (உகசு)

புற்புதமெழுந்தாலேன்னப்புனலிடைவிமானந்தோன்றத்
தற்பரன்சரணமன்றிச்சார்புறுத்தகைமைமன்ன
ரற்புதவுளத்தராஞரமரருமிறும்பூதுற்றார்
சொற்பயில்புவியினோருந்தோல்வியின்மகிழ்ச்சிபூத்தார். (உகஎ)

அடியவர்தமக்கெய்தாதவரும்பொருள்யாதொன்றில்லை
கடிகெழுகாவனீழற்கண்ணுதலருளினாலே
படிமிசையெவருங்காணப்பரந்தசெண்டலகநீராற்றி
னிடைசிலைபொன்னியாற்றினெழுந்துமேல்விளங்குமென்றால். (உகஅ)

வினைஞரைக்கூவியெல்லாமேதகக்கரையிலேற்றி
நனையவிழ்நாவனீழன்மம்பனார்க்கினிதுசார்த்தித்
தனைநிகரதனிப்பொன்பான்சாளரமேல்பாய்வைத்துப்
புனைமணிவாயிறென்பாலாக்கினர்புரைதீரன்பர். (௨௧௯)

மொழிந்ததென்வாய்தனோமுப்பதுசாலேகத்தோ
டெழுந்துவிண்ணளாவுங்கோயிற்கிணக்குமண்டபமுமற்றுஞ்
செழுந்திருசசிலையாற்சிவகத்துருவெனச்சிறந்துதோன்றக்
கொழுந்துகொண்டெழுந்தவன்பிற்கொற்றவர்குறித்துச்செய்தார். (௨௨௦)

மண்டபம்பிரகாரங்கள்வயங்குகோபுரங்களாதி
விண்டொடவிழைத்திட்டெஞ்சும்விழவிருமுழுதுமோர்சார்
மிண்டறத்தாபித்திட்டுமேக்குறவதற்குமேலோ
கொண்டமண்டபத்துமேலாற்கோயிலொன்றிழைத்திட்டாரால். (௨௨௧)

சித்திரக்கோயிலுள்ளேசிவலிங்கமொன்றுதாபித்
துத்தமசித்திகளெல்லாமுமதருள்வசமாமீங்கு
வைத்தனன்கைக்கொளென்றுவணங்கினரநந்தப்
பித்தருக்குளதாலாதிப்பெருஞ்செல்வமொன்றுநாமம். (௨௨௨)

சம்புவினீழலார்க்குத்தக்கவாகமத்திற்செய்யு
நம்புவித்தியமேயாதிநவையறுபூசையெல்லா
மும்பரும்வியையவாற்றற்குரியவர்தமைநாடி
யம்பரினிருத்துவாமென்றெண்ணினரிகல்வேன்மன்னர். (௨௨௩)

காசிகேதாரங்காஞ்சிச்சடிநகராதிமூதூர்
மாசுதீர்குலத்தின்மேலாய்வாழ்சிவத்துவிசர்தம்மை
நேசமோடழைத்துப்போந்துநிதிநிலஞ்சுதந்திரங்க
ளேசுதீர்மனைகண்மற்றுமீந்தனர்தாபித்திட்டார் (௨௨௪)

தருமமுந்தவமும்பேணுந்தலைமைபூண்டமுதலிங்கர்
திருவடிப்போதுபோற்றுஞ்சிவபத்தர்தமக்கீரொன்பா
னுருவளர்மடங்களாக்கியூதியம்பலவுநல்கி
யிருநிலம்வியப்பவெல்லாவியற்கையுநிறுவினாரால். (௨௨௫)

இவ்வகைப்பணிகளெல்லாமீங்கிவரியற்றுவிற்பச்
செவ்வியவழுதியாதிச்செருத்திறல்வேந்தர்போந்திட்
டவ்வியமில்லாநெஞ்சினனவளாயவர்கட்கேன்ற
நவ்வியங்கரத்தினார்தநற்பணியியற்றினாரால். (௨௨௬)

காலமோராறும்பூசைகடிவிழாவாதியெல்லா
மேலுமாறியற்றநோக்கியின்பகந்ததும்பவாங்கே
சாலுநாள்வசித்துப்பின்னர்த்தலந்தொறுஞ்சார்ந்தும்பர்
கோலமார்பணிகளெல்லாங்குயின்றுதம்பதியைச்சார்ந்தார். (௨௨௭)

## கோச்செங்கணார் சிவலோகமடைந்தமை

ஆயிடையிருந்தவாறேயரசுசெய்துலகத்துள்ள
கோயில்கடோறும்பூசைகுறைவறவியற்றுவித்துப்
பாயினமலக்கடரப்பாசுகவடிவொடொன்றாய்
மேயினார்சிவலோகத்தின்விறற்கணநாதரென்ன (உஉஅ)

இதுமுதல் - அ - செய்யுள் - சூதமுனிவர் - முனிவர்களுக்குயானை,
சிலந்தி - இவைகளின் பூர்வகதை யெடுத்துக் கூறல்.

என்றுமிக்குரைத்தசூதவிருடியைமுனிவர்நோக்கி
நன்றுறுசரிதமீங்குநவிற்றினைசிலம்பியானைக்
கொன்றியபூசைவேட்கையுற்றவைஞானபூமி
வென்றிகொடலைவன்பாதமேவுகாரணம்யாதென்றார் (உஉகூ)

கடுத்தெதிர்வினாவின்றகரிசறுமுனிவர்தம்மை
விடுத்தலைம்பொறியினின்றமேதகுசூதனோக்கித்
தொடுத்தமெய்ப்பத்தியோடுஞ்சூழ்ந்துளாவினாவிற்கீங்கே
யடுத்திடவிறுத்துமாலென்றறைதரப்புக்கானன்றே. (உ௩0)

### வேறு

கயிலைநெடுவரையகத்துக்கணநாதர்பலருள்ளும்
பயிலுமாலியவானும்பகர்புட்பதந்தனுமென்
றியலியற்கைப்பெயருடையாரிருவருமுப்புரமெரித்த
சயமுடையசேவகனார்தகும்பணியிற்றலைநின்றார். (உ௩க)

ஒருவரொருவரைநோக்கியுளத்தெழுந்தபொறாமையினு
லொருவரொருவரிற்பூசையுஞற்றுதலான்மேம்படுத
றிருகுமுளத்தொடுநினைந்துதினமுமிகலினர்வருங்கா
லிருவருமோருழியெதிர்நேரெய்திமிகத்தருக்கினார். (உ௩உ)

தருக்கியிருவருந்தம்முட்டழல்விழித்துமுரணுமிடைப்
பொருக்கெனமாலியவானப்புட்பதந்தன்முகநோக்கி
வெருக்கொளிபமாகென்றான்வெகுண்டிடுமாலியவானைச்
செருக்கிளரும்புட்பதந்தன்சிலம்பியாகெனச்சபித்தான். (உ௩௩)

மாறுதபெருஞ்சாபவலைப்பட்டிங்கிருவோரு
மாறுடைசடைமுடியாரடிபணிந்துவிளைந்ததிது
வேறுகவருளுகெனவேண்டினார்வேண்டுதலு
நீறுடுந்திருமேனிநிமலனாரருள்செய்வார். (உ௩ச)

வானநாடரும்பழிச்சிவரமேற்குஞ்சோணாட்டுண்
ஞானபூமியையடுத்துநமதருட்பூசனையாற்றி
யானதோர்தலத்தினுமிக்ககத்திகலியுயிரிறந்திவ்
வீனமாகியசாபமிழப்புறுவீரெனவிடுத்தார். (உ௩ரு)

அனையபெருந்தவமுடையாராதலினாலருந்தவத்தீர்
வினையகலுஞ்சிவபூசைவிழைவினொடுஞ்சிவம்பெருக்கித்
தனைநிகருஞானதலஞ்சார்ந்தனரொன்றிறுத்தப்பால்
புனைதவத்துக்கவுதமனார்புரிந்தபணிசொலப்புக்கான் (உ௬க)

## கோச்செங்கணார்வழிபடுபடலம் முற்றிற்று.

ஆ. திருவிருத்தம்-கஉஅஅ.

இப்படலத்துள் க-வது கவி முதல் - ௬ - செய்யுள்வரையிலும் - சிதம்பர தலச்சிறப்பும் எ-வது செய்யுள் முதல் - (உ௬0) செய்யுள்வரையிலும் - சுபதேவர் - இவர்மனைவியாராகிய கமலவதியார் - இவர்கள் புதல்வராகியகோச்செங்கணார் சரித்திரமுங்கண்டுகொள்க. சுபதேவர்-கமலவதியார் இவ்விருவர்களின் காலவரை - இதனடியிற்கண்டிருக்கும் பெரியபுராணம் இந் நாயனார்புராணத்தாலுணர்க.

இன்னும் இந்நாயனாரது மகத்துவங்களாவன.

க-வது தொகை நூலாகிய,

திருத்தொண்டத்தொகையில் (௰க) வது பாசுரத்தில் தென்னவனாயுலகாண்ட செங்கணார்க்கடியேனென்று சுந்தரமூர்த்தி சுவாமிகளால் தோத்திரிக்கப்பட்டதனாலும் - (இரண்டாவது) வகை நூற்கூறிய நம்பியாண்டார் நம்பிதிருவந்தாதியாகிய இவ்விரண்டுச்செய்யுட்களாலும் துதித்திருக்கின்றதுடன்.

## கோச்செங்கட் சோழநாயனார்.

மைவைத்தகண்டனெறியன்றிமற்றோர்நெறிகருதாத்
தெய்வக்குடிச்சோழன்முன்பூசிலந்தியாய்ப்பந்தர்செய்து
சைவத்துருவெய்திவந்து தரணிநீடாலயங்கள்
செய்வித்தவன்றிருக்கோச்செங்கணானெனுஞ்செம்பியனே (அக)

செம்பொனணிந்துசிற்றம்பலத்தைச்சிவலோகமெய்தி
நம்பன்கழற்கீழிருந்தோன்குலமுதலென்பர்நல்ல
வம்புமலர்த்தில்லையீசனைசூழமறைவளர்த்தா
னிம்பர்நறுந்தொங்கற்கோச்செங்கணானெனுந்தன்னையே. (அஉ)

மறைவளர்த்தான் என்பதற்கு தில்லைவாழந்தணர்களுக்கு திருமாளிகை முதலியவை செய்வித்து வந்தானென்பது பொருள். இதன்றி.

ஸ்ரீகைலாயபரம்பரைநந்தியடிசட்குருமரபெட்டாவது*பிற்றோன்றலாயெங்கள் ஐயர்திருவாவடுதுறைச் சுப்பிரமணிய குரவர்குற்றபத்தொன்பதாவது முற்றோன்றலாய்ப்பொலிந்து தேங்கு சிவப்பிரகாச முதலிய

* பிற்றோன்றல் மரபு:—திருநந்திதேவர், சனற்குமாரதேவர், சத்தியஞானதரிசனிகள், பரஞ்சோதிமாமுனிவர். மெய்கண்ட சிவாசாரியார், அருணந்திசிவாசாரியார், மறைஞானசிவாசாரியார், உமாபதிசிவாசாரியார்.

**வாய்மலர்ந்துதிகழுமாபதிசிவனால் அருளிச்செய்யப்பட்ட**
**திருத்தொண்டர் புராணசாரம்.**

கோச்செங்கட்சோழநாயனார்.

"வெண்ணாவலிறைக்கொம்பநூற்பந்தர்செய்தவியன்சிலம்பியதுவழித்தவெள்ளானைக்கை.யுணாடிக்கடித்தவுடலொழியச்சோழனார்குலத்துச்சுபதேவன்கமலத்தோங்கும், பெண்ணாகியவள்வயிற்றில்வைகிச்செங்கட்பெருமானாய்த தென்னவராய்ப் பெருங்கோவில்பலவுங், கண்ணார்வித்துயர்தில்லைமறையவர்க்குநிறைபுள்கநகமயமாக்கியருள்கைக்கொண்டாரே" இதுவன்றி,

## ஸ்ரீசக்கிழார்சுவாமிகள் அருளிச்செய்த,

மூன்றாவது விரிநூலாகிய பெரியபுராணத்துள்,

(௰௪) வது மன்னிய சீர்ச்சருக்கம் (௪) வது.

## கோச்செங்கட்சோழ நாயனார் புராணம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

இச்செய்யுள்நேசநாயனார்புராணம் இறுதிச்செய்யுள்.

கற்றைவேணி முடியார்தங்கழல்சேர்வதற்குக்கலந்தவினை
செற்றநேசர்கழல்வணங்கிசிறப்பான்முன்னைப்பிறப்புணர்ந்து
பெற்றமுயர்த்தார்க்காலயங்கள்பெருகவமைத்த மண்ணுடை
கொற்றவேந்தன்கோச்செங்கட்சோழன்பெருமைகூறுவாம். (௫)

துலையிற்புறவினிறையளித்தசோழருரிமைச்சோணாட்டி
லலையிற்றரளமகிலொடுசந்தணிநீர்ப்பொன்னிமணிகொழிக்குங்
குலையிற்பெருகுஞ்சந்திரதீர்த்தத்தின் மருங்குகுளிர்சோலை
யிலையிற்பெருகுந்திருவிடைந்தநெடுந்தண்கானமொன்றுளதால். (௧)

அப்பூங்காவிவெண்ணாவலதன்கீழ்முந்நாளரிதேடு
மெய்ப்பூங்கழலார்வெளிப்படலுமிக்கதவத்தோர்வெள்ளானை
கைப்பூம்புனலுமுகந்தாட்டிக்கமழ்பூங்கொத்துமணிந்திறைஞ்சி
மைப்பூங்குவளைக்களத்தாரைநாளும்வழிபட்டொழுகுமால. (௨

ஆனசெயலாற்றிருவானைக்காவென்றதற்குப்பெயராக
ஞானமுடையவொருசிலந்திநம்பர்செம்பொற்றிருமுடிமேற்
கானல்விரவுஞ்சருகுதிரவண்ணங்கலந்தவாய்நூலால்
மேனற்றிருமேற்கட்டியெனவிரிந்துசெறியப்புரிந்துளதால். (௩)

நன்றுபுரிமைழத்தசிலம்பிவலைப்பரப்பைநாதனடிவணங்கச்
சென்றயானையனுசிதமென்றதனைச்சிதைக்கச்சிலம்பிதா
னின்றுகளிற்றின்கரஞ்சுலவிற்றென்றுமீளவிழைத்ததனை
யன்றுகழிந்தபிற்றைநாளடல்வெள்ளானையழித்ததால் (௪

எம்பிரான்றன்மேனியின்மேற்சருகுவிழாமையான்வருந்தி
யும்பரிழைத்தநூல்வலயமழிப்பதேயென்றருத்தெழுந்து
வெம்பிசிலம்பிதுதிக்கையினிற்புக்குக்கடிப்பவேகத்தாற்
கும்பயானைகையிலத்தின்மோதிக்குலைந்துவீழ்ந்ததால். (௫)

தனையிற்புடைப்பக்கைப்புக்கசிலம்பி தாலுமுயிர்நீங்க
மனையிற்பொருளுந்தருமாற்றான்மதயானைக்குவகைகொடுத்து
முறையிற்சிலம்பிதனைச்சோழர்குலத்துயர்ந்துமுன்னுதித்து
நிறையிற்புவனங்காத்தளிக்கவருள்செய்தருளலத்தின்கண். (சு)

வேறு.

தொன்மைதருஞ்சோழர்குலத்தரசனாஞ்சுபதேவன்
றன்னுடையபெருந்தேவிகமலவதியுடன்சார்ந்து
மன்னுபுகழ்த்திருத்தில்லைமன்றுமலர்ப்பாதஞ்
சென்னியுறப்பணிந்தேத்தித்திருப்படிக்கீழ்வழிபட்டாள். (எ)

மக்கட்பேறின்மையினான்மாதேவிவரம்வேண்டச்
செக்கர்நெடுஞ்சடைக்கூத்தர்திருவுள்ளஞ்செய்தலினான்
மிக்கதிருப்பணிசெய்தசிலம்பிகுலம்வந்துமகிழ்
பூக்கமலவதிவயிற்றினணிமகவாய்வந்தடைய. (அ)

வேறு

கழையார்தோளிகமலவதிதன்பாற்கருப்பநாணிரம்பி
விழையார்மகவுப்பெறவடுத்தவேலையதனிற்காலமுணர்
பழையாரொருநாழிகைகழித்துப்பிறக்குமேலிப்பசுங்குழவி
யுழையார்புவனமொருமூன்றுமளிக்குமன்னவொள்ளிழையார். (கூ)

பிறவாதொருநாழிகைகழித்தென்பிள்ளைபிறக்கும்பரிசென்கா
லுறவார்த்தெடுத்துத்தூக்குமெனவுற்றசெயன்மற்றதுமுற்றி
யறவாணர்கள்சொல்லியகாலமணையப்பிணிவிட்டருமணியை
யிறவாதொழிவாள்பெற்றெடுத்தென்கோச்செங்கண்ணனோவென்றாள். ()

தேவிபுதல்வற்பெற்றிறக்கச்செங்கோற்சோழன்சுபதேவ
னாவியனையவரும்புதல்வன்றன்னைவளர்த்தங்கணிமகுட
மேவுமுரிமைமுடிகவித்துத்தானும்விரும்புபெருந்தவத்தின்
றவினெறியைச்சென்றடைந்துதலைவர்சிவலோகஞ்சார்ந்தான். (கக)

கோனாதவேலான்கோச்செங்கட்சோழன்றனிக்குவலயத்தில்
ஆதிமூர்த்தியருளான்முன்னறிந்துபிறந்துமண்ணாள்வான்
பூதநாதன்றான்மகிழ்ந்துபொருந்தும்பெருந்தண்சிவாலயங்கள்
காதலோடும்பலவெடுக்குந்தொண்டுபுரியுங்கடன்பூண்டான் (கஉ)

ஆனைக்காவிற்றான்முன்னமருள்பெற்றதனையறிந்தங்கு
மானைத்தரித்ததிருக்கரத்தார்மகிழுங்கோயில்செய்கின்றான்
ஞானச்சார்வாம்வெண்ணாவலுடனேகூடநலஞ்சிறக்கப்
பானற்களத்துத்தம்பெருமானமருங்கோயிற்பணிசமைத்தான். (கங)

வேறு.

மந்திரிகடமையேவிவள்ளல்கொடையனபாயன்
முந்தைவருங்குலமுதலோனாயமுதற்செங்கண
னந்தமில்சீர்ச்சோணாட்டிலகனுடுதொறுமணியார்
சந்திரசேகரனமருந்தானங்கள்பலசமைத்தான். (கச)

அக்கோயிறொறுஞ்சிவனுக்கமுதுபடிமுதலான
மிக்கபெருஞ்செல்வங்கள்விருப்பினான்மிகவமைத்துத்
திக்கனைத்துந்தன்செங்கோன்முறைநிறுத்தித்தேர்வேந்தன்
முக்கண்முதனடமாடுமுதற்றில்லைமுன்னினான். (கரு)

திருவார்ந்தசெம்பொன்னினம்பலத்தேநடஞ்செய்யும்
பெருமானையடிவணங்கிப்பேரன்புதலைசிறப்ப
வுருகாநின்றுள்ளங்களிப்பத்தொழுதேத்தியுறைபுநாள்
வருவாய்மைமறையவர்க்குமாளிகைகள்பலசமைத்தான். (கசு)

தேவர்பிரான்றிருத்தொண்டிற்கோச்செங்கட்செம்பியர்கோன்
பூவலயம்பொதுநீக்கியாண்டருளிப்புவனியின்மே
லேவியநற்றொண்டுபுரிந்திமையவர்களடிபோற்ற
மேவினான்றிருத்தில்லைவேந்தர்திருவடிநிழற்கீழ். (கஎ)

## வேறு.

கருநீலமிடற்றார்செய்யகழலடிநீழல்சேர
வருநீர்மையுடையசெங்கட்சோழன்றன்மலர்த்தாள்வாழ்த்தித்
தருநீர்மையாசையாழின்றலைவராயுலகமேத்துந்
திருநீலகண்டப்பாணர்திறமினிச்செப்பலுற்றேன்.

திருச்சிற்றம்பலம்.

சோழமண்டலத்திலே சந்திரதீர்த்தத்தின்பக்கத்திலே ஒருவனம்இருந்தது. அதிலேநின்ற ஒருவெண்ணாவல்மரத்தின் கீழே ஒருசிவலிங்கம் வெளிப்படலும் ஒருவெள்ளானை அதைக்கண்டு நாடோறும் புழைக்கையினாலே தீர்த்தம் முகந்து ஆட்டி புஷ்பங்களைச்சாத்தி வழிபட்டு ஒழுகுவதாயிற்று அதனால் அந்தத்தலத்திற்குத்திருவானைக்காவென்று பெயராயிற்று. இத்துடன் அறிவினையுடையவொருசிலந்தி அந்தச்சிவலிங்கத்தின் மீது சருகுஉதிராவண்ணம் தன்வாய்நூலினாலேமேற்கட்டிசெய்தது. சிவலிங்கத்தைவணங்கவந்தவெள்ளானை அதைக்கண்டு அது அநுசிதமென்றுநினைந்து அதைச்சிதைக்க சிலந்திமீளவும்மேற்கட்டிசெய்தது வெள்ளானை மற்றைநாளும் அதைச்சிதைத்தது அதுகண்டு சிலந்தி எம்பெருமான்மேல் சருகுஉதிராவண்ணம் நான்வருந்திச்செய்தமேற்கட்டியை இது அழிக்கலாமாவென்று கோபித்து வெள்ளானையினதுபுழைக்கையினுள்ளேபுகுந்துகடிக்க வெள்ளானைகையை நிலத்திலேமோதிக்கொண்டுவிழுந்து. இறந்தது. கையைமோதியபோது அதனுள்ளேபுகுந்த சிலந்தியும் இறந்தது வெள்ளானை சிவகணநாதராகித் திருக்கைலாயமலையையடைந்து சிவபெருமானைச்சேவித்துக்கொண்டிருந்தது. இதுநிற்க.

சுபதேவனென்னுஞ் சோழமகாராஜன் தன்மனைவியாகியகமலவதியுடன் சிதம்பரத்தையடைந்து சபாநாயகரையுபாசனைசெய்துகொண்டிருக்குநாளிலே கமலவதிபுத்திரபாக்கியமின்மையால் வரம்வேண்ட அந்தச்சிலந்தி சபாநாயகரதுதிருவருளினாலே அவளுடையவயிற்றிலேமகவாய்வந்தடைந்தது கமலவதிக்குப்பிரசவகாலம் அடுத்தபொழுது சோதிடர்கள் இப்பிள்ளை ஒரு நாழிகைகழித்துப்பிறக்குமாகில் முப்புவனங்களையும் ஆசாளுமென்றார்கள் கமலவதி என்பிள்ளை இப்போதுபிறவாமல்

ஒருநாழிகைகழித்துப்பிறக்கும்படியென்னைத் தலைகீழாகக்கட்டித்தூக்குங்களென்றுசொல்ல அங்குள்ளவர்கள் அங்ஙனங்கட்டித்தூக்கி சோதிடர்கள் குறித்தகாலம்வரக் கட்டவிழ்த்துவிட்டார்கள். கமலவதிபிள்ளையைப்பெற்றுஅதுபிறக்குங்காலந்தாழ்த்தமையாற் சிவந்தகண்களையுடையதாயிருத்தல் கண்டு என்கோச்செங்கண்ணனோவென்று சொல்லிக்கொண்டு உடனே இறந்துவிட்டாள். சுபதேவன் அப்புதல்வனைவளர்த்து முடிசூட்டி அரசை அவரிடத்திலொப்பித்து தான் தவஞ்செய்து சிவலோகத்தையடைந்தான்.

கோச்செங்கட்சோழநாயனார் பரமசிவனது திருவருளினாலே பூர்வசென்மவுணர்ச்சியோடுபிறந்து சைவத்திருநெறிதழைக்க அரசியற்றுவாராகி சிவாலயங்கள்பலவற்றைக்கட்டுவிக்கத்தொடங்கினார் திருவானைக்காவிலே தாம் முன்னேயருள்பெற்றதையறிந்து அங்கே வெண்ணாவலுடன் பரமசிவனுக்கு திருக்கோயில்கட்டுவித்தார் மந்திரிகளை ஏவி சோழநாட்டில் வெவ்வேறிடங்களிலே சிவாலயங்கள்கட்டுவித்து அவ்வாலயங்கடோறும் பூசைமுதலியவற்றிற்கு நிபந்தங்களமைத்தார். பின்பு சிதம்பரஸ்தலத்தையடைந்து சபாநாயகரைத் தரிசித்து வணங்கித் தில்லைவாழந்தணர்களுக்குத் திருமாளிகைகள் கட்டுவித்து பின்னும் பல திருத்தொண்டுகளைச்செய்துகொண்டிருந்து சபாநாயகருடையதிருவடிநீழலையடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

கோச்செங்கட் சோழநாயனார் புராணம் முற்றிற்று.

இந்நாயனாரால் ஆக்கப்பட்ட ஆலயம் எழுபது. இதில் சிவாலயம் அறுபத்தெட்டு. விஷ்ணுவாலயம் இரண்டு என்பதை இதனடியிற் கண்டிருக்கும் நாலாயிரப் பிரபந்தத்துள் திருமங்கையாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய ஆறாவது பிரபந்தமாகிய பெரிய திருமொழியில் (ருசு-வது) திருநறையூர்ப்பதிகம் (க-வது) (அ-வது) பாசுரத்தாலுணர்க.

அம்பரமும்பெருநிலனுந்திசைகளெட்டுமலைகடலுங்குலவரையுமுண்டகண்டன்,கொம்பமரும்வடமரத்தினிலைமேற்பள்ளிகூடினான்றிருவடியேகூடகிற்பீர்,வம்பவிழுஞ்சண்பகத்தின்வாசமுண்டுமணிவண்டுவகுளத்தின்மலர்மேல்வைகுஞ், செம்பியன்கோச்செங்கணான்சேர்ந்தகோயிற்றிருநறையூர்மணிமாடஞ்சேர்மின்களே. (க)

முருக்கிலங்குகனித்துவர்வாய்ப்பின்னைகேள்வன் மண்ணெல்லாமுன்னவியச்சென்றுவென்றிச்,செருக்களத்துத்திறலழியச்செற்றவேந்தன்சிரந்துணித்தான்றிருவடிநுஞ்சென்னிவைப்பீர், திருக்கிலங்குதிருமொழிவாயெண்டோளீசற்கெழின்மாடமெழுபதுசெய்துலகமாண்ட, திருக்குலத்துவளச்சோழன்சேர்ந்தகோயிற்றிருநறையூர்மணிமாடஞ்சேர்மின்களே. (அ)

இதுவன்றி இந்நாயனாரது பெருமையை சுந்தரமூர்த்திசுவாமிகள் திருவாவடுதுறைக்கெழுந்தருளியபோது ஏயர்கோன்கலிக்காமநாயனார் புராணம் (சுச)வது இச்செய்யுளாலும், இச்செய்யுளிற் சுட்டியதிருவாவடுதுறைத்தேவாரப்பதிகம் இறுதிப்பாசுரத்தாலும் கண்டுகொள்க.

விளங்குதிருவாவடுதுறையின்மேயார்கோயில்புடைவலங்கொண்
டுளங்கொண்டுருகுமன்பினுடனுள்புக்கிறைஞ்சியேத்துவார்
வளங்கொள்பதிகமறையவனென்றெடுத்துவளவன்செங்கணன்
றளங்கொள்பிறப்புஞ்சிறப்பித்துத்தமிழ்ச்சொன்மாலைசாத்தினார். ()

## தேவாரம்.

தெருண்டவாயிடைநூல்கொண்டுசிலந்திசித்திரப்பந்தர்சிக்கெனவியற்றச, சுருண்டசெஞ்சடையாயதுதன்னைச்சோழனுக்கியதொடர்ச்சிகண்டடியேன், புரண்டுவீழ்ந்துநின்பொன்மலர்ப்பாதம்போற்றிபோற்றியென்றன்பொடுபுலம்பி, யருண்டென்மேல்வினைக்கஞ்சிவந்தடைந்தேனாவடுதுறையாதியம்மானே. ()

திருச்சிற்றம்பலம்

உறையூரில அரசுரிமை செலுத்திய சோழமகாராஜனால் ஆரஞ்சாத்தி வழிபட்டமையை இப்புராணம் ஆரஞ்சாத்து படலத்துள் கூறியவற்றை ஏயர்கோன்கலிக்காமநாயனார்புராணம் (எஎ) (எஅ)இச செய்யுளாலுணர்க.

மறைகளாய நான்குமெனமலர்ந்தசெஞ்சொற்றமிழ்ப்பதிக
நிறையுங்காதலுடனெடுத்துநிலவுமன்பர்தமைநோக்கி
யிறையும்பணிவாரெம்மையுமாளுடையாரென்றென்றேத்துவா
ருறையூர்சசோழன்மணியாரஞ்சாத்துந்திறத்தையுணர்ந்தருளி. (எஎ)

வளவர்பெருமான்றிருவாரஞ்சாத்திக்கொண்டுவரும்பொன்னிக்
கிளருந்திரைநீர்முழுகுதலும்வழுவிப்போககேதமுற
வளவிறிருமஞ்சனக்குடத்துளதுபுக்சாட்டவணிந்தருளித்
தளருமவனுக்கருள்புரிந்ததன்மைசிறக்கச்சாற்றினா. (எஅ)

இதுவன்றி சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாமாத்தூரினின்றும் திருவாரூர் வரும்போது.

அங்கணரையாமாத்தூரழகர்தமையடிவணங்கித்
தங்குமிசைத்திருப்பதிகம்பாடிப்போய்த்தாரணிக்கு
மஙகலமாம்பெருந்தொண்டைவளநாடுகடந்தணைவார்
செங்கண்வளவன்பிறந்தசீர்நாடுதிருநாடு.

இன்னும் இந்நாயனாரது பெருமையைப் புறநானூற்றில் விசேடமாய்க்கூறியிருக்கின்றது.

---

## கவுதமப்படலம்

தவமலியோகருட்டலைமைசான்றவ, னவமறும்வெண்பொடியவிருமெய்யின, ளிவருறுகண்மணியிலங்குபூணினன், கவுதமனெனும்பெயர்கலந்தமாதவன். (க)

முகிலுறழ்கருங்குழன்முத்தந்தைவரு, நகிலினணறுமணங்கமழுமெய்யின, ளகலிகையெனும்பெயரணங்குதன்னொடும். பகலிசழன்பனுய்ப்பண்பின்வாழுநாள். (௨)

இதுமுதல் (ரு) செய்யுள் இந்திரன் அகலிகைக்கு இதங்கூறல்.

பொன்னுலகாள்பவன்பொருவின்மாதரா ரின்னலம்விளைந்தனனெ திரிலம்முனி, தன்னுருவெடுத்தனன்சார்ந்துதையலாய், நன்னலம்வேட் டனனென்மற்றிந்திரன். (ரு)

மாரவேண்மலர்க்கணைமலையப்பட்டுளே, னூரமாமுலைக்களிறடுத்தநி ன்விழிக், கோரவாளுறத்தழீஇக்குமைத்துவெம்பகை, வீரநான்பெறத்தகு ம்வேலையீதரோ. (சா)

கருதலர்போரினூற்காயநீங்குறூத், திருவளரமுதர்மெதணகடலிற்பெற்றுளே னிருவிலிபோரினுலுயிருகாமைநின், னுருவளரமிழ்தமிக்குதவுகென்றனன்

புராணிகர்.

பண்டையவூழ்வினைப்பாழியென்சொல்கேன், மணடழுன்மெழுகெ னமனநெகிழ்ந்துகாண, விண்டனன்காதலைவிழியற்றேறுற்றிமால், கொண் டனள்பின்வருங்குற்றநாடிலள். (சு)

இதுமுதல் (ரு) செய்யுள் இந்திரனுடன் அகலிகை இணங்கியது.

இந்திரனேநமையிரக்கின்றுனெனப், புந்தியினருப்பியபொருவிலோ கைய, ளந்திநெட்டுயிர்த்தனளாண்டகாயினி, மூந்தியதெனக்குமான்முய ங்குகென்றனள். (எ)

கறையடிவெங்கயங்கடவுகுஞ்சர, நிறையெனுங்காவல்கைநெகிழமா தென, வறைபெறுங்கானகத்தடுத்திட்டைம்புலக், குறையுறுகுளகுவாய்கு தட்டிச்சென்றதே. (அ)

காதன்மொட்டரும்பிமெய்க்காமசசெவ்வியி, னேதமின்மலர்மலர்ந்தி ன்பத்தேன்சொழித், தூதகக்களிப்பளியலாவவிந்திரப், பாதவம்படர்ந்தது பசுமபொன்மென்கொடி. (கூ)

இதுமுதல் (உ) செய்யுள் கவுதமர் இந்திரனை நோக்கி ஆராய்தல்.

கலவிதுய்த்தின்னணங்களிப்பநீடிய, வலர்முலைமாதினையகலுஞ்செவ் வியிற், பலர்விழைகவுதமன்படர்ந்துநோககினு, னலமலிதன துருநண்ணு ம்வஞ்சனை. (கO)

யாரிவனென துருவெடுத்துளாளிவண். யாரிவன்புகுதரவெண்ணுங் காரியம், யாரிடையிவற்குறுகுறையென்றெண்ணுவான், யாரினுமுகைதவ னியல்புதெள்ளினன். (கக)

இந்திரன் கவுதமரிடம் உண்மையுரைத்தல்.

உள்ளவாறுரையெனவுருத்துநோக்கிஞன், றெள்ளுபாதவனவன்சிவ ப்புக்கஞ்சுபு, கள்ளனுகியவிசும்பமரர்காவல, னள்ளுமாறிதுவெனகவிற்றி யிட்டனன். (கஉ)

கவுதமர் இந்திரனுக்கு சாபங்கொடுத்தல்.

விழுமியவருந்தவன்மேகவாகன, வொழுகுறுமறைநெறியொருவிக் கற்பெனுஞ், செழுவியபெண்மையைச்சிதைத்தநின்குறி, யழுகிமண்விழு கெனச்சாபமாக்கினன். (கரு)

கவுதமர் அகலிகைக்கு சாபங் கொடுத்தல்.

சிலைமரமென்னவேதெவ்விஞேர்வச, நிலைபெறுநீர்மையினிற்றியாதலிற் கலைதிரிகானிடைக்கல்லுருக்கொடு, மலைவறக்கிடவெனமனைவிக்கோதினன். (கச)

இந்திரன் தேவர்களிடத்தில் முறையிடுதல்.

இந்திரன்விடணமங்கிற்றுமண்விழ, வந்தரத்தெய்தினனமரர்நும் பொருட், டுந்திடத்தொருவினைபுரிந்றினேற்கிது, வந்ததுகானுவீர்மாற் றுவீரென்றான். (கரு)

தேவர்கள் சாபத்திற்குப்பரிகரித்தல்.

கடவுளர்சூழ்ந்தனர்கடுகிமேடத்தின், விடணமேவிடனுக்குவிடண மாக்கினர், மடனறுமகலிகைமாதுங்கல்லென, விடவியகானகத்தினைந்து வைகினள். (கசு)

கவுதமர் மனைவியை நினைந்து வருந்துதல்.

மனையவளின்றியேவைகுங்செவ்வியி, னனையவட்கறப்பயனணிமைத் தாகலின், வினைதபுமுனிவற்குவிளங்குமோர்தினம், புனையிழைகலவியிற் புந்திசென்றதே. (கஎ)

சூரியன் மறைதற்கு நினைத்தல்.

பெருந்தவன்காமநோய்பிணைந்துளானனி,வருந்துவனவன்படுவருத் தங்காணுதல், பொருந்துவதன்றெனப்பொலிந்தவெய்யவன். றிருந்தியகு டகடற்செல்லன்முன்னினான். (கஅ)

## வேறு.

சூரியன் சிவப்புநிற மடைந்தமை.

இருளுந்தானவர்குழுக்களுமிறத்திறத்தொழிக்குஞ்
செருவினோர்ந்தநெய்த்தோர்செறிந்திட்டதுசவணும
பரிதிநாயகன்சேர்ந்ததுபறந்தலையுழக்கப்
பெருகுசீர்ப்பிரதாபம்போரத்திட்டதுமபுரையும். (ககூ)

சூரியன் அஸ்தமனஞ்செய்தல்.

பாவகாரியருடலமும்பல்கதிர்க்கரங்கண
மேவலாலுறுந்தொடக்கினைவிளிப்பவன்போல
வோவிலாதவஞ்சொரிந்திருவொாதுக்குவெஞ்சுடரோன்
றுவுமேழ்பரித்தேரொடுந்தடங்கடற்குளித்தான். (உ0)

செவ்வானந் தோன்றல்.

மணந்துளாருயிர்க்கிரும்பயன்வளர்க்குமந்திரத்திற்
புணர்ந்தவேள்வியிற்செய்யவான்றழலுமாய்ப்புணர்ந்து
தணந்துளாருயிர்நீததவிசாரத்திற்றகநா
லுணர்ந்துளார்புரிதழலுமாயொளிர்ந்ததுசெவ்வான். (உக)

இதுமுதல் (ருக) செய்யுள் இரவுக்குறி.

அருள்சிவத்தினின்றெழவெழுந்தகிலமுமதுபின்
மருவியொன்றுறக்காத்தலுமடிபுமாபோலப்
பரிதிதண்கடலெழவெழும்பறவையாதிகளப்
பரிதிதண்கடல்விழவடங்கினபயிலிடமே. (உஉ)

அளிசெய்தின்னலையகற்றுமாரருளொடுகைகலந்து
தெளியினல்லன்தசெறிந்தறிவுயர்க்குமாமலநோய்
விளிவதின்றெனவிளக்குமோர்சான்றதாய்விழிக
ளெளியதன்மையினிருப்பவல்லிருள்பரந்தன்றே. (௨௩)

பெரியராற்பெருங்காரியம்பேணினர்முடித்தற்
குரியராங்கவரொழிந்துழியொழிந்தவர்க்கினமேற்
சிறியராலுமக்காரியஞ்செய்துகொள்வதுபோற்
சிறியதாமொளிவிளக்கினுற்றிகழ்ந்தறிந்தனகண் (௨௪)

ஆதவற்கும்வெண்மதிக்குமிக்கவிரொளிகளதே
யாதலிற்சுடரிரண்டி[illegible]படட்படாவிருளுங்
காதுசற்குரிவிளக்கிடச்கண்ணணியர்வதன
மோதுடுதிரளிடைமதியெனவுலாத்தருமே. (௨௫)

இருண்டகேவலத்துயிரெனவிருண்டனசிலகண்
மருண்டதாஞ்சகலத்துயிரானவேசிலகண
வெருண்டிடாதொயிர்விளக்கினுல்விளங்கினசிலகண
டெருண்டவீட்டினரெனச்செறியிருள்கழிந்திலவே (௨௬)

அன்பினைந்திணைக்களவொழுக்க நதியார்க்கான்றோர்
வன்பின்மற்றையபொருள்களைக்களவின்வவ்வுநர்க
ளின்பவன்பரைப்பிழைக்குநர்பேயவரெல்லாம
துன்பமற்றனாதுகடுகணாக்குதவாதோ. (௨௭)

தயங்குபேரொளிச்செக்கர்வானெனுங்கழற்பிழம்பி
னியங்குகார்சிறப்புலகவிராயிறுததசதேபோல
வயங்குறுதுபலலுயர்தமதாலகபயாவுறவடுத்த
மயங்குகாரிருண்மென்மேலமலிந்ததுமனனோ (௨௮)

நிலவு வெளிப்படல.

மணவிராம்புனல்விராவழன்மானமேல்கடற்பால
விணவிராவொளிவிராவிருள்விளங்கழல்விராவு
மெணவிராவுகால்பொரவிதின்விராவுவான்குறியிற்
றணவிராவியதவளமாமதியெழுந்தன்றே. (௨௯)

எழுந்துமாமதிதோற்றலுமீர்ங்கலையமிழ்தச்
[illegible]
வழுந்துசேறெனப்பானிலாப்பிழம்படர்ந்தன்று
விழுந்தகாரிருண்மெய்யெழப்பொய்விழுந்தாங்கு (௩௦)

நட்சத்திரந் தோன்றல்.

ஒளிமிகுந்தவனையினுமழனமாதிகடர்
களிமிகுந்தவனையினுங்கடனமக்கென்றென்
றளிமிகுந்ததாரகைபகற்சழகுறுதழிந்து
தெளிமிகுந்ததன்பதிக்கெழிறிகழ்க்கதுநெடுவான். (௩௧)

தாமரை மலர் வாடுதல்.

உருக்கும்வெய்யவராயினுமுற்றவர்க்கின்பம்
பெருக்குமன்பினர்தண்ணியராயினும்பேணார்
கருக்கும்வன்பினராவர்வெங்கதிரவனலர்த்தி
யிருக்குமம்புயஞ்சுருக்கினனிலகுதண்கதிரோன். (௩௨)

கோட்டுப்பூ, நீர்ப்பூ மலர்தல்.

னொதுமல்காட்டினகோட்டலர்நுண்டுளித்தேறற்
பதுமநீடியபகையினைக்காட்டினவெனத்தாம்
விதுவினோடுறவாதனன்றெனவிழைந்தாங்கு
மதுவருந்தண்குமுதமுநீலமுமலர்ந்த. (௩௩)

முல்லை மலர்தல்.

செயலைமாவினுன்மரமெலாம்புகழொடுசிறந்த
பயிலுநீரினபதுமநீலங்களாற்சிறந்த
வுயர்கவார்கொடியினத்துமென்றுவெனவொருப்பட்
டயர்வின்மாரனுக்கொருகணையலர்ந்தனமுல்லை. (௩௪)

சந்திரன் ஒளியும் தாமரை வாட்டமும்.

தமியர்வாண்முகத்தொடும்பகனிகர்த்ததண்மதிய
மெமியர்வாண்முகத்தொடுமிரவொத்திலகியதா
மெமியர்வாண்முகத்தொடும்பகலிருந்ததாமரைக
டமியர்வாண்முகம்போன்றனதயங்கியவிரவில். (௩௫)

சக்கரவாகத்தின் செய்கை.

புரிந்தவன்பரைப்புணர்ந்தவர்புணர்முலைக்கழிந்து
பிரிந்தமங்கையர்பெருமுலைமுன்பகனிகர்த்த
றெரிந்தசக்கரவாகங்கடிங்கள்பைங்கதிர்கள்
விரிந்தபின்பகல்பிரிந்தவர்முலையும்வீழ்ந்திலவே. (௩௬)

இதுமுதல் (௨) கவி நாயகனோடனுபவித்தநாயகிகளின் கண்களின்சிறப்பு

கணவர்வைகியகாரிகைமடந்தையர்கருங்கண்
மணமலிந்ததண்டாமரைமலரலாணிகரா
கணவர்வைகியகாரிகைமடந்தையர்கருங்கண்
மணமலிந்ததண்குவளையுஞ்சகோரமுமலையும். (௩௭)

கரண்டமேவியபொய்கையிற்கமலமாமலரிற்
றிரண்டதேத்துளிபருகியுஞ்செறியிதழ்க்குவளை
வரண்டுவார்மதுப்பருகியுமகிழ்ந்தவண்டொன்றே
யிரண்டுகாலத்தும்பிரிவிலார்விழியிழைந்தனவே. (௩௮)

சமுத்திரம் பொங்குதல்.

வீங்குதீண்புனலெடுத்தெழுமேகங்கள்வளர்ப்ப
வோங்குபைம்பயிர்க்கொளிர்ந்துதன்வயிற்றெழுந்திங்க
ணீங்கருங்கருவுறுத்திடுநெடும்பயன்குறித்துத்
தாங்கரும்களிப்பானனிதழைத்ததுபுணரி. (௩௯)

சூரியனாலும், சந்திரனாலும் பயன்படத்தக்கவை.

அளிக்கத்தக்கன விரவியினாலிர்தமாதி
களிக்கத்தக்கன திங்களிர்கயிரவமாதி
யொளிக்கத்தக்கதுசுடரிரண்டானுமோங்கிருள்சிர்
விளிக்கத்தக்கவர்யாவரின்விழைதகப்படுவார் (சய)

இதுமுதல் (ச) செய்யுள் மன்மதன் போர் நடத்தல்.

பிரசம்வார்கணைப்பெருஞ்சுவைச்சிலையெறும்பெருந்தோ
ளரசன்மாமதிவெண்குடைநிழற்றவார்கலியின்
முரசமார்ப்பெழமொய்குயிற்காகளமுழங்க
விரசுகான்மணித்தேரூடாய்வெய்யபோருழந்தான். (சக)

மாதர்பாலமருறுதெனமைந்தர்கள்டுத்தார்
மாதராடவர்க்குடைதருமாரவேளென்று
மாதரோடுதங்கணவரைமணந்தனரேர்பான்
மாதர்வேள்கணைதொடைமடக்குண்டனமாதோ. (சஉ)

கொங்கையன்றிதுமாறனார்தொடுந்தகோகநகஞ்
செங்கையன்றிதுமாமிறமன்றிதுசெயலை
தங்குவெண்ணகையன்றிதுதளவுயாள்விழியன்
றிங்கிதுற்பலமெனத்தணந்தார்சிலரினைந்தார் (சங)

காமனார்மதயானையைக்கருங்குழற்பினிந்துக்
காமனாருருநுசுப்பிடைக்கரந்துதண்கவிகை
காமர்வாண்முகத்தடக்கியிங்ஙனமெலாநகடந்து
காமவீரராய்க்களித்தனர்சலந்தகாரிகையார். (சச)

வேறு.

கவுதமர் மனதில் காமமலர் மலர்ந்தது.

இனையபுன்மாலைவந்திறுத்தவெல்லையிற். றனைநிகர்கவுதமன்றனது நெஞ்சிடை, நனையெனவரும்பிநற்போதுகொண்டநோர், வினைநிகர்காம நோய்மிக்கலர்ந்ததே. (சரு)

கவுதமர் சந்திரனாலும் தென்றலாலும் வருந்துதல்.

மாரனுந்தனதுகைம்துதைதோற்றினுஞ், வீரவெண்டிங்களுமெரியுமிழ்ந் தது, கோரவல்விடமெனக்குளிர்ந்ததென்றலுஞ். சாரவம்முனிவரன்றளர் தன்மேயினன். (சசு)

இதுமுதல் (உ) செய்யுள் கவுதமர் புலம்புதல்.

எவ்வுருக்கரத்தலுமெழுந்தசாமநோய், வல்லுருமேறெனமதியைப் போழ்ந்தது, கல்லுருவாயினள்காதன்மாதரா, ளல்லுருக்கின்றதென்றயர்ந் துமாழ்குமே. (சஎ)

உருவெளித்தோற்றலுமோடிக்கைகளான். மருவுறத்தழுவிடுமாய மோவெனுந், தெருமரச்சிலையெனச்செய்ததீமையாற், பருவரற்படுத்தி தொல்பாவைநீயெனும். (சஅ)

## வேறு

இதுமுதல் (௩) செய்யுள் மதனைப்பழித்தல்.

எரிக்குங்கண்ணனென்றறிந்துமீசனுக்கெதிர்ந்துடல
மரிக்கும்பேதையைபிருந்தைபாலவித்தவன்மனமுந்
திரிக்குந்தீமையைதெரிவையர்சித்தமும்போராற
பொரிக்குமாண்மையையென்னைநீபொராய்கொன்மன்மதனே. (௪௯)

கடித்துமென்றுமென்றுமிழ்ந்திடப்படுங்கரத்தினில்வில்
பிடித்துமென்கரத்தாற்பிசைந்திடப்படுங்கணைக
டுடிக்கமெல்லிதழ்மாதரைநினைவொடுந்துறப்பின்
முடித்தல்வல்லைகொல்வெஞ்சினமுழங்கி[illegible]மதனே. (௫0)

வெம்புசாபமுன்வாங்கினதொழியமேல்வாங்கின்
வெம்புசாபம்பின்வாங்குவைசரதம்வேட்குரிசி
லம்புதூவுமையாயின்வாளரிக்கண்ணிரதி
யம்புதூவுவளன்னவளாயுரின்காறும். (௫௧)

இதுமுதல் (௨) செய்யுள் கவுதமர் தனது அறிவைக குறித்து நோதல்.

தனதுசேனையைத்தணர்ந்தயர்க்கல்லதுசரங்கள்
தனதுசேனையைச்சார்ந்தவர்க்குறுத்திடாதவனைத்
தனதுசேனையைச்சம்புவாற்றணப்பினல்லாது
தனதுபோரிடைத்தணித்தலுங்கூடுமோவென்னும். (௫௨)

கற்றகல்விபுங்கணணகத்தஞ்சனம்புறத்தே
யுற்றவொண்பொருள்விளக்கியுணகண்ணினுக்குதவாப்
பெற்றியொப்புறப்பிறர்க்கெலாமுதவியேபேணிப்
பற்றுமற்றெனக்காவதின்றேயெனப்பரியும். (௫௩)

இதுமுதல் (௪) செய்யுள் நிலவைப்பழித்தல்.

தேயுநீரினைதேய்த்திடப்பட்டனைகறையை
காயமேகதியாகியகவலையை துருவன்
பாயசூத்திரப்பிணிப்பினைபாருலழத்தருக்கி
மாயைநோயையும்வளர்ப்பதுதக்கதோதிங்காள். (௫௪)

அந்திவண்ணர்தம்வேணியினிருப்புமாரமிழ்த
முந்துதண்கதிராற்பயிர்விளைக்குமோரறமுஞ்
சிந்தவெம்பரவுண்பதுதுனைவயிற்றீர்ந்தோர்
நந்தவெம்பியபாவமன்றோநகுதிங்காள். (௫௫)

கரியநஞ்சினும்வெண்ணிறநஞ்சுநீகடியை
பெரியதண்கடற்பிறந்தஞான்றல்லதுபெருமா
னுரியகண்டனின்றெவரையுமுலைசெய்யாததுநீ
புரியுமென்சடையிருந்துநோய்புரிதிவெண்டிங்காள். (௫௬)

விடங்கனிந்தவுட்டுளையெயிற்றராவும்வெய்துமிழு
மடங்கருங்கொடுந்தீயைநீயாதலினமல
னிடங்கிடந்துமின்னருளினையிலையிகல்காம
னுடங்குடன்றனையொளிர்மதிதகுங்கொலோவென்னும். (௫௭)

இதுமுதல் (உ) செய்யுள் கடலைப்பழித்தல்.

வான்மருந்திலக்குமிமுதல்வளம்படுபுணரி
தான்வருந்தநஞ்சுமிழ்ந்ததேயெனிற்றவத்தழங்கி
மீன்மலிந்துவர்புலான்மிடைடீவிடியளவு
நான்வருந்தவுமுனிதராதிருத்தியோநரலாய். (கூஅ)

நல்லவர்க்கிடரேபுரிகவையினர்தமக்கே
செல்லும்வண்ணமெல்லாந்திகழுதவியேசெய்து
மல்லலக்குன்றறப்பன்முறைவறந்தனையனகற்
கொல்லவொல்லெனுமொலிகடலேயெனவுரைக்கும். (கூகூ)

இதன்றலைப்பழித்தல்.

சந்தனமலயக்காலேதமியரைவருத்திவேண்மெய்
வெந்தனன்கவிகையாகிவிதுக்குறைந்ததுதேராகி
மந்தமுற்றனைநீயென்னேமற்றுமன்மதனைத்தாங்கி
வந்தனைதீநட்பார்யார்வருந்தியும்வருத்தாரென்னும். (சுo)

ஏற்றின் கழுத்துமணி குயில் இவைகளைப் பழித்தல்.

காமனையுயிர்த்தமாயக்காமருவிடையின்சாதி
யாமதவிடையின்கண்டதணிந்திடப்பந்தலாமே
அமணிக்குலமுநம்பாற்பெருகுபிணிசெய்யாநின்ற
கூமணிக்குயிலோபீழைகூர்ந்திடாதென்றுணையும். (சுக)

இதுமுதல் (உ) செய்யுள் கவுதமர் காமந்தணித்தற்கு யோசித்தல்.

இவ்வகையிரவினெல்லாப்பொருளினுமிளையாநின்ற
செவ்விபமுனிவன்சாலச்செய்தவப்பயத்தின்பேற்று
லவ்வியமணிக்குநகாமக்தருமருநதளிக்குநாத
னவ்வியநகரத்தானன்றியிலையெனநாட்டங்கொண்டான். (சுஉ)

வானநாட்டவர்க்குமெய்தாவரம்பலவழுங்காநின்ற
ஞானகேத்திரத்தைநண்ணிநாணமதிக்கணணியார்தா
மீனநாமகலவல்லேயினிதருள்வழங்குவாரென்
றூனமாநககலவுன்னியொருமருங்கிருந்தானூர. (சுங)

## வேறு.

கவுதமருக்கு அஞ்சி இருள்விலகினமை.

பெருந்தவமுனிவரன்பெரிதுங்காமத்தின், வருந்தினனின்னுநாம்வருத்திற்சாபமுந், தருந்தருமெனவரையிரவிஞ்சாய்ந்தது, விருந்தெனவைகறைப்பொழுதுமேயதே. (சுச)

இதுமுதல் (அ) செய்யுள் அருணோதயச் சிறப்பு.

இராக்குறிநுகர்ச்சியினெய்திஞோர்களு, மராப்பரத்தையர்மனைமருவினோர்களு, முராய்ப்பலவிரைகளினுற்றமாக்களும், விராய்ப்பயிறமதிடமேவமீண்டனர். (சுரு)

ஊடியமகளிரையுணர்த்தும்பாணியும், வாடியவூடலைமாற்றியின்பமே
நீடியகலவிகணிகழ்த்தும்பாணியு, மாடகநூபுரத்தொலியரூதவே. (சுஅ)

மெத்தியகாரிருள்விடியன்மேவலு, மைத்தடர்காமவல்லிருளுமல்கிய
வித்தியகேவலவிருளுநின்மலன், பத்திசெய்குநர்மலவிருளும்பாறுமே.

மழுங்கியதிந்துதாரகைமழுங்கின, விளங்கிருடமித்தொளிர்விளக்குமங்கின
செழுங்கதிரவன்வருமென்றுசிந்தைமிக்,கழுங்கியகவலையிலடங்கினுலென

சந்திரனெனுமொருதநயன்மாணொளிக்,கொந்துகொண்டிலங்கியகோலங்காண்டொறு. மந்தின்மெய்மலிந்தெழுமாழிமற்றவ, னந்தொளிகாண்டொறுநந்தன்மேயதே. (சுகூ)

வாரணத்துழனிகண்மனைதொறீண்டின, வாரணமுழக்கமுங்கிடைதொறண்ணின. பூரணனருளியபொருவின்மந்திரங், காரணிகருக்குரீஇகரைதன்மேயின. (எ0)

காவலர்நகர்தொறுங்கடுகுங்கைப்பறை, யோவினகடலொலியோடுமற்றெதிர், நாவலர்துதியொடுநன்கியம்பின, தேவர்மந்திரந்தொறுஞ்செறிந்தபல்லியம். (எக)

இருளெனும்பகைகழிந்தினியுந்தாமரை, மருமலர்க்கிழத்திதன்வாட்டம்வீட்டுவான், பரிதியின்வரவினைப்பகருந்தூதென, வருணன்வந்தெழுந்தனனம்புராசிமேல். (எஉ)

## வேறு.

### சூரியன் உதித்தல்.

பாசவறிவும்பசுவறியும்பாந்தவருளின்முழுதடங்கத்
தேசுவிரியுஞ்சிவஞானந்திகழ்ந்துவிளங்குமாறேபோன்
மூசுமிருளின்விழிக்குதவுமொய்த்தவுடுவுமதியொளியும்
வீசுகிரணத்திடைக்கரப்பவெய்யோன்வேலைமுகட்டெழுந்தான். (எங)

### மறையவர் நித்தியகரும நடத்தல்.

இரவையகற்றியொளிபரப்பியிலகுஞ்சுடரோன்குடதிசையிற்
பரவைகுளித்துங்குணதிசையிற்பரவைகுளித்துமணியுருவின்
விரவுமுவருமாறியநகமிக்கவிளைப்புமொருவுநர்போற்
கரமென்மலரிற்புனலெதிர்தூய்க்கரைந்தார்மறைபூசுரர்பலரும். (எச)

### தாமரை மலர்தல் மற்றைய நீர்ப்பூ குவிதல்.

அருளிற்பெரியசிவபெருமானன்றவுருவமெதிர்நோக்குங்
கருணையடியார்திருமுகமுங்கணனுமனமுமெனமலர்ந்த
பெருகுமதுத்தாமரையந்தப்பெருமானுருவப்பொலிவினுக்குத்
திருகுமநக்தாரெனக்குவிந்ததேன்செய்குமுதத்தொடுகுவளை. (எரு)

கருமவகைஞ்யயென்னென்றுகரைவாமிரவிற்களிகூர்ந்து
பரிதியெழலுஞ்சிலவுயிர்கள்பருவந்தழிந்தவிரவெல்லாந்
தெருமந்தழிந்தசிலவுயிர்கள்செம்மாந்திண்பக்கடற்குளித்த
வெருவிலுயிர்கடொறுஞ்செயல்கள்வெவ்வேறுகிவளர்ந்தனவே. (எசு)

கவுதமர் நித்தியகருமமுடித்து திருவானைக்காவிற்கு வருதல்.

விடியலடுப்பவைகன்றயேவிமலன்பாதமுளத்திருத்திக்
கடிமென்மலர்வாளிகடுரக்குங்காமனமரிற்சிறிதுய்ந்த
முடிவிலரியபெருந்தவத்துமுனிவன்வளர்நாட்கடன்முடித்துப்
படியில்வளத்தினுயர்சம்புபதியைநோக்கிப்படர்கின்றான். (எஎ)

இதுமுதல் உஅ செய்யுள் கதை.

அமையூாக்காதற்பெருங்காமவாழிபெருகியயில்வேந்த
னுமையாளொருபாலினிதமரவுலகமுழுதுமொருங்குயிர்த்தார்
தமைநாடியமெய்யுணர்வந்தோதளரப்பலகாற்றபுமுளத்தோ
டிமையாரிறைஞ்சுந்திரு[illegible]க்காவினெல்லையெதிர்கண்டான். (எஅ)

வேறு.

கண்டவனெழுந்துபொங்கியகாமக்கடல்கரையிகவுறுதடங்க
விண்டனன்கவலைதண்டெனநிலமேல்விழுந்தனனெழுந்தனனின்ப
நுண்ணெளியரும்பு[illegible]ரியினன்மறைகளுவல்செழுநாவினனடந்து
மண்டியபொன்னிநதிப்புனலாடிவளஞ்செறியகநகர்புகுந்தான். (எகூ)

ஆங்குளதீர்த்தமனைத்தினும்படிந்திட்டருள்கெழுபூதிசாதனமு
மோங்கியவிதியாலணிந்தெழுத்தைந்துமுரைத்தருவுருவருவுருவாய்
நீங்கருமலத்தின்வலிகெடுத்தெவர்க்குர்ன்மலஞானமுய்த்தருளும்
வீங்கியகருணைப்பிரமலிங்கத்தைவிழியெதிர்கண்டுதாழ்ந்தெழுந்தான். (அ0)

வேறு.

என்றுகூறவிருடியர்சூதனை, நன்றுகூறநவில்பிரமேசனென்
றென்றுநாமமங்குள்ளபிரான்றமீஇ, தின்றவாறுபுகழ்த்துகென்றுரரோ (அக)

வேதநாவினர்மெய்யுணர்நெஞ்சின, ரேதமேதுமெய்தாதவியல்பினர்
தீதுதீரவினுதலுஞ்செய்தவச், சூதமாதவன்சொல்லத்தொடங்கினன். (அஉ)

வேறு.

இராதந்திரமென்றொருகற்பத்தியைந்தகிரேதாயுகத்தளிகள்
விராவுநகமலமலரணையான்விளங்குஞ்சிருட்டித்தொழில்பெறுவான்
பராவிவழிபாடினிதாற்றும்பரிசாலனையதிருநாம
மராவுமதியுமணிந்தாருக்காயிற்றெனமற்றறைகிற்பான். (அங)

கண்டுபணிந்தகவுதமனூர்கடிமென்மலராதிகள்கொணர்ந்து
மிண்டுமலத்தின்வலிமுருக்கும்விதியாற்பூசையினிதியற்றித்
தொண்டுபலவுமந்நாட்போற்றொழிக்கச்சிலநாள்புரிகாலை
யண்டர்பெருமான்பணிக்கிரங்கியடல்வெள்ளேற்றினெதிர்நின்றான். (அச)

விலங்கற்கரையனீன்றெடுத்தமினிர்பூண்முலையாளிடந்தழுவ
வலங்கற்கடுக்கைமுடிகதிர்ப்பவமரர்முனிவர்தொழுதேத்த
வலங்கொள்பூதம்புடைநெருங்கமழவெள்விடைமேனின்றார்தந்
துலங்குமலர்த்தாளுறப்பணிந்துசூழ்ந்துகுழைந்துதுதிக்கின்றான். (அடு)

இதுமுதல் கக செய்யுள் கவுதமர் சம்புநாயகரைத் தோத்திரஞ்செய்தல்.

இனமலர்சிந்தும்வேழஞ்சிலரொடுமெறிவித்தாய்நின்
சினகரந்தசர்த்தவேழஞ்சிவகதியடைவித்தாயா
லனகனேநாவனீழலண்ணலேயமரரேறே
யுனதருட்டிறத்தையாரேயுள்ளவாறுணருநீரார். (அரு)

பதிவிரதையருக்கெல்லாம்பாரிடைபொருசான்றாகும்
பிதிரொளியங்கிமாட்டும்பிறன்மனைவிழைந்தபாவ
விதமுழுதகலவூர்த்தவீரியமளித்தாயின்பம்
பொதியருட்டிறத்தையாரேயுள்ளவாபுகலுநீரார். (அஎ)

மறைமுடிதனக்குநீண்டமாலயன்முடிக்குமெட்டா
தறைகழற்செய்யபாதமதிர்குரைப்புனலும்பாம்பும்
பிறையுமென்றிவற்றையெல்லாம்பிறங்கொளிச்சடையில்வைத்தாய்
நிறையருட்டிறத்தையாரேயுள்ளவாநினைக்குநீரார். (அஅ)

மருமலிகின்றமென்பூவாளிகள்கழைவிலேற்றிப்
பொருமொருதேவனுக்கைபொடித்தனைபொருவின்முத்தி
யுருவுகசசெங்கலோச்சுமொருவருக்களித்தியானின்
றிருவருட்டிறத்தையாரேயுள்ளவாதெரிக்குநீரார். (அகூ)

சிறுவிதிபுரிந்தவேள்விதீவினையாக்கித்தேவர்க்
குறுமுறைசெய்தாய்தந்தையுயிர்க்கொலைபுரிந்தபாவ
முறுகுபுண்ணியமதாக்கிமுதன்மையோர்பாலர்க்கீந்தாய்
பெறுமருட்டிறத்தையாரேயுள்ளவாபேணுநீரார். (கூ௦)

ஒருவர்பாற்பிறந்தார்தம்முட்கலவிசெய்யொழுக்கந்தீதென்
றருளினைநினதுமெய்யினுக்கியவுமைபொன்வாணி
வருமரன்மாயன்வேதன்மூவருமணப்பச்செய்தாய்
பெருகருட்டிறத்தையாரேயுள்ளவாபேசுநீரார். (கூக)

தீம்புனல்குடைந்துதூயதிரவியத்தியற்றும்பூசை
யாம்படிவிதித்தாய்நீமற்றழக்கடத்தாடலென்பு
வேம்பொடிகொண்டதன்றிவேடன்மிச்சிலுங்கைக்கொண்டா
யோம்பருட்டிறத்தையாரேயுள்ளவாறுன்னுநீரார். (கூஉ)

எண்ணிரண்டாணடேமுன்னரீந்தனையதனைத்தெள்ளி
யண்ணியகாலனுவியடர்த்தொருபாலன்றன்பா
லெண்ணிரண்டாண்டேயென்றுமெய்துமாகடைக்கண்வைத்தாய்
நண்ணருட்டிறத்தையாரேயுள்ளவாநயக்குநீரார். (கூ௩)

வெல்லமர்விழைந்தவாணன்வீங்குதோளுஞ்குசிறப
வல்லெறுழ்த்தோள்களெல்லர்மாற்றினைவிழைந்துநீயே
சொல்லமர்விளைத்துப்பார்த்தன்செருசிலைத்தழும்புகொண்டாய்
நல்லருட்டிறத்தையாரேயுள்ளவாநவிற்றுநீரார். (கூச)

மாலொடுபொருதஞான்றுவார்சிலைநெரித்துவீழ்ந்து
கோலவிண்ணவர்குழாத்துட்குறுகியோர்துரும்புநட்டு
மேலவர்வலிகளெல்லாம்வேறுவேறளந்துநின்றாய்
சாலருட்டிறத்தையாரேயுள்ளவாசாற்றுநீரார். (கூரு)

நீங்குசெய்மனைவிகல்லாய்த்திர்தரவெகுளியென்பால்
வீங்குமுன்புரிந்தாயின்றம்மெல்லியலின்பந்துய்த்து
நீங்கருஞ்செல்லனீங்கநினைவினைக்கொடுத்தினின்று
போங்க நட்டிரதையாரேயுள்ளவாறுரைக்குதீரார். (௯௬)

எனத்துதியியம்பிநின்றவிருடியையினிதுநோக்கிக்
கனத்தவனருளென்றுங்கொன்றைக்கண்ணியாரருளிச்செய்வார்
மனத்துயரொழிநீதாசரதியினின்மனைவிசாப
மெனுந்துயம்விட்டகலநின்பாலெய்துவளின்புமெய்த (௯௭)

ஆற்றைநாள்காறுநின்பாலணங்கவேளாள்செய்வாளி
யுற்றுடனாதுமற்கமேவாதுகுமித்தலத்திலாந்தம்
பொற்றநற்கற்றற்றப்பூசைபுரிந்துநீவசிக்கவென்று
கற்றைவார்சடையாராகூறிக்கரந்திலிங்கத்துளானார் (௯௮)

அண்ணலாரருளிச்செய்தவருடலைக்கொண்டநாளும்
புண்ணியமுனிவனசாலப்பொருவின்மாதவங்களாற்றி
வண்ணமென்மலர்களாதிமாண்பொருடழுவப்பூசை
பண்ணியங்கிருந்தான்மீட்டும்பல்பகல்கழிந்தவன்றே. (௯௯)

ஆயதோரமையந்தன்னிலயோத்தியென்றுலகம்போற்றும்
பாயசீர்நகரின்மேயபடர்சிலையிராமனென்பான்
மேயசீர்மிதிலைநோக்கிவியத்தகச்செல்வான்பாதந்
தோயமாண்கல்லின்வண்ணஞ்சுடர்த்தொடிக்கொழிந்ததம்மா. (௧௦௦)

கல்லுருவொழிதலோடுங்கனங்குழையெழுந்துவல்லே
யல்லுருநிருதர்சேனையழித்திடவந்தவெம்ம
னல்லுருப்பாதம்போற்றிநயத்தகுகணவன்மாட்டு
வெல்லுருவிலிசெய்வெம்போர்விழுமமாங்கொழியச்சார்ந்தாள். (௧௦௧)

சம்புநாயகர் அனுக்கிரகத்தால் அகலிகை கல்லுரு நீங்கி நல்லுருப்பெற்று கவுதமனை அடைந்தமை.

பிரமலிங்கத்திற்பூசைபேணுபுண்ணியத்தின்பேற்றால்
விரவியசாபநீங்கிமேவியமனைவியோடு
பரவியங்ககன்றுதான்முன்பயின்றவாழிருக்கைமேவிச
சுரர்மொழுபொறுப்பப்போசந்துய்த்தனன்முனிவர்கோமான். (௧௦௨)

## வேறு.

அங்கிநேர்சடைப்பெருமான்கவுதமனுக்கிருட்சுகமங்களித்தவாற்றாற்
சங்கருவீசரனெனும்பேர்தக்கதிரேதாயுகத்திற்றழுவினின்றான்
மங்கைமான்மலமாறிவேட்டவாக்கும்வான்வீடொரஞ்சிப்போர்க்கும்
பொங்குமாரருள்சுரக்குஞ்சங்கரேசுரரலதுபுகல்வேறுண்டோ. (௧௦௩)

பிரமீசரெனும்பெயருஞ்சங்கரேசுரரென்னும்பெயரும்பூண்டாரீர்
வரநாளுமினிதருளவாங்காருகேவதிசம்புதீர்த்தந்தோய்வோர்க்
குரமாதிநற்குணமும்பல்பொருளுமுயர்வீடுமுறுமாசாதி
விரவாதங்கர்தலினுலதற்கொருதீர்த்தமுமிணையாய்மேவாதன்றே. (௧௦௪)

கோடாதபெருந்தவத்துக்கவுதமஞர்வழிபாட்டின்கொள்கைசொற்றும்
வாடாதபெருஞ்செல்வத்தனதன்வழிபடுங்காதைவகுத்துங்கேண்மி
னீடாழிப்பெருநிலத்திலெஞ்ஞான்றுமாதவமேநிகழ்த்துவீரென்
ரேடாதபெருங்காதலுளத்தரும்பசூதமுனியுரைக்கலுற்றான். (கoரு)

கவுதமர்வழிபடுபடலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கஙகங.

## குபேரன் வழிபடுபடலம்.

வெள்ளிமால்வரைமேவியவித்தகர்க், குள்ளவாறுயர்பூசனைப்பேற்றினு,னள்ளுதோழனெனும்பெயர்நாடொறுங்,கொள்ளுமேன்மைக்குபேரனென்பானரோ. (க)

அளகைமாநகராளுழியையிரு, களனிலாவியகாதகன்கண்ணுதல்,விளரில்பூசனைமேதகுபேற்றினுல், வளமிலாவியவையகஙகாக்குநாள். (உ)

தன்குடித்தமஞகியதன்மையா, னன்குமுற்றியநால்வகைச்சேனையுங்
கொன்கொழிப்பக்குறுகிநெடுஞ்சமர், பின்கொடுத்திரியப்பெரிதாற்றினுன்.

நிதியின்மன்னவனீங்கலுமன்னவன்,பதியின்மல்கியபல்வளமுங்கவர்ந்,தெதிரின்மேன்மையினைத்துபெருங்கவின், பொதியும்புட்பகமுங்கொடுபோயினன். (ச)

இருபதிற்றெறுழ்த்தோளினிராவணன், செருவினுய்ந்தொளிசெய்திக்குபேரனங்,கொருவுமோகையனேனகுகயிலையைப்,பொருவிலன்பொடுபொள்ளெனநண்ணினுன். (ரு)

திண்ணமாகியசெய்தவமாற்றினு, னண்ணலாரடித்தாமரையன்பொடு
வண்ணமாமலர்தூவிவணஙகினு, னண்ணலான்செய்கலிவினைக்கூறினுன்.

தேவதேவதிகம்பரதேவர்கள். யாவருந்தொழுதேத்துமிறையவ
பாவகாரிபறித்தொழிசெல்வநான், மேவுமாறுவிளித்தருளென்றனன். (எ)

தோழனின்னணந்தொண்டுசெய்தேத்தலுஙசேழிலாதகிளர்கதிர்த்திங்கள
போழினன்புரைதீரக்கடைக்கணித், தாழினுலிஃதோதுவதாயினன். [ம()

### வேறு.

தேவவருடம்பன்னிரண்டுசெல்லப்பாசுபதவிரத
மேவியரியதவம்புரிந்துவிழைந்துநமதுபூசனையுந்
தாவில்விதியான்மிகச்செய்தாய்தனதவினிநீவெருவற்க
பூவிற்பொதும்பர்வளர்ஞானபூமியுளதஙகினிதெய்தி. (கூ)

பந்தமகற்றுங்குளிர்தீர்த்தம்பலவும்படிந்துதவத்துயர்ந்த
நந்திவணங்குநந்தீசநவைதீர்வாலகில்லீச
முந்துமளவில்சிவலிஙகமுளைத்தஙகுளவாலவையெல்லாங்
கந்தமலர்தூய்வழிபட்டுக்காதலொடும்வைகுதிகண்டாய். (கo)

சின்னாள்கழியச்சிலைராமன்செருவிலரக்கனுயிர்குடிப்பப்
பின்னானதுபெருந்திருவும்பிறங்காநின்றபுட்பகமு
முன்னானெனவேநின்பாங்கர்முற்றுமிதுமெய்யெனக்கயிலை
மன்னாநின்றபெருமானார்வகுத்துவிடைநல்கினர்மாதோ. (கக)

விடைதந்தருளுந்தனித்தருமவிடைமேக்குயர்த்தபெருமானை
மடைவிண்டொழுகும்பேரன்பின்வணங்கிக்கயிலைவரைநீங்கி
நடைகொண்டவனித்தலத்திறைவனண்ணுந்தலங்கள்பலபணிந்து
புடைகொண்டொழுகுங்காவிரியின்மருங்குபுகுந்தான்பொருட்கிழவன். ()

ஆங்குநகரமெதிர்நோக்கியவனித்தலத்தினுறத்தாழ்ந்து
பொங்குபுனற்காவிரியாதிப்புரைதீர்தீர்த்தம்பற்பலவுந்
தங்குவிதியாற்றினிற்படிந்துதயங்குமிலிங்கம்பற்பலவுங்
கொங்குமலர்தூய்ப்பணிந்தமுதலிங்கர்திருமுன்குறுகினான். (கங)

மீளாவடிமைப்பெயரான்பின்வெண்ணாவலின்முக்கட்கனியைத்
தோளாமணியைச்சுவையமுதைத்தொழுதுவணங்கிவலம்வந்து
நீளாதரவினிருந்தொருசார்நிசியுந்துயிலாதெழுத்தைந்துங்
கோளானதுதீர்தரக்கணித்தான்குருவெங்கதிரோன்கடலுதித்தான். (கச)

அங்கவொருசார்தன்பெயர்கொண்டமையவிலிங்கமொன்றிருத்தித்
தங்குமறையாகமவிதியாற்றண்டாவிருப்பிற்பூசைபுரிந்
தெங்குநிறைந்தபூரணனையெல்லாப்பொருட்குங்காரணனைப்
பொங்குபரமானந்தமெனும்பொருளைநினைந்துதவம்புரிந்தான். (கரு)

அற்றைத்தினம்போற்பலநாளங்களைப்பெருமான்வழிபாடு
முற்றப்புரிந்துவருகாலைமுகினேருருவச்சிலைராமன்
வெற்றிப்படையாலரக்கனுயிர்விளிப்பவிழந்தபுட்பகமு
மற்றைப்பொருளுங்கைக்கொண்டுவாழ்ந்தான்றனதுபதிசார்ந்து. (கசு)

பேணாருடற்றும்பெரும்பகையும்பிறவிப்பகைசெய்யாணவமு
மாணாவினையுமாயைகளும்வறுமைபிணியாதிகள்பலவும்
வீணாயழியவேட்டவரம்வேட்டாங்கருளுமெஞ்ஞான்றுங்
கோணாவருளுங்கொடுத்தருளுங்குபேரலிங்கம்வழிபடினே. (கஎ)

வடமாதிரத்துத்தலைவன்மிகவழிபாடாற்றுந்திறமொழிந்தாங்
திடமாமதில்களொருமூன்றுஞ்சிந்துமிறையேயடியாராய்த்
தடமாமதிலொன்றினிலிழைத்ததன்மைதெரிந்தவாறுரைப்பாங்
தொடர்மாதவத்தீர்கேண்மினெனச்சூதமுனிவனோதுமால். (கஅ)

குபேரன்வழிபடுபடலம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் - கசக0க.

---

## திருநீற்றுத்திருமதிற்படலம்

செங்கட்சோழருந்தெம்முனைவேந்தரு, மங்கட்கூடியருட்பணிசெய்யுநாட்
டெங்கக்கோயிலிற்சூழ்மதிலியாவையும்,பங்கிற்கோலிப்படைக்கலுற்றனர்.

ஆங்குநாதனருளினுலோர்மொழி, யீங்குநீள்பணியாவையுஞ்செய்மினே
வோங்கியாவையுமுள்ளடக்கும்மதி. னீங்கவென்றுசீவந்ததுவானிடை. ()

ஓதுவான்மொழியொண்செவியேறலு, நாதனுரருளீதெனினன்றென,நீதி
வேந்தரந்நீண்மதில்செய்திலா, ராதியேயிழைப்பாரென்றகன்றனர். (ங)

## வேறு.

இதுமுதல்(கச)செய்யுள் சம்புநாயகர்விபூதிப்பிரகாரஞ்செய்தமைகூறல்.

திருமால்பிரமன்புருகூதன்றேவர்முனிவர்போற்றிசைப்ப
வொருநாவலின்கீழ்வீற்றிருக்குமுமையாள்கணவன்மதிசூடி
மருவார்கொன்றைமலரலங்கல்வயங்குந்தடந்தோளமுதேசன்
பெருவாழ்வுலகுக்கருளுவான்பிறங்குமதில்செய்திடநினைந்தான். (ச)

பணியாதிடினுமதுவேற்றுப்பயனைப்பெறமாலயன்முதலோர்
தணியாவிழைவினருட்கடைக்கண்டன்னைநோக்கியெதிர்நிற்ப
வணியார்நகரமெவற்றுள்ளுமதிகவுரிமைதனக்காமிம்
மணியார்நகர்க்குந்திருனேவகுப்பித்திமொமதித்திட்டான். (ரு)

தாழ்ந்துபழிசசுமடியார்க்குத்தனதின்னருளைத்தன்னேடு
வீழ்ந்துவழங்கும்பெருங்கருணைவிமலனிந்தப்பணியொருவர்
வாழ்ந்தமனத்திற்செயவிரப்பின்மறுக்கமாட்டாமையைக்குறித்தே
போழ்ந்தமதியாதிகள்காந்துபொற்பவேறுவரநினைந்தான். (சு)

அருளிற்கலந்ததிருவேடமல்லாற்றனக்குப்பேருவகை
தருவதிலையென்பதுமதுவேபணிச்குத்தகுவதென்பதுவு
மருளிற்கலந்தார்களுமறியவார்செஞ்சடையுங்கற்கலையுந்
தெருள்கண்மணியுநீற்றணியுந்திகழுமுருவத்தொடும்போந்தான். (எ)

தவத்தால்வருந்தறிருப்பணியாற்சாலவ்ருந்தல்லைவகளே
யவத்தாம்வினைகண்முழுதகற்றியருள்சேர்கதிக்குவித்தாதல்
பவத்தாற்சுழல்வோர்களுமறிந்துபணியேபுரியவைந்தொழிலு
நவத்தாரணியாதிகட்கியற்றுநம்பன்கரத்தாற்செயமதித்தான். (அ)

அவனுலவளாலதுதன்னுலனைத்தும்புரியுந்தனதியல்பை
புவிமேலெவர்க்குமறிவிக்கும்பொருட்டும்புவியோர்க்கலதுபணி
தவவாயாமையறிவிக்கும்பொருட்டுந்தச்சர்முதலோரைத்
துவர்வார்சடிலப்பெருமானுர்தொழிலுக்குரியராக்கினுர். (கூ)

எல்லாம்வல்லதனதியல்புமீண்டுங்கருமந்தமக்கியைய
வெல்லார்தமக்கும்பயனுதவுமியல்பும்விபூதியெனும்பெயரைப்
புல்லாநின்றதிருநீற்றின்பொலிவும்விளங்கக்கூலிக்கு
நல்லாதரவினீறளிப்பநயந்தார்நாவற்பெருமானுர். (க0)

தெளிக்குந்திருநீறேதத்தஞ்செய்கைக்கேற்பச்செழும்பொன்னுய்க்
களிக்கும்வகைசெய்தறன்கடைகள்கதுவாதொழிக்கும்பெருஞ்சிறப்பால்
வெளிக்கவொருசித்தரைப்போலவிளையாட்டயருமமுதேசற்
கொளிக்கும்வகையின்றியெவருமுறுதியோடுபணிபுரிவார். (கக)

## வேறு.

நிலைபெறப்பல துளை துளைத்தாணிகணிறுவிக்
கொலைமுகத்தவொளப்படைகுடக்கையிலேந்தி
மலைபிளந்தவன் பூணியிற்கொணர்குநரொருபாற்
சிலைபிளந்தரிந்திணங்குறச்சேர்க்குநரொருபால். (கஉ)

பொருப்புக்கொப்புறப்புது மணல்குவிக்குநரொருபா
னெருப்புக்கொப்புறுமூலத்திரணீற்றினரொருபா
லிருப்புக்கட்டிகளெரியின்வைத்தடிக்குநரொருபாற்
கருப்புக்கட்டிகணிறைகளிற்கரைக்குநரொருபால். (கங)

வறுமிட்டிகைவேறுவேறியற்றினரொருபாற்
கூறுமிட்டிகைகுறைதழற்படுக்குநரொருபா
லூறுகோட்டிநுண்மணல்விராய்நுணுக்குநரொருபால்
வேறுபட்டவல்வினைகளுமொறுக்குநரொருபால். (கச)

இன்னவாறுபலவினைஞருமீண்டினரிழைப்பக்
கன்னிமாமதில்வளர்தொறுங்கண்ணுதற்கரந்து
நன்னர்வேடமோடுத்தவெணுறைவலினிழலா
ரன்னமாமதில்வரிசைமேலடிமிதித்திவர்ந்து. (கரு)

முற்றுமோர்முறைசூழ்ந்துமும்மலப்பகைகடந்து
பற்றிலாருயிர்ப்போதந்தன்பாததாமரைக்கீ
ழுற்றுவேறறத்தோன்றுறுதொளித்தெனவிலத்தி
னற்றமேதுமிலாவகையடைசினர்மாதோ. (கசு)

## வேறு.

மண்ணிடைவரிசையெல்லாம்வைகலுமழுத்திப்பின்னர்
விண்ணிடைவந்துதோன்றவியுண்மதிலிழைத்துத்தம்பா
னண்ணியவரிட்டநீங்கநலத்தகுமிட்டமெய்த
வண்ணினர்தம்மைநோக்கியருண்ஞலருளிச்செய்வார். (கஎ)

சம்புநாயகர் மதிலின் பெருமை மானிடர்க்குக்கூறல்.

சித்தெல்லாமுடையநம்மாற்றிகழ்தருபொருள்களெல்லாம்
பைத்தநானிலத்திரிந்தப்பரந்தமாமதிலினாக
வைத்தனமாதலாலேவரங்களைவேட்டோரெல்லாம்
மெத்தியவன்பாலிந்தவியன்மதில்சூழ்கவென்றார். (கஅ)

இதுமுதல் உ செய்யுள் நூலாசிரியர்.

அன்றுதொட்டவணியுள்ளோரருமகப்பேறுவேட்டும்
வென்றியைவிழைந்துமாறுவெறுக்கையைவிழைந்துமின்ப
நன்றியைவிழைந்துஞ்சாலநாட்டினைவிழைந்துமிவ்வா
றொன்றியமதில்சூழ்போந்திட்டெப்பிலாவரங்கொள்கின்றார். (ககூ)

மதிலினைச்சூழ்வாரென்றுமனையகந்தன்னைநீங்கிப்
பொதிதருபாவமாதிப்புல்வினையவனைநீங்கு
மெதிர்கொளின்வரங்களெல்லாமெதிர்கொளுங்கதுவின்ஞானங்
கதுவுறுஞ்சூழிற்சூழுங்கரிசறுமுத்திநான்கும். (உ0)

பிரகாரஞ்செய்வோரடையும் பிரயோசனமும - அவமதித்தோர்
அடையும் பிரயோசனமும்.

வலம்புரிகின்றோர்மெல்லவைக்குமோரடிக்குககோடி
நலம்புரிபரிமேதங்களையையறப்புரிந்தபேறுஞ்
சிலம்புறழ்மதிலையந்தோசிறிதவமதித்தாரேனுங்
குலம்புரிசுற்றத்தோடுங்கொடுநரகுழப்பரென்றும். (உக)

நூலாசிரியர்.

தடநெடுமதிலையோர்கார்த்தம்பியல்பானே குழுன்
மடவர்களேனும்பாவவல்வினைமுழுதுந்தீர்ந்து
கடவுளராவரென்னிற்கரிசறுமுனிவரேந்த
விடவியமதிலின்மேன்மையாவரேயயம்புநீரார் (உஉ)

தணணியதாரியெல்லார்தமக்குமன்புதவத்தானு
நண்ணியவுணவுதாருநறும்புனலுருவாகின்ற
வண்ணலேயானுந்தாழாதவமதித்தவனேமுன்னர்
பண்ணியமுறையுங்கேண்மினெனப்டகர்கின்றான்குதன்

திருநீற்றுத்திருமதிற்படலம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - சசாங.

# அமுதலிங்கேசரருண்முறைசெய்கடலம்.

குவலயத்துச்சிவம்பெருக்குங்கோச்செங்கணார்சிறந்த
தவலில்பெருஞ்சிவத்துவிசர்சகலகலைவல்லவரா
யுவமையிலாசமக்கடலினுளமுழுதுந்தோய்ந்தவராய்க்
கவளமதகரியுரியார்கழலருச்சித்துறுநாளில். (க)

மன்னவரும்பணிகேட்பமறுபுலத்திலுள்ளவரு
மென்னவினைபுரிந்திடினுமின்றியமையாததமை
நன்னயத்தினுடன்படுக்குநலத்தகைமையுடைமையினு
லன்னசிவத்துவிசரெலாமகமதித்துத்தருக்கினரால் (உ)

ஒப்பற்றஞானதலத்தொழியாதவாழ்க்கையினு
மப்புற்றதிருமேனியமுதலிங்கர்பூசையினுஞ்
செப்புற்றபெருமையெலாந்திகழ்ந்தனவென்றறியாமே
தப்புற்றவகமதிப்பாற்றவறுகளேபுரிந்திட்டார். (ங)

கணிகையர்தநலநுகர்ந்துங்கண்ணுதலார்பொருள்கவர்ந்தும்
பணிபுரிதல்பாணித்தும்பயிலொழுக்கநனிவிடுத்து
டிணிதுளக்கலியமியம்பல்வகுத்தலிவையல்லாது
பிணிதுள்ங்கவுபசாரம்பேணுதுபிழைத்திட்டார். (ச)

உள்ளந்தங்கியகரவேயுடையவராயிவர்நடப்பச்
கள்ளந்தங்குறினவர்க்குக்கள்ளந்தங்குதற்குரிய
வெள்ளந்தங்கியமுடியார்விளங்குதிருவுளங்கறுத்துப்
பள்ளந்தங்கியநதியிற்படுத்துமெனவெணந்திருந்தார். (ரு)

பிறைத்தாகுமபிச்சாடனாயகர்க்குச்சிறப்பெய்தத்
தழைகாவலுடையார்க்குத்தனையொருவனைவைத்து
வினைதோமெனவோரும்வெளிச்சோணைப்பூண்டுத்துக்
கழையாடாப்பெருநீத்தங்கடப்பதற்குக்கடத்திவர்ந்தார். (௬)

பொருகுயிரிவெண்ணுவன்மொய்நிழலின்வீற்றிருந்தார்.
திருவருளாலொருநாளைக்கறைசென்றலைபடக்கலங்கவிழ்ந்து
பெருகுபுனலிடைமடவார்பிள்ளையுடனனைவோரும
பருவாலூற்றுயிர்மடிந்தார்பார்முழுதும்பணிப்பெய்த (௭)

வேறு.

அருமறைக்குவமையில்லாவமுதலிங்கேசர்தாமே
திருவுளங்கறுத்துசசார்ந்தசிவததுவிசையாயுங்கொன்று
ஒருவர்கணமாட்டெங்குற்றமுணர்றுறுதிருந்தனன்றென்
றிருகலத்தவர்களெல்லாமெண்ணினருறுதிகொண்டார். (௮)

வெறுப்பறுதாயின்மிக்கவெறுப்பறுதாயேயான
வெறுத்தமென்சாயைகாவல்விரிநிழலிறைவர்தமமால்
வெறுப்பனசெய்தாரெல்லாமினித்தனமென்றுலந்தோ
வெறுப்பனயாவர்மாட்டும்விளைத்திடாநிருத்தநிலையாய். (௯)

இரும்புனனதியிற்செல்லாதெஞ்சியசிறுவன்றன்னைப்
பெருநம்பெயர்ப்பொருளாயுள்ளார்போருட்கிலக்காக்கி
யம்மபொருட்கலைகள்வேதாகமங்களுமருளானமேன்மை
தரும்பணிவிடையின்வைத்தார்சகமெலாஞ்சிறப்புமெய்த. (௧௦)

வெற்றிவேற்குமரப்புதேள்வெள்ளிமால்வரையினின்றும்.
பற்றிகலகடந்தார்பூசைபயிற்றுதற்குரியாரென்று
செற்றியவனத்தின்மிக்கதிருப்பிடவூரின்மேருட்
குற்றமின்மறையோர்தமமைக்கொணர்ந்துதாபித்திட்டாரால (௧௧)

அத்தகுமறையோர்தம்முளறிவினிற்பெரியராகி
பத்தியின்வழுவாச்சிந்தைபரித்தவர்சிலரைக்கூவி
யுத்தமபூசையாதியுஞற்றுதற்குரியராக
வைத்தனரொருவனைவன்மனைநிழலமர்ந்தவள்ளல். (௧௨)

தொல்வினைத்தொடராமேன்மைத்தூயவேதியர்கடாமுமை
கொடுவினைக்குரியசூலங்குடங்கையிற்கொண்டசெம்ம
னல்வினைக்கருளுமாறுநல்லனவல்லவான
புல்வினைக்கொறுக்குமாறும்புந்தியிற்றேர்ந்துதேர்ந்து (௧௩)

அச்சமுமன்புந்தாங்கியண்ணலார்மகிழ்ச்சிகூர்ப்ப
வெச்சமில்லாதசைவம்வைதிகமிரண்டினுளும்
நிச்சலுமபூசையாதிநின்மலப்பணிகளெல்லா
முச்சகம்வியக்கும்வண்ணமுற்றுறப்புரியாநின்றார். (௧௪)

உமையொருபாகர்பூசையுஞற்றுமந்தணரையந்த
வமுதலிங்கேசரென்றேயகமதித்திறைஞ்சிஞரு
மிமையவராதியோராலிறைஞ்சிடப்படுவரென்றாற்
றமதருட்பெருமையாரேசாற்றுதல்வல்லுநீரார். (௧௫)

பரிந்துபின்னிரக்கஞ்செய்தபரமனார்சரிதந்தன்னைத்
தெரிந்தவர்தெரிந்தோரெல்லாந்தீவினைமுழுதுநீங்கி
விரிந்தபல்கதிகடம்முள்வேட்டகற்கதியுண்மேவிப்
புரிந்தபேரின்பவெள்ளப்புணரியுட்டிளைத்துவாழ்வார். (கசு)

பொய்யினையறுக்குஞானபூமியில்வசிக்கும்பேறுங்
கொய்யலர்மலருந்தீர்த்தமொன்பதுங்குடையும்பேறுஞ்
செய்யருளமுதலிங்கர்தெரிசனப்பேறுமெய்தும்
பையவிப்புராணந்தன்னைப்படித்தவர்கேட்டோர்க்கெல்லாம். (கஎ)

விழுமியவமுதலிங்கர்வியத்தகுசரிதந்தன்னை
யெழுதினோரெழுதுவிததோரெழுதியீந்தவர்களெல்லாம்
வழுவறுமெழுத்தொவ்வொன்றுக்கொரோவொருகற்பமன்ற
செழுவியசிவலோகத்திற்சென்றுவாழ்திருப்பரன்றே. (கஅ)

என்றுயர்சூதமேலோனிலகியஞானபூமிக்
கொன்றியசரிதமெல்லாமுரைத்தனனுரைத்தலோடு
நன்றியின்மலர்ந்தசிந்தைநைமிசமுனிவரெல்லாம்
வென்றிகொள்பரமானந்தவெள்ளத்துட்டிளைத்துவாழ்ந்தார். (கக)

அருள்வளர்சம்புமூலத்தமுதலிங்கேசர்வாழ்க
வருமகிலாண்டவல்லிவாழ்கவேதாகமத்தின்
பொருணிலைவழாதுவாழ்கபுகழ்திருவானைக்காவாந்
திருநகர்வாழ்கவாழ்கதேயங்களனைத்துமாதோ (உ0)

திருச்சிற்றம்பலம்.

அமுதலிங்கேசருண்முறைசெய்தபடலமுற்றிற்று.

---

## திருவானைக்காப்புராணம்

முற்றும்.

---

சாலியவாகனசகாப்தம் 1831 கீலகவூ தை கசுஉ குருவாரம் சப்தமிதிதி அஸ்தநட்சத்திரம் சித்தயோகம் இவைகள் கூடிய சுபதினத்தில் மதுரைஜில்லாக் கானாடுகாத்தான் சா.ரா.ம.சி.த. சிதம்பரஞ்செட்டியாரவர்கள் குமாரர் இராமசாமிசெட்டியாரவர்கள் வேண்டுகோளின்பேரில் உறையூர் மதுரைநாயகமுதலியாரவர்கள் குமாரர் சொக்கலிங்கமுதலியாரால், இப்புராணம் ஆறுவது பாரம் முதல் முடிவுவரையில். தஞ்சாவூர் கலியாணசுந்திரம் அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது.


### இப்போது அச்சிட்டு வரும் புத்தகங்கள்.

கலைசைச்சிலேடை-வெண்பா—சிலேடைக்குறிப்பும் அரும்பதவிளக்கமும்.

திருமுருகாற்றுப்படைமூலமும் உரையும்.

இனிமேல் அச்சிடப்படும் புத்தகம். கல்லாடமூலமும் உரையும்.

திருப்பரங்குன்றம், அரு. நாராயணசரணர்.

# படல அட்டவணை.


| நெம்பர். | படலம். | பக்கம். |
|---|---|---|
| ௧ | கடவுள் வாழ்த்து ... ... .. ... | ௧ |
| ௨ | திருநாட்டுச் சிறப்பு ... . . | ௪ |
| ௩ | திருநகரச்சிறப்பு ... ... ... .. | ௧௮ |
| ௪ | கைலாசப்படலம் ... ... ... .. | ௩௧ |
| ௫ | புராண வரலாற்றுப்படலம் . . . | ௩௪ |
| ௬ | தலவிசேடப்படலம் . ... ... . | ௩௯ |
| ௭ | தீர்த்த விசேடப்படலம் .. .. | ௪௪ |
| ௮ | நானவிதிப்படலம் ... ... ... .. | ௫௧ |
| ௯ | மூர்த்தி விசேடப்படலம் ... . . | ௫௭ |
| ௧௦ | சம்புமுனி தவம்புரி படலம் .. ... . | ௬௦ |
| ௧௧ | அகிலாண்டநாயகி யாராதனைப்படலம் .. . | ௬௬ |
| ௧௨ | வரங்கொள் படலம் . .. ... .. | ௭௮ |
| ௧௩ | ஞான உபதேசப்படலம் ... ... . | ௮௧ |
| ௧௪ | திருவிழாப்படலம் . .. ... . | ௮௫ |
| ௧௫ | நீலவண்டு வீசசரப்படலம் . .. .. | ௮௮ |
| ௧௬ | பராசரன் பழிபடுபடலம் .. ... . | ௯௪ |
| ௧௭ | திருமால் வழிபடு படலம் .. .. . | ௯௯ |
| ௧௮ | ஆரஞ்சாத்துப்படலம் ... .. | ௧௦௩ |
| ௧௯ | கேசாரணியப்படலம் ... ... .. | ௧௦௯ |
| ௨௦ | கோசசெங்கணார் வழிபடுபடலம் . . | ௧௧௬ |
| ௨௧ | கவுதமப்படலம் . ... ... . | ௧௫௨ |
| ௨௨ | குபேரன் வழிபடு படலம் .. | ௧௬௪ |
| ௨௩ | திருநீற்று திருமதிற்படலம் .. .. . | ௧௬௫ |
| ௨௪ | அமுதலிங்கேசாநண்முனை றசெய்தபடலம் .. | ௧௬௮ |

# திருத்தம்

| பக்கம் | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| க0 | இ | உ | குறவ் | குறவு |
| கக | இ | உ | பூவே | பூசனே |
| ௬ | எ | ௩ | செனுப | செனும் |
| உக | உச | உ | ரெரி | ரெரி |
| உச | கூக | க | லமை | லேமை |
| ௩உ | கூ | ச | ீற | ீர |
| ௩ச | உ௩ | ௩ | இன்னர | இன்னரா |
| ௩எ | ௩௩ | ச | ன்நனை | நன்னய |
| இ0 | கக | க | யணிமை | யணிமைய் |
| ௬ | ௬ | ச | விளே | வளே |
| கூஉ | க௯ | ௩ | சட்பினு | கேட்பினு |
| அகூ | க0 | உ | தவப்யு | தவப்பய |
| கூ௩ | ச0 | உ | யுரப்ட | புரப்ப |
| கக௯ | இச | ௩ | நாபுஞ | நாபுரஞ் |
| ௱ச0 | ௱எஅ | ௩ | கோடனே | கோடணே |
| ௬ | ௱அ0 | உ | யிளுர் | யிளுா |
| ௱கூ௩ | ௱க | ச | சார்த்தான் | சாரநதான் |
| ௱கூஅ | ச | க | நுகர்ர் | நுகாந்நை |